T.N.L.C. Debates

Official Report

~~Vol~~ 1985

Vol. 214

No. 4, 5

D
V211,32'N85
N85.214.4-5;
143949

தமிழ்நாடு ஆவணக்காப்பகம்
26 டிச 1985
எழும்பூர் சென்னை-600 008
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS
253
3541 | அ3 | 85

# தமிழ்நாடு
# சட்டமன்ற மேலவை நடவடிக்கைகள்

# TAMIL NADU
# LEGISLATIVE COUNCIL DEBATES

# செயலக வெளியீடு
# OFFICIAL REPORT

வியாழக்கிழமை, ஏப்ரல் 11, 1985—தொகுதி 214 - எண் 4
Thursday April 11th 1985—Volume 214 - No. 4

சட்டமன்ற மேலவைச் செயலகம்,
புனித ஜார்ஜ் கோட்டை, சென்னை - 600 009.

LEGISLATIVE COUNCIL SECRETARIAT.
Fort St. George, Madras-600 009.

விலை ரூ 2.75]

253

## பொருளடக்கம்.

பக்கம்


வினாக்கள்—விடைகள் .. .. 371 376

ஒழுங்குப் பிரச்சினை—

கவன ஈர்ப்புத் தீர்மானங்கள் எடுத்துக் கொள்ளப்படாதது குறித்து. .. 376 377

தகவல் கோரல்—

(1) உரிமைப் பிரச்சினைக்குத் தீர்ப்பு வழங்குதல் குறித்து. .. .. 378

(2) மேலவை உறுப்பினர்கள் சிலர் அவைக்குள் வராமல் அவைக்கு வெளியே இருந்துவிட்டுச் சென்று விடுவது குறித்து. 378—379

1985-86ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையின் மீது பொது விவாதம்—தொடர்ச்சி. .. .. 379

அரசின் தீர்மானங்கள்—

(1) சட்டப் பேரவையின் பொதுக் கணக்குக் குழுவில் பணியாற்ற ஐந்து உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்தல். .. 465—466

(2) சட்டப் பேரவையின் மதிப்பீட்டுக் குழுவில் பணியாற்ற ஐந்து உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்தல். .. 466—467

(3) சட்டப் பேரவையின் துணைச் சட்ட ஆய்வுக் குழுவில் பணியாற்ற ஐந்து உறுப்பினர்களை நியமனம் செய்தல். .. 467—468

(4) சட்டப் பேரவையின் பொது நிறுவனங்கள் குழுவில் பணியாற்ற ஐந்து உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்தல். .. 468—469

அவை முன் வைக்கப்பட்ட ஏடுகள். .. 469

143949

D

V 211,32 'N 85

N85 - 214 . 4 . 5 ; 1

தமிழ்நாடு ஆவணக்காப்பகம்
26 டிச 1985
எழும்பூர் சென்னை-600 008

## தமிழ்நாடு சட்டமன்ற மேலவை.

வியாழக்கிழமை, 1985 ஏப்ரல் 11.

பங்குனி 29, ரக்தாக்ஷி, திருவள்ளுவராண்டு-2016.

---

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள மேலவை மண்டபத்தில் முற்பகல் 10-00 மணியளவில் மாண்புமிகு சட்டமன்ற மேலவைத் தலைவர் (மாண்புமிகு டாக்டர் ம. பொ. சிவஞானம்) அவர்கள் தலைமையில் அவை கூடியது.

### 1. வினாக்கள்-விடைகள்.

### உடுக்குறியிட்ட வினாக்கள்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : வினாக்கள் 16 மற்றும் 17 ஒத்தி வைக்கப் படுகின்றன.

### புதுப்பாடி அணைக்கட்டு.

* 18 வினா.—திரு. எல். ஜெயச்சந்திரன் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) வட ஆற்காடு மாவட்டம், புதுப்பாடி அணைக்கட்டிற்குக் கிழக்கே, தரைப்பாலம் அமைக்கும் கருத்துரு ஏதும் அரசின் ஆய்வில் உள்ளதா?

(இ) ஆம் எனில், அது தற்பொழுது எந்நிலையில் உள்ளது?

மாண்புமிகு திரு. க. முத்துசாமி : (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. எல். ஜெயச்சந்திரன் : வட ஆற்காடு மாவட்டம், புதுப்பாடி அணைக் கட்டிற்குக் கிழக்கே, தரைப்பாலம் அமைக்கும் கருத்துரு ஏதும் தற்சமயம் அரசின் ஆய்வில் இல்லையென்று மாண்புமிகு அமைச்சர் சொன்னார். அங்குள்ள மக்களும், விவசாயிகளும் அந்த அணைக்கட்டுக்குத் தரைப்பாலம் அவசியம் வேண்டுமென்று நீண்டகாலமாக வேண்டுகோள் விடுத்துக்

கொண்டிருக்கிறார்கள். இப்போது இல்லையென்றாலும்கூட, வருங்காலத்தில் எவ்வளவு முடியுமோ அவ்வளவு விரைவாக அதை அமைக்கும் எண்ணம் அரசுக்கு உண்டா ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : உயர் பாலம் கட்ட வேண்டுமென்றால், ஏறக்குறைய 3½ கோடி ரூபாய் வேண்டும். தரைப் பாலம் கட்ட வேண்டுமென்றால், 40 லட்சம் ரூபாய் தேவை, அங்கு தரைப்பாலம் அவசியம் தேவை என்று சொன்னார்கள். இந்த ஆண்டு அதை எடுத்துக்கொள்ள இயலாது. ஆனால் வரும் ஆண்டில் அதை எடுத்துக்கொள்வதுபற்றி அரசு ஆய்வு செய்து கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. எல். ஜெயச்சந்திரன் : வரும் ஆண்டு எடுத்துக்கொள்வதுபற்றி அரசு ஆய்வு செய்துகொண்டிருக்கிறது என்று சொன்னதற்கு நன்றி. மூலக் கேள்விக்குத் தொடர்புடையது இல்லையென்றாலும்கூட கேட்கிறேன். தென்னாற்காடு மாவட்டத்தில் கடலூரில் பெண்ணையாறு இருக்கிறது. அதில் இப்பொழுது இருக்கின்ற பாலம் குறுகியது. இரண்டு பக்கங்களில் இருந்தும் வண்டிகள் வந்தால், ஒன்று அந்தப் பக்கம் நிற்க வேண்டிய நிலை இருக்கிறது. போக்குவரத்துக்கு மிகவும் இடைஞ்சலாக இருக்கிறது. அங்கு உடனடியாக நல்ல முறையில் பாலம் அமைக்கின்ற திட்டம் ஏதும் அரசிடம் இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : அதைப்பற்றிய குறிப்பு ஏதும் இல்லை. நிதி நிலையைப் பொறுத்து நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

### தூத்துக்குடி துறைமுகம்.

*19 வினா—திரு. க. மீனாட்சிசுந்தரம் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தூத்துக்குடி துறைமுகத்தில் புதியதாகக் கட்டப்பட்டு வரும் துறைக்கு, 'அறிஞர் அண்ணா'வின் பெயரை சூட்ட வேண்டும் என்று, தமிழக அரசு, மத்திய அரசுக்கு ஆலோசனை ஏதும் கூறியுள்ளதா ?

(இ) இல்லையெனில், இனியேனும் அவ்வாறு செய்யுமா ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : (அ) இல்லை.

(இ) புதிதாக கட்டப்படும் துறைகள் ஏற்கெனவே உள்ள துறைகளை விட முக்கியத்துவத்திலே குறைந்தவைகளாக உள்ளன. எனவே இதற்கு



அறிஞர் அண்ணா அவர்களுடைய பெயரை சூட்டுவதற்கான வாய்ப்பு இல்லை என்ற காரணத்தாலே, மத்திய அரசுக்கு நம்முடைய அரசு பரிந்துரை செய்ய வில்லை.

திரு. க. மீனாட்சிசுந்தரம் : புதிதாகக் கட்டப்படும் துறைகள் ஏற்கெனவே உள்ள துறைகளை விட முக்கியத்துவத்திலே குறைந்தவைகளாக உள்ளதால், பேரறிஞர் அண்ணா அவர்களுடைய பெயரை சூட்டுவதற்கான வாய்ப்பு இல்லை என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அப்படியானால், அந்தத் துறைமுகத்திற்காவது அல்லது வேறு இடங்களில் இருக்கக்கூடிய துறைமுகம் எதற்காகவாவது பேரறிஞர் அண்ணா அவர்களின் பெயரை சூட்ட இந்த அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : அந்தத் துறைமுகத்தைப் பொறுத்த வரையில், ஏற்கெனவே வ.உ.சி. அவர்களின் பெயர் வைக்கப்பட்டிருக்கிறது. ஆனால் பிற துறைமுகங்கள் அமைக்கப்படும்போது, அதில் முன்னேற்றம் வரும்போது, பெயர் வைக்கிற நிலை வருகிறபோது, அதுபற்றி ஆய்வு செய்யலாம்.

திரு. ஆர். டி. சீத்தாபதி : பேரறிஞர் அண்ணா அவர்களுடைய பெயரை வைக்க இயலாது என்று அமைச்சர் சொன்னார். தங்கள் மூலம் தெரிவித்துக் கொள்கிறேன். தூத்துக்குடி கே.வி.கே. சாமி அவர்களுடைய பெயரையாவது வைக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : ஏற்கெனவே வ.உ.சி. பெயர் மூன்று துறைகளுக்கு இருக்கிறது. இப்போது இரண்டு துறைகள் கட்டப்பட்டிருக்கின்றன. சின்ன சின்ன துறைகளுக்கு பெயரை வைத்து அவமானப்படுத்துவது அவ்வளவு சரியாக இருக்காது. பெருமைப்படுத்தப்பட வேண்டும் என்பதற்காகத்தான் பெயர் வைக்கிறோம். அவமானமாகப் போய்விடக் கூடாது என்பதற்காகத்தான் அரசு அதைக் கைவிட்டது.

### நாகப்பட்டினம் துறைமுகம்.

*20 வினா.—திரு. க. மீனாட்சிசுந்தரம் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) நாகப்பட்டினம் துறைமுகத்தை மேம்படுத்த வேண்டும் என்ற செயற்குறிப்பு ஏதும், அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விவரம் யாது ?

(உ) இல்லையெனில், அது குறித்து மாநில அரசு, மத்திய அரசுக்கு ஏதேனும் பரிந்துரை செய்துள்ளதா ?

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி :** (அ) ஆம்.

(இ) நாகப்பட்டினம் துறைமுக மேம்பாட்டுப் பணியின் பகுதியாக இத்துறைமுகத்தில் கான்கிரீட்டினாலான சரக்கு கையாளப்படும் மேடையின் கீழ் பாறாங்கற்களாலான நீர்த்தடை அமைப்பதற்கு ரூ. 20.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு, இப்பணி தற்சமயம் நிறைவேற்றப்பட்டு வருகின்றது. மேலும் நாகப்பட்டினம் துறைமுகத்தில் ஏழாவது ஐந்தாண்டு திட்ட காலத்தில் தோணித் துறையைப் புதுப்பித்தல், சரக்கு மேடைகளில் கான்கிரீட் தளம் அமைத்தல், உயர் அலைவு வரிசை நிலையம் அமைத்தல், இழுவைப்படகு மற்றும் விசைப்படகு வாங்குதல் போன்ற வளர்ச்சிப் பணிகளை நிறைவேற்ற உத்தேசிக்கப்பட்டுள்ளது.

(உ) இக்கேள்விக்கு இடமில்லை.

(முற்பகல் 10-05)

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** தலைவர் அவர்களே, நாகப்பட்டினத்தில் அனல் மின் நிலையம் தொடங்க வாய்ப்பு இருப்பதாக மாண்புமிகு மின்துறை அமைச்சர் அவர்கள் நேற்றையதினம் ஒரு கேள்விக்கு பதில் அளிக்கும்போது சொன்னார்கள். கடல் இருக்கும் துறைமுகப் பகுதியில் தொடங்க வாய்ப்பு ஏற்படும் என்று சொல்லி அதுமாதிரி திட்டம் பரிசிலனையில் இருப்பதாகவும் சொன்னார்கள். இப்போதிருக்கிற நாகப்பட்டினம் துறைமுகம், எல்லாவிதமான கப்பல்களும் வந்துபோகும், ஏற்றுமதி-இறக்குமதித் துறைமுகமாக இல்லை. அந்த அடிப்படையில்தான் அதை விரிவு செய்ய முயற்சிக்கிறோம். அவதிப்படும் ஸ்ரீலங்கா தமிழர்களை பாதுகாக்க, ஒரு பாதுகாப்பு ஸ்தலமாகக்கூட அதை அமைக்க வாய்ப்பு இருக்கக்கூடிய பகுதிதான் நாகப்பட்டினம். அதன் விரிவுக்கு ஒதுக்கியிருக்கிற ரூ. 20 லட்சம் போதாது. ஆகவே அதற்கு மேலும் நிதி ஒதுக்க நடவடிக்கைகள் எடுத்து, அதை மிகச் சிறப்பான துறைமுகமாக மாற்ற அரசு முயற்சிகள் மேற்கொள்ளுமா ?





**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி :** தலைவர் அவர்களே, அரசுக்கு அப்படிச் செய்யவேண்டிய ஆர்வம் இருக்கிறது. ஆனால் ஒரே மொத்தமாக அதற்குப் பணம் ஒதுக்க முடியவில்லை. ஆண்டுக்காண்டு கொஞ்சம் கொஞ்சமாக ஒதுக்கி செலவழிக்கிறோம். எதிர்காலத்தில் இந்த 20 லட்சம் ரூபாயைவிட அதிகப் பணம் ஒதுக்கி, படிப்படியான முன்னேற்றத்தைச் செய்ய அரசு முனைப்பாக இருக்கிறது.

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** இப்படி துறைமுகங்களை அபிவிருத்தி செய்ய மாநில அரசுகளுக்கு மத்திய அரசு உதவித் தொகை வழங்குகிறதா ? இப்போது ஒதுக்கியிருக்கிற ரூ. 20 லட்சத்தைவிட மேற்கொண்டு தொகை மத்திய அரசிடம் இருந்து கேட்டுப்பெற அரசு முயற்சி மேற்கொள்ளுமா ?

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி :** தலைவர் அவர்களே, தேவையான இனங்களில் மத்திய அரசிடம் பணம் கேட்கிறோம். அவர்களும் உதவி அளிக்கிறார்கள். இந்தத் திட்டம்பற்றி மத்திய அரசுக்கு எழுதியிருக்கிறோம். இன்னும் பதில் கிடைக்கவில்லை. கிடைத்தவுடன் எவ்வளவு உதவி கிடைக்கும் என்பது தெரியும்.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** தலைவர் அவர்களே, நாகப்பட்டினம் துறைமுகத்தைப் போலவே வேறு ஏதேனும் துறைமுகத்தை மேம்படுத்த அரசு பரிசீலனை செய்கிறதா ? அப்படி இருந்தால், அதில் கடலூர் துறைமுகம் அடங்குமா என்ற விபரம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி :** தலைவர் அவர்களே, மாநில அரசின் கட்டுப்பாட்டில் இருக்கிற துறைமுகங்களை முன்னேற்றம் செய்ய முயற்சிகளை மாநில அரசு எடுத்து வருகிறது. ஆனால் அதன் முழு விபரம் தற்போது என்னிடம் இல்லை. தனிக் கேள்வி போட்டால், விபரம் தர முடியும்.

**டாக்டர் இரா. சனார்த்தனம் :** தலைவர் அவர்களே, ஸ்ரீலங்காவில் உள்ள காங்கேசன் துறைமுகத்திற்கும், தமிழ்நாட்டில் நாகப்பட்டினம் துறைமுகத்திற்கும் உள்ள இடைவெளிதான் மிகக் குறைவான தூரமாகும். இரண்டு துறைமுகங்களுக்குமிடையே கப்பல் போக்குவரத்து விடவும் வாய்ப்பு இருக்கிறது. அந்த அடிப்படையில் நாகப்பட்டினம் துறைமுகத்தை விரிவு படுத்த, மாநில அரசு மத்திய அரசை வற்புறுத்துமா ?

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி :** மத்திய அரசை வற்புறுத்துகிறோமோ இல்லையோ, நாமே அதை முன்னேற்றம் செய்ய வேண்டுமென்ற முயற்சிகளை எடுத்திருக்கிறோம். அதற்கு பணப் பற்றாக்குறை ஏற்படுகிறபோது, மத்திய அரசை அணுகுகிறோம். ஏழாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் இந்தத் திட்டப் பணிகள் எடுத்துக்கொள்ளப்பட வேண்டுமென்று கேட்டிருக்கிறோம். கிடைக்கிற நிலைமையைப் பொறுத்து, மேல் நடவடிக்கை எடுக்கப்படும்.

**திரு. ஆர். டி. சீத்தாபதி :** தலைவர் அவர்களே, முன்பு எம். வி. சிதம்பரம் கப்பல் முன்பு நாகப்பட்டினம் துறைமுகம் வழியாகத்தான் சிங்கப்பூர் போன்ற நாடுகளுக்குச் சென்று வந்தது. இப்போது தீப்பிடித்துவிட்ட காரணத்தால், நிறுத்தப்பட்டுவிட்டது. ஆகவே, வேறு கப்பலை போக்குவரத்திற்காக சென்னை-சிங்கப்பூர் இடையே விட மத்திய அரசை மாநில அரசு வற்புறுத்துமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி :** தலைவர் அவர்களே, ஏற்கெனவே இதுகுறித்து மத்திய அரசு திட்டவட்டமாகப் பதில் சொல்லியிருந்தாலும், புதிய கப்பல் ஒன்றை விடவேண்டுமென்று கேட்கும் கடிதம் ஒன்று தயாராகிக் கொண்டிருக்கிறது.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி (*) அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

## 2. ஒழுங்குப் பிரச்சினை.

### கவன ஈர்ப்புத் தீர்மானங்கள் எடுத்துக் கொள்ளப்படாதது குறித்து.

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர். நேற்றைய தினம், ஜெயங்கொண்டம் பகுதியில் ஏராளமான கைத்தறித் துணிகள் தேங்கிக் கிடப்பதால் நெசவாளர்களுக்கு ஏற்பட்டுள்ள இன்னல் குறித்து ஒரு கவன ஈர்ப்புத் தீர்மானம் கொண்டுவந்தபோது, குறிப்பிட்ட அமைச்சர் அவர்கள் அவையில் இல்லாததால் அந்த கவன ஈர்ப்புத் தீர்மானம் நேற்று அனுமதிக்கப் படாமல், நாளைக்கு (அதாவது இன்றைக்கு) எடுத்துக்கொள்ளப்படும் என்று தாங்கள் அறிவித்தீர்கள். ஆனால் இன்றையதினம் உள்ள நிகழ்ச்சி நிரலில் அந்த கவன ஈர்ப்புத் தீர்மானம் இடம் பெறவில்லை. இன்றைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கிற இரண்டு கவன ஈர்ப்புத் தீர்மானத்திற்கும் பதில் சொல்ல வேண்டிய அமைச்சர் வராததால், இன்றும் இவை எடுத்துக்கொள்ளப்பட



வில்லை. பொதுவாக, பேரவை நடக்கும் நாட்களைவிட மேலவை குறைவான நாட்கள்தான் நடக்கின்றது. இந்தக் குறைவான நாளிலே அமைச்சர்கள் ஒப்புதல் பெற்றுதான் கவன ஈர்ப்புத் தீர்மானங்கள் இங்கே வருகின்றன. அப்படி ஒப்புதல் தந்துவிட்டபிறகும்கூட, அவர்கள் வராமல் இருந்தால், எப்படித்தான் ஒரு விடிவு ஏற்பட முடியும்? அதுமட்டுமல்ல, இந்த அவை நேற்று காலையிலும் நடந்தது; மாலையிலும் நடந்தது. காலையில்தான் அமைச்சர்கள் பேரவையிலே இருக்க வேண்டியிருக்கிறது, மேலவையிலேயும் இருக்க வேண்டியிருக்கிறது. ஆனால் நேற்று மாலை பேரவை இல்லை. அவ்வாறு பேரவை இல்லாவிட்டாலும்கூட, அமைச்சர்கள் ஓரிருவரைத் தவிர யாரும் மேலவைக்கு வரவில்லை. ஆகவே இந்த அவை அலட்சியப்படுத்தப் படுகிறதா என்பது எனக்கு ஐயமாக இருக்கிறது. ஆகவே நம்முடைய மாண்புமிகு தலைவர் அவர்கள் இதுபற்றி தெளிவான ஒரு தீர்ப்பை வழங்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** இரண்டு அவைகளும் ஏக காலத்தில் நடைபெறுவதால், சில சிக்கல்கள் எப்போதும் இருக்கத்தான் செய்கின்றன. இரண்டாவது, நேற்று பேரவையில் நடைபெற்ற கல்வி மான்யம் நேற்றே அங்கு முடிந்துவிடும் என்கிற எதிர்பார்ப்புடன் நிகழ்ச்சி நிரல் தயாரிக்கப்பட்டது. ஆனால் இன்றும் கல்வி மான்யத்தின் மீதான விவாதம் அங்கே தொடர்கிறது. இது எதிர்பாராது ஏற்பட்ட நிலை. அதனால்தான் ஒத்தி வைக்கப்படுகிறது. நாளைக்கு அது சேர்க்கப்படும்.

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** தலைவர் அவர்களே, நேற்று நீங்கள் சொன்னது வேறு துறை, அது கைத்தறி நெசவாளர் துறை.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** நான் சொன்னது . . .

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** நீங்கள் சொன்னது குறிப்பிலே இருக்கிறது. நாளைக்கு எடுத்துக் கொள்ளப்படும் என்று . . .

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** நான் ஒன்றும் மாற்றிக்கொள்ளவில்லை. ஒத்தி வைக்கப்படுகிறது 'நாளைக்கு' என்று சேர்த்துச் சொல்லியிருக்கிறேன். தப்பு ஒன்றும் இல்லை. இன்றைக்குச் சொன்னால் நாளைக்குத்தான். (சிரிப்பு)

(மாண்புமிகு உறுப்பினர் திரு. க. மீனாட்சிசுந்தரம் எழுந்தார்). பரவா யில்லை. விட்டுவிடுங்கள்.

### 3. தகவல் கோரல்.

#### உரிமைப் பிரச்சினைக்குத் தீர்ப்பு வழங்குதல் குறித்து.

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** தலைவர் அவர்களே, மற்றொன்று. நான், 15—3—1985 அன்று 'அண்ணா' பத்திரிக்கை மீது உரிமைப் பிரச்சினை தந்தேன். நாளையதினம் அவை முடிவதாக இருக்கிறது. பின்னர் தீர்ப்பு வழங்குவதாகச் சொன்னீர்கள். இதுவரை தீர்ப்பு வழங்கவில்லை. அந்தத் தீர்ப்பை எப்போது வழங்கப் போகிறீர்கள் என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** கூட்டம் முடிவதற்குள் தீர்ப்பு வழங்கப் படும், அடுத்து, நான்கு அரசு தீர்மானங்களும், நிதி நிலை அறிக்கைமீது விவாதம் . . .

#### (2) மேலவை உறுப்பினர்கள் சிலர் அவைக்குள் வராமல் அவைக்கு வெளியே இருந்துவிட்டுச் சென்று விடுவது குறித்து.

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** தலைவர் அவர்களே, மேலும் ஒரேயொரு தகவல்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** எத்தனை தகவல் ஒன்றுக்குப்பின் ஒன்று என்று? (சிரிப்பு) உறுப்பினர் அவர்கள் கலைஞர் தலைமையில் கட்சிக்குள் போனபின் குறையும் என்று நினைத்தேன் காணோமே . . . . (சிரிப்பு).

* **திரு. க. மீனாட்சிசுந்தரம் :** ஒரேயொரு தகவல் தெரிந்துகொள்ள விரும்புகிறேன். முன்னாள் அமைச்சர்களான இந்த அவையினுடைய மாண்புமிகு உறுப்பினர்கள் இந்த அவையிலே கூட்டம் நடைபெறும்போது, அவைக்குள் வரவே இல்லை. லாபியில் இருந்துவிட்டுச் சென்றுவிடுகிறார்கள். அவர்கள் வந்ததாகப் பதிவு செய்யப்படுமா? அவர்கள் அப்படிச் சென்று விடலாமா? அதில் எந்தவிதமான பாதகமும் இல்லையா? அவர்கள் லாபியில் இருந்து செல்வதே அவைக்கு வந்ததாகப் பதிவு செய்யப்படுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** அது அவரவர்கள் விருப்பம். ஆனால் குறிப்பிட்ட நாட்களுக்குள் அவர்கள் இங்கு ஆஜராகவில்லை என்றால் சட்ட விதிகளின்படி நடவடிக்கை எடுக்கப்படும். சில அவைகளிலே வராண்டாவில் கையெழுத்துப் போட்டுவிட்டுப் போகலாம். ஆனால் நமக்கு என்று ஒரு விதி இருக்கிறது. ஆனால் இப்போது நாம் ஒன்றும் சட்டரீதியாக உத்தாவாதம் தர முடியாது.



**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. மீனாட்சிசுந்தரம் சொன்னதையொட்டி ஒரு கருத்தைச் சொல்ல விரும்புகிறேன். பொதுவாக எங்களுக்கு ஒரு உணர்வு இருக்கிறது. மேலவைக்கு உள்ள முக்கியத்துவம் குறைக்கப்படுகின்றதோ என்ற உணர்வு எங்களுக்கு எல்லாம் பொதுவாக இருக்கிறது. இவ்வாறு மாண்புமிகு தலைவர் அவர்களுக்கும் கூட இருக்கலாம். அவர்கள் வெளியே சொல்லாமல் இருக்க லாம். ஆகவே, மாண்புமிகு தலைவர் அவர்களே, வேறொரு அவையிலே இருக்கின்ற நிகழ்ச்சிக்காக இந்த அவையின் நிகழ்ச்சிகளை ஒத்தி வைத்தால், நிச்சயமாக இந்த அவையின் முக்கியத்துவம் குறைகிறது என்று பொருள். தயவுசெய்து, மாண்புமிகு தலைவர் அவர்கள் எங்கள் உணர்வுகளை மாண்பு மிகு அமைச்சர்களின் கவனத்திற்குக் கொண்டுவந்து, இத்தகைய சம்பவங்கள் இனிமேல் நடக்காத வண்ணம் ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** உறுப்பினர் சொன்னவை எல்லாம் அமைச்சர்களுக்கும் தெரியும். நேற்றைவிட இன்றைக்கு அமைச்சர்கள் அதிகமாக வந்திருக்கும்போது, இப்படிச் சொல்லியிருக்கிறார்கள். அவை முன்னவர் அவர்களும் இதற்கு முயற்சி எடுத்துக்கொள்வார். அடுத்து நான்கு அரசு தீர்மானங்களை நிதிநிலை அறிக்கை மீதான விவாதம் முடிந்தபிறகு எடுத்துக்கொள்ளலாம். இதற்கு அவை ஒப்புதல் அளிக்க வேண்டுகிறேன்.

அடுத்து, 1985-86 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கை மீதான பொது விவாதம். டாக்டர் மு. கருணாநிதி . . .

### 4. 1985-86 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையின்மீது பொது விவாதம்—

**டாக்டர் மு. கருணாநிதி :** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, 1985-86 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கை மீது என்னுடைய கருத்துக்களை எடுத்துக்கூறுகின்ற வாய்ப்பினைப் பெற்றமைக்காக நான் முதலில் நன்றி கூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்த அறிக்கையின்மீது என்னுடைய கருத்துக்களை எடுத்துச் சொல்வ தற்கு முன்பு, இந்த அவையிலே சில உறுப்பினர்கள் மேலவையினுடைய மரபு மரியாதை காப்பாற்றப்பட வேண்டும், மேலவைக்கும் பேரவை போன்ற சரி சமமான மரியாதை, வாய்ப்பு வழங்கப்பட வேண்டும் என்றெல்லாம் முறை யீடுகளை வைத்தார்கள். தாங்களும் அதற்கு ஏற்ற வகையில் அவைகள் கவனிக்கப்படும் என்று கூறியதன் மூலம் இந்த மேலவையினுடைய மரபும் காப்பாற்றப்பட வேண்டும் என்பதிலே எவ்வளவு அக்கறை கொண்டிருக்கி

[டாக்டர் மு. கருணாநிதி] [1985 ஏப்ரல் 11

(முற்பகல் 10-15)

நீர்கள் என்பதை எடுத்துக்காட்டியிருக்கின்றீர்கள். என்னுடைய இந்த உரையினுடைய தொடக்கத்திலே, இந்த மேலவை எத்தகைய பெருமை மிக்க அவை இது என்பதையும், யார் யார் எல்லாம் இந்த அவையிலே இடம் பெற்றிருக்கிறார்கள் என்பதையும், இன்றைக்கு இந்த அவையிலே இடம் பெற்றிருக்கின்ற நாம் எண்ணிப்பார்க்கிற நேரத்தில், மிகச் சிறந்த—சிலாக்கியமான—பெருமைக்குரிய ஒரு இடத்தில் நாமெல்லாம் அமர்ந்திருக்கிறோம் என்கின்ற உணர்வு ஏற்படாமல் போகாது. குறிப்பாகச் சொல்ல வேண்டுமேயானால், பல்கலைக் கழகத்தினுடைய துணை வேந்தராக இருந்தவரும், ஆங்கிலப் புலமை மிக்கவரும், வாதத் திறமை வல்லுனருமான டாக்டர் ஏ. லட்சுணசாமி முதலியார் அவர்கள் வீற்றிருந்த அவை இந்த அவை. பம்பாயிலே ஆளுநராகப் பொறுபேற்று அரசியல் அரங்கத்திலே நல்ல வித்தகர் என்ற அளவுக்கு செல்வாக்குப் படைத்த டாக்டர் பி. வி. செரியன் அவர்கள் அமர்ந்திருந்த அவை இந்த அவை. மற்றும் "ஆந்திர கேசரி" என்று சிறப்பிக்கப்பட்ட டி. பிரகாசம் அவர்கள் அமர்ந்திருந்த அவை இந்த அவை. மூதறிஞர் ராஜாஜி அவர்கள் அமர்ந்திருந்து கருத்துக்களை பொழிந்த அவை இந்த அவை. திரு. சர்க்கரை செட்டியார், டாக்டர் வி. கே ஜான், டாக்டர் மகமத் உஸ்மான், முதல்வராக இருந்து பணியாற்றிய திரு. ஓ. பி. இராமசாமி ரெட்டியார், நீதிக் கட்சியின் தூண்கள் என்று பாராட்டப்பட்ட பண்பாளர் பி. டி. இராசன், ஏ. ஆர். தாமோதரன், திரு. வி. வி. இராமசாமி, மற்றும் திரு. கே. பாலசுப்பிரமணிய ஐயர், திரு. ஏ. எம். அல்லாப் பிச்சை, திரு. பாஷ்யம் ஐயங்கார், டாக்டர் ஏ. சீனிவாசன், மிகப்புகழ்பெற்ற டாக்டர் குருசாமி முதலியார், திருமதி கிளப்வாலா ஜாதவ், தமிழறிஞர் தவத்திரு குன்றக்குடி அடிகளார், திரு. முத்தரங்க முதலியார், பெரியவர் பக்தவத்சலனார், இன்றைய இந்தியக் குடியரசுத் துணைத் தலைவராக வீற்றிருக்கின்ற திரு. ஆர். வெங்கடராமன், மறைந்துவிட்ட நம்முடைய திரு. ராஜாராம் நாயுடு, டாக்டர் டி. எஸ். எஸ், ராஜன், ஆதித்தனார், திரு. பி. வி. ராஜமன்னார், திரு. பதஞ்சலி சாஸ்திரி, டாக்டர் நடேசன். இன்று பேரவையிலே எதிர்க் கட்சித் தலைவராக வீற்றிருக்கின்ற உ. சுப்பிரமணியம் அவர்களுடைய தந்தை திரு. உடையப்பா, ராஜா சர் முத்தையா செட்டியார், பேரறிஞர் அண்ணா அவர்கள், என்னுடைய அன்புக்குரிய நண்பர் இந்நாள் முதல்வர் எம்.ஜி.ஆர்., பெரும் புலவர் டாக்டர் சிதம்பரநாதன், தேசியக் கவி நாமக்கல் இராமலிங்கம் பிள்ளை ஆகியவர்கள் அமர்ந்து அலங்கரித்த அவை இந்த அவையாகும்.

இந்த அவையில் கற்றறிவாளரான தமிழறிஞரான தாங்கள் இன்றைக்குத் தலைமையேற்று இந்த அவையை நடத்திக் கொண்டிருக்கின்றீர்கள். அதுவும்



1985 ஏப்ரல் 11] [டாக்டர் மு. கருணாநிதி]

இந்த அவைக்குரிய பெருமைகளிலே ஒன்றாகும். இந்த அவையில் இன்றைக்கு வீற்றிருக்கின்ற நாமெல்லாம் இப்படிப்பட்ட ஒரு பாரம்பரியம் மிக்க பெரியவர்கள், சான்றோர்கள் இருந்த இடத்திலே அமர்ந்திருக்கிறோம் என்கின்ற உணர்வோடு தான் நம்முடைய கருத்துக்களை எடுத்துச் சொல்வதிலே பெருமை அடைகின்றோம்.

நம்முடைய அரசியல் கருத்து மாறுபாடுகளின் காரணமாக வெளியில் மேடைகளில் ஒருவரையொருவர் விமர்சிப்பது, விமர்சிக்கிற நேரத்திலே காரசாரமான வார்த்தைகள் பரிமாறிக்கொள்ளப்படுவது, இவைகள் எல்லாம் நீண்ட நெடு நாட்களாக இந்திய நாட்டு வரலாற்றில், குறிப்பாகத் தமிழகத்தின் அரசியல் வரலாற்றில் பழகிப்போன ஒன்றாக ஆகிவிட்டன என்றாலும்கூட, அவைகள் தவிர்க்க முடியாதவைகள் என்று ஆகிவிட்டாலும்கூட, அவற்றிலே ஓரளவாவது கண்ணியம் இருக்க வேண்டுமென்று எடுத்துச் சொல்லப்பட்டு, அதுவும் மீறப்படுகிற நிலைமைகளிலேகூட வெளி மேடைகளில் ஒருவரையொருவர் விமர்சித்துக் கொள்கிற நிலைமைகள் இருந்தாலும்கூட, இந்த அவையோடு இணைத்து அப்படிப்பட்ட வார்த்தைகள் சொல்லப்படுகிற நேரத்தில், அது இந்த அவையினுடைய பெருமையைக் குறைப்பதாக இருப்பதாக நான் கருதுகிறேன்.

அதிலும் குறிப்பாக என்னுடைய அன்புக்குரிய நண்பரும், தமிழகத்தின் நிதி அமைச்சர் பொறுப்பைப் பெற்றிருப்பவருமான நாவலர் அவர்கள் அண்மையிலே பட்டுக்கோட்டைக் கூட்டத்திலே பேசியதாக ஒரு செய்தி வந்து, நானும் அதை டேப் ரிக்கார்டரிலே கேட்டேன். தஞ்சாவூர்-திருச்சி 'மாலை முரசு' பத்திரிகையில் கூட அந்தப் பேச்சு வெளியாகியிருக்கிறது.

(முற்பகல் 10-20)

அங்கே நாவலர் அவர்கள் பேசியிருக்கிறார்கள். "ஒரு தொகுதியில் நின்று வெற்றி பெற்றுவருகிற யோக்கியதை இல்லாமல் 30 தி.மு.க. எம்.எல்.ஏ. க்களின் ஓட்டுக்களை வாங்கி எம்.எல்.சி. ஆகி, மக்களைச் சந்திக்கும் யோக்கியதை இல்லாத கருணாநிதி தேர்தலைப் பற்றிப் பேசுகிறார்" என்று குறிப்பிட்டிருக்கிறார். நாவலர், என்னைப்பற்றி வேகமாக, காரசாரமாகப் பேசியிருந்தாலும், நான் அதைப்பற்றிக் கவலைப்படமாட்டேன். ஆனால் இந்த அவைக்கு வருபவர்கள் மக்களுடைய வாக்குகளைப் பெற யோக்யதை இல்லாதவர்கள்தான் என்பதைப்போல் இந்த அவையினுடைய தரத்தை அவர்கள் மதிப்பிட்டிருப்பது உள்ளபடியே இந்த அவைக்கு பெருமை சேர்ப்பதாகாது என்பதால்தான். இந்த அவையின் சார்பாக வாதாடுகிறேனே தவிர, எனக்காக நான் வாதாடவில்லை. என்னுடைய தகுதி, திறமை, யோக்கியதை இவைகளைப்பற்றிப் பேசுவதற்கு நாவலர் அவர்களுக்கு உரிமை உண்டு

ஏனென்றால் இந்த இயக்கத்தில், திராவிட இயக்கத்தில் எனக்கெல்லாம் வழிகாட்டியாக இருக்கக்கூடிய அளவிற்கு நாவலர் அவர்கள் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திலிருந்து இளந்தாடி நெடுஞ் செழியனாக வந்த காலத்திலிருந்து கடந்த 40, 45 ஆண்டுக்காலமாக எனக்குப் பழக்கமுள்ளவர். எனவே அவர் இதைவிட கடுமையான வார்த்தைகளை, காரமான வார்த்தைகளைச் சொல்வதற்கு அவருக்கு உரிமை உண்டு. ஆனால் ஏதோ வெளியே மக்களால் தேர்ந்தெடுக்கப்பட முடியாதவர்கள்தான், அந்த யோக்கியதை இல்லாதவர்கள்தான் ஒரு 30 எம்.எல்.ஏ.-க்களின் ஓட்டுக்களை வாங்கி எம்.எல்.சி.-யாக ஆகிவிடுகிறார்கள் என்று இந்த அவையைப்பற்றிக் குறிப்பிடும்போது, அது நேர்த்தியானதாக இல்லை. இந்த அவையில் யார் யாரோ இருக்கிறோம்; தேர்தலில் நிற்காதவர்களும் இந்த அவைக்கு வந்திருக்கிறோம். தேர்தலில் நின்று தோற்றுவிட்ட பிறகு இந்த அவைக்கு வந்தவர்களும் இருக்கிறோம். இந்த அவையில் அப்படி வந்தவர்கள் அமைச்சர் களாகவும் வீற்றிருக்கிறோம். நான் அவர்களையெல்லாம் நிச்சயமாகக் குறைத்து மதிப்பிட மாட்டேன். நியமனத்தின் மூலமாக இந்த அவையில் இடம் பெற்றவர்களும் இருக்கிறார்கள். எனவே அமைச்சர் பெருமக்கள், மிகப் பொறுப்பான பதவியிலிருப்பவர்கள், அந்த அவையில் முன்னவராக இருப் பவரே இந்த அவையைக் குறித்து ஏதோ மக்களுடைய ஆதரவைப் பெற முடியாதவர்கள்தான் இந்த அவைக்கு வருகிறார்கள், அந்த யோக்கியதை அற்றவர்கள்தான் இந்த அவைக்கு வருகிறார்கள் என்று கூறுவது அவ்வளவு நேர்த்தியானதாக இல்லை. வரவேற்கத் தக்கதாக இல்லை. அது கண்டிக்கத் தக்க ஒரு கருத்தாக இருக்கிறது என்பதைத் தங்கள் மூலமாக இந்த அவையினுடைய பெருமையைக் காப்பாற்ற வேண்டும் என்பதற்காக நான் எடுத்துக் கூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதைப்போலவே இந்த அவையினுடைய முன்னவர் அவர்கள் ஒரு கருத்தைத் தெரிவித்திருக்கிறார்கள். அவருக்கும் எனக்கும் எத்தனை ஆண்டுக் கால பழக்கம், எவ்வளவு பாசம், எவ்வளவு அன்பு இவைகள் எல்லாம் இடையிலே ஏற்பட்ட அரசியல் புயல் காரணமாக, சில கருத்து மாறுபாடுகள் ஏற்பட்டிருந்தாலும், காரசாரமாக சொற்கள் வீசப்பட்டிருந்தாலும், மறந்து விட முடியாதவை. ஆனால் அவரும் இந்த அவையில் நடைபெற்ற ஒரு நிகழ்ச்சியைக் குறிப்பிட்டுப் பேசுகிறபோது ஒரு கருத்தைச் சொல்லி யிருக்கிறார். அவருடைய பேச்சு 31—3—1985 "அண்ணா" பத்திரிகையில் வெளியாகியிருக்கிறது. அறநிலையத் துறை அமைச்சர், என்னுடைய அன்பிற்குரிய மாண்புமிகு திரு. வீரப்பன் அவர்கள் பேசியிருக்கிறார். "மேலவையில் ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்போது பெரியவர் திரு. இராகவானந்தம் அவர்கள் பேசினார். புரட்சித் தலைவர்



ஆட்சியில் தொழிலாளர்களுக்காகச் செய்த நன்மைகளை எடுத்துக் கூறி அழகாகப் பேசுகிறார். அப்போது கருணாநிதி—விதவை போல் உட்கார்ந் திருக்கும் கருணாநிதி, இவ்வளவு நல்ல காரியங்களைத் தொழிலாளர் நல அமைச்சராக இருந்து செய்ததால்தான் உங்கள் பதவி பறிக்கப்பட்டதா என்று கேட்கிறார்."

நான் அன்றைக்கு பெருமதிப்பிற்குரிய நண்பர் திரு. இராகவானந்தம் அவர்களைப் பார்த்து "பதவி பறிக்கப்பட்டதா" என்றுகூட கேட்க வில்லை. "தொழிலாளர் நல அமைச்சராக இருந்து இவ்வளவு நல்ல காரியங்களைச் செய்த உங்களுக்கு இதுதான் பரிசா?" என்று கேட்டேன். அது எதுவானாலும் சரி, அப்போது அவையிலே உட்கார்ந்திருந்த கருணாநிதி என்று சொல்லியிருந்தாலும்கூட பரவாயில்லை. திரு. இராகவானந்தம் பற்றி நான் சொன்ன கருத்து தவறானது என்று விமர்சிப்பதற்கான உரிமை அவருக்கு உண்டு. ஆனால் அப்போது கருணாநிதி—விதவைபோல உட்கார்ந்திருக்கும் கருணாநிதி என்று அவர்கள் குறிப்பிட்டிருப்பது இந்த அவையில் உட்கார்ந்திருப்பவர்கள் எல்லாம் ஏதோ விதவைகள் என்பதைப் போலவும், விதவைகள் என்றாலே அவர்கள் ஏதோ வெறுக்கத் தக்கவர்கள், சமுதாயத்தில் வேண்டப்படாதவர்கள் அல்லது அவர்கள் புறக்கணிக்கப்பட வேண்டியவர்கள் என்கிற அளவுக்கு ஒரு இழிவான முறையில் என்னைக் குறிப்பிட்டதன் மூலம் இந்த அவையினுடைய பெருமை குறைக்கப் பட்டிருக்கிறது என்பதை எடுத்துக் கூறுவது என்னுடைய கடமையாக இருக்கிறது. இவைகளை இங்கே எடுத்துச் சொல்லுவதற்குக் காரணம் என்னைப்பற்றி, என்னுடைய கருத்துக்களைப்பற்றி, நான் சார்ந்திருக்கிற இயக்கத்தைப்பற்றி எவ்வளவு கடுமையான விமர்சனம் செய்தாலும் பரவாயில்லை. ஆனால் நாம் அனைவரும் கலந்து பழகி கருத்துரைகளைப் பரிமாறிக்கொள்கிற இந்த அவையைக் குறித்து—நான் ஏற்கெனவே குறிப்பிட்ட அத்தகைய பெரியவர்கள் எல்லாம் இருந்த இந்த அவையைக் குறித்து—கற்றறிந்த சிலம்புச் செல்வரான தாங்கள் தலைமையேற்று நடத்துகிற இந்த அவையைக் குறித்து—இனிமேல் இப்படிப்பட்ட விமர்சனம் வரக்கூடாது என்பதற்காகத்தான் சொல்கிறேனே தவிர வேறு அல்ல.

(முற்பகல் 10-25)

**மாண்புமிகு திரு. இராம. வீரப்பன்:** மாண்புமிகு தலைவர் அவர்களே, நான் பேசியதாக ஒரு குறிப்பை, 'அண்ணா' பத்திரிக்கையில் வந்தது என்று குறிப்பிட்டு மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் கலைஞர் அவர்கள் இங்கே ஒரு கருத்தைத் தெரிவித்திருக்கிறார்கள். 'அண்ணா' பத்திரிக்கையில் எப்படி வந்திருக்கிறது என்று நான் பார்க்கவில்லை. ஆனால் அன்றைக்குப் பேசுகின்ற

போது இப்படிப் பேசவில்லை என்பதைத் திட்டவட்டமாக மறுக்கிறேன். மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் டாக்டர் காளிமுத்து அவர்கள் அந்தக் கூட்டத்திலே இருந்தார்கள். அந்த நிகழ்ச்சியைப்பற்றிக் குறிப்பிட்டு, அப்போது டாக்டர் கலைஞர் கருணாநிதி என்று குறிப்பிட்டுப் பேசியிருப்பேன். வெறும் கருணாநிதி என்று குறிப்பிடுவதில்லை. அடைமொழியோடு பெரியவர்களைப்பற்றிக் குறிப்பிடும் வார்த்தைகளை பத்திரிக்கைகள எப்போதும் அவரவர் விருப்பப்படி விட்டுவிட்டு வெளியிடுகிறார்கள். எல்லா பத்திரிக்கைகளுக்கும் இது பத்திரிக்கை தர்மமாக எற்றுக்கொள்ளப் பட்டிருக்கிறது.—முரசொலி உட்பட. கருணாநிதி என்று போட்டிருந்தால், அப்படி நான் பேசவில்லை. அப்படி கருணாநிதி அவர்கள் விதவையாக அங்கே உட்கார்ந்திருக்கிறார் என்று இந்த அவையைப்பற்றிக் குறிப்பிடும்போது குறிப்பிடவில்லை. அங்கே ஆயிரக்கணக்காக கூடியிருந்தவர்களுக்குத் தெரியும். கலைஞர் அவர்கள் மறுத்து ஒரு கருத்தை வெளியிட்டார்கள். அதற்கு நம்முடைய முன்னாள் தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள் பதில் அளித்தார்கள் என்று புரட்சித் தலைவரை ஒப்பிட்டுப் பேசுகின்றபோது, திரு. இராகவானந்தம் அவர்களைப்பற்றி அந்தக் கருத்தை வெளியிட்டேனே தவிர, இங்கே குறிப்பிட்டதைப் போன்று 'அண்ணா' பத்திரிக்கையில் கருணாநிதி விதவை உணர்வோடு உட்கார்ந்திருக்கிறார்கள் என்று வந்திருந்தால் அது தவறு, அப்படி பேசப்படவில்லை. வேறு காரணத்திற்காக வேறு இடத்திலே ஒரு சொற்றொடரில் உவமானமாகப் பயன்படுத்தப்பட்டதை இணைத்து இங்கே போட்டிருக்கிறார்கள். இந்த அவையைக் குறித்தோ, இங்கே அமர்ந்திருக்கின்ற உறுப்பினர்களையோ அல்லது தலைவரைக் குறித்தோ தாக்குறைவாகப் பேசவில்லை, பேசுகின்ற எண்ணமும் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**டாக்டர் மு. கருணாநிதி :** தலைவர் அவர்களே, என்னுடைய கையில் இருப்பது 'அண்ணா' பத்திரிகை. அதிலே வந்திருப்பது தவறு என்று அமைச்சர் அவர்கள் சொன்னதற்குப் பிறகு, அதைப்பற்றி எதையும் பேச விரும்பவில்லை. அவருடைய கட்சியின் அதிகாரபூர்வமான ஏட்டில் தவறாக வந்திருப்பதாக அவர் குறிப்பிட்டிருப்பதை நான் மனமுவந்து எற்றுக் கொள்கிறேன்.



**மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் ;** கட்சியின் அதிகாரப்பூர்வமான ஏடு 'அண்ணா'-விலும் வருகிறது, இன்னுமொரு கட்சியின் அதிகாரபூர்வமான ஏடு 'முரசொலி' யிலும் வருகிறது. எல்லோரும் ஒரே உணர்வோடு பழகியிருந்த கருத்தை, அவர்களே ஒத்துக்கொண்டபடி, அரசியல் உணர்வுகளை எப்படி வெளிப்படுத்துவது என்பதைப்பற்றிப் பழகிக் கொண்டிருக்கிற முறையில் இந்த உணர்வுகள் வெளியிடப்பட்டிருக்கின்றன. இரண்டு பேருக்கும் இந்த நடைமுறை பொருந்துகிறது.

**டாக்டர் மு. கருணாநிதி :** மறுபடியும் அதையே வலியுறுத்துகிறார். அவர் தாலி கட்டிக்கொண்டவராக இருக்கட்டும். நான் விதவையாகவே இருந்து விட்டுப் போகிறேன். ஆனால் நான் விதவையாக இருந்தாலும் இருப்பேனே தவிர, பல பேருக்கு நிச்சயமாகத் தாலி கட்டிக்கொள்ள மாட்டேன் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்னொன்று, நிதியமைச்சர் நாவலர் அவர்கள் பேசியது. இதுவும் 'அண்ணா' பத்திரிகையில் வந்த கருத்துதான். தமிழகம் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் எவ்வளவு சீர்குலைந்து சின்னாபின்னமாக இருந்தது என்பதை எடுத்துக் குறிப்பிட்டிருக்கிறார்கள். அனகாபுத்தூர் கூட்டத்தில் 7—4—1985-ல் அவர் பேசிய பேச்சு 'அண்ணா' ஏட்டில் வெளியாகியிருக்கிறது. "1967-ல் பாடுபட்டுப் பெற்ற ஆட்சியை அண்ணா அவர்களுக்குப் பிறகு கருணாநிதி சின்னாபின்னம் ஆக்கினார். இவர் முதல்வராக ஆனவுடன் அண்ணா கண்ட ஆட்சி வீழ்த்தப்பட்டது" இது நிதியமைச்சர் நாவலர் அவர்களின் சொற்பொழிவிலே ஒரு பகுதி. ஆனால் நான் அதற்குப் பதில் அளிப்பதைவிட நாவலர் அவர்களைக் கொண்டே அதற்குப் பதில் அளிப்பது பொருத்தமாக இருக்கும் என்று கருதுகிறேன்.

— நெருக்கடி காலக் கொடுமைகளை எதிர்த்த காரணத்தாலே, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி 1976 ஆம் ஆண்டு சனவரி திங்கள் இறுதி நாளில் கலைக்கப்பட்ட பிறகு, நாவலர் அவர்கள் 'முரசொலி யில் தொடர்ந்து பல கட்டுரைகளை அவருக்கே உரிய தனித் தமிழ் நடையில் எழுதியிருக்கிறார். 24—4—1976 'முரசொலி'-யில் நாவலர் எழுதிய கட்டுரையின் ஒரு பகுதி. அதிலே "திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி" வேளாண்மைத் தொழிலில் ஈடுபட்டவர்களுக்கு முன்பு கொடுத்து வந்த சுமார் 2.75 கோடி ரூபாய் நீண்ட காலக் கடன்களை சுமார் 35 கோடி ரூபாய் அளவிற்கு உயர்த்திற்று. 31 கோடி ரூபாயாக இருந்த குறுகிய காலக் கடன்களை சுமார் 75 கோடி ரூபாயாக ஆக்கிற்று. திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி உழவுத் தொழில்

(முற்பகல் 10-30)

வளர்ச்சிக்கும் கைத்தொழில் பெருக்கத்திற்கும், பொறியியல் தொழில் மேம்பாட்டிற்கும், கூட்டுறவுத் துறையை ஒல்லும் வகை எல்லாம் பயன்படுத்தி வந்ததை நல் அறிவு படைத்த நடுநிலையாளர்கள் யாரும் மறந்திருக்க முடியாது. கழக அரசு பாடுபட்டு வந்ததன் காரணமாகத்தான் 1976-ல், 54 லட்சம் டன்னாக இருந்த உணவு உற்பத்தியை, 1976 ஆம் ஆண்டு நாவலர் அவர்கள் 'முரசொலி' பத்திரிகையிலே கட்டுரை எழுதினார்கள். இன்றைக்கு அவர் தந்த நிதிநிலை அறிக்கையைப் படித்துப் பார்த்தாலும், அதிலேகூட இப்போதுள்ள அறிக்கையில், உணவு உற்பத்தி 80 லட்சம் டன் அல்லது 84 லட்சம் டன் என்கின்ற அளவுக்கு எதிர்பார்க்கப்படுகிறது என்றுதான் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் கலைஞர் அவர்கள் நான் பேசிய பேச்சுக்களைப்பற்றி இங்கே குறிப்பிட்டுப் பேசியிருக்கின்றார்கள். நான் பேசியது, 1967-லே அறிஞர் அண்ணா அவர்கள் ஆட்சி அமைத்தார்கள். 1976-வது ஆண்டு ஜனவரி மாதம் 31-ம் தேதி அன்று, டாக்டர் கலைஞர் அவர்கள் தலைமையிலே இருந்த ஆட்சி வீழ்த்தப்பட்டது. அப்படி வீழ்த்தப்பட்ட ஆட்சியை மறுபடியும் புரட்சித் தலைவர் அவர்கள் தூக்கி நிறுத்தினார்கள் என்று சொன்னேனே தவிர, கலைஞர் தலைமையில் ஆட்சி சின்னாபின்னப்பட்டது என்ற கருத்தை நான் சொல்லவில்லை. அப்படிச் சொல்லியிருந்தால், நானும் அப்போது பொறுப்பிலே இருந்திருக்கிறேன். 1976 வரை நானும் இருந்திருக்கிறேன். அதை நான் எப்படிச் சொல்வேன் என்பதைச் சிந்திக்க வேண்டும். வீழ்ந்துவிட்டது. வீழ்ந்துவிட்ட அந்த ஆட்சியைத் தூக்கி நிறுத்தினார் என்ற அளவுக்குத்தான் சொன்னேன்.

மற்றொன்று, கலைஞர் அவர்கள் முதலிலே சொன்ன கருத்துபற்றி இப்போதே சொல்லிவிடலாம் என்று கருதுகிறேன். அவர்கள் எந்த அளவுக்கு மதிப்பு என்னிடம் வைத்திருக்கின்றார்கள், நான் அவரிடம் எந்த அளவுக்கு மதிப்பு வைத்திருக்கிறேன் என்றும் நாங்கள் அறிவோம். அவர்களே எடுத்துச் சொன்னமாதிரி, அரசியல் விமர்சனம் செய்கின்ற சமயங்களில் சில கருத்துக்களை எடுத்துச் சொல்கிறோம். பட்டுக்கோட்டையிலே பேசியபோது கூட, இந்த அவையைக் கேவலப்படுத்த வேண்டுமென்றோ, இந்த அவையை அவமானப்படுத்த வேண்டும் என்றோ நான் எதையும் எடுத்துச்சொல்ல



வில்லை. ஆனால் அவர் பொதுமக்களிடையே தேர்தலுக்கு நின்று, மக்களுடைய வாக்குகளைப் பெற்று, சட்டமன்றப் பேரவையிலே முதல் இடத்திலே உட்கார்ந்திருந்த கலைஞர் அவர்கள், திராவிட முன்னேற்றக் கழக 30 எம்.எல்.ஏ.-க்கள் வாக்குகளை மட்டும் வாங்கிக்கொண்டு மேலவையிலே வந்து உட்கார வேண்டிய அவசியம் இல்லை, அங்கே நின்றிருக்கலாம் என்ற கருத்தின் அடிப்படையிலேதான் சொன்னேனே தவிர, அவையைக் கேவலப் படுத்த வேண்டுமென்றோ அல்லது அவைக்கு இருக்கின்ற உரிமைகளை குறைக்க வேண்டும் என்றோ சொல்லவில்லை. இந்த அவையிலே இருக்கின்ற உறுப்பினர்கள் அத்தனை பேர்களும் அதை அறிவோம். மேலவையிலே உள்ள அத்தனை உறுப்பினர்களும் நாங்களும் அறிவோம். இதே அவைக்கு பேரறிஞர் அண்ணா அவர்கள், சட்டமன்ற உறுப்பினர்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு வந்தார்கள் என்பதையும் நாம் அறிவோம். அவரை நீங்களும் தலைவராக ஏற்றுக்கொண்டிருக்கிறீர்கள். நாங்களும் அவரைத் தலைவராக ஏற்றுக் கொண்டிருக்கிறோம். அந்தக் கருத்திலேதான் நான் சொன்னேன். இந்த அவையின் மதிப்பைக் குறைக்கவில்லை. அவர்கள் பொதுமக்களிடையே நின்று வாக்குகள் பெற்று அந்த அவைக்கு வந்திருக்கலாம். இங்கே வந்திருக்க வேண்டிய அவசியம் இல்லை என்பதற்காகத்தான் சொன்னேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** மாண்புமிகு திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் அவர்களுக்கும், மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய வேண்டுகோள். இங்கு பத்திரிகைகளைக் கொண்டு வந்து வைத்துக்கொண்டு பேசினாலும், வெளியிலே பேசியதை வைத்துப் பேசினாலும் யாரும் எந்த முடிவுக்கும் வர முடியாது. அவர்களே ' இல்லை ' என்று மறுத்து விடுகின்றார்கள். இங்கே அவரவர்களே விளங்கவைத்து பேசி புரிந்து கொள்ளவும், சமாதானமாகப் போகவும் ஒரு வாய்ப்பு கிடைத்திருப்பதால், நான் அதை வரவேற்கிறேன். கூடுமானவரையில் பத்திரிகைகளை வைத்துக் கொண்டு நாம் குற்றம் சாட்டிக்கொண்டிருந்தால், அதற்கு இந்த நிலைமைதான் ஏற்படும் என்பதை நினைவூட்டுகிறேன்.

**டாக்டர் மு. கருணாநிதி :** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, வெளியிலே பேசுவது, பத்திரிகையிலே வருவது இவற்றையெல்லாம் வைத்து இங்கே பேசுவது சில நாட்களாக அனுமதிக்கப்பட்டுவிட்ட காரணத்தினாலே, அதுவும் இந்த அவை பற்றிய குறிப்புகள் என்கின்ற காரணத்தினாலேயே, அதுவும் நாவலர் அவர்கள் இருந்து நடத்திய ஆட்சியைப்பற்றி அவர்கள் குறிப்பிட்டார்கள் என்று பத்திரிகையில் வந்திருக்கிறது என்ற காரணத்தினாலேயே, அவைகளை இங்கே கோடிட்டுக் காட்டினேனே தவிர, வேறல்ல. அவர்களே சொல்லிவிட்டார்கள். அண்ணா அவர்கள் பாடுபட்டு 1967-லே

உருவாக்கிய ஆட்சியை கருணாநிதி சின்னாபின்னம் ஆக்கினார் என்று நான் பேசவில்லை என்றும் 'அண்ணா' பத்திரிகையிலே வந்தது தவறு என்றும் அவர்கள் சொல்லிவிட்டார்கள். இனி தவறைத் திருத்திக்கொள்ள வேண்டிய பொறுப்பு 'அண்ணா' பத்திரிகைக்குரியது என்பதை நான் எடுத்துக் காட்டுகிறேன்.

நான் இங்கே சொல்லவந்தது, 1976 ஆம் ஆண்டு, அவர்கள் எழுதிய கட்டுரையில், கழக ஆட்சியிலே தமிழகத்திலே எந்த அளவிற்கு வளம் செறிந்து இருந்தது என்பதற்கும், தமிழகம் முற்போக்குப் பாதையிலே நடந்தது என்பதற்கும் இன்றைய நிதி அமைச்சர் அவர்கள் அன்றையதினம் தந்த விளக்கங்கள் என்பதற்காக அவைகளை நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். அவர்கள் குறிப்பிட்டிருக்கின்றார், "கழக அரசு பாடுபட்டதன் காரணமாக 1966-ல் 54 லட்சம் டன்னாக இருந்த உணவு உற்பத்தியை 1976-ல் 80 லட்சம் டன்னாக பெருக்கிக் காட்ட முடிந்தது" என்று சொல்லியிருக்கிறார். 1976-லே 80 லட்சம் டன்னாக நாங்கள் பெருக்கிக் காட்டியிருக்கிறோம் என்று அப்போதே குறிப்பிட்டிருந்தார்கள். இப்போது ஒன்றும் அதிகமாக உயர்ந்து

(முற்பகல் 10-35)

விடவில்லை என்பதையும், எதிர்பார்க்கப்படுகிற அந்த உணவு தானியங்கள் 82 அல்லது 85 லட்சம் டன் அளவுக்குத்தான் உயர்ந்திருக்கிறது என்பதையும் சுட்டிக் காட்டுகிறேன். 1966-ல் 11,000 சிறு தொழில்கள் இருந்ததாகவும், பிறகு 1976-ல் 50,000 சிறு தொழில்கள் தமிழகத்தில் எல்லாத் துறைகளிலும் சிறப்பாக இயங்குகின்றன என்றும் 24—4—1976 கட்டுரையில் நாவலர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். பம்ப்-செட் பற்றி அவர்கள் குறிப்பிடும்போது, மின் இறைவைகளைப் பயன்படுத்தி நீர்ப்பாசன வசதிகளைப் பெருக்கியுள்ள மாநிலங்களில் தமிழ்நாடு தான் முதலிடத்தில் இருக்கிறது. ஒன்பது ஆண்டுகளுக்கு முன்னால் 1967-ல் 2¾ லட்சம் பம்ப்-செட்டுகள் இருந்தன, மின் இறைவைகள் இருந்தன. இடைக்காலத்தில் கழக ஆட்சியில் 4¾ லட்சம் மின் இறைவைகள் பெருக்கப்பட்டன. ஆக 7½ லட்சம் மின் இறைவைகள் பயன்படுகின்றன. இந்த வகையில் தமிழ்நாடுதான் முன்னோடியாக இருந்து வருகிறது. இந்தியா முழுவதுமுள்ள மின் இறைவைகளில் மூன்றில் இரண்டு பங்கு மின் இறைவைகள் தமிழ்நாட்டில் மட்டுமே இருக்கின்றன. இது 27—3—1976 முரசொலியில் நாவலர் அவர்கள் எழுதிய கட்டுரை. அவர்கள் மேலும் குறிப்பிடுகிறார்கள் "சாலைகளின் நீளத்தைப் பொறுத்து மற்ற மாநிலங்களோடு ஒப்பிடும்போது, தமிழ்நாடு ஐந்தாம் இடத்தில் இருக்கிறது. தமிழ்நாடு அளவுக்குப் பரப்புள்ள மாநிலங்களோடு ஒப்பிட்டுப் பார்த்தால்,



தமிழ்நாடு தான் சாலைகள் நீளத்தைப் பொறுத்து முதலிடத்தைப் பெறுகிறது. காழ்ப்புணர்ச்சியின் காரணமாக, கழக ஆட்சியில் தமிழ்நாட்டில் பொருளாதாரம் சீர்கெட்டு விட்டது, பணமெல்லாம் காலியாகிவிட்டது, நிதி ஆதாரங்கள் பாழ்படுத்தப்பட்டு விட்டன. திட்டங்கள் நிறைவேற்றவில்லை என்று பொய்யுரைகள் புகன்றாலும் காய்தல் உவத்தல் இன்றி நடுநிலையில் நின்று ஆராய்ந்து பார்க்கும் நல்லறிவாளர்கள் தமிழ்நாட்டில் சிலபல ஆண்டுகளாக நிலவி வரும் பொருளாதார நிலையைப் பாராட்டவே செய்வார்கள்" என்று 1976-ல் நாவலா அவர்கள் கட்டுரை தீட்டினார்கள்.

"1975-ஆம் ஆண்டுக்காக நடைபெற்ற திறமைப் போட்டியில் அகில இந்தியாவில் தொழில் வளர்ச்சித் திறனில் தமிழ்நாடுதான் மிகச் சிறந்த மாநிலமாகத் திகழ்கிறதென்று தேர்ந்தெடுக்கப்பட்டு தமிழ்நாட்டுக்கு குடியரசுத் தலைவரின் சுழற் கேடயம் வழங்கப்பட்டது." 9—6—1976-ல் நாவலர் தீட்டிய கட்டுரை இது "திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியின்போது தமிழ்நாடு பரவலாகவும், பொதுவாகவும் பொருளாதார வளர்ச்சி பெற்று, இந்தியாவிலேயே முன்னணியில் நிற்கக்கூடிய தன்மையைப் பெற்றிருந்தது என்பது வேறு மாநிலத்தைச் சேர்ந்த வல்லுநர்கள் நடு நிலை நின்று ஆராய்ந்து வெளியிட்ட முடிவிலிருந்து அறிந்துகொள்ளலாம். 11—5—1970-ல் முரசொலியில் நாவலர் தீட்டிய கட்டுரை இது.

அந்த நாவலர்தான் இன்றையதினம் நிதி அமைச்சருடைய பொறுப்பை ஏற்று, இந்த அவையின் முன்னாலே நிதி நிலை அறிக்கையை வைத்திருக்கிறார்கள். இந்த நிதி நிலை அறிக்கையைப் பொறுத்தவரையில், 1985-86 ஆம் ஆண்டு வருவாய்க் கணக்கில் தமிழக அரசின் வருவாய் 2,368.42 கோடி ரூபாய் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த நிதி நிலை வளர்ந்துள்ள வரலாற்றை சற்று திரும்பிப் பார்த்து கவனித்தால், எப்படிப்பட்ட பெரும் வளர்ச்சி தமிழக அரசின் வருவாய்த் துறையிலே ஏற்பட்டிருக்கிறது என்பதை நாம் எளிதாக உணர்ந்துகொள்ள முடியும். 1938-39 ஆம் ஆண்டில், வருவாய்க் கணக்கிலே இந்த அரசாங்கத்தின் வருவாய் 16.14 கோடி ரூபாய், அது இப்போது 2,368 கோடி ரூபாயாக உயர்ந்திருக்கிறது. 1966-67-ல் காங்கிரஸ் ஆட்சி நடந்தபோது அந்த ஆட்சி நிறைவுறுகின்ற அந்தக் காலக்கட்டத்தில் 188.72 கோடி ரூபாயாக வருவாய்த் துறைக் கணக்கிலே வருவாய் இருந்தது. 1975-76-ல் கழக ஆட்சி கலைக்கப்பட்ட அந்தக் காலக்கட்டத்தில் தமிழகத்தின் வருவாய்த் துறை கணக்கிலே ரூபாய் 501 கோடி ரூபாயாக இருந்தது. எனவே இதைக் கணக்கிடும்போது, இப்போது 4½ மடங்கு அதிக வருவாய் உள்ளது, 501 கோடி ரூபாயிலிருந்து 10 ஆண்டுக் காலத்தில் 4½

(முற்பகல் 10-40)

மடங்கு அதிகமாகி 2,368.42 கோடி ரூபாய் என்ற அளவுக்கு வருவாய்த் துறையிலே நம்முடைய வருவாய் உயர்ந்திருக்கிறது. ஆனால் வருமானம் உயர்ந்துள்ள அளவுக்கு பல்வேறு துறைகளுக்கும் ஒதுக்கப்படுகின்ற தொகை உயர்ந்திருக்கிறதா என்று பார்த்தால், சறறு ஏமாற்றம் அளிக்கும் வகையில் இருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்டுவதை என்னுடைய கடமையாகக் கருதுகிறேன். மாண்புமிகு டாக்டர் நாவலர் அவர்கள் பேரவையிலே நிதி நிலை அறிக்கையின் மீது நடைபெற்ற விவாதத்திற்கு பதிலளிக்கையில் ஒன்றைக் குறிப்பிட்டிருக்கிறார்கள். தமிழகம் வளர்ச்சியில் கீழ்நோக்கிப் போய்விட்டது என்று சிலர் சொன்னார்கள். ஆனால் மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்கள் பொறுப்பேற்ற பிறகு, கடந்த 7, 8 ஆண்டுகளாக தமிழகம் எதிலும் பின்தங்கவில்லை என்று சொல்லியிருக்கிறார்கள். 1976-77-ல் கல்விக்காக ஒதுக்கியது ரூ. 141 கோடி. ஆனால் இன்று ரூ. 468 கோடியாக அது உயர்ந்து விட்டது என்று சொல்லி ஒவ்வொரு துறை பற்றியும் அவர்கள் பேரவையிலே சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். ஆனால் 1975-76-ல் கழக ஆட்சியின்போது மொத்த வருமானம் 501 கோடி ரூபாய், அந்தத் துறைக்கு அன்றைக்கு ஒதுக்கப்பட்ட தொகையைவிட இன்றைக்கு 4½ மடங்கு அதிக வருவாய் வந்துள்ள காலக்கட்டத்தில் அதே விகிதத்தில் அதிகத் தொகை ஒதுக்கப்பட்டிருக்க வேண்டும். ஆனால் ஒதுக்கியுள்ள தொகையில் பெரும் வேறுபாடு இருக்கிறது. 1975-76-ல் 501 கோடி ரூபாய் வருமானம் வந்தபோது கல்விக்காக திராவிட முன்னேற்றக் கழக அரசு ஒதுக்கியது 118 கோடி ரூபாய். அதாவது மொத்த வருவாயில் 23.64 சதவிகிதம் கல்விக்காக ஒதுக்கப்பட்டது. இப்பொழுது 23.64 சதவிகித அளவுக்கு ஒதுக்குவது என்றால் 559.80 கோடி ரூபாய் கல்விக்காக ஒதுக்கியிருக்க வேண்டும். ஆனால் அதற்கு மாறாக கல்விக்காக 468 கோடி ரூபாய்தான் ஒதுக்கப்பட்டிருக்கிறது என்பதை நான் இங்கே சுட்டிக்காட்ட கடமைப்பட்டிருக்கிறேன். அதாவது 19.06 சதவிகிதம் தான் கல்விக்காக ஒதுக்கப்பட்டிருக்கிறது. கடந்த ஆண்டு 20.01 சதவிகிதம் கல்விக்காக ஒதுக்கப்பட்டிருந்த இந்த ஆண்டு அதைவிடவும் குறைவாக ஒதுக்கப்பட்டிருக்கிறது. அதோடு மாத்திரமல்லாமல் இன்னும் சில முக்கியமான துறைகளுக்கு திராவிடமுன்னேற்றக் கழக ஆட்சியின்போது ஒதுக்கப்பட்ட விகிதாசாரத்தைவிட இந்த ஆட்சியிலே குறைவாக ஒதுக்கப்பட்டிருக்கிறது என்பதை இந்த வரவு செலவுத் திட்டத்தின் மூலமாக நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். 1975-76-ல் மருத்துவத்திற்காக 6.19 சதவிகிதம் ஒதுக்கப்பட்டது. ஆனால் இப்பொழுது 4.58 சதவிகிதம்தான் ஒதுக்கப்பட்டிருக்கிறது. கூட்டுறவுத் துறைக்காக 1975-76-ல் 0.92 சதவிகிதம் ஒதுக்கப்



பட்டது. ஆனால் இப்பொழுது .50 சதவிகிதம்தான் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அதாவது 1975-76-ல் ஒதுக்கியதுபோல் இந்த ஆண்டும் கூட்டுறவுத் துறைக்கு .92 சதவிகிதம் ஒதுக்குவதாக இருந்தால், 21 கோடியே 79 லட்சம் ஒதுக்கியிருக்க வேண்டும். ஆனால் ஒதுக்கியிருப்பதோ 11 கோடியே 78 லட்சம்தான் என்பதை நான் இங்கே கோடிட்டுக்காட்ட விரும்புகிறேன். தொழில்களைப் பொறுத்தவரை, ஊரகத் தொழில்களையும் சேர்த்து 1975-76-ல், 79 சதவிகிதம் ஒதுக்கப்பட்டிருக்க 1985-86-ல் .71 சதவிகிதம்தான் ஒதுக்கப்பட்டிருக்கிறது. தொழிலாளர் நலனுக்கு 1975-76-ல் .67 சதவிகிதம் ஒதுக்கப்பட்டிருக்க இப்போது .52 சதவிகிதம்தான் ஒதுக்கப்பட்டிருக்கிறது. பாசனத்திற்கு 1975-76-ல் 3.94 சதவிகிதம் ஒதுக்கப்பட்டிருக்க இப்போது 2.4 சதவிகிதம்தான் ஒதுக்கப்பட்டிருக்கிறது. சாலைகள், பாலங்களுக்கு 1975-76-ல் 4.20 சதவிகிதம் ஒதுக்கப்பட்டிருக்க, இப்போது 3.08 சதவிகிதம்தான் ஒதுக்கப்பட்டிருக்கிறது. காட்டு வளத்திற்கு 1975-76-ல் .66 சதவிகிதம் ஒதுக்கப்பட்டிருக்க இப்போது 0.52 சதவிகிதம்தான் ஒதுக்கப்பட்டிருக்கிறது. சிறைச்சாலைகளின் வசதிகளுக்காக .88 சதவிகிதம் 1975-76-ல் ஒதுக்கப்பட்டிருக்க இப்போது .34 சதவிகிதம்தான் ஒதுக்கப்பட்டிருக்கிறது. காவல் துறைக்கு 1975-76-ல் 5.36 சதவிகிதம் ஒதுக்கப்பட்டிருக்க, இப்போது 3.89 சதவிகிதம்தான் ஒதுக்கப்பட்டிருக்கிறது. பிற்பட்டோர் நலத் துறைக்கு 1975-76-ல் 1.16 சதவிகிதம் ஒதுக்கப்பட்டிருக்க இப்போது .49 சதவிகிதம்தான் ஒதுக்கப்பட்டிருக்கிறது. கடந்த ஆண்டு கூட பிற்பட்டோர் நலத் துறைக்கு 0.58 சதவிகிதம் ஒதுக்கப்பட்டிருந்தது. இப்போது அதையும் விட குறைவாக அதாவது 0.49 சதவிகிதம் தான் ஒதுக்கப்பட்டிருக்கிறது என்பதை நான் மாண்புமிகு நிதியமைச்சர் டாக்டர் நாவலர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

தாழ்த்தப்பட்டோர் நலனுக்காக 1975-76-ல் 1.9 சதவிகிதம் ஒதுக்கப்பட்டிருக்க இந்த வரவு-செலவுத் திட்டத்தில் 1.86 சதவிகிதம் தான் ஒதுக்கப்பட்டிருக்கிறது என்பதை நான் கோடிட்டுக்காட்ட விரும்புகிறேன்.

(முற்பகல் 10-45)

எனவே முக்கியமான எல்லாத் துறைகளுக்கும் கழக ஆட்சிக் காலத்தில் ஒதுக்கப்பட்ட சதவிகிதத்தை விட, இப்போது குறைவாகத்தான் ஒதுக்கப்பட்டிருக்கிறது என்பதை தெளிவாக்கத்தான் கூறுகினேனே அல்லாமல் வேறல்ல. அப்படி ஒதுக்கப்பட்ட இந்தத் தொகைகளாவது முழுமையாக அந்தந்தத் துறைகளுக்கு அல்லது திட்டங்களுக்குச் செலவழிக்கப்பட்டிருக்கிறதா என்றால், டெல்லியில் உள்ள கணக்குத் தணிக்கை அதிகாரி (Comptroller and Auditor-General of India) தனது அறிக்கையில் கூறியிருக்கிற

விபரங்கள் நமக்கெல்லாம் அதிர்ச்சி- அளிக்கத்தக்கவையாக இருக்கின்றன. நாம் மத்திய அரசிடம் தொகையை அதிகப்படுத்திக் கேட்டு வாங்கினால் மட்டும் போதாது. மாநிலத்தின் வருவாயை அதிகப்படுத்தினால் மட்டும் போதாது. புதிய புதிய திட்டங்களை அறிவித்தால் மட்டும் போதாது, அவைகளுக்கு ஒதுக்குகிற பணத்தை உரிய முறையில் செலவழிக்க வேண்டுமென்பதற்காக அல்லது திருத்திக்கொள்ள வேண்டுமென்பதற்காகத்தான், இவைகளை கூறுகிறேனேயல்லாமல், வேறல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். 1982-83 ஆம் ஆண்டுக்கான தணிக்கை அதிகாரியின் அறிக்கையைத்தான் நாம் பார்க்கிறோம். அடுத்த ஆண்டுகளுக்கான தணிக்கை அறிக்கை அவைக்கு அறிவிக்கப்படவில்லை.

1982-83 ஆம் ஆண்டுக்கான கணக்குத் தணிக்கை அதிகாரியின் விபரத்தின் அடிப்படையில் பார்த்தால், வருவாய்க் கணக்கில் 561.10 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டதில், 397.72 கோடி ரூபாயும், மூலதனத் துறையில் 174.78 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டதில் 147.37 கோடிதான் செலவு செய்யப்பட்டிருக்கிறது என்று சொல்லப்பட்டிருக்கிறது. அதாவது வருவாய்த் துறையில், ரூபாய் 163.38 கோடியும், மூலதனச் செலவில் ரூபாய் 27.37 கோடியும் செலவழிக்கப்படவில்லை.

இதை சதவீத அடிப்படையில் பார்த்தால், 29 சதவீதம் ஒதுக்கப்பட்ட தொகையிலிருந்து செலவழிக்கப்படவில்லை என்று தெரிகிறது. வருவாய்த் துறையில் முக்கியமாக எந்தெந்தத் துறைகளில் குறைவு ஏற்பட்டிருக்கிறது என்று சொன்னால், சமூகப் பாதுகாப்பு, சமூக நலம் இந்தத் துறையில் 31.93 கோடி ரூபாயும் செலவழிக்கப்படவில்லை. கல்வித் துறையில் 22.83 கோடி ரூபாய் செலவழிக்கப்படவில்லை. குடிநீர் வழங்குதல், பொது மருத்துவம் என்ற துறையில் ரூ. 7.44 கோடி செலவழிக்கப்படவில்லை. தொழிலாளர் நலம், வேலைவாய்ப்பு, இந்தத் துறையில், 4.92 கோடி ரூபாய் செலவழிக்கப்படவில்லை. உணவுத்துறையில் 51.47 கோடி ரூபாயும், சாலைகள், பாலங்கள் இந்தத் துறையில் 12.85 கோடி ரூபாயும் செலவழிக்கப்படவில்லை. வேளாண்மைத் துறையில் 11.95 கோடி ரூபாய் செலவழிக்கப்படவில்லை, மேலும் பல துறைகளில் ஒதுக்கப்பட்ட தொகை செலவழிக்கப்படாமல் மீதப்பட்டிருக்கிறது. நில வருவாய் துறையில் 12.09 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டதில் 3.02 கோடி ரூபாய் செலவழிக்கப்படவில்லை. வேளாண்மைத் துறையில் 63.73 கோடி ஒதுக்கப்பட்டிருக்க அதிலே 16.27 கோடி ரூபாய் செலவழிக்கப்படவில்லை.





இன்னொரு அதிர்ச்சியான செய்தி, நகர்ப்புற வளர்ச்சிக்காக ரூபாய் 24.66 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்க, அதிலே 22.23 கோடி ரூபாய் செலவழிக்கப்படவில்லை. பாசனத்திற்காக ரூபாய் 43.51 கோடி ஒதுக்கப்பட்டிருக்க. 4.56 கோடி ரூபாய் செலவழிக்கப்படவில்லை.

இவை மட்டுமல்லாமல், இன்னொன்றையும் குறிப்பிட விரும்புகிறேன். நில ஆயத்தீர்வைத் துறை என்ற பெயரில் ஒரு துறை இருக்கிறது. அந்தத் துறையில் மதுவிலக்கு தளர்த்தப்பட்டு அல்லது ரத்து செய்யப்பட்டுள்ள இந்தச் சூழ்நிலையில், குடிப்பழக்கம் தீதானது என்பதை நாட்டு மக்களுக்கு எடுத்து விளக்க, 137.11 லட்ச ரூபாய் 1982-83 ஆம் ஆண்டு ஒதுக்கப்பட்டதில், கிட்டத்தட்ட 93 லட்ச ரூபாய் செலவழிக்கப்படாமல் சரண்டர் செய்யப்பட்டதாக அந்தத் தணிக்கை அறிக்கை கூறுகிறது. அதற்கான காரணம் என்ன சொல்லப்படுகிறது என்றால், "குடிப்பதால் ஏற்படும் தீமைகளைப் பற்றி விளம்பரம் செய்வதற்காக 100 லட்சம் ரூபாய் அந்தத் தலைப்பில் ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஆயத்தீர்வை கமிஷனர் 1982-83 ஆம் ஆண்டு மே மாதம் தயாரித்து ஒரு திட்டத்தை அரசுக்கு அனுப்பினார். அப்படி அனுப்பியதை அரசு ஏதோ காரணம் கூறி திருப்பியனுப்பி விட்டது. ஆனால் மாற்றுத் திட்டம் இதுவரையில் கமிஷனரால் தயார் செய்து அனுப்பபடாத காரணத்தால், 93 லட்ச ரூபாய், கிட்டத்தட்ட 113 லட்ச ரூபாயில் 93 லட்ச ரூபாய் செலவழிக்கப்படாமல் அது சரண்டர் செய்யப்பட்டிருக்கிறது" என்பதையும் நான் இந்த வரவு செலவுத் திட்டத்தில் நிதியமைச்சருடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

நிதியமைச்சர் தன்னுடைய உரையில் 20 அம்சத் திட்டத்தை வெற்றிகரமாக நிறைவேற்ற தமிழ்நாடு மிகவும் முக்கியத்துவம் கொடுத்து வந்திருக்கிறது. 20 அம்சத் திட்டத்தை நிறைவேற்றும் பணியில் தமிழ்நாடு தலைசிறந்த பணியில் ஈடுபட்டிருக்கிறது என்று 1982-83 ஆம் ஆண்டிலேயே அறிவிக்கப்பட்டுள்ளது என்று இப்போது அவர்கள் இந்த வரவு-செலவுத் திட்டத்தில் கூறியிருக்கிறார்கள்.

(முற்பகல் 10-50)

20 அம்சத் திட்டத்தை திராவிட முன்னேற்றக் கழக அரசு நிறைவேற்றவில்லை என்கின்ற ஒரு குற்றச்சாட்டு பேரவையிலும், மேலவையிலும் அப்போது எழுப்பப்பட்டபோது, மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் கல்வி அமைச்சராக இருந்த அந்தக் காலத்தில் அதற்கு நாம் விளக்கங்களை வழங்கியிருக்கின்றோம். திராவிட முன்னேற்றக் கழக அரசு இருந்தபோது, இருபது அம்சத் திட்டத்தைச் சரியாக நிறைவேற்றவில்லை என்று குறை கூறிப்

பேசியவர்களுக்கு, அதற்காக ஒரு கண்டனத் தீர்மானமே கொண்டுவரப்பட்ட போது, நாம் அளித்த பதிலைவிட, கல்கத்தாவிலிருந்து வருகின்ற ஒரு பத்திரிக்கையில் வெளியான புள்ளிவிவரங்களைக் கொடுத்தால், சிறப்பாக இருக்கும். 'பிசினஸ் ஸ்டாண்டர்டு' என்று கல்கத்தாவிலிருந்து வருகிற பத்திரிக்கை, 1976 ஆம் ஆண்டில் ஏப்ரல் திங்கள் 19 ஆம் நாள் வெளியான பதிப்பில் சொல்கிறது. இருபது அம்சத் திட்டம் பிறப்பிக்கப்பட்ட பிறகு முதல் ஆறே மாதங்களில் எந்த அளவிற்கு வேலைவாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது என்பதைப் படம் பிடித்துக் காட்டி அந்த ஏடு தெளிவாக விளக்கியது.

அதாவது, அஸ்ஸாம் மாநிலத்தில் 3,112 பேருக்கும், இமாசலப் பிரதேசத்தில் 4,802 பேருக்கும், குஜராத் மாநிலத்தில் 5,877 பேருக்கும் கர்நாடக மாநிலத்தில் 6,759 பேருக்கும், மேற்கு வங்கத்தில் 6,813 பேருக்கும், பீகாரில் 11,780 பேருக்கும், ராஜஸ்தானில் 12,909 பேருக்கும், கேரளாவில் 13,475 பேருக்கும, ஒரிஸ்ஸாவில் 14,049 பேருக்கும், அரியானாவில 14,207 பேருக்கும், பஞ்சாப்பில் 14,445 பேருக்கும், மத்தியப் பிரதேசத்தில் 17,372 பேருக்கும், மகாராட்டிரத்தில் 17,498 பேருக்கும், ஆந்திராவில் 19,436 பேருக்கும், உத்தரப் பிரதேசத்தில் 21,549 பேருக்கும், தமிழ்நாட்டில் 21,680 பேருக்கும் வேலை வாய்ப்பு அளிக்கப்பட்டதாக அது கூறுகிறது. அதாவது எட்டு கோடிக்கு மேல் மக்கள் தொகை கொண்ட உத்தரப் பிரதேச மாநிலத்தில் 21,549 பேருக்கும், நான்கு கோடி சொச்சம் மக்கள்தொகையாக இருந்த தமிழகத்தில் 20 அம்சத் திட்டம் பிறப்பிக்கப்பட்ட ஆறே மாதகாலத்தில் 21,680 பேருக்கும் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே வேலை வாய்ப்பு வழங்கப்பட்டது.

அதுமட்டுமல்ல, 'பிசினஸ் ஸ்டாண்டர்டு' என்கிற அதே ஏடு ஒவ்வொரு மாநிலமும் எத்தனை சதவிதம் மின் வசதியைக் கிராமங்களுக்குக் கொடுத்திருக்கிறது என்ற புள்ளிவிவரத்தையும் கூறுகிறது. அதில், அருணாசலப் பிரதேசம் 1.9 சதவீதமும், சிக்கிம் 2.8 சதவீதமும், திரிபுரா 3.4 சதவீதமும், மேகாலயா 4.3 சதவீதமும், அஸ்ஸாம் 6.3 சதவீதமும், மணிப்பூர் 11.3 சதவீதமும், பீகார் 15.5 சதவீதமும், மத்தியப் பிரதேசம் 16.3 சதவீதமும், நாகாலாந்து 18.1 சதவீதமும், ராஜஸ்தான் 20.2 சதவீதமும், ஒரிஸ்ஸா 21.8 சதவீதமும், மேற்குவங்கம் 25.2 சதவீதமும், ஜம்மு-காஷ்மீர் 26 சதவீதமும், உத்தரப் பிரதேசம் 27.7 சதவீதமும், குஜராத் 34 சதவீதமும், இமாசலப் பிரதேசம் 37.9 சதவீதமும், ஆந்திரா 39.5 சதவீதமும், கர்நாடகா 52.3 சதவீதமும், மராட்டியம் 53.8 சதவீதமும், பஞ்சாப் 74.9 சதவீதமும், கேரளா 94.3 சதவீதமும், தமிழ்நாடு 98 சதவீதமும், அரியானா 100 சதவீதமும் மின்



வசதியைச் செய்திருப்பதாகக் கூறுகிறது. அதாவது அரியானா என்பது, தமிழ் நாட்டிலுள்ள ஒரு மாவட்ட அளவேயுள்ள ஒரு மாநிலம் என்கின்ற காரணத்தால், அங்கே நூறு சதவீதம். அரியானா போன்று பல பகுதிகளைக் கொண்ட—நான்கு அல்லது ஐந்து அல்லது ஆறு மடங்கு அதிகமான பரப்புள்ள தமிழ்நாட்டில் அன்றைக்கு 98 சதவீதம் கிராமப்புறங்களில் மின் வசதியைச் செய்து கொடுத்திருக்கிறோம். ஆகவே இருபது அம்சத் திட்டங்கள் இந்த ஆட்சியில் மட்டுமல்ல, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலும் ஒழுங்காக நிறைவேற்றப்பட்டன என்று காட்டுவதற்காக இவற்றைக் குறிப்பிட்டேன். அன்றைய பாரதப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி அவர்கள் இருபது அம்சத் திட்டத்தை அறிவிப்பதற்கு முன்னாலேயே கூட அந்தத் திட்டங்கள் எல்லாம் படிப்படியாக இங்கே நிறைவேற்றப்பட்டன என்கின்ற புள்ளிவிவரங்களை நானும், மாண்புமிகு நாவலர் அவர்களும் கூட அன்றைக்கு சட்டப் பேரவையிலே எடுத்து விளக்கி இருக்கிறோம் என்பதற்காகத்தான் இதை இங்கே எடுத்துச் சொன்னேன். மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் தன்னுடைய பதிலுரையில்—அதாவது வரவு செலவுத் திட்டத்தின் மீது பேரவையில் நடைபெற்ற விவாதத்திற்குப் பதில் வழங்கும்போது—தமிழகம் எந்த அளவிற்கு எந்த எந்தத் துறைகளில் வளர்ந்திருக்கின்றது என்ற பட்டியல் தரப்படும் என்று கூறிவிட்டு விவரங்களைத் தந்திருக்கின்றார்கள். ஆனால் மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் குறிப்பிடும் அந்த வளர்ச்சி எல்லாம் ஒரு சிலரை பணக்காரர்களாக்கத்தான் பயன்படக்கூடிய வளர்ச்சியே தவிர, மக்களுக்கு நன்மை செய்யக்கூடியதல்ல. அப்படியானால்

(முற்பகல் 10-55)

சத்துணவுத் திட்டம், சிறார்களுக்கு சீருடை வழங்குதல் இவைகள் எல்லாம் மக்களுக்கு நன்மை செய்யக் கூடிய திட்டங்கள் என்பதை நான் மறுக்கவில்லை. சத்துணவு இன்னும் சத்துணவாகப் போடப்பட வேண்டுமென்பதிலும், சீருடை அனைவருக்கும் அளிக்கப்பட வேண்டுமென்பதிலும் இருவேறு கருத்துக்களுக்கு இடமில்லை. ஆனால் இன்னும் பொருளாதாரத் துறையிலே வேலை வாய்ப்புகளைப் பெற்று தங்களையும், தங்களுடைய குழந்தைகளையும் காப்பாற்றக் கூடிய அளவுக்கு வசதி வாய்ப்புக்களை தமிழ் நாட்டிலே உள்ள ஏழை எளிய மக்கள் பெற்றிருக்கிறார்களா என்ற கேள்விக்கு நாம் விடை கண்டாக வேண்டும். வேலைவாய்ப்பு இல்லாத மக்களுடைய எண்ணிக்கை குறைந்திருக்கிறதா ? இந்த வினா நமக்கு எந்த விளக்கத்தை அளிக்கிறது என்பதை நான் சுட்டிக்காட்டுவதைக் கடமையாகக் கருதுகிறேன். இந்த அரசின் சார்பிலே வெளியிடப்பட்டுள்ள ஆறாவது ஐந்தாண்டுத் திட்டம் என்ற

நூலில் வேலை வாய்ப்பைப்பற்றி என்ன கூறப்பட்டிருக்கிறது? அந்தப் புத்தகத்தில் வேலை வாய்ப்பின்மையைப் பொறுத்தவரையில், ஏனைய மாநிலங்களைவிட தமிழ்நாடு மிகவும் மோசமான நிலையிலே உள்ளது என்று கூறுவது சாலப் பொருத்தமாகும். அகில இந்திய அளவில் வேலை பெற்றவர்களுடைய எண்ணிக்கையை எடுத்துக்கொண்டால், தமிழகத்திற்குத்தான் முதலிடம். அதாவது 12.63 சதவீதம். அடுத்து வருவது ஆந்திரம் 12.49 சதவீதம். அடுத்து வருவது மராட்டியம் 11.93 சதவீதம், படித்துவிட்டு வேலையில்லாமல் இருப்பவர்களுடைய பிரச்சினை பற்றி இந்த அரசு வெளியிட்டுள்ள அந்த நூலில், படித்து வேலையில்லாமல் இருப்பவர்களுடைய பிரச்சினைதான் தமிழ் நாட்டில் குறிப்பிடத்தக்க பிரச்சினையாகும். மேலும், வேலை தேடி அலையும் பெண்களின் எண்ணிக்கை மிக அதிகமாக உயர்ந்து கொண்டே வருகிறது. 1983-ஆம் ஆண்டு மட்டும் வேலை வாய்ப்பு கேட்டு பதிவு செய்துகொண்ட விண்ணப்பதாரர்களுடைய எண்ணிக்கை 5,25,767. இவர்களைச் சேர்த்து மொத்தமாக இந்தப் பதிவேட்டிலுள்ளவர்களின் எண்ணிக்கை 15,36,391. ஆக 15,36,391 பேர்கள் வேலைவாய்ப்புக் கோரி அந்தப் பட்டியலில் தங்களுடைய பெயர்களை இணைத்துக் கொண்டிருக்கிறார்கள் என்பது ஒரு மாநிலத்தினுடைய வளர்ச்சியைக் காட்டாது. அதை அரசே ஒத்துக்கொண்டு, ஆறாவது ஐந்தாண்டுத் திட்டப் புத்தகத்திலே அதை அவர்களே விரிவாக வெளியிட்டிருக்கிறார்கள். அதைச் சுட்டிக்காட்டுவது குற்றச்சாட்டுக்காக அல்ல. நிலைமையை விளக்குவதற்காக. தமிழகத்தினுடைய பொருளாதார நிலைமை பற்றி 1984 ஆம் ஆண்டு 'இந்து' பத்திரிகை எழுதிய தலையங்கத்தில் குறிப்பிட்ட சில பகுதிகள் மிக முக்கியமானவை. தமிழ்நாட்டினுடைய பொருளாதார நிலைமை பற்றித் தெரிவிக்கப்பட்டிருக்கின்ற கணிப்பு எந்தவிதமான மகிழ்ச்சியையும் தருவதாக இல்லை. வேலையில்லாத் திண்டாட்டத்தால் பாதிக்கப்பட்டவர்களைப் பொறுத்தவரை, இந்தியாவில் தமிழ்நாடு முதலிடத்தை வகித்த போதிலும், தனி நபர் சாகுபடி நிலத்தைப் பொறுத்தவரை, இந்த மாநிலம் இந்தியாவில் 11-வது இடத்தை வகிக்கிறது. களிப் பொருள் கிடைப்பது குறைவு. சத்தற்ற உணவு, குறைந்த போஷாக்கு தான் அன்றாட நிலவரம். தேசிய சர்வே மதிப்பீட்டின்படி, தமிழ் நாட்டில் 57.2 சதவீதத்தினர் வறுமைக் கோட்டுக்குக் கீழே இருக்கிறார்கள். இந்தியாவின் சராசரி 48.13 சதவீதம்தான். மின்சார உற்பத்தி, தொழில் வளர்ச்சி ஆகிய இரு மிகப் பெரிய துறைகளில் ஏற்பட்டிருக்கும் முடக்கம் தீர்க்கப்பட வேண்டும். இந்தியாவில் மின்சார உற்பத்தி 81 சதவீதமாக இருக்கிறது. தமிழகத்தின் நிலை மிகக் குறைவாக இருக்கிறது. இந்த மாநிலத்திலுள்ள அனல் மின் உற்பத்தி நிலையங்கள் பெருமைப்படும் அளவுக்குச் செயல்



படவில்லை. இந்த மாநிலத்தின் மின்சாரப் பற்றாக்குறை சூட்டை ஆற்றுவதற்கு பயன்படும் தண்ணீர் பற்றாக்குறை, பாய்லரில் ஏற்படும் குறைகள், தரமற்ற நிலக்கரி, அந்த நிலக்கரியை வடக்கே உள்ள சுரங்கங்களிலிருந்து இறக்குமதி செய்யும்போது ஏற்படும் போக்குவரத்துத் தடங்கல் ஆகியவை காரணங்களாகக் காட்டப்படுகின்றன. இவை அனைத்தும் மாநில மின்சார போர்டு நிர்வாகத்துக்கு விடுக்கப்படும் அறைகூவல். ஆனால் மாநில மின்சார வாரியம் இந்த அறைகூவலை, சிந்திக்கும் ஆற்றலை உருவாக்கிக் கொண்டதாகத் தெரியவில்லை. மின்சார உற்பத்தியில் ஏற்படும் தடுமாற்றங்கள் தொழில் வளர்ச்சி முதலீட்டைத் தடை செய்வதாக இருக்கின்றன. புதிய தொழில் திறமையைக் கவர்வதற்குச் செய்யப்படும் ஆக்கபூர்வமான முயற்சி இன்னும் ஒரு தூரத்தை எட்டவில்லை. இந்தத் தொழில்களைப் பரவலாக்கும் நோக்கத்தோடு மாவட்டத் தொழில் வளர்ச்சி மையங்கள் உருவாக்கப்பட்ட போதிலும், கிராமங்களில் தொழில்கள் வளருகின்ற அளவுக்கு இந்த மையங்கள் வேகமாகப் பணியாற்றவில்லை. இந்த மாவட்ட மையங்களை மேற்பார்வையிட 1978 ஆம் ஆண்டு மாநில அளவில் அமைக்கப்பட்ட குழு 1982, அக்டோபர் மாதம் வரை ஒரு முறை கூட கூடவில்லை என்பதை விமர்சகர்கள் உறுதியாகக் காட்டுகிறார்கள். இம் மாநிலம் திறமையானவர்களைக் கொண்டிருந்த போதிலும், முக்கியமாக எது தேவைப்படுகிறது என்றால், நன்கு ஆராய்ந்து எடுக்கப்படும் திட்டமும், நன்மைகளைச் செய்ய வேண்டுமென்ற உறுதியும்தான் என்று 25—1—1984 'இந்து' பத்திரிகைத் தலையங்கத்திலே குறிப்பிட்டுக் காட்டப்பட்டிருக்கிறது.

(முற்பகல் 11-00)

நிதியமைச்சர் துண்டு விழுகிற நிலையைச் சமாளிக்க, வருமானத்தைப் பெருக்க சில வரிகளை விதித்திருக்கிறார்கள். நான் அதைப்பற்றி விமர்சிக்க விரும்பவில்லை. ஆனால் வருமானத்தைப் பெருக்குவதற்கு வேறு பல வழிகளும் இருக்கின்றன என்பதை நான் கோடிட்டுக் காட்ட விரும்புகிறேன்.

இந்த நிதிநிலை அறிக்கையில் சாராயத்தின் மீதுள்ள ஆயத் தீர்வையை— பல்க் லிட்டர் ஒன்றுக்கு ரூபாய் 4-லிருந்து ரூபாய் 6 ஆகவும், விற்பனை வரியை 6 சதவிகிதத்திலிருந்து 25 சதவிகிதம் ஆகவும் உயர்த்தியிருக்கிறார்கள். இப்படி வரியை உயர்த்தியிருப்பது அரசாங்கத்தினுடைய வருமானத்தைப் பெருக்குவதற்காக என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. "அரசாங்கத்தினுடைய வருவாயைப் பெருக்க வழி சொல்ல வேண்டியது எதிர்க் கட்சிகளுடைய கடமை. குறைகளைச் சுட்டிக் காட்ட வேண்டியது எதிர்க் கட்சிகளின் கடமை. ஆனால் அவைகள் நியாயமாகவும் உண்மையாகவும், ஏற்றுக்

கொள்ளத்தக்கவையாகவும் இருக்க வேண்டும்'' என்ற கருத்தை டாக்டர் நாவலர் அவர்கள் பேரவையில் பதில் சொல்லும்போது வலியுறுத்திப் பேசியிருக்கிறார்கள். அந்த அடிப்படையில் நான் ஏற்கெனவே பலமுறை சொன்ன விவரத்தையே இந்த அவையிலும் சொல்லுவதன் மூலம் வருமானத்தைப் பெருக்கிக் கொள்ளுவதற்கான வழிமுறைகளாக நிதி அமைச்சர் அவர்களுக்குத் தெரிவிக்க விரும்புகிறேன்.

தமிழ் நாட்டில் மொத்தம் 9 சாராயக் கலவைத் தொழிற்சாலைகள் இருக்கின்றன. இந்தத் தொழிற்சாலைகள்தான் தமிழகத்திற்குத் தேவையான முழு அளவு சாராயத்தையும் விற்பனை செய்கின்றன. இந்தத் தொழிற்சாலைகளுக்கு அரசாங்கம் ஒரு பாட்டில் சாராயத்திற்கு அனுமதித்துள்ள விலை ரூபாய் 7.41 காசு. ஒரு பாட்டில் என்றால் 750 மில்லி லிட்டர் கொண்டது. ஒரு லிட்டருக்கு ரூபாய் 11.88 காசு என்றால் 750 மில்லி லிட்டர் கொண்ட ஒரு பாட்டில் ரூபாய் 7.41க்கு விற்பதற்கு அனுமதிக்கப்படுகிறது. இந்த விலை எவ்வாறு அனுமதிக்கப்படுகிறது என்று பார்த்தால், எரிசாராயத்திற்கு ஆகிய மொத்த விலை 85 காசு மட்டும்தான். ஆனால் இந்தச் சாராயத்தோடு தண்ணீர் கலக்கப்பட்டு அது பாட்டிலில் அடைக்கப்பட்டு அது விற்பனைக்காக வருகிற நேரத்தில் ஒரு பாட்டில் சாராயத்தின் விலை ரூபாய் 7.41 காசு ஆகிறது. அது எந்த வகையில் என்றால் எக்சைஸ் வரி ரூபாய் 3, விற்பனை வரி 44 காசு. சர்சார்ஜ் 0.02 காசு ஆக மொத்தம் ரூபாய் 3.46 காசு. இவை போக எரிசாராயத்திற்கு 85 காசுதான். காலி பாட்டிலுக்கு இந்த அரசு நிர்ணயித்திருக்கிற விலை 2 ரூபாய். பாட்டில் மூடிக்கு 25 காசு. லேபிளுக்கு 5 காசு. பேக்கிங் மெட்டிரியலுக்கு 17 காசு. போக்குவரத்துச் செலவு 30 காசு வேஸ்ட்டேஜ் 4 காசு. பிறகு அனுமதிக்கப்பட்ட லாபம் 29 காசு. ஆக மொத்தம் ரூபாய் 7.41 காசு. இதை நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும். எரி சாராயத்திற்கு ஒரு பாட்டில் விலை 85 காசுதான். ஆனால் அது பாட்டிலில் அடைக்கப்பட்டு இவ்வளவு சடங்குகளும் செய்யப்பட்டு வெளியே போகிறபோது, ஒரு பாட்டில் எரி சாராயத்தின் விலை ரூபாய் 7.41 காசு என்று ஆகிறது. ஒரு பாட்டில் ஒன்றுக்கு தொழிற்சாலை 29 காசு லாபம் எடுத்துக் கொள்ளலாம் என்று அரசாங்கமே அனுமதித்திருக்கிறது. காலி பாட்டிலுக்கு இந்த அரசு 2 ரூபாய் அனுமதிக்கிறதே எந்த ஒரு கலவைத் தொழிற்சாலையாவது அவ்வப்போது புதிய பாட்டில்களை வாங்கி உபயோகிக்கின்றதா என்றால் இல்லை. பழைய பாட்டில்களையே சில்லறைக் கடைகளில் 50 காசு, 70 காசு என்று விலைக்கு வாங்கி திரும்பத் திரும்ப அவைகளையே உபயோகப்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். இன்றைக்கு அரசாங்கம் அறிந்தோ அறியாமலோ தொழிற்சாலைகளுக்கு ஒரு காலி பாட்டி



லுக்கு அனுமதிக்கிற லாபம் ரூபாய் 1.25 காசு என்பதை நாம் மறந்துவிடக் கூடாது. இதைத் தவிர மூடிக்கு 25 காசு அனுமதிக்கிறது என்றால் அதில் 10 காசுக்கு மேலாகாது. அந்த வகையில் பாட்டில் மூடி ஒன்றுக்கு 15 காசு லாபம் தொழிற்சாலைக்குக் கிடைக்கிறது. அதைப் போலவே 'பேக்கிங் மெட்டிரியல்' என்பதைப் பொறுத்தவரையில், அவ்வப்போது 'பேக்கிங் மெட்டிரியல்ஸ்' என்று வாங்கிப் பயன்படுத்துவதில்லை. சோடா கலர் இவைகளை விற்பனை செய்கிறார்களே அதற்காகப் பயன்படுத்துகிற நிரந்தரமான மரப் பெட்டிகளையே திரும்பத் திரும்ப வரவழைத்து அவைகளில்தான் இந்த சாராய பாட்டில்களை வைத்து அனுப்புகிறார்கள். அதற்காக அரசாங்கம் தொழிற்சாலைக்கு பாட்டில் ஒன்றுக்கு 17 பைசா அனுமதித்தால், அதன் மூலம் 10 பைசா நிச்சயமாக லாபம் தொழிற்சாலைக்குக் கிடைக்கும். இவைகளைத் தவிர போக்குவரத்து, வேஸ்டேஜ் என்றெல்லாம் சொல்லப்படுவது வெறும் வார்த்தைகளே தவிர, உண்மையில் நடக்கிற செலவு அல்ல. எனவே ஒரு பாட்டிலுக்குக் கிடைக்கிற லாபம் காலி பாட்டில் மூலம் 1.25, மூடி மூலம் 15 காசு, பேக்கிங் மெட்டிரியல் மூலம் 10 காசு மற்றவையும் சேர்த்து ஆக மொத்தம் ரூபாய் 1.79 காசு தொழிற் சாலைகளுக்குக் கிடைக்கிறது.

(முற்பகல் 11-05)

இதிலேகூட கொஞ்சம் தயவு தாட்சண்யம் வைத்து 29 பைசா எஸ்டாபிளிஷ்மெண்ட் செலவுக்கு என்று கழித்துவிட்டால், ஒரு பாட்டிலுக்கு அந்தத் தொழிற்சாலைகளுக்குக் கிடைக்கக்கூடிய லாபம் நிச்சயம் ரூபாய் 1-50க்குக் குறையவே குறையாது. ஒரு பாட்டிலுக்கு 1.50 ரூபாய் கிடைக்கும். தமிழகத்திலே மாதம் ஒன்றுக்கு எத்தனை பாட்டில்கள் விற்பனை ஆகின்றன என்று பார்த்தால், 1983 ஆம் ஆண்டில் 84 இலட்சம் லிட்டர் மாதம் ஒன்றுக்கு சாராய விற்பனை என்று பேரவையில் மாண்புமிகு முதலமைச்சர் தெளிவாக திட்டவட்டமாகத் தெரிவித்திருக்கிறார்கள். எவ்வளவுதான் அண்ணா சமாதியில் நின்று போதித்தாலும், அதைக் காதில் போட்டுக் கொள்ளாமல் 84 இலட்சம் லிட்டராக இருந்தது இப்போது அது பெருகி, மாதம் ஒன்றுக்கு 1.50 இலட்சம் லிட்டர் என்ற அளவிற்கு உயர்ந்திருக்கிறது. இந்த 9 கலவைத் தொழிற்சாலைகளும், 1.50 இலட்சம் லிட்டர் சாராயத்தை 750 மில்லி பாட்டில்களில் அடைத்தால் 2 கோடி பாட்டில்கள் ஆகின்றன. நான் ஏற்கெனவே சொன்னேன் பாட்டில் ஒன்றுக்கு ஒன்றரை ரூபாய் லாபம் என்று. ஆகவே 2 கோடி பாட்டில்களுக்கு மாதம் ஒன்றுக்கு 3 கோடி ரூபாய் லாபம் வருகிறது. மாதம் ஒன்றுக்கு 3 கோடி ரூபாய் என்றால் ஆண்டுக்கு 36 கோடி ரூபாய் அந்த 9 தொழிற்சாலைகளுக்கு லாபமாகக் கிடைக்கிறது. இது 9 குடும்பங்களுக்குப் போய்ச் சேருகிறதா அல்லது இவைகள் எல்லாம் பினாமி

யாக ஒரே குடும்பத்திற்குப் போய்ச் சேருகிறதா என்ற ஆராய்ச்சியில் நான் இந்த அளவிலே இறங்க விரும்பவில்லை. 9 பேருக்குச் சென்றாலும், ஒருவருக்குச் சென்றாலும், அதை அரசு ஆராய்ந்து பார்த்து, 36 கோடி ரூபாய் இலாபத்தை, வருமானத்தை அரசே பெறுகிற அளவிற்கு ஏன் அதை அரசுடமையாக்கக் கூடாது என்று நிதியமைச்சர் அவர்களைக் கேட்கிறேன்.

இதை 1983 ஆம் ஆண்டு நான் பேரவையிலே விளக்கிப் பேசினேன். நான் பேசிய பிறகு, அதன் விளைவாக என்று நான் கருதிக் கொண்டிருக்கிறேன். விவரம் எனக்குத் தெரியாது, இருந்தாலும் நன்றி கூறிக்கொள்கிறேன்—சாராய மொத்த வியாபாரத்தை அரசாங்கமே எடுத்துக்கொண்டது. அதன் காரணமாக பல கோடி ரூபாய் அரசாங்கத்திற்கு வருமானம் வந்தது. அதிலேகூட சிறு தவறு ஏற்பட்டு, பல கோடி ரூபாய் வருமானம் வந்ததால் அதிலே ஏழு எட்டு கோடி என்று நினைக்கிறேன் வருமான வரி கட்ட வேண்டிய நிலை ஏற்பட்டு, அதைத் தவிர்க்கும் வகையில் deVneFe என்ற முறையில் மாற்றப்பட்டு, வருமான வரி கட்டவேண்டிய நிலைமை தவிர்க்கப்பட்டு, அரசாங்கக் கார்ப்பரேஷன் மூலமாக சாராய மொத்த வியாபாரத்தை எடுத்து நடத்துவதால் அந்த மொத்தப் பணமும் அரசாங்கத்திற்கு, கிட்டத்தட்ட 10 கோடி ரூபாய் அளவிற்கு கிடைக்கும் என்று கருதுகிறேன். ஆகவே நான் கூறுகிற இந்த யோசனையை ஏற்றுக்கொண்டால் அந்த 9 பேருக்குக் கிடைக்கும் 36 கோடி ரூபாய் லாபத்தை, வருமானத்தை—இது அவர்கள் காட்டுகிற லாபம், காட்டாத லாபம் வேறு—அரசாங்கம் பெற வழி இருக்கிறது. கடந்த ஆண்டு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், இந்த ஆண்டு செப்டம்பர் மாதத்திலே மீண்டும் மதுவிலக்கைக் கொண்டு வருவோம், கடைகளையே மூடுவோம் என்று அறிவித்திருப்பதால், இந்த நான்கைந்து மாதங்களுக்காக அவைகளை எடுக்க வேண்டுமா என்று ஒருவேளை கேட்கக் கூடும். அப்படி இருந்தால் எடுக்கத் தேவையில்லை. வருகிற செப்டம்பர் மாதத்தில் முதலமைச்சர் அவர்களுடைய வாக்குறுதி நிறைவேற்றப்படுமானால், மதுவிலக்கு மீண்டும் வருமானால், அதை நிறைவேற்ற வேண்டிய அவசியமில்லை, எடுத்துக்கொள்ள வேண்டிய அவசியமில்லை. ஆனால் உறுதிமொழிகள் எத்தனையோ முறை கொடுத்ததைப்போல, இந்த ஆண்டும் தரப்பட்டது. எனவே செப்டம்பர் மாதம் மதுவிலக்கு வராது என்று திட்டவட்டமாக உங்களுக்குத் தெரியுமேயானால், நீங்கள் இதை எடுத்துக்கொள்வதன் மூலமாக தனியாருக்குப் போகும் 36 கோடி ரூபாய் வருமானம் அரசாங்கத்திற்குக் கிடைக்கும் என்ற வழிவகை இருக்கிறது என்று ஏதாவது திட்டவட்டமான யோசனைகளை சொல்லக் கூடாதா என்று கேட்கின்ற நிதியமைச்சர் அவர்களுக்குச் சொல்லிக் கொள்கிறேன்.



பேரவையில் நிதிநிலை அறிக்கை விவாதத்திற்கான பதிலுரையில் நாவலர் அவர்கள், "ஏழாவது நிதிக் கமிஷன் கையாண்ட அணுகுமுறை, வாய்ப்பாடு பின்பற்றப்பட்டிருந்தால் தமிழகத்திற்கு அதிகப்படியாக 380 கோடி ரூபாய் கிடைத்திருக்க வேண்டும். ஊக்கம், செயலாற்றும் திறன், நியாய ரீதியாக தமிழகத்திற்கு உரிய நிதி பங்கிடு செய்யப்படவில்லை" என்றும் "மத்திய நிதி உதவி திட்ட ஒதுக்கீடு, மாநிலத்தில் மத்திய அரசின் முதலீடு மற்ற மாநிலங்களைவிட இங்கே குறைந்து கொண்டே வருகிறது" என்றும், "எட்டாவது நிதிக் கமிஷன் நியாயம் வழங்கும் என்று எதிர்பார்த்தோம். அதற்குப் பதில் தமிழகம் வஞ்சிக்கப்பட்டிருக்கிறது" என்றும் கூறியிருக்கிறார். இவைகளையெல்லாம் மத்திய அரசிடம் வாதாடி போராடிப் பெற்ற தமிழக அரசை நோக்கி எதிர்க் கட்சிகள் சார்பிலே சாட்டக்கூடிய குற்றச்சாட்டுகள் என்றாலும், அந்தக் குற்றச்சாட்டுக்களை எல்லாம் ஏற்றுக்கொண்டு நாவலர் அவர்களே "மத்திய அரசு தமிழகத்தை வஞ்சிக்கிறது, நிதிக் கமிஷன் வாயிலாக வஞ்சிக்கிறது" என்ற பேருண்மையை ஒத்துக்கொண்டு எதிர்கட்சிகளோடு சேர்ந்து அவரும் சோக கீதம் பாடி இருக்கிறார் என்றாலும் கூட அந்த அளவிற்கு அவர் நிலைமைகளை விளக்கியிருப்பதற்காக நான் அவருக்கு நன்றி கூற கடமைப்பட்டிருக்கிறேன்.

(முற்பகல் 11-10)

அதே நேரத்தில் மத்திய அரசினுடைய உதவிகளை மாநில அரசு பெறுவதற்கு திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலே, எந்த அளவுக்கு இந்த அரசுக்கு ஒத்துழைப்புத் தர முடியுமோ அந்த அளவுக்கு வழங்கப்படும். கடந்த காலத்தில், திராவிட முன்னேற்றக் கழக நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாநிலங்கள் அவை உறுப்பினர்கள் அப்படிப்பட்ட ஒத்துழைப்பை அங்கே தந்திருக்கிறார்கள். சட்டமன்றத்திலேயும் தந்திருக்கிறார்கள். அதேபோல் ஒத்துழைப்புத் தந்து, மத்திய அரசிடமிருந்து மாநில அரசுக்கு நம் தமிழக அரசுக்கு உதவிகள் கிடைப்பதற்கு கழகம் ஒத்துழைக்கும் என்ற உறுதியை நான் நிதி அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்னொன்று நான் குறிப்பிட்டுச் சொல்கிறேன். நாவலர் அவர்கள், அவர்களுடைய பதில் உரையிலே ஒன்றைக் குறிப்பிட்டார்கள். "மாநிலங்களுக்கு மைய நிதி ஒதுக்கீட்டைப் பொறுத்தவரையிலே, 1951 ஆம் ஆண்டு மக்கள் தொகையை அடிப்படையாக வைத்து நிதி ஒதுக்கம் செய்ய தொடர்ந்து வற்புறுத்துவோம். இப்போது 1971 ஆம் ஆண்டு மக்கள் தொகையை அடிப்படையாக வைத்து நிதி ஒதுக்க மத்திய அரசு முன்வந்துள்ளதன் காரணமாக நல்ல திட்டங்களை வைத்து வளமான சமுதாயத்தை உருவாக்கும் பணியிலும்

[டாக்டர் மு. கருணாநிதி] [1985 ஏப்ரல் 11

மக்கள் தொகையைக் கட்டுப்படுத்துதல் போன்ற திட்டங்களைச் செம்மையாக நிறைவேற்றியும்கூட, தமிழகத்திற்கு ஊக்குவிக்கும் வகையில் பரிசு கிடைப்பதற்கு பதிலாக தண்டனை வழங்கப்பட்டுள்ளது ' என்று நிதி அமைச்சர் நாவலர் அவர்கள் மத்திய அரசைக் குறை கூறியிருக்கின்றார்கள்.

இவ்வாறு தன்னுடைய பதில் உரையிலே விளக்கியிருக்கும் நாவலர் அவர்கள் இந்த அவையிலே வைத்திருக்கிற பட்ஜெட்டைப் பார்த்தால், பக்கம் 59-ல் அவர்கள் குறிப்பிட்டிருக்கின்றார்கள். "மக்கள் தொகை அடிப்படையில் நிதி உதவியின் அளவை நிர்ணயிக்கும் போது 1971 ஆம் ஆண்டு மாநிலங்களில் இருந்த மக்கள் தொகையை அடிப்படையாகக் கொள்ளவேண்டுமென மத்திய அரசு சரியான முடிவை எடுத்திருந்தைபோதிலும்" என்று குறிப்பிட்டிருக்கின்றார்கள்.

1951 தான் சரியான முடிவு என்பதை மத்திய அரசு ஏற்றுக்கொள்ளவில்லை. 1971 என்று எடுத்துக்கொண்டு தண்டனை வழங்குகின்றது என்று பதில் உரையிலே குறிப்பிட்டிருக்கின்றார்கள் நாவலர் அவர்கள். வரவு செலவுத் திட்டத்திலே, எங்களுக்கு வழங்கப்பட்டிருக்கின்ற புத்தகங்களிலே பார்க்கிறோம். ஆங்கிலத்திலேகூட அப்படித்தான் இருக்கின்றது.

"The Government of India have taken the right decision of freezing the population of State at the 1971 level".

என்று சொல்லியிருக்கின்றார்கள். ஒருவேளை தமிழிலே தவறுதலாக வந்து விட்டதோ 'சரிவு' என்பது, சரி என்று வந்து விட்டதோ என்பதைப் பற்றிப் பார்க்க ஆங்கிலத்திலே படித்துப் பார்த்தேன். 'ரைட் டெசிஷன்' என்றுதான் குறிப்பிட்டிருக்கின்றார்கள்.

பட்ஜெட் உரையிலே 1971 ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கை அடிப்படையாக வைத்திருப்பது "ரைட் டெசிஷன்" என்று பட்ஜெட் உரையிலே குறிப்பிட்டுவிட்டு பதில் உரையிலே, "அது ஒரு தண்டனை, 1951தான் சரியான அடிப்படை" என்று குறிப்பிட்டிருப்பது விநோதமாக இருக்கிறது. இந்த வேறுபாட்டிற்கு என்ன காரணம் என்று எனக்குப் புரியவில்லை.



1985 ஏப்ரல் 11]

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, அவ்வப்போது குடும்பநலத் திட்டத்தின் மூலம் ஏற்படுகின்ற விளைவுகளைக் கருத்தில் கொள்ளாமல், 1951 ஆம் ஆண்டு மக்கள் தொகையை அடிப்படையாக வைத்து அந்தந்த மாநிலங்களுக்குப் பங்கீடு செய்தால், குடும்பநலத் திட்டத்தைச் சிறப்பாகவும், செம்மையாகவும் நிறைவேற்றுவதால் மாநிலங்கள் பாதிக்கப்படமாட்டா என்ற கருத்தைத்தான் தொடர்ந்து சொல்லி வந்திருக்கிறோம். நாம் பல முறைகள், பல இடங்களில் வற்புறுத்தி வந்தும்கூட, கடைசியிலே இந்த அளவிற்காவது வந்திருக்கின்றார்களே என்று சொல்கின்றேனே தவிர வேறல்ல. இப்போது 1971 ஆம் ஆண்டுக் கணக்கு என்று ஏற்றுக்கொள்கின்ற அளவிற்குத்தான் வந்திருக்கின்றார்கள். அது நாம் ஏற்றுக்கொள்கின்ற முழு முடிவு என்ற அர்த்தத்தில் நான் சொல்லவில்லை. சரியான முடிவு என்றால் இந்த அளவிற்காவது வந்திருக்கின்றார்களே என்றுதான் சொல்கிறேன். அந்த அளவிற்கு ஒரு ஐட்டத்திற்கு வந்திருக்கின்றார்களே தவிர, மற்றொரு ஐட்டத்திற்கு 1981 ஆம் ஆண்டு என்று சொல்லியிருக்கின்றார்கள். அதில் 1971 ஆம் ஆண்டு அளவிலேகூட ஏற்றுக்கொள்ளாமல் இருக்கின்றார்கள். அவர்கள் இப்போதும் அப்படித்தான் சொல்கின்றார்கள். நாங்கள் 1951 ஆம் ஆண்டு என்று இருந்தால்தான் நமக்கு முழுமையான நியாயம் கிடைக்கும் என்று சொல்கிறோம்.

**டாக்டர் மு. கருணாநிதி :** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, அந்த விளக்கத்தை நான் ஏற்றுக்கொள்கிறேன். வரவுசெலவுத் திட்டத்தில் தவறாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. அதாவது 1971 ஆம் ஆண்டு மாநிலங்களில் இருந்த மக்கள் தொகையை அடிப்படையாகக் கொள்ள வேண்டுமென மத்திய அரசு சரியான முடிவை எடுத்திருந்தபோதிலும்—ஒருவேளை நாவலர் அவர்கள் அதிகாரிகள் கொடுத்த குறிப்பைப் படிக்கும்போது அதைப் படிக்கத் தவறி இருக்கலாம். அதனால் ஏற்பட்ட விளைவாக இருக்கலாம்—'சரியான முடிவு' என்று நாம் சொல்லக்கூடாது. "ஒரு முடிவு எடுத்திருந்தபோதிலும்" என்றுதான் நாம் சொல்லியிருக்க வேண்டும். அது சரியான முடிவு என்று நாமே ஒத்துக்கொண்டால், அது தீமையாக முடியும் என்பதற்காகச் சொல்கிறேன். மாநில அரசின் மீதும், மாநிலத்தின் மீதும், மாநில அரசு பெறவேண்டிய நிதியின் அளவின் மீதும் நாம் அக்கறை கொண்டிருப்பதன் காரணமாகத்தான் இப்படியெல்லாம் சொல்கின்றேனே அல்லாமல் குற்றம் சாட்ட வேண்டும் என்பதற்காகச் சொல்லவில்லை.

(முற்பகல் 11-15)

ஆசுகாமே 'சரியான முடிவு' என்று சொல்லிவிட்டால், பிறகு "நீங்களே சரியான முடிவு, 'ரைட் டெசிஷன்' என்று சொல்லிவிட்டீர்கள், ஏன் தொந்தரவு செய்கிறீர்கள்" என்று அவர்கள் கேட்கக்கூடும். இது நாவலர் அவர்கள் கவனத்திற்கு வராமல், அதிகாரிகள் எழுதிக் கொடுக்கும்போது அப்படி ஆகியிருக்கும் என்றுதான் நான் கருதுகிறேன்.

மத்திய அரசு, எந்த வகையில் மாநில அரசைப் புறக்கணிக்கிறது என்று மேலும் உதாரணங்கள் பார்க்கும்போது, முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில் மத்திய, மாநில அரசுகளின் பங்கு 50 : 50 என்ற அளவில் இருந்தது. நான்காம் ஐந்தாண்டுத் திட்டத்திற்கு 25.8 சதவிகிதம் மத்திய அரசின் உதவி என்ற அளவுக்குக் குறைந்தது. ஐந்தாம் திட்டத்தில் மத்திய அரசின் பங்கு 26.5 சதவிகிதம் என்ற அளவுக்குக் குறைந்தது. 6-ஆம் திட்டத்தில் 21 சதவிகிதம் என்ற அளவுக்குக் குறைந்தது. மத்திய அரசின் பங்கு குறைந்து, தற்போது மாநில அரசின் பங்கு 79 சதவிகிதம் என்ற அளவுக்கு ஆகியிருக்கிறது. இது மத்திய அரசு தொடர்ந்து மாநிலங்களுக்கு இழைத்து வருகின்ற தீமைகளில் ஒரு கூறு என்று நானும் இந்த அரசோடு சேர்ந்து, எடுத்துக் காட்ட வேண்டும் என்பதற்காகச் சொல்லவில்லை.

மத்திய அரசு எழுப்பிய மொத்தக் கடன் தொகையில் முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில் 76 சதவிகிதம் மாநிலங்களுக்கு என்று வரையறுக்கப்பட்ட நிலை மாறி கடன் தொகையில் மாநிலங்கள் பங்கு இப்போது 25 சதவிகிதம்தான் என்று குறைந்து, மீதியுள்ள 77 சதவிகிதம் மத்திய அரசுக்கு என்ற அளவுக்கு உயர்ந்திருக்கிறது. இவைகளெல்லாம், நாவலர் அவர்கள் பதிலுரையில் குறிப்பிட்டதுபோல, நம்முடைய தமிழ் மாநிலம் நிதிக் கமிஷனால், மத்திய அரசால் வஞ்சிக்கப்படுகிறது என்பதற்கு மேலும் உள்ள ஆதாரங்களாகும். எனவேதான் மத்திய அரசோடு வாதிடுகின்ற அந்தப் போர்க் குணம் மாநில அரசுக்குத் தேவை என்பதை எடுத்துக் காட்டுகின்ற வகையில் மாநிலங்கள் போதுமான அதிகாரங்களைப் பெற்று, மத்தியிலே ஒரு உண்மையான கூட்டாட்சியும், மாநிலங்களிலே சுயாட்சியும் ஏற்பட வேண்டுமென்ற கருத்தை நாம் நீண்ட நாட்களாக வலியுறுத்தி வருகிறோம். 1985-86 ஆம் ஆண்டிலே மாத்திரமல்ல, 1983-84 ஆம் ஆண்டு நிதி நிலை அறிக்கையிலேகூட நம்முடைய நாவலர் அவர்கள் தெளிவாகக் குறிப்பிட்டார்கள். 'தன்னாட்சி' என்று குறிப்பிட்டார்கள். அவர்கள் மாநில சுயாட்சி என்று குறிப்பிடவில்லை. 'தன்னாட்சி' என்று குறிப்பிட்டார்கள். தேசிய ஒருமைப்பாட்டுக்கு ஊறு நேராவண்ணம் போதிய அதிகாரங்



களோடு கூடிய தன்னாட்சி உரிமையை மாநிலங்கள் பெற வேண்டுமென்று 1983-84-ல் குறிப்பிட்டார்கள். நான் 1983-84 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் அந்த அவையிலே பேசும்போது, நாவலர் அவர்களின் அந்தக் கருத்தை வரவேற்றுப் பேசி, மாநில சுயாட்சி பற்றி 1974 ஆம் ஆண்டு திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி சட்டமன்றப் பேரவையிலே ஒரு தீர்மானம் கொண்டு வந்தபோது, அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் அந்தத் தீர்மானத்தை ஏற்காவிட்டாலும், மாநில சுயாட்சி என்ற வார்த்தையை அண்ணா அவர்கள் சொல்லவில்லை என்று குறிப்பிட்டாலும், அப்போது நானும், நாவலர் அவர்களும், அன்றைக்கு இருந்த திராவிட முன்னேற்றக் கழக அமைச்சர் பெருமக்களும் அண்ணா அவர்கள் எந்தெந்த நேரத்தில் மாநில சுயாட்சி பற்றிக் குறிப்பிட்டார்கள் என்று விளக்கமளித்து, அதற்குப் பிறகு அவர்கள் வெளி நடப்புச் செய்து, பிறகு மாநில சுயாட்சித் தீர்மானம் தமிழக சட்டமன்றப் பேரவையிலே நிறைவேற்றி, அந்தத் தீர்மானம் இங்கேயும் விவாதிக்கப்பட்டிருக்கிறது. 1983-ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் விவாதிக்கும்போது—நான் அதற்கு முன்பு ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். இந்த அரசு மாநில சுயாட்சியைத் தொடர்ந்து வலியுறுத்தி வருகிறது என்று 1983-84லும் குறிப்பிட்டார்கள். 1985-86 ஆம் ஆண்டுக்கான இந்தப் புத்தகத்திலும் குறிப்பிட்டிருக்கிறார். ஆனால் ஸ்டேட் அடானமி, மாநில சுயாட்சி என்ற சொல்லை நம்முடைய மாண்புமிகு முதலமைச்சரவர்கள் ஏற்றுக் கொண்டிருக்கிறார்களா, ஒப்புக் கொண்டிருக்கிறார்களா என்றால், இல்லை. நான் அப்போதே கேட்டேன். முதலமைச்சர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்கள் கொச்சிக்கு ஒரு முறை 1983-ஆம் ஆண்டு சென்றிருந்தபோது, மாநில சுயாட்சி பற்றி செய்தியாளர்கள் கேட்டபோது,

The Tamil Nadu Chief Minister Thiru M. G. Ramachandran said here today that he would welcome any move for joint effort by the southern States for more powers to States. Any such move would get the full support of Tamil Nadu Government, he said answering at a crowded Press Conference. "But we are not for State Autonomy, he clarified."

(முற்பகல் 11-20)

என்ற எக்ஸ்பிரஸ் பத்திரிகையின் வாசகத்தைப் படித்துக் காட்டினேன். அப்போது மாண்புமிகு முதல்வர் அவர்கள் குறுக்கிட்டு, "இன்னொரு விளக்கத்தையும் அங்கே சொன்னேன், அதையும் சேர்த்துக்கொள்ளுங்கள், அது பத்திரிகையில் வராததற்கு நான் பொறுப்பல்ல, ஸ்டேட் அட்டானமி என்று சொன்னால் பிரிவினை என்ற பொருள் கொடுத்து விடும். ஆகவே அந்த வார்த்தையை மாத்திரம் மறுக்கிறேன் என்று சொன்னேன். அது பத்திரிகையில் வரவில்லை" என்று 1983 ஆம் ஆண்டில் குறிப்பிட்டார். நான் உடனே சொன்னேன்,

"இல்லை, இல்லை, நீங்கள் சொன்னது இந்து பத்திரிகையில் வந்தது, அதையும் படித்துக் காட்டுகிறேன்" என்று படித்துக் காட்டினேன்.

"Differentiating between autonomy and additional powers for States, Mr. M. G. Ramachandran said he was hesitant to use the term 'State Autonomy' because it was being understood as 'separation'."

மாநில சுயாட்சி என்று சொன்னால் அது பிரிவினை வாதம் ஆகிவிடும் என்பதற்காக அப்படிச் சொல்ல தயங்கியதாக மாண்புமிகு முதல்வர் கூறியதாக 'இந்து' பத்திரிகையில் வந்ததை சட்டசபையில் 14—3—1983 அன்று நான் படித்துக் காட்டினேன். அப்பொழுது அவர்கள் 'ஸ்டேட் அட்டானமி' என்ற வார்த்தையை ஒத்துக்கொள்ள முடியாது. அது பிரிவினை என்கின்ற வாதத்தைக் கிளப்புகிறது என்றும் சொன்னார்கள். அப்போது மாண்புமிகு நாவலர் அவர்கள் எழுதிய கட்டுரைகளை எல்லாம் நான் எடுத்துப் படித்தேன். மாநில சுயாட்சி கேட்பது பிரிவினை வாதம் ஆகிவிடாது என்று தன்னாட்சிக்கும் தனி ஆட்சிக்கும் உள்ள அந்த வேறுபாட்டை, முரண்பாட்டை மாண்புமிகு நாவலர் அவர்கள் தனக்கே உரிய தனித் தமிழில் விளக்கியவைகளை எல்லாம் எடுத்து அந்த அவையில் படித்திருக்கிறேன். இந்த அவையிலே அதுபற்றி விவாதம் வந்தபோது கூட, நம்முடைய அவைத் தலைவர், மாண்புமிகு சிலம்புச் செல்வர் அவர்கள் ஒரு தேசியவாதி என்கிற முறையில், இந்திய நாட்டின் விடுதலைப் போராட்டத்திலே ஈடுபட்ட தளபதிகளிலே ஒருவர் என்கிற முறையில், இங்கே எதிர்ப்புக் குரல் அப்போது கிளப்பப்பட்டபோது, இங்குள்ள காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள் திரு. ராஜாராம் நாயுடு போன்றவர்கள், மற்றவர்கள் எல்லாம் அதைக் குறித்து எதிர்ப்பாகப் பேசும்போது, "இது பிரிவினையில் கொண்டு போய் விட்டு விடாதா?" என்று பேசியபோது, நம்முடைய அவைத் தலைவர், மாண்புமிகு சிலம்புச் செல்வர் அவர்கள் "நானே இந்திய நாட்டினுடைய விடுதலைக்காக போரிட்டவன், ஒரு தேசியவாதி. நான் சொல்கிறேன், இது பிரிவினை வாதம் அல்ல. இது 1937-38 ஆம் ஆண்டிலிருந்தே சொல்லப்பட்டு வருகின்ற ஒரு கோரிக்கை. எனவே இது பிரிவினைவாதிகளால் சொல்லப்படுகின்ற வாதம் என்று கூறுவது தவறு" என்று குறிப்பிட்டு விட்டு மேலும் ஒன்றை அவர்கள் சொன்னார்கள். எங்களுக்கே அப்போது ஓர் அறைகூவல் விடுத்தார்கள். "நம்முடைய திராவிட முன்னேற்றக் கழக அரசு இந்தத் தீர்மானத்தை நிறைவேற்றிய பிறகு என்ன செய்யப் போகிறது? அது எனக்குத் தெரிய வேண்டும். தீர்மானம் பேரவையிலே நிறைவேற்றப்பட்டு விட்டது. இங்கும் நிறைவேற்றப் போகிறோம். அதற்கு அப்புறம் என்ன நிலைமை? கொள்கை ரீதியிலே மத்தியில் உள்ளவர்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. என்று தெளிவாகத் தெரிகிறது, ஏற்றுக் கொள்ளவும் மாட்டார்கள். அதை நம்மால் புரிந்துகொள்ள முடிகிறது. பிரச்சாரம் வேண்டுமென்று முதல்வர் சொன்ன கருத்தை ஏற்றுக்கொள்கிறேன். நாளைக்குக் கூட சென்னையில், மயிலையில் நானும் கலைஞரும் பேசுகிறோம். மாநில சுயாட்சிப் பிரச்சாரம்தான். ஒன்றை மறந்து விட வேண்டாம். இந்த விஷயத்தில் நாம் போதிய அளவு பிரச்சாரம் செய்திருக்கிறோம். ஆக, நாம் நடவடிக்கை எடுக்க தாமதிப்பதானது அது நம்மையே பலவீனப்படுத்தி விடும் என்பதை நாம் நடைமுறையில் பார்த்துக் கொண்டிருக்கிறோம். இன்னும் தாமதிக்க அவசியம் இல்லை, தேவையில்லை என்று எண்ணுகிறேன்" என்று அன்றைக்கு நம்முடைய அவைத் தலைவர், மாண்புமிகு சிலம்புச் செல்வர் துணைத் தலைவராக இருந்து வீர முழக்கமிட்டார்கள். இன்னும் சொன்னார்கள். "யாரோ சொன்னார்களாம் ம. பொ. சி. கொள்கையை கலைஞர் எடுத்துக் கொண்டார் என்று. ஆணவம் இல்லாமல் மட்டுமல்ல, அடக்கத்தால் மட்டுமல்ல, சத்தியமாகச் சொல்கிறேன், இந்தத் தத்துவம் எனக்குச் சொந்தமல்ல, அகில உலகின் அரசியல் சாஸ்திரம், சரித்திரம் இது. 1781ல் அமெரிக்காவில் தோன்றிய சமஷ்டி சகாப்தம் பின்னால் விரிவடைந்து வருகிறது. நாடு நாடாக பவனி வருகிறது. அதற்காக ஓர் இயக்கத்தைத் துவங்கியவன் என்ற சிறப்பு எனக்கு இருக்கலாமே யொழிய, தத்துவமே எனக்கு ஏகபோகமல்ல. கலைஞர் என் கையில் இல்லை, நான் கலைஞர் கையில் இருக்கிறேன். நான் கலைஞரை வேண்டுகிறேன், அவரது ஆட்சியை வேண்டுகிறேன். இந்தப் பிரச்சினையில் எப்படி வேண்டுமானாலும் என்னைப் பயன்படுத்திக் கொள்ளுங்கள். எங்கோ கிடந்த எளியவனான என்னை அழைத்து வந்து செக்ரட்டேரியட்டில் ஓர் ரூம் எனக்குக் கொடுத்து இங்கு வைத்திருக்கிறீர்கள். உங்களை வேண்டுகிறேன், நான் இப்படி நெடுநாள் அறைக்குள்ளே அடைபட்டுக் கிடக்க விரும்பவில்லை. இந்த அறையை விட்டு இந்த மாநில சுயாட்சிக்காக சிறை புகவே விரும்புகிறேன். உங்களுடைய ராஜ்யத்தின் சிறைச்சாலைகளில் எனக்கும் என் தோழர்களுக்கும் இடம் பார்த்து வையுங்கள், அந்த சிறைச்சாலைகளைத் திறந்து வையுங்கள், இன்னொரு முறை இந்த ஏழைத் தொண்டன் நோயாளியாகி சிறையில் அடைபட்டு அங்கு உயிர் விடுவேனானால் எனது அஸ்தியிலே தோன்றுகின்ற பல லட்சக்கணக்கான தமிழ் வீரர்கள் மாநில சுயாட்சி தேட என்னை விட 19 வயது குறைந்தவரான கலைஞருக்கு உதவி செய்வார்கள்" என்று அன்றைக்கு அவர்கள் முழக்கமிட்டார்கள். ஆனால் தொடர்ந்து அவர்கள் குறிப்பிட்டவாறு போராட்டத்தில் ஈடுபட முடியவில்லை.

[1985 ஏப்ரல் 11

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** மாண்புமிகு திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் இப்பொழுது என்னைக் குறிப்பிட்டு வைத்து, நான் விவாதத்திலே பிரச்சினைக்கு உள்ளாக விரும்பவில்லை. தாங்கள் விளக்கியதைப் பார்த்தால், நான் ஏதோ அதை கைவிட்டு விட்டதைப் போல, அல்லது அதிலிருந்து பிறழ்ந்து விட்டதைப் போல் சொல்கிறீர்களா? இவ்வளவு நீளமாக விவாதத்திற்கு என்னை இழுப்பது அவ்வளவு சரியானதாக எனக்குத் தோன்ற வில்லை.

**டாக்டர் மு. கருணாநிதி :** நீங்கள் அதைக் கைவிடவுமில்லை, கைவிட்டுவிட மாட்டீர்கள் என்பதும் எனக்கு மிக நன்றாகத் தெரியும். அப்பொழுதே இதற்காக மிகப் பெரிய போராட்டத்தைத் தொடங்க வேண்டும் என்பது தான் தங்களுடைய கருத்தாக இருந்தது. இன்னும் சொல்லப்போனால், ஒரு போராட்டத்தைக்கூட தாங்கள் நடத்தினீர்கள். சிறைச்சாலைக்கும் சென்றீர்கள். நான் அவைகளை எல்லாம் சொல்வதற்கு முன்பு முந்திக் கொண்டீர்கள். நடத்தினீர்கள். அதற்குப் பிறகு இரண்டு, மூன்று மாதங் களுக்குள் எல்லாம் கழக ஆட்சி கலைக்கப்பட்டது. நெருக்கடி நிலை பிரகடனம் செய்யப்பட்டது. அதற்குப் பிறகு நாட்டில் பல்வேறு நிலைமைகள் எல்லாம் ஏற்பட்டுவிட்டன. ஆனாலும், மாநில சுயாட்சிக் கொள்கை, அன்றைக்கு

(முற்பகல் 11-25)

தமிழ்நாடு அளவில் தமிழரசுக் கழகத்தின் சார்பில், அவைத் தலைவர் அவர்களால் பிரச்சாரம் செய்யப்பட்டு, மாநில அளவில் எடுத்துக் கொள்ளப் பட்டு, தமிழ் மாநிலம் மட்டுமல்லாமல் காஷ்மீரம் வரையில், மேற்கு வங்கம் வரையில், ஆந்திரா வரையில் உள்ள தலைவர்கள் எல்லாம் ஒன்றுகூடி, மாநில சுயாட்சிக் கருத்திற்கு ஆதரவு தெரிவிக்கும் வகையில் அவர்கள் எண்ணங்களை எடுத்துக் கூறியிருக்கிறார்கள். அதற்கான மாநாடும் போடப்பட்டிருக்கிறது ஆகவே அந்தப் பிரச்சாரம் தொடர்ந்து நடக்க வேண்டும். அப்படி நடை பெற்றால், இந்தியா உண்மையான கூட்டாட்சியுள்ள நாடாக, உண்மையான ஃபெடரல் செட்டப்பில் மாநிலங்கள் அமைந்தால்தான், நாவலர் கூறுவதைப் போல மக்களோடு நெருக்கமான தொடர்பு கொண்ட மாநிலங்கள் அமைய முடியும். இந்த மண்ணைப் பாதுகாக்கிற கடமையை மட்டும் கையில் வைத்திருக்கிற மத்திய அரசுக்கு இந்த நாட்டைப் பாதுகாக்கிற சூழ்நிலை ஏற்பட முடியும். எனவேதான் மாநில சுயாட்சிக் கொள்கையில் இன்றைக்கு திராவிட முன்னேற்றக் கழகம் அழுத்தம் திருத்தமாக தொடர்ந்து பணியாற்றி வருகிறது. அவைத் தலைவர் அவர்கள் எழுப்பிய போர்க்குரல் இன்றைக்கு மங்கிவிடவில்லை என்பதையும், அதற்குச் சாதகமாக என்றென்றும் திராவிட



1985 ஏப்ரல் 11] [டாக்டர் மு. கருணாநிதி]

முன்னேற்றக் கழகம் இருக்கும் என்பதையும் நான் அரசுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆனால் இந்த அரசு தொடர்ந்து குழப்பமான சிந்தனைகளை, ஸ்டேட் அட்டானமி என்றால் அது பிரிவினை என்று முதலமைச்சரே சொல்கிற அளவுக்கு ஒரு வேறுபட்ட, முரண்பட்ட கொள்கையை உருவாக்கா மல் தடை போட வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். நாவலர் அவர் கள் அங்கே இருக்கிற காரணத்தால், மாநில சுயாட்சியின் தன்மை பற்றி பல முறை சொல்லியிருக்கிறார்கள். எனவேதான், ஒவ்வொரு வரவு-செலவுத் திட்டத் திலும் 'ஸ்டேட் அட்டானமி' மாநில சுயாட்சி, தன்னாட்சி போன்றவைகள் இடம் பெற்று வருகின்றன. அதற்காக நான் நன்றி கூறிக்கொள்கிறேன்.

இந்த வரவு செலவுத் திட்டத்தில் நமது நிதியமைச்சர் நாவலர் அவர்கள், ஸ்ரீலங்கா பிரச்சினைபற்றிப் பேசுகையில், ஸ்ரீலங்கா அகதிகளுக்காக நாம் அளித்து வருகிற சலுகைகள், உதவிகள் இவைகளைப்பற்றியெல்லாம் குறிப்பிட் டிருக்கிறார்கள். நான் அதைப்பற்றி அதிகமாக எடுத்துக் கூற விரும்பவில்லை. அமைச்சர்கள் படித்திருக்கலாம். ஜூனியர் விகடன் ஏட்டில், ஸ்ரீலங்கா அகதிகள் எப்படியெல்லாம் அதிகாரிகளாலும், ஒப்பந்தக்காரர்களாலும் ஏமாற்றப்படுகிறார்கள், விரட்டியடிக்கப்படுகிறார்கள் என்பது குறித்து, இரண்டு வாரம் கட்டுரை எழுதினார்கள். ஜூனியர் விகடன் ஒரு கட்சி சார்புடைய ஏடல்ல. உங்களுக்குத் தெரியும். அது திராவிட முன்னேற்றக் கழகத்தையும் விமர்சிக்கும், அ.தி.மு.க.-வையும் விமர்சிக்கும். மற்ற கட்சி களையும் விமர்சிக்கும். அதே நேரத்தில் நாட்டிலே நிலவுகின்ற குறைபாடுகளை ஆராய்ந்து எடுத்துச் சொல்கிற ஏடாக இருக்கிறது அது. என்னைக்கூட சில சமயங்களில் விமர்சித்து பல நேரங்களில் தாக்கி அதிலே எழுதப்பட்டிருக்கிறது. இருந்தாலும் சில உண்மைகள் அந்த ஏட்டில் வெளிவருகின்ற நேரத்தில், அரசு அதைக் கவனிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். அங்கே ஸ்ரீலங்கா அகதிகளாக இருப்பவர்களின் நிலைமைகளை அந்தப் பத்திரிகை கட்டுரை எழுதியும், புகைப் படங்கள் எடுத்தும் வெளியாக்கியிருப்பதை நாவலர் அவர்களின் பார்வைக்குத் தருகிறேன். அவர்களுக்காக கட்டித் தரப்பட்ட வீடுகள், ஒன்றல்ல, இரண்டல்ல, ஆயிரக்கணக்கான வீடுகள், கட்டப்பட்ட மறுநாளே இடிந்து விழுந்து, பச்சைக் கற்களாகக் காட்சி யளிக்கின்றன. அப்படி இடிந்த வீடுகளில் இருந்த அவர்களது கார்டுகள், அந்த ஒப்பந்தக்காரர்களால் ஏமாற்றப்பட்டு எடுத்துச் செல்லப்பட்ட சம்பவங்களும் அங்கே நடந்திருக்கின்றன. மத்திய அரசு தருவதாக வாக்களித்துள்ள கடனை நம்பி, தமிழக அரசு அவர்களுக்கு வழங்கி வருகிற கடன்கள், இடையிலே இருக்கிற அரசாங்க அதிகாரிகளாலும், அவர்களுடன் ஒப்பந்தம் பேசிக் கொண்டிருக்கிற காண்ட்ராக்டர்களாலும் பிடுங்கப்பட்டு, அந்த அகதிகள்

இதனைத் தடுத்துநிறுத்த முடியும். அதே சமயத்தில் இலங்கையில் நடைபெறுகின்ற இனப் படுகொலையை நிறுத்த, கூட்டு சேரா நாடுகளின் ஒத்துழைப்பையும் பெற்றிட வேண்டும். காமன்வெல்த் நாடுகளுக்கிடையே இதற்கான தீர்வைக் கேட்டிட வேண்டும். உயர் மட்ட, உலக அளவிலான தூதுக்குழு ஒன்று இந்திய வெளி விவகாரத் துறை அமைச்சர், இந்தியப் பாதுகாப்புப் படை அமைச்சர், தமிழகத்திலிருந்தும் சில பிரதிநிதிகள் கொண்ட தூதுக்குழு ஒன்று எவ்வளவு விரைவில் முடியுமோ அவ்வளவு விரைவில், இலங்கைக்கு அனுப்பப்பட ஏற்பாடு செய்ய வேண்டும். பங்களா தேஷ் மக்கள் பாதிப்புக்கு ஆளான நேரத்திலும், பாலஸ்தீனிய அகதிகள் பிரச்சினையிலும் உலக முழுவதும் எடுக்கப்படும் அதே வழிமுறைகளை எல்லாம், மேலும் தாமதம் ஆவதற்கு முன்பு இந்தக் குழு நன்கு தெரிந்து வைத்து நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இந்திய அரசு, இலங்கைத் தமிழர்களை—அவர்கள் சிங்கள குடியுரிமை பெற்றவர்களானாலும், இந்தியர்களானாலும், நாடற்றவர்களானாலும்,—அவர்கள் துயரங்களைத் துடைப்பதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும்" என்று நம்முடைய கோரிக்கைகளை எல்லாம் அந்த முறையீட்டிலே வைத்து பிரதமர் திருமதி இந்திரா காந்தி அம்மையார் அவர்களிடத்திலே 1983 ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் 31 ஆம் நாள் கொடுக்கப்பட்டது.

**திரு. ஜி. சுவாமிநாதன் :** இடையிலே பேசுவதற்கு மன்னிக்க வேண்டும். காவிரி நீர் பிரச்சினையிலே 1972 ஆம் ஆண்டிலே தீர்மானம் போடப்பட்டு, அதற்கு சர்வ கட்சிக் கூட்டம் போடப்பட்டு மத்திய அரசிடம் மனு கொடுக்கப்பட்டது. ஆனால் மத்திய அரசு எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை. அங்கே நினைத்த மாதிரி செய்யவில்லை என்ற கருத்திலே சொல்லப்பட்டாலும் கூட, தொடர்ந்து மத்திய அரசாங்கத்தோடு பேசிக்கொண்டிருந்தார்களே தவிர, மத்திய அரசோடு பேச வேண்டாம், எந்தவிதமான ஒப்பந்தமும் இல்லை என்று ஒதுக்கி வைத்துவிடவில்லை. தொடர்ந்து பேசிக்கொண்டிருந்தார்கள். இந்தப் பிரச்சினையிலே நாம் இரண்டு ஆண்டுகளுக்கு முன்னாலே மனு கொடுத்தோம். அந்த மனுவின்மீது மத்திய அரசும் செவி சாய்க்கவில்லை. ஆகவே மத்திய அரசாங்கத்தோடு பேசுவதில் பயன் இல்லை என்று இந்த அரசை மட்டும் உறுப்பினர் குறை சொல்வது எப்படி நியாயமாக இருக்கும் என்பதை நான் அறிய விரும்புகிறேன்.



(முற்பகல் 11-35)

**டாக்டர் மு. கருணாநிதி :** மன்னிக்க வேண்டும். நான் இந்த அரசைக் குறை கூறவே இல்லை இங்கே மாத்திரம் அல்ல, நான் பேசுகின்ற போராட்ட விளக்கப் பொதுக் கூட்டத்தில் இந்த அரசைக் குறை கூறி ஒரு வார்த்தை கூட சொல்லவில்லை. இந்த அரசு தன்னால் இயன்ற அளவுக்குத் தன்னுடைய கடமையைச் செய்து வருகிறது என்றுதான் நான் திட்டவட்டமாகச் சொல்கின்றேன். மத்திய அரசை நான் கண்டிக்கிற நேரத்தில் கூட மத்திய அரசை வலியுறுத்துவதற்காக இந்தப் போராட்டமே தவிர மத்திய அரசை எதிர்த்து இந்தப் போராட்டம் என்று நான் சொல்லவில்லை. மத்திய அரசை வலியுறுத்துவதற்காகத்தான் என்று சொல்கின்றோம். காவிரிப் பிரச்சினையிலே கூட தமிழக அரசு அன்றைக்கு இப்படிப்பட்ட நடவடிக்கைகளைக் கையாளுகிற நேரத்தில், பல இடங்களில் விவசாயிகள் போராட்டம் நடத்திக் கொண்டிருந்தார்கள். அதைப்போலத்தான் அரசு தன்னுடைய கடமையைச் செய்கிறது. அதோடு சேர்ந்து எங்களுடைய கடமையை நாங்கள் செய்கிறோம். அப்போது விவசாயிகள் போராட்டம் நடத்ியதைப் போல நாங்களும் போராட்டம் நடத்துகிறோம். அவ்வளவுதான். வேறல்ல. ஆனால் காவிரிப் பிரச்சினையோடு ஸ்ரீலங்காவிலே தினமும் செத்துக் கொண்டிருக்கிற தமிழர்களுடைய பிரச்சினையை ஒப்பிடுவது அவ்வளவு பொருத்தமாக இருக்காது. ஏனென்றால் காவிரிப் பிரச்சினை இன்னும் தீராவிட்டாலும் கூட, அந்த ஒப்பந்தம் 1924 ஆம் ஆண்டு ஒப்பந்தம் காலாவதியாகிவிட்ட ஒப்பந்தம் அல்ல. சில பேர்கள் தவறாகக் கூடப் பேசுகிறார்கள். 1974-ஓடு காலாவதியாகிவிட்ட ஒப்பந்தமல்ல காவிரி ஒப்பந்தம். அது புதுப்பிக்கப்பட வேண்டியது. உபரித் தண்ணீரை எப்படிப் பகிர்ந்து கொள்வது என்றும், எப்படிப் புதுப்பித்துக் கொள்ள வேண்டுமென்றும் சொன்னோமே தவிர, அது காலாவதியாகிவிட்ட ஒப்பந்தம் அல்ல. எனவே தண்ணீர் வருகிற நேரத்திலே எல்லாம் நாம் அன்றைக்கிருந்த அரசோ, இன்றைக்கு இருக்கிற அரசோ, அன்றைக்கிருந்த முதலமைச்சரிடத்திலே கேட்ட நேரத்திலே எல்லாம், விவசாயிகளைக் காய விடாமல், கூடுமானவரையில் கர்நாடக அரசு தண்ணீரைக் கொடுத்துக் கொண்டிருக்கிறது. எனவே காவிரிப் பிரச்சினையையும் ஸ்ரீலங்காவிலே தினம் தினம் செத்துக் கொண்டிருக்கிற தமிழன் அழிவுப் பிரச்சினையையும் ஒன்றோடொன்று நாம் பொருத்தம் பார்ப்பது அவ்வளவு சரியல்ல என்பதுதான் என்னுடைய கருத்து . . . .

**திரு. ஜி. சுவாமிநாதன் :** தலைவர் அவர்களே, மத்திய அரசோடு தொடர்ந்து பேசிக் கொண்டிருந்தீர்கள் என்ற கருத்தைத்தான் நான் வலியுறுத்துகின்றேன். அதுமட்டுமல்ல, காவிரிப் பிரச்சினையிலே கூட உச்ச நீதி மன்றத்திலே வழக்கு

போட்டு, மத்திய அரசு வழக்கை வாபஸ் செய்து விடுங்கள் என்று சொன்ன போது, மத்திய அரசு சொன்னதைக் கேட்டுக்கொண்டு அந்த வழக்கை உங்களுடைய அரசு வாபஸ் பெற்றது. திரு. முரசொலி மாறன் அவர்கள் வழக்கைப் போட்டார்கள். ரிவர் டிஸ்பியூட்ஸ் ஆக்ட்டின் கீழ் விரைவாக முடிக்க வேண்டுமென்று நாம் வழக்கைப் போட்டோம். "அந்த வழக்கை நீங்கள் வாபஸ் பெறுங்கள்" என்று மத்திய அரசு கேட்டபோது, தஞ்சை நிலத்திலே உள்ள நிலச்சுவாந்தார்களுக்கும், விவசாயிகளுக்கும் பாதகமாக இருந்தாலும் கூட, அந்தச் சமயத்திலே மத்திய அரசு சொன்னதைக் கேட்டு, நீங்கள் வாபஸ் செய்து கொண்டீர்கள் என்பதையும் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**டாக்டர் மு. கருணாநிதி :** உங்களை எல்லாம் கேட்டுக்கொண்டுதான் வாபஸ் பெறப்பட்டது. அதுமாத்திரமல்ல, காவிரிப் பிரச்சினை இவ்வளவு பகிரங்கமாக விவாதிக்கப்பட வேண்டுமென்று துணைத் தலைவர் அவர்கள் தயாராக இருந்தால், நானும் விவாதிக்கத் தயாராக இருக்கின்றேன். காவிரிப் பிரச்சினை மிக நுணுக்கமாக விவாதிக்கப்பட வேண்டிய பிரச்சினை. ஐம்பது பேரை வைத்துக்கொண்டு விவாதிக்கக்கூடிய பிரச்சினையல்ல அது. அந்தப் பிரச்சினை களினுடைய நுணுக்கங்கள் சாதாரணமானதாக இல்லை. இவைகளை எல்லாம் பற்றி நாம் ஆழமாக விவாதிக்க வேண்டும். அந்த ஒப்பந்தம் எப்படி ஏற்பட்டது? அந்த ஒப்பந்தத்தில் உள்ள சிக்கல்கள் என்ன? கர்நாடக அரசு என்ன சொல்கிறது? இவைகளைப்பற்றியெல்லாம் விவாதிக்க வேண்டும். அன்றைக்கு பிரதமர் திருமதி இந்திரா காந்தி அவர்கள் உறுதி அளித்தார்கள். "நீங்கள் வழக்கை வாபஸ் பெற்றுக்கொள்ளுங்கள்; வழக்கு இருக்கும்போது என்னால் மூன்று மாநில அமைச்சர்களையும் வைத்துப் பேச முடியாது; மூன்று மாநில அமைச்சர்களையும் உட்கார வைத்துப் பேச இயலாது, எனவே வழக்கை வாபஸ் பெற்றுக் கொண்டால் மூன்று அமைச்சர்களையும் உட்கார வைத்துப் பேச முடியும்" என்று சொன்னார்கள். அப்படிப் பேசி, கடைசியாக முடிவும் எடுக்கப்பட்டது. திரு. ஜகஜீவன்ராம் அவர்கள் தலைமையிலே உட்கார்ந்து பேசி முடிவு எடுக்கப்பட்டு கையெழுத்துப் போடுகிற நேரத்திலே, நாங்கள் எதைச் சொல்லிவிட்டு எந்த முடிவை ஏற்றுக்கொண்டோமோ அது கையெழுத்துக்கு வரும்போது மாற்றப்பட்டிருந்த காரணத்தால், நானும், திரு. சாதிக் பாட்சா அவர்களும், திரு. ப. உ. சண்முகம் அவர்களும், திரு. யாதவன் அவர்களும் டில்லிக்குச் சென்று அதை எதிர்த்து, கையெழுத்துப் போடாமல் திரும்பி வந்துவிட்டோம். ஆகவே நீங்களே தவறாகக் கருதிக் கொள்ளக் கூடாது. காவிரிப் பிரச்சினையில் அன்றைக்கு என்ன ஒரு நிலையை தமிழக அரசு எடுத்ததோ அதே நிலையைத்தான் இன்றைக்கும் தமிழக அரசு எடுத்து





வருகிறது. அந்த வகையிலே காவிரிப் பிரச்சினையிலே விட்டுக் கொடுக்கக் கூடாது என்பதிலே எதிர்க் கட்சியாக இருந்தாலும், ஆளும் கட்சியாக இருந்தாலும், ஒரே கருத்தை உடையவர்களாக இருக்கிறோம் என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். ஆனால் ஸ்ரீலங்கா பிரச்சினை அப்படி யல்ல என்பதைத் தெரிவிப்பதற்கு முன்பு, நமமுடைய வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களை நான் தம்பி என்று சொல்லுவதா அல்லது நண்பர் என்று சொல்வதா எனறே தெரியவில்லை. இருந்தாலும . . . . .

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து :** மாண்புமிகு தலைவர் அவர்களே, திராவிட இயக்கக் குடும்பத்திலே இருப்பவர்கள் சகோதரர்கள் என்ற உணர்வை தாங்கள் ஒப்புக்கொண்டபோது என்னைத் தம்பி என்றே அவர்கள் சொல்லலாம். (கைதட்டல்)

**டாக்டர் மு. கருணாநிதி :** தலைவர் அவர்களே, என்னை அகதி என்று வர்ணித்த, அருமைத் தம்பி . . .

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து :** தலைவர் அவர்களே, அதற்கு முன்னாலே, என்னை 'கிறுக்கன்' என்று வர்ணித்த 'முரசொலி' பத்திரிக்கையும் இருக்கிறது.

**டாக்டர் மு. கருணாநிதி :** தலைவர் அவர்களே, நான் அப்படி வர்ணிக்க வில்லை. அப்படிச் சொன்னதாக ஏதாவது அந்தப் பத்திரிகையிலிருந்து எடுத்துக் காட்டினால், நான் வருத்தம் தெரிவித்துக்கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன். என்றைக்கும் நான் அப்படி எழுதியது கிடையாது. பேசியதும் கிடையாது.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** மாண்புமிகு திராவிட முன்னேற்றக் கழகத் தலைவரும், அமைச்சரும் அண்ணன், தம்பி உறவு கொண்டாடுவதற்கு நான் தடையாக இருக்கவில்லை. பார்லிமென்டரி முறையிலே அந்த வார்த்தைகள் அவசியம் இல்லை என்ற மரபு உலகத்திலே உண்டு. இலண்டன் பார்லிமென்டிலே கூட தொகுதியைச் சொல்லித்தான் உறுப்பினர்களைக் குறிப்பிடுவார்களேயொழிய, பெயரைச் சொல்லமாட்டார்கள்.

(முற்பகல் 11-40)

**டாக்டர் மு. கருணாநிதி :** எனவே நிறைவேற்றப்படுகிற சர்வகட்சித் தீர்மானம் எப்படி அமைகிறதோ அதைப் பொறுத்து எங்களால் முடிவெடுக்கப் படும் என்ற நிலையை கழகத்தினுடைய பொருளாளர் திரு. சாதிக் பாட்சா அவர்களும், நேற்றையதினம் பேசிய மாண்புமிகு உறுப்பினர் திரு. பழனிவேல் ராஜன் அவர்களும் இங்கே விளக்கியிருக்கிறார்கள்.

இப்படி தாமதமாவதைக் குறித்து நம்முடைய மாண்புமிகு அமைச்சர் டாக்டர் காளிமுத்து அவர்கள் எழுதியுள்ள ஒரு புத்தகத்தில், இந்திய இராணுவத்திடம், துப்பாக்கி இருப்பது நவராத்திரியிலே கொலு வைத்து அழகு பார்ப்பதற்காகவா என்று அழகாகக் குறிப்பிட்டிருக்கிறார். அது மட்டுமல்ல, வேடிக்கையாக ஒரு நாட்டுப் பாடல் பாடுவார்கள். ஸ்ரீலங்காவிற்கு தன் கணவனை அனுப்பி வைக்கிறாள் மனைவி ஒருத்தி. அவன் திரும்பி வருகிறான். அவனைப் பார்த்து மனைவி கேட்கிறாள். "கண்டிக்குப் போன மச்சான் கடல் கடந்து போன மச்சான், எனக்கு என்ன மச்சான் வாங்கி வந்தாய்?" என்று கேட்கிறாள். அதற்குக் கணவன் பதில் சொல்லுகிறான்; "கண்டியிலே ஆறு மாதம்; கப்பலிலே ஆறு மாதம், ...க்கிலே ஆறு மாதம் செல்வழிந்து போச்சுதடி" என்கிறான் கணவன். அதைப் போல ஸ்ரீலங்காவிலே இனப் படுகொலைகள் நடந்து மூன்று மாதங்களாகின்றன. மாதங்கள் முடிந்தனவே தவிர, பிரச்சினைகள் முடியவில்லை. கவலை தெரிவிப்பதிலே 10 நாள், கண்டனம் தெரிவிப்பதிலே 10 நாள், திரு. நரசிம்மராவை அனுப்ப 10 நாள், பிறகு திரு. பார்த்தசாரதியை அனுப்ப 10 நாள் என்று தன்னுடைய கவலையை, ஆழ்ந்த வேதனையை அமைச்சர் அவர்கள் அதிலே தெரிவித்திருக்கிறார்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்** : ஆமாம், இவ்வளவையும் ஒன்று தவறாமல் படிப்பதற்கு உங்களுக்கு எங்கே நேரம் கிடைக்கிறது?

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து** : எல்லாவற்றையும் படிக்காவிட்டாலும், நான் என்ன எழுதுகிறேன் என்பதை நிச்சயமாகப் படித்துப் பார்ப்பார் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு.

**டாக்டர் மு. கருணாநிதி** : அதுமட்டுமல்ல, ஈழத் தமிழகம் அமைய வேண்டும் என்பதில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் கருத்துக்கும், அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அமைச்சராக இருக்கிற மாண்புமிகு டாக்டர் காளிமுத்து அவர்களின் கருத்துக்கும், மேலவை உறுப்பினராக இருக்கிற டாக்டர் சனார்த்தனம் கருத்துக்கும் வேறு சில அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்களுடைய கருத்துக்கும் ஒற்றுமை இருக்கிறது. அமைச்சரவையில் இருக்கிற மற்றவர்கள் எப்படிக் கருதுகிறாரோ அல்லது முதலமைச்சர் அவர்கள் எப்படிக் கருதுகிறாரோ எனக்குத் தெரியாது.

மாண்புமிகு அமைச்சர் டாக்டர் காளிமுத்து அவர்களே சொல்லியிருக்கிறார். "சிங்களவர்களோடு தமிழர்கள் சேர்ந்து வாழ வேண்டும் என்று யார் சொன்னாலும், அவர்கள் ஜெயவர்த்தனேவின் கைக்கூலிகள், ஜெயவர்த்தனேவின் கங்காணிகள். மானமுள்ள தமிழர்களாக, மனிதாபிமான முள்ள தமிழர்களாக அவர்களை ஏற்றுக்கொள்ளத் தயாராக அவர்கள்





இல்லை. திராவிட இயக்கத்தைச் சார்ந்த எவனும், தமிழனுக்குப் பிறந்த எவனும் ஸ்ரீலங்காவிலே தமிழனுக்குத் தனி நாடு கூடாது என்று சொல்ல மாட்டான்". தம்பியே இப்படி அறைகூவல் விடும்போது அண்ணன் தனி நாடு கூடாது என்றா சொல்வான். எனவேதான் தம்பியே இந்த அளவுக்கு அறைகூவல் விட்ட பிறகு, அங்கே தனி நாடு தேவையில்லை என்று கூற முடியுமா? ஆனால் அமைச்சர் டாக்டர் காளிமுத்து அவர்களின் கருத்தை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஏற்றுக்கொண்டிருக்கிறாரா இல்லையா என்று பார்த்தால், 28—10—1983 அன்று சட்டசபையில் முதலமைச்சர் டாக்டர் எம். ஜி. இராமச்சந்திரன் அவர்கள் பேசியதாக பத்திரிகையில் வந்திருக்கிறது. அவர் சொல்லியிருக்கிறார், "சோமசுந்தரமோ காளிமுத்துவோ என்னை மீறிப் பேச மாட்டார்கள். எந்தக் கருத்தைச் சொல்வதானாலும் அவர்கள் பேசுவதற்கு முன்னால் என்னிடம் சொல்லிவிட்டுத்தான் பேசுவார்கள். எங்களுக்குள் கருத்து ஒற்றுமை இல்லை என்றால், அமைச்சரவையைக் கலைத்துவிட்டு வெளியேறுவோம்" என்று பேசியிருப்பது அமைச்சர் டாக்டர் காளிமுத்து அவர்களின் வாசகங்களுக்கு தந்திருக்கின்ற ஒப்பந்த முத்திரையாக அல்லது அனுமதி முத்திரையாக நான் அறிந்து கொண்டிருக்கிறேன். எனவே ஈழத் தமிழகம் அமைய வேண்டும் என்ற ஒருமித்தக் கருத்துக்களை பிரதமரிடம் எடுத்துச் சொல்லப்படும் அளவுக்கு ஒரு கையெழுத்து இயக்கத்தை திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக நாங்கள் நடத்திக் கொண்டிருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, இரண்டொரு பிரச்சினைகளைப்பற்றி மட்டும் சொல்லி முடித்து விட விரும்புகிறேன்.

இது நாவலர் அவர்களுக்கு நன்கு தெரியும். இரண்டாண்டுகளுக்கு முன்பே எடுத்துச் சொல்லப்பட்டது. இது இந்திய வரலாறு. தமிழ்நாடு பாட நூல் நிறுவனத்தால் வெளியிடப்பட்ட இந்திய வரலாறு. இரண்டு ஆண்டுகளுக்கு முன்பே சட்டமன்றப் பேரவையில் காட்டினேன். முதலமைச்சர் கூட கல்வியமைச்சர் அவர்களைக் கூப்பிட்டு இதுபற்றி விசாரிக்கச் சொல்லியும், பிறகு நடவடிக்கை ஏதும் எடுக்கப்படவில்லை. நாம் சொல்லுகிறோம் மாநிலங்கள் புறக்கணிக்கப்படுகின்றன என்று. ஆனால் இங்கே நாமே மாநிலத்தைப் புறக்கணிக்கிறோம். தமிழ்நாடு பாட நூல் நிறுவனத்தால் வெளியிடப்பட்ட ஆறாவது வகுப்புக்கான வரலாறு. இதில் ஏதோடு வரலாறு நின்றுவிடுகிறது என்றால் ஜவகர்லால் நேரு இந்தியாவின் பிரதமர் ஆகிறார். இராஜாஜி

செம்மொழியாம் தமிழ்மொழியின் தனித்தன்மையும் தமிழர் பண்பாடும் துலக்கம் பெறவும், அவர் கொள்கையைப் பின்பற்றி உருவாகும் சொற்பிறப்பு அகரமுதலியில் பிற கொள்கைகளின் தலையீட்டைத் தவிர்க்கவும் பாவாணர்க்குத் தனித்த துறை ஏற்படுத்தித் தர அரசு விரும்பியது. அதன்படி 1974 ஆம் ஆண்டு மே மாதம் 8 ஆம் நாள் மொழிஞாயிறு ஞா. தேவநேயப் பாவாணரை இயக்குநராகக் கொண்ட செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககம் தமிழக அரசின் கல்வித் துறையின் தனித்த துறையாகத் தோற்றுவிக்கப்பட்டது" என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. நாவலர் அவர்களே அதிலே என் பெயரும் இல்லை, உங்கள் பெயரும் இல்லை என்பதைக் குறிப்பிட்டு இவ்வளவு குறுகிய நோக்கம் கொண்ட அரசாக இருந்த அரசாங்கம் இருக்கும்போது, எங்களுடைய ஒத்துழைப்பை மாத்திரம் எப்படி எதிர்பார்க்கிறார்கள் என்பதை மாத்திரம் கேட்டு அமைகிறேன்.

(முற்பகல் 11-50)

**திரு. எம். பி. சுப்பிரமணியம் :** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, 1985-86 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட விவாதம் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. இந்த வரவு-செலவுத் திட்டம், இந்த அரசு மூன்றாவதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு, முதலாவதாக சமர்ப்பிக்கின்ற வரவு செலவுத் திட்டம். ஏழாவது ஐந்தாண்டுத் திட்டத்திற்குப் பிறகு முதலாவதாக சமர்ப்பிக்கின்ற திட்டம் என்பதையும் நான் நினைவு கூர்கிறேன். இந்த வரவு செலவுத் திட்டத்தில் இந்த அரசினுடைய புதிய கொள்கைகள், புரட்சிகரமான கொள்கைகள் அறிவிக்கப்படும் என்று நான் எதிர்பார்த்தேன். வருகின்ற ஐந்தாண்டு காலத்திலே இந்த அரசாங்கம் என்ன செய்ய இருக்கின்றது என்ற கருத்துக்களைக் கொண்டதாக இந்த வரவு செலவுத் திட்டம் அமையும் என்று எதிர்பார்த்தேன். ஏழாவது ஐந்தாண்டுத் திட்டத்திற்கு தோராயமாக ஒதுக்கப் பட்டிருந்தாலும், அது இன்னும் முடிவு பெறாத நிலையில், அதுபற்றிய விவரம் இதிலே அறிவிக்கப்படும் என்று எதிர்பார்த்தேன். அதெல்லாம் இங்கே குறிப்பிடப்படவில்லை என்பதை வருத்தத்தோடு சொல்லிக் கொள்கிறேன். ஏழாவது ஐந்தாண்டுத் திட்டம்பற்றி விவாதிக்கின்ற வாய்ப்பு இந்த அவைக்கு நிச்சயமாகக் கிடைக்கும் என்று நம்புகிறேன்.

வரவு-செலவுத் திட்டத்தில் அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு சமுதாயத்தில் உள்ள ஏழையெளியவர்களுக்கு நல்வாழ்வு அளிக்க வேண்டும் என்பதற்காக, தொடர்ந்து கொடுக்க வேண்டும் என்பதற்காக திட்டமிட்டிருக்கிறது. குறிப்பாக சிறார்களுக்குச் சத்துணவு அளிக்க வேண்டும் என்பதற்காக 80 லட்சத்திற்கும் மேற்பட்ட குழந்தைகளுக்கு சத்துணவு





அளிக்க வேண்டும் என்று இருக்கிறது. அவர்களுக்கு அரசு தொடர்ந்து இலவச சீருடை, இலவசப் புத்தகங்கள், மருத்துவ வசதி அளிப்பது, இப்படி சில முக்கியமான திட்டங்களைச் சேர்த்து இந்த அரசு அதன் கொள்கைகளாக இங்கே அறிவித்திருக்கிறது என்று அறிகிறேன். ஏற்கெனவே இங்கே பல நேரங்களிலே சொல்லப்பட்டிருக்கின்றது. வெளியிலேயும் சொல்லப் பட்டிருக்கிறது. அதுபோல சத்துணவுத் திட்டம் என்பது இந்த அரசாங்கம் தொடங்கி அது அனைவராலும் பாராட்டப்படுகின்ற ஒன்றாக இருக்கிறது. இந்தத் திட்டத்தை, இந்த அரசாங்கத்திற்குப் பின்னாலே பொறுப்பேற்கிற யாராலும் நிறுத்திவிட முடியாது, நிறுத்துவதற்குரிய தைரியம் யாருக்கும் வராது என்ற நிலைமைகளையும் நான் நினைவூட்ட விரும்புகிறேன். ஏன் இதைச் சொல்கிறேன் என்று கேட்டால், எத்தனை ஆண்டுக்காலம் இந்தச் சத்துணவு போடுகின்ற நிலைமைகள் தமிழ்நாட்டிலே நீடிக்கும் என்று பார்க்க வேண்டும். அப்படிப் பார்க்கின்றபோது, நீண்ட நெடுங்காலத்திற்கு ஏழை எளிய குழந்தைகள் ஏழைக் குழந்தைகளாகவே, அரசாங்கத்தினுடைய தர்மசிந்தை காரணமாக சத்துணவு கிடைக்க வேண்டிய நிலை தொடருமோ என்ற அச்சத்தைத்தான் உண்டாக்குகிறது என்பதைக் குறிப்பிட விரும்பு கிறேன். ஏனென்றால், இந்த நாட்டிலே ஏழைகள் இருந்துகொண்டிருக்கின்ற வரையிலே ஏழைக் குழந்தைகள் பிறந்துகொண்டிருப்பார்கள். ஏழைக் குழந்தைகளைக் கண்காணிக்க முடியாத பெற்றோர்கள் அரசாங்கத்தின் தயவை நாடிக்கொண்டே இருப்பார்கள். அப்போது தமிழக அரசு கூறுவதுபோல, சத்துணவுத் திட்டம் நிரந்தரமாக என்றும் எப்போதும் இருக்கவேண்டிய ஒரு அவல நிலைமை தமிழகத்திற்கு வருமா என்றுதான் கேட்க விரும்புகிறேன். இதை நான் சொல்வதற்குக் காரணம் அரசாங்கத்தைக் குறைகூறுவதற்காக அல்ல. இந்த அரசாங்கத்தின் தலைமைப் பொறுப்பேற்றுக்கொண்டிருக்கின்ற மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், புரட்சிகரமான கருத்துக்களைக் கொண்டவர்கள். அவர்களுடைய வரலாறு, அவர்களுடைய வசனங்கள், அவர் களுடைய பாடல்கள், கதைகள் எல்லாம் சமுதாயத்திலே ஒரு பெரிய புரட்சியை உண்டு பண்ணவேண்டுமென்ற ஆர்வத்தை, உணர்வை உடையவர் என்பதைக் காட்டுகின்றன. அவர் மக்களின் மதிப்பைப் பெற்றவர் என்பதை நான் எடுத்துக்கூற விரும்புகிறேன். அத்தகைய வாய்ப்பை அவர் களுக்கு மக்கள் இரண்டு முறைகள் கொடுத்து மூன்றாவது முறையாகவும் கொடுத்திருக்கின்றார்கள். அப்படி இருந்தும் நல்ல ஒரு புரட்சிகரமான மாற்றம் உருவாகவில்லை என்பதை வருத்தத்தோடு கூறிக்கொள்கிறேனே தவிர அதைக் குறையாக நான் சொல்லவில்லை.

[திரு. எம். பி. சுப்பிரமணியம்] [1985 ஏப்ரல் 11

10 கோடி ரூபாய் அரசாங்கத்தின் வருமானமாக இருந்தது. இன்றைக்கு 3,000 கோடி ரூபாய் அளவுக்குத் திட்டம் தயாரிக்கும் அளவுக்கு வருமானம் பெருகியிருக்கிறது. செலவினங்கள் ஒவ்வொரு தலைப்பிலும் கூடுதலாகி யிருக்கிறது. ஆனால் நாம் விரும்புகிற சமுதாய மாற்றத்தை உண்டாக்க அடிப்படை சிந்தனையையும், அதற்கான நடவடிக்கைகளையும் இந்த அரசாங்கம் மேற்கொள்ளவில்லை என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இந்த நேரத்திலே மேலும் ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். அதிகாரங்கள் மாநிலத்திற்குக் கூடுதலாகத் தேவை; அதனுடைய பொறுப்புக்களை மேலும் செம்மையாக, சீராக நிறைவேற்ற தேவை என்று வரவு-செலவுத் திட்டத்தில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. அதிலே இரண்டு விதமான கருத்தில்லை. மாநில சுயாட்சி, மத்தியிலே கூட்டாட்சி என்ற அரசியல் கோஷத்தை மீண்டும் இப்போது தங்களுக்குத் தாங்களே ஞாபகப்படுத்திக் கொள்ளவோ என்னவோ எழுப்பியிருக்கிறார்கள் என்று எண்ணுகிறேன். ஏதோ ஒரு காலத்தில் அண்ணா அவர்கள் எங்கோ பேசியதை, எங்கோ எழுதியதை இப்போது நினைவுபடுத்தியிருக்கிறார்கள். அதைத் திரும்பத் திரும்ப படித்துப் பார்க்கிறேன். அது மாநில, மத்திய அரசுகளில் உறவுகளைப் பிரதிபலிப்பதாக இல்லை என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன். மத்திய அரசுமீது காழ்ப்புணர்ச்சி கொண்டு, தாங்கள் எடுத்துக்கொண்ட வாதத்திற்கு வலுவூட்டுவதாக அது இருக்கிறதே ஒழிய எந்தக் காலத்திலும் மாநிலங்கள், நகராட்சிகள், பஞ்சாயத்துக்களாக ஆக்கப்படவில்லை என்பதை சீர்தூக்கிப் பார்த்தால், நிச்சயமாக அதை உணர முடியும். ஏன் அதைச் சுட்டிக் காட்டியிருக்கிறார்கள் என்பதை என்னாலே புரிந்துகொள்ள முடியவில்லை.

(நண்பகல் 12-00)

உண்மையாகவே அதிகாரங்கள் பரவலாக்கப்பட வேண்டும், மாநிலங்களுக்கு அதிகாரம் இன்னும் அதிகமாக வேண்டும் என்பதிலே கருத்து மாறுபாடு இல்லை. ஏற்கெனவே நான் இந்த மன்றத்திலே குறிப்பிட்டதுபோல், மத்திய அரசாங்கத்திலே இருக்கிற காங்கிரஸ் பேரியக்கமானது தான் ஆட்சிக்கு வந்து 35 ஆண்டுகளுக்குப் பிறகு, இதுகுறித்துப் புனர் பரிசீலனை செய்ய வேண்டிய காலம் வந்துவிட்டது என்பதை உணர்ந்துதான், சர்க்காரியா கமிஷனை அமைத்தது. அதில் நம் வாதங்களை எடுத்துச் சொல்வதற்கு வாய்ப்பு அளிக்கப்பட்டிருக்கிறது. அதுபோல் பஞ்சாபில் போராட்டம் நடத்துகிறவர்கள் தங்களுடைய வாதங்களை எடுத்துச் சொல்வதற்கு வாய்ப்பு இருக்கிறது. அதிகாரம் வேண்டும், அதிகாரம் வேண்டும் என்று சொல்வதெல்லாம் அதிகாரத்தைச் செலுத்த வேண்டும் என்பதற்காக கேட்கப்படுகிறதா அல்லது



1985 ஏப்ரல் 11] [திரு. எம். பி. சுப்பிரமணியம்]

உள்ளபடியே நாட்டு மக்களுடைய பிரச்சினைகளை முழுமையாகத் தீர்க்க வேண்டுமென்ற அடிப்படையில் கேட்கப்படுகிறதா என்று நான் அறிய விரும்புகிறேன். நல்ல எண்ணத்துடன்தான் கேட்கிறார்கள் என்றால், நான் கேட்கிறேன், அதிகாரங்கள் என்பது மாநில அளவில் மட்டுமல்லாமல், மாவட்ட அளவிலும், பஞ்சாயத்து அளவிலும் கூட அதிகாரம் பரவலாக்கப்பட வேண்டுமென்று ஏன் சொல்லக்கூடாது? மகாத்மா காந்தியின் தலைமையில் காங்கிரஸ் பேரியக்கம் இருந்த காலக் கட்டத்திலேயே, உண்மையிலேயே அதிகாரம் மக்கள் கைக்கு மாற வேண்டுமென்றுதான் சொல்லப்பட்டது. உண்மையாகவே மக்களோடு மக்களாக நேரடியாக அன்றாடம் பழகக்கூடியவர்கள் பஞ்சாயத்துத் தலைவர்களும், ஒன்றியத் தலைவர்களும் இன்னும் இதுபோன்ற அமைப்புகளும்தான். இவர்களுக்கு எல்லாம் முழுமையான அதிகாரம் வழங்கப்பட்டால், உள்ளபடியே நான் வரவேற்கத் தயார். அப்படியானால்தான் மத்தியிலே, மாநிலத்திலே, மக்களிடத்திலே என்கிற வகையிலே மூன்று விதமாக அதிகாரம் பரவலாக வருவதற்கு வாய்ப்பிருக்கிறது. 1967 ஆம் ஆண்டிலிருந்து 1985 ஆம் ஆண்டுவரை நம்முடைய மாநிலத்தைப் பொறுத்தவரையில், எந்தப் புரட்சிகரமான மாறுதலைக் கொண்டு வருவதற்கு அதிகாரம் தடையாக இருக்கிறது என்று நான் கேட்கிறேன். எதற்கெடுத்தாலும் தேவையில்லாமல் அதிகாரம், அதிகாரம் என்று கேட்கக்கூடாது.

மற்றொன்றையும் இச்சந்தர்ப்பத்தில் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். ஒரு காலத்திலே திராவிட நாடு பெறவேண்டுமென்று விடப்பட்ட கோரிக்கையை பின்னால் கைவிட்டார்கள். ஏன் கைவிடப்பட்டது என்பதற்கு அண்ணா அவர்கள் காரணம் சொன்னார்கள். "பிரிவினையைக் கைவிட்டு விட்டோம் என்பது உண்மை. ஆனால் அதற்கான காரணங்கள் இருந்துகொண்டிருக்கின்றன" என்று சொன்னார்கள். அதை நினைவுபடுத்துகின்ற தலைவர்கள் இன்றைக்கும் இருந்துகொண்டிருப்பதால்தான் சொல்கிறேன், அதனுடைய புனிதத் தன்மையே இப்படிப் பேசுவதன் மூலம் கெடுகிறது என்பதை நான் சுட்டிக் காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். காங்கிரஸ் மாநிலம், காங்கிரஸ் அல்லாத மாநிலம் என்றெல்லாம் பிரித்துப் பார்க்காமல் உண்மையாகவே அதிகாரம் வேண்டுமென்று காரணத்தோடு கோரினால், காங்கிரஸ் பேரியக்கம் அதனைப் பரிசீலிக்கும் நிலையில் இருக்கிறது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து, ஸ்ரீலங்கா வாழ் தமிழர்களை எடுத்துக்கொண்டால், இரண்டு வித தமிழர்கள் இருக்கிறார்கள். அவர்களை நான் பாகுபடுத்திக் காட்டத் தயாராக இல்லை. இன்றைக்கு இந்தியாவுக்கு வந்திருக்கிற தமிழர்களை எடுத்துக் கொண்டால் கூட, இந்திய வம்சாவழி தமிழர்களும் இருக்கிறார்கள். ஸ்ரீலங்கா

குடியுரிமை பெற்ற தமிழர்களும் இருக்கிறார்கள். அவர்களுக்குள் நாமே பாகுபாட்டைக் காட்டுவதை விட்டு விட்டு, பிரச்சினை தீர பாடுபட வேண்டும். ஒரு சுதந்திர நாட்டிலுள்ள மக்களுடைய பிரச்சினையை இன்னொரு சுதந்திர நாட்டிலுள்ளவர்கள் தீர்க்க முயலும்போது, இன்னொன்றையும் கவனிக்க வேண்டும். இன்றைக்கு இந்தியா அனைத்து உலக அளவிலே நூற்றுக்கு மேற்பட்ட நாடுகளின் தலைமைப் பொறுப்பை ஏற்றிருக்கும் நிலையில், இந்தியாவுக்கு உலக அரங்கில் இருக்கின்ற மதிப்பையும், இந்தியாவின் கருத்துக்கு இருக்கின்ற மதிப்பையும் கவனிக்க வேண்டும். இந்நிலையில் எந்த அளவுக்கு நாம் இந்தப் பிரச்சினையில் ஈடுபட முடியும் என்பதை தயவுசெய்து விவேகத்தோடு, தெளிவாக, சிந்தித்து, சீர்தூக்கிப் பார்க்க வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர்களைக் கேட்டுக்கொள்கிறேன். அநீதிகள் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும் என்பதில் சந்தேகம் இல்லை. மனித உரிமைகள் பறிக்கப்பட்டு மிருகங்களைவிட கேவலமாக மனிதர்கள் நடத்தப்படுவது உடனடியாக நிறுத்தப்பட வேண்டும் என்பதிலும் சந்தேகம் இல்லை. தனி நாடு வேண்டுமா, வேண்டாமா என்பதை முடிவு செய்யும் உரிமையும் அவர்களுக்கு இருக்கிறது, அதில் நாம் தலையிடவில்லை. ஆனால் தமிழ் நாட்டிலுள்ள அனைத்துக் கட்சிகளும் ஒருமித்து நின்று அவர்களுக்காகச் செய்கிற ஒவ்வொரு செயலும் தனித் தன்மை வாய்ந்தனவாக இருக்க வேண்டும். அந்த அடிப்படையில் நாம் செய்கின்ற ஒவ்வொரு செயலும் ஸ்ரீலங்காவில் வாழும் தமிழர்களுக்கு உதவி செய்வதாக இருக்க வேண்டும். அப்படி இல்லையென்றால், ஸ்ரீலங்காவிலுள்ளவர்கள் நம்மிடையே கூட பாகுபாடு இருப்பதாக சந்தேகிக்க ஆரம்பித்து விடுவார்கள். அதற்கு நாம் இடம் கொடுக்கக் கூடாது. தமிழர்கள் நல்ல முறையில் வாழ வேண்டும். அங்குள்ள தமிழர்களுடைய விருப்பம் நிறைவேற வேண்டும். அவர்களுடைய அவலங்கள், துயரங்கள், தொல்லைகள் அவசியம் நிறுத்தப்பட வேண்டுமென்ற முறையில் நாம் எடுக்கின்ற ஒவ்வொரு நடவடிக்கையும் ஒருமித்த குரலில் அமைய வேண்டும். அப்படி இல்லையென்றால், ஸ்ரீலங்காவிலுள்ள அரசு நம்மைப் பற்றித் துருவித் துருவிப் பேசுகின்ற வாய்ப்பு வந்து விடும். கடந்த கால அனுபவத்தைப் பார்த்தாவது, நாம் இதிலே அவசியம் ஒருமித்த கருத்துக்களைக் கொண்டு செயல்பட வேண்டும்.

(பிற்பகல் 12-05)

தமிழ் நாட்டில் உள்ள அனைத்துக் கட்சிகளும், தமிழக அரசும், மத்திய அரசும் சேர்ந்து வேலை நிறுத்தம் செய்து, உலகமே பாராட்டுகிற அந்த நிலைமைக்கு வந்த பிறகு, ஸ்ரீலங்கா பிரச்சினையை உலக நாடுகள் புரிந்துகொண்டன. இதைவிட சிறந்த முறையில் நாம் இந்தப் பிரச்சினையை உலகத்தின் கவனத்திற்குக் கொண்டுவர முடியாது. ஆகவே இந்தப் பிரச்சினையை நாம் படிப்படி



யாகப் பேசித்தான் தீர்க்க வேண்டுமென்பதுதான் முறையாக இருக்கும். ஐக்கிய நாடுகள் சபையின் மேல்சபையில் மனித உரிமைப் பாதுகாப்புக் கழகத்தில் எழுப்பியதன் காரணமாக உடனடியாக எந்தப் பிரச்சினைக்காவது முடிவு ஏற்பட்டதா என்றால், கடந்த கால வரலாற்றை நான் வேதனையோடு குறிப்பிட விரும்புகிறேன்—எந்தப் பிரச்சினையாலும் தீர்க்கப்படவில்லை. தென்னாப்பிரிக்கா பிரச்சினையிலிருந்து, காஷ்மீர் பிரச்சினையிலிருந்து, ஈரான்-இராக் பிரச்சினையிலிருந்து, பாலஸ்தீனப் பிரச்சினையிலிருந்து இது வரையில் எந்தப் பிரச்சினைக்கும் முடிவு காணப்படவில்லை. ஆனால் ஐக்கிய நாடுகள் சபைக்கு இந்தப் பிரச்சினை போகிறது என்றால், உலக நாடுகளின் கவனத்தை ஈர்க்கலாமே தவிர, அதற்கு விளம்பரம் கொடுக்கலாமே தவிர, எந்தப் பிரச்சினையும் தீராது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அப்படி அந்தப் பிரச்சினைக்கு ஒரு முடிவு வேண்டுமென்று சொன்னால், நேரடிப் பேச்சு வார்த்தைகள் மூலம்தான் முடியும் என்று தெரிவித்துக்கொள்கிறேன். அதுதான் அறிவுடைமையாகும். இதனால் விளம்பரம் ஏற்படாது. ஆனால் இந்தப் போராட்டங்கள் எல்லாம், இங்கே உள்ள தமிழ் மக்களுக்காக பயன்படுத்தலாமே தவிர, பிரச்சினையைத் தீர்க்கப் பயன்படாது.

ஆனால் இந்தப் பிரச்சினையைப்பற்றிப் பேசுகிறபோது, சில நாட்களுக்கு முன்பு திரு. ஜி. பார்த்தசாரதி அவர்களுக்குப் பதிலாக வெளியுறவுத் துறையில் வேலை பார்க்கிற திரு. பண்டாரி என்ற அதிகாரி ஸ்ரீலங்காவிற்குச் சென்று வந்தார். அதைப்பற்றி அவையிலும் வெளியிலும் என்ன சொல்லப்படுகிறதென்றால், ஸ்ரீலங்கா பிரச்சினையில் அந்த நாட்டு அரசாங்கத்தோடு பேச, பெரியவர் திரு. பார்த்தசாரதியை அனுப்பாமல் * * * ஒரு அதிகாரியை அனுப்பியிருக்கிறார்கள் என்று அரசாங்கத்தின் உள்நோக்கத்தை சந்தேகிக்கிற அளவுக்குப் பேசப்பட்டது. ஒரு நாட்டுக்கு நாடு ஏற்படுகிற உறவைப்பற்றிப் பேசுகிறபோது, அதிகாரிகள் போய் பேசிவிட்டு வருவது என்பது முதல் கட்டம். அதற்கு மேல் அரசியல் தொடர்பு உடையவர்கள் போய் பேசி முடிவெடுப்பது இன்னொரு கட்டம். அந்த முறைகள், பத்திரிகைகளில் பார்த்தால், நன்றாகத் தெரியும். அந்த அதிகாரி திரு. பண்டாரி என்பவர், ஸ்ரீலங்கா பிரச்சினையில் மட்டுமல்ல, பல நாடுகளுக்குச் சென்று வந்து, ஒரு சரியான சூழ்நிலையை ஏற்படுத்த முயற்சித்துக் கொண்டிருக்கிறார்.

* * * தலைவரின் ஆணைப்படி நீக்கப்பட்டது.

[1985 ஏப்ரல் 11

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** திரு. பண்டாரி என்ற அந்த அதிகாரி, இந்திய அரசின் வெளியுறவுத் துறைச் செயலாளராகப் பணியாற்றும் உயர் அதிகாரியாவார். வெளியில் பேசியதாகச் சொன்ன வார்த்தைகளில் * * * ஒரு அதிகாரி என்று இருப்பதில், * * * என்ற வார்த்தையை அவைக் குறிப்பில் இருந்து எடுத்துவிடலாம்.

**திரு. எம். பி. சுப்ரமணியம் :** ஆகவே அவர்களை அனுப்பியதன் காரணமாக மத்திய அரசுக்கு அக்கறை குறைந்துவிட்டது என்று சொல்ல வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன். திரு. ஜி. பார்த்தசாரதி மட்டுமல்ல, இந்தியப் பிரதம அமைச்சரே அந்தப் பேச்சுவார்த்தையில் பங்கு கொள்கிற காலம் நிச்சயமாக வரும் என்ற நம்பிக்கையில் நான் பேசுகிறேன். அப்படிப்பட்ட காலம் கனிகிற செய்திகள் பத்திரிகைகளில் வந்துகொண்டிருக்கின்றன.

இன்றைக்கு வெளி உலகிலே உள்ள கருத்துக்கள், நம்மையறியாமலே உருவாக்கப்பட்டு, ஸ்ரீலங்கா அரசாங்கம் நியாயமான கோரிக்கைகளை ஏற்று, அரசியல் முறையில் தீர்வு காண வேண்டுமென்ற நிர்ப்பந்தத்திற்குப் பணிந்து வருவதாக நான் அறிகிறேன். ஆனால் அதற்கு இடையூறாக எந்தச் சம்பவமும் தமிழகத்தில் நடக்காமல் இருப்பது, நல்லது என்று எந்தத் தமிழர்களுக்காக கண்ணீர் வடிக்கிறோமோ அவர்களுடைய நன்மையைக் கருதியே நான் இதைக் குறிப்பிடுகிறேன்.

அடுத்ததாக, காவிரி நீர்ப் பிரச்சினை பற்றி சாங்கோபாங்கமாக நான் எடுத்துப் பேச சரியான காலம் இப்போது இல்லையென்றாலும், இரண்டொரு வார்த்தைகளை மட்டும் கூற விரும்புகிறேன். 1924-ஆம் ஆண்டு ஏற்பட்ட ஒப்பந்தம் 50 ஆண்டுகளுக்குப் பிறகு முடிவுற்றுவிடவில்லை. it is deemed to continue என் அன்றைக்கே வேறு ஒரு ஒப்பந்தம் ஏற்படவில்லையென்று கேட்கிறார்கள். 1924-ஆம் வருட ஒப்பந்தமே தொடர்ச்சியாக இருக்க வேண்டுமென்பதுதான் நமது நிலை. அப்படிக் கருதித்தான் நாம் தண்ணீரைப் பெற வேண்டும். ஆனால் கர்நாடக அரசு, தயவு தாட்சண்யத்திற்காக நமக்குக் கொஞ்சம் தண்ணீர் விடுவதைப் போல ஒரு நிலைமையை ஏற்படுத்தியிருக்கிறது. அதுகுறித்த பேச்சுவார்த்தைகள், பல அரசுகளாலும், பல முதலமைச்சர்களாலும் பல முறை பேசப்பட்டும், இன்னும் ஒரு முடிவுக்கு வரவில்லை. அப்படி முடிவுறாமல் இருக்கிற நேரத்தில் தமிழக அரசின்

* * * தலைவரின் ஆணைப்படி நீக்கப்பட்டது.



முதலமைச்சர் அவர்களுக்கும், கர்நாடக அரசின் முதலமைச்சர் அவர்களுக்கும் நல்ல நட்புறவு இருக்கிற இந்த நேரத்தில், இரு நாட்டு மக்களுக்கும் நன்மை விளைவிக்கிற வகையில் ஒரு முடிவு காண வேண்டுமென்று குறிப்பிட விரும்புகிறேன்.

அடுத்ததாக, கல்வித் துறைபற்றி விளக்கமாகப் பேச இங்கே சந்தர்ப்பம் இல்லையென்றாலும், இரண்டொரு வார்த்தைகள் மட்டும் கல்வித்துறையைப் பற்றிக் குறிப்பிட விரும்புகிறேன். பொதுவாக கல்வியின் வளர்ச்சி பெருமளவில் பரவியிருக்கிறது என்பது உண்மைதான். ஆனால் அதன் தரம் எந்த அளவுக்கு இருக்கிறதென்றால், சென்னை கார்ப்பரேஷன் பள்ளிகளில் பரிட்சைகளில் தேர்வு பெறுகிற மாணவர்கள் 15 சதவீதத்திற்கும் குறைவு என்பதுதான்

(பிற்பகல் 12-10)

உண்மை. சென்னையிலே வசதி படைத்தவர்கள் தங்கள் பிள்ளைகளை ஆங்கிலப் பள்ளிகளுக்கு, கான்வென்ட் பள்ளிகளுக்கு அனுப்பி வைத்து கல்வி பெற முடிகிறது. ஆனால் சாதாரண ஏழை எளிய மக்கள் கார்ப்பரேஷன் பள்ளிகளிலே தங்கள் பிள்ளைகளைப் படிக்கவைக்கவேண்டிய சூழ்நிலை இருக்கிறது. ஆகவே நாம் இவ்வாறு துவக்கத்திலேயே இரண்டுவிதமான குடிமக்களை உருவாக்குகிறோம்.

வெள்ளைக்காரன் இந்த நாட்டை ஆண்ட காலத்தில் எப்படி வெள்ளைக்காரன் பிள்ளைகளுக்கு ஒரு பள்ளியும் கறுப்பர்களுக்கு ஒரு பள்ளியும் என்று இருந்ததோ, அதுபோல சுதந்திர நாட்டிலே வசதி படைத்தவர்களுக்கு ஒருவிதமான கல்வியும், வசதி இல்லாதவர்களுக்கு ஒருவிதமான கல்வியும் துவக்கத்திலேயே இருக்கிறது என்றால், பின்னால் இருவரும் எப்படி போட்டி போட முடியும் என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எண்ணிப் பார்க்க வேண்டும். எனவே ஒரேமாதிரி கல்வியைக் கொண்ட பள்ளிகளைக் கொண்டுவர மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் சிந்திக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். ஒரே விதமான கல்விதான் அனைவருக்கும் புகட்டப்பட வேண்டும். வசதி வாய்ப்புகள் உள்ளவர்களுக்கு ஒரு கல்வி, வசதி இல்லாவர்களுக்கு ஒரு கல்வி கொடுப்பது நியாயம் இல்லை என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன். பல பேர் வாதிடலாம். அதிகமான கல்வி கொடுப்பதை ஏன் தடுக்க வேண்டும் என்று சொல்லலாம். எல்லோருக்கும் அதிகமான கல்வி கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டும். எல்லாக் குழந்தைகளுக்கும் சமமான அளவுக்கு இருக்க வேண்டும் என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன். ஏற்கெனவே ஒருமுறை குறிப்பிட்டேன். தமிழை போதனா மொழியாக வைத்து தமிழைக் கற்பிக்க வேண்டும் என்று கூறிய கொள்கையை

அரசாங்கம் ஏற்றுக்கொண்டிருக்கிறது. ஆனால் படிக்கின்ற காலத்திலே தமிழினை போதனா மொழியாகக் கொள்ளாமல், ஆங்கிலத்தினை போதனா மொழியாக ஏற்றுக்கொண்டவர்கள், தமிழிலே பரீட்சை எழுத விரும்பினால், அதற்கு அனுமதிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். கேள்வித் தாள் ஆங்கிலத்திலே இருந்தாலும், தமிழிலே கூட பரீட்சை எழுத ஏன் அனுமதிக்கக் கூடாது? இதை ஒரு 'அட்மினிஸ்ட்ரேடிவ் ஆர்டர்' மூலம் செய்ய முடியும். செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, இன்றையதினம் சமுதாயத்திலே தாழ்த்தப்பட்ட மக்களுக்கும், ஆதி திராவிட மக்களுக்கும், பழங்குடி மக்களுக்கும் இட ஒதுக்கீடு கல்வி நிலையங்களிலும், அரசாங்கத் துறைகளிலேயும் இருக்க வேண்டும் என்று அரசியல் சாசனத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது. 1950-லிருந்து இதுவரை அதை அமல்படுத்தி வருகிறோம். இன்றைக்கும் அரசியல் சாசனத்தின் ஒரு பிரிவின் அடிப்படையிலே, கல்வியின் மூலமாகவும், சமுதாயத்தின் மூலமாகவும் பின்தங்கிய மக்களுக்கு விசேஷமான சலுகைகளை அளிக்கலாம் என்று பல மாநிலங்கள் முயற்சிகள் மேற்கொண்டு வருகிறார்கள். தமிழகத்தில் பிற்பட்ட மக்களுக்கு 50 சதவீதம் இட ஒதுக்கீடு கொடுக்கப்பட்டு வருகின்ற இந்தக் காலகட்டத்தில் அம்பாசங்கர் தலைமையிலான, பிற்பட்டோர் நலக் குழு அறிக்கை தந்துவிட்டதாகவும், அது பிற்பட்டோர் நலனுக்கு விரோதமாக இருப்பதாகவும் பேசப்படுகிறது. அதை எங்களால் புரிந்துகொள்ள முடியவில்லை. பிற்பட்டோர் நலன் குறித்து இதற்கு முன்பு மண்டல் கமிஷன் சில பரிந்துரைகளைச் செய்திருக்கிறது. அதை மத்திய அரசு முழுமையாக ஏற்றுக்கொள்ளவில்லை என்று சொன்னாலும், முற்றிலும் அதை மறுக்கவும் இல்லை என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன். இதை அடிப்படையாக வைத்து பல மாநிலங்களில் பிற்பட்ட சமுதாய மக்களுக்கு இட ஒதுக்கீடு கல்வித் துறையிலும், அரசாங்கத் துறையிலும் கொடுக்க வேண்டும் என்று செய்திருக்கிறார்கள். குஜராத் மாநிலத்திலும், மத்தியப் பிரதேச மாநிலத்திலும் இதற்காக அரசாங்கங்கள் சட்டம் கொண்டுவந்தபோது இதற்கு கடுமையான எதிர்ப்பு கிளம்பியிருக்கிறது. யார் எதிர்க்கிறார்கள்? இதுவரை சமுதாயத்தில் வசதிகளை அனுபவித்துக்கொண்டிருந்தவர்கள் இதை எதிர்க்கிறார்கள். தமிழக அரசு பிற்பட்ட சமுதாயத்தினருக்கு 50 சதவீதம் வழங்குவதைப்போல, மத்திய அரசும் வழங்க முயற்சிகளை மேற்கொள்ளுமானால், நாங்களும் அதற்குத் துணையாக இருப்போம் என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன்.

இட ஒதுக்கீட்டை நீண்ட நெடுங்காலத்திற்கு இழுக்காமல், மிகக் குறுகிய காலத்திலே மிகத் திறமையாக நல்லமுறையிலே செயல்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று மனப்பூர்வமாகக் கேட்டுக்கொள்கிறேன்.



(பிற்பகல் 12 15)

அடுத்து, நிர்வாகம் பற்றி ஒன்றிரண்டு கூற விரும்புகிறேன். மாநில அளவிலும் சரி, மாவட்ட அளவிலும் சரி, அதிகாரிகளைக் காணச் சென்றால், அவர் மீட்டிங்கில் இருக்கிறார், மீட்டிங்கில் இருக்கிறார், என்று கூறுகிறார்களே தவிர, அவரைப் பார்க்கவே முடியவில்லை. எப்போதுமே அவர்கள் மீட்டிங்கில் இருந்தால், பின் நிர்வாகம் எப்படிக் கவனிக்கப்படுகிறது என்பதையே புரிந்து கொள்ள முடியவில்லை. எந்த நிர்வாகம் கவனிக்கப்படுகிறது என்று எங்களால் புரிந்துகொள்ள முடியவில்லை. எந்த இடத்திற்குப் போனாலும், எந்த அதிகாரியும் காலையில் இருந்து மாலை வரை போன் செய்தாலும் மீட்டிங்கில் இருக்கிறார் என்று சொல்கிறார்கள். அதுபோல் அமைச்சர்கள் சுற்றுப் பயணம் செய்கிற காலத்தில் மாவட்டத்திலே உள்ள அதிகாரிகள் எல்லாம் வந்து அமைச்சர்களுக்கு வரவேற்பு நிகழ்த்திவிட்டுப் போக வேண்டுமென்று சொன்னால்—நம்முடைய அமைச்சர்களின் எண்ணிக்கையைப் பார்க்கும் போது—அமைச்சர்கள் அடிக்கடி ஒவ்வொரு மாவட்டத்திற்கும் செல்வார்களேயானால், அந்த மாவட்ட நிர்வாகம் சீராக நடைபெறுவதற்குரிய வழிவகை இல்லை என்பதைத் தெரிந்து கொள்ளலாம். தயவுசெய்து அதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். யார் மீதும் குறை கூற வேண்டுமென்பதற்காக நான் இதைச் சொல்லவில்லை. நிர்வாகம் சீராக நடைபெற வேண்டுமென்ற நல்ல எண்ணத்திலேதான் கூற விரும்புகிறேன். சமீபத்திலே பொறுப் பேற்றிருக்கிற உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு. ப. உ. சண்முகம் அவர்கள் அவைக்கு வெளியிலே பேசியதாக செய்தித் தாளிலே பார்த்தேன். பல்வேறு திட்டங்களை ஊராட்சி ஒன்றியங்கள் நிறைவேற்றும்போது, அது சரியாக நிறைவேற்றப்படுகிறதா என்றால், இல்லை என்பதைக் குறிப்பிட விரும்பு கிறேன். அவைகள் தவறாகப் பயன்படுத்தப்பட்டிருக்கின்றன என்பதைச் சுட்டிக்காட்டி, அது விசாரிக்கப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். எல்லாத் துறையிலேயும் சரியாக தன்மையாகச் செயல்படவில்லை என்பதற்கு அது ஒரு எடுத்துக்காட்டு என்பதைத்தான் இங்கே நான் குறிப்பிட விரும்புகிறேன்.

உதாரணத்திற்கு, வறுமைக் கோட்டுக்குக் கீழே உள்ள மக்களுக்குச் செய்வது என்று சொன்னால், சில திட்டங்கள் வசதி இருப்பவர்களுக்குத்தான் பயன்படக்கூடும். உதாரணத்திற்குச் சொல்கிறேன்: பஸ் கட்டணம் உயருகிறது; ரயில் கட்டணம் உயருகிறது; சிமெண்ணெ விலை உயருகிறது: சினிமா கட்டணம் உயருகிறது என்று சொன்னால். இவைகளை எல்லாம் நினைத்துப் பார்க்க முடியாத நிலையில் மக்கள் சமுதாயத்திலே நிறைய பேர்கள் இருக்கிறார்கள் என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ரயிலிலே ஏறுவதற்கே அவசியமில்லாதவர்கள், பஸ்ஸிலே ஏறுவதற்கே அவசியம்

இல்லாதவர்கள், விளக்குக்கு ஒரு பாட்டில் கிரசினை வாங்கி எரியவிடக் கூடிய நிலையில் இல்லாதவர்கள்கூட இருக்கிறார்கள். அவர்களுக்குப் பயன்படக் கூடிய திட்டங்கள், வறுமை ஒழிப்புத் திட்டங்கள் என்று மத்திய அரசாங்கத்தின் மூலமாக, மாநில அரசாங்கமும் சேர்ந்து செயல்படக்கூடிய பல்வேறு திட்டங்கள் உருவாக்கப்பட்டு அமல்படுத்தப்பட்டு வருகின்றன. அந்தத் திட்டங்கள் ஆக்க ரீதியாக சரியான முறையிலே எந்த மக்களுக்குப் பயன்பட வேண்டுமோ அந்த மக்களுக்குப் பயன்படுகின்றனவா என்பதை அவ்வப்போது மானிட்டர் செய்து, ஆராய்ந்து, எவால்யுவேஷன் செய்து, அதைத் திருத்த வேண்டும். திருத்தி பயன்பட்டால்தான் பிரயோஜனமே தவிர இடையிலே இருப்பவர்களுக்குப் பயன்படுவதற்கும், அல்லது வசதி படைத்தவர்களுக்குப் பயன்படுவதற்கும் அல்ல. இது தமிழ்நாட்டிலே மட்டுமல்ல, மற்றப் பகுதிகளிலேயும் இருக்கிறது என்பதை நான் இங்கே சுட்டிக்காட்டக் கடமைப் பட்டிருக்கிறேன். நான் ஒரு புத்தகத்திலே படித்தேன். அது எப்படி இருக்கிறது என்று சொன்னால், ஒரு மேஜையின் மீது மரத் தூளையும், இரும்புத் தூளையும் வைத்து அதற்கு மேலே காந்த இரும்பை வைத்தோமேயானால், இரும்புத் தூள் காந்தத்திலே ஒட்டிக்கொள்கிறது ; மரத் தூள் அப்படியே நிற்கிறது. இங்கே அரசாங்கம் அளிக்கின்ற பல்வேறு திட்டங்களை வசதி படைத்தவர்கள் இரும்புத் தூளைப் போல் ஒட்டிப் பிடித்துக்கொள்கிறார்கள். ஆனால் ஏழையாக இருப்பவர்கள் மரத் தூளைப்போல் அந்த வசதிகளைப் பெற முடியாமல் இருக்கிறார்கள் என்பதை நான் நினைவுபடுத்த விரும்புகிறேன். எந்தத் திட்டங்களும் செம்மையாக நடைபெறுவதற்கு அரசாங்கம் தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்பதை நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

கடைசியாக, மத்திய அரசினுடைய வரவு செலவுத் திட்டத்தை இங்கே முழுமையாக விவாதிப்பதற்கு நியாயம் இல்லை என்று சொன்னாலும், பல காலக் கட்டங்களிலே அவைகளைப்பற்றி இங்கே குறிப்பிடப்பட்டிருக்கிறது. அது பொருத்தமென்று நான் நினைக்கிறேன். காரணம் என்னவென்றால், மத்திய அரசினுடைய வரவு செலவுத் திட்டம், நிதிநிலைக் கொள்கை மாநில அரசின் நிதியையும், மற்ற நடவடிக்கைகளையும் பாதிக்கின்ற காரணத்தினாலே, நாம் சொல்வதற்கு வாய்ப்பாக இருக்கிறது. மத்திய அரசு முதன் முதலாக தனியார் துறையிலே உள்ள ஒருவருடைய சில பிரச்சினைகளுக்குப் பரிகாரம் காண வேண்டுமென்று முயற்சி எடுத்துக்கொண்டது உண்மை. நாம் ஒரு சோஷியலிஸ்டு நாடாக கற்பனை செய்துகொள்ள வேண்டிய அவசியமில்லை. நம் நாடு கலப்புப் பொருளாதாரத்தை ஆரம்பத்திலே இருந்து மேற்கொண்டிருக்கிறது. தனியார் துறையும், பொதுத் துறையும் சேர்ந்து நாட்டிலே செல்வத்தை உண்டாக்க வேண்டும். பல ஐந்தாண்டுத் திட்டங்களைப்





பார்த்தோமேயானால் பொதுத் துறையிலே எந்த அளவுக்கு நாம் முதலீடு செய்கிறோமோ ஏறக்குறைய அதே அளவுக்கு முதலீட்டை தனியார் துறையிலே ஊக்குவித்து அதைச் செய்வதற்கு வழி வகைகளை அரசாங்கம் மேற்கொள்ள வேண்டும். எத்தனையோ காலத்திற்கு முன்பு ஏற்படுத்தப்பட்ட லைசென்சு முறைகளை, காலத்திற்கு ஒவ்வாத, பொருந்தாத முறைகளை நீக்குவதுதான் நல்லது. இதை பணக்காரர்களுக்குச் சலுகை அளிக்கிற வரவு செலவுத் திட்டமாகக் கருத வேண்டுமென்பது பொருத்தமாக இருக்காது என்றுதான் நான் குறிப்பிட விரும்புகிறேன். சில வரிச் சலுகைகள் கொடுக்கப் பட்டிருக்கின்றன என்பது உண்மை. வருமான வரியிலேயும் சரி. எஸ்டேட் வரியிலேயும் சரி, அது நீக்கப்பட்டிருக்கிறது அல்லது குறைக்கப்பட்டிருக்கிறது என்று சொன்னால், அது நம்முடைய பொருளாதாரத்தினுடைய அனுபவத்தை யொட்டிப் பார்க்கிறபோது, ஜெர்மன், ஜப்பான் போன்ற நாடுகளிலே வரி விகிதத்தைக் குறைப்பதன் மூலமாக அதிகப்படியான வருவாய் பெறுவதற்கு வாய்ப்பாக அமைந்திருக்கிறது என்பதைக் கருத்திலே கொண்டு பல காலமாக நாமும் அவ்வாறு முயற்சி எடுத்துச் செய்து வருகிறோம். இனிமேல் நிரந்தரமான ஒரு நிலையாக இருக்குமென்று யாரும் கருத வேண்டியதில்லை. தனியார் துறை சரியாக தங்களுடைய விளையாட்டை நாணயமாக நேர்மையாகச் செய்யவில்லை என்று சொன்னால், அதைத் திருத்துவதற்கு எந்தக் காலத்திலேயும் அரசாங்கத்திற்கு உரிமை இருக்கிறது, வலிவு இருக்கிறது என்பதை நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

(மாற்றுத் தலைவர் திருமதி வி. ஜெயலட்சுமி தலைமை)

(பிற்பகல் 12-20)

**திரு. க. சுப்பு :** தலைவர் அவர்களே, பொதுத் துறையைப் பொறுத்த வரையில், பிரதமர் இந்திரா காந்தி அவர்கள் இருக்கும்போது, ரூ. 1,80,000 கோடி ஒதுக்கப்பட்டது. இப்போது அது திடீரென்று ரூ. 1,40,000 கோடியாக குறைக்கப்பட்டதன் விளைவாக, பொதுத் துறைக்கு வழங்கப்பட்ட முக்கியத்துவம் இப்போது வழங்கப்படமாட்டாது என்றாகிவிட்டது. இந்த அடிப்படை மாற்றத்திற்கு மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் என்ன பதில் சொல்கிறார் என்று அறிய விரும்புகிறேன்.

**திரு. எம். பி. சுப்பிரமணியம் :** அத்தகைய சந்தேகம் உண்டாக வேண்டிய அவசியமில்லை. காரணம் இப்போதுள்ள பிரச்சினை செல்வம் பெருக வேண்டும், உற்பத்தி வேகம் அதிகரிக்க வேண்டும். சேமிப்பு பெருக வேண்டும். மூலதனம் அதிகரிக்க வேண்டும். அதன் மூலமாக வேலைவாய்ப்பு அதிகரிக்க வேண்டும். இந்தத் தனியார் துறையும் சேர்த்துச் செய்தால்தான், இலக்கை வேகமாக

(திரு. எம். பி. சுப்பிரமணியம்) [1985 ஏப்ரல் 11

அடைய முடியுமே தவிர, இல்லையென்றால் இயலாது. பொதுத் துறையின் கமாண்டிங் ஹைட் என்கிற கட்டுப்படுத்தும் அதிகாரத்தை இன்னும் மத்திய அரசு விட்டுவிடவில்லை என்பதையும் இந்தச் சந்தர்ப்பத்தில் குறிப்பிட விரும்புகிறேன்.

மத்திய அரசு ஏழைகளுடைய நல்வாழ்வுக்கான முறையில் அறிவித்துள்ள திட்டங்களையெல்லாம் மனதில் கொள்ளாமல் இது ஏதோ ஏழை மக்களுக்கு விரோதமான, பணக்காரர்களுக்குச் சாதகமான வரவு செலவுத் திட்டம் என்று சொல்வது அரசியலுக்குச் சாதகமான வாதமாக இருக்கலாமே தவிர, வேறு அல்ல.

**திரு. க. சுப்பு :** வேண்டுமென்றே அரசியல் ரீதியாக நான் எதையும் சொல்ல வில்லை. என்.ஆர்.ஈ.பி. என்கிற மத்திய அரசின் கிராமப்புற வேலைவாய்ப்புத் திட்டத்திற்கு ஏற்கெனவே ஒதுக்கப்பட்ட தொகையைவிட இப்போது குறைக்கப்பட்டிருக்கிறது. மத்திய அரசு சென்ற முறை ஒதுக்கியதைவிட, இந்த முறை குறைத்து ஒதுக்கியிருக்கிறது என்பதை குறிப்பிட விரும்புகிறேன்.

**திரு. எம். பி. சுப்பிரமணியம் :** தொகையின் அளவு குறைக்கப்படவில்லை என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன். பண வீக்கம் காரணமாக அல்லது விலைவாசி ஏற்றம் காரணமாக உண்மையான மதிப்பீடு குறையலாம். ஒன்றை நாம் புரிந்துகொள்ள வேண்டும். இந்தத் திட்டங்களெல்லாம் மத்திய அரசும் மாநில அரசுகளும் சமான விகிதாசார அடிப்படையில் பகிர்ந்து கொண்டு செய்ய வேண்டிய திட்டங்கள். 1985-86 ஆம் ஆண்டுத் திட்டமானாலும் சரி, ஏழாவது ஐந்தாண்டுத் திட்டமானாலும் சரி, ஒரு முழுமையான விவாதத்தை மாநில அரசே நடத்தவில்லை என்றால், அதன் இலக்கை—டார்கெட்டை—நிர்ணயிப்பது என்பது கடினம். அப்படி இலக்கை நிர்ணயம் செய்வதற்கான காலம் இன்னும் இருக்கிறது.

**திரு. க. சுப்பு :** தலைவர் அவர்களே, இது திட்டக் குழுவாலேயே இன்னும் தீர்மானிக்கப்பட முடியவில்லை. ரூபாய் 7,000 கோடியா இல்லையா என்பது இன்னும் தெளிவாகவில்லை. நாம் மட்டுமல்ல. எல்லா மாநிலங்களாலுமே முடியவில்லை. 'மணி வேல்யு' குறைந்துவிட்டது என்ற பொருளில் நான் சொல்லவில்லை. ஒரு ரூபாயின் மதிப்பு 60 காசிலிருந்து 17 காசாகக் குறைந் திருக்கிறது. நான் சொல்வதெல்லாம், ஏற்கெனவே ஒதுக்கப்பட்ட தொகையை விட இப்போது குறைக்கப்பட்டிருக்கிறது. அதற்கான புள்ளிவிவரங்கள் இருக்கின்றன.



1985 ஏப்ரல் 11]

**திரு. எம். பி. சுப்பிரமணியம் :** மாநிலங்கள் மத்திய அரசு ஒதுக்குவதற்குச் சமமாக "மாட்சிங்" ஆக செலவு செய்யத் தயாராக இல்லையென்றால், மத்திய அரசு மட்டும் செலவு செய்து பிரயோஜனமில்லை. செலவில் பாதி பாதி மத்திய அரசும் மாநில அரசும் ஏற்றுக்கொள்ள வேண்டும். தமிழ்நாடு அரசு அதற்குத் தயாராக இல்லை என்றால், மத்திய அரசு முழுமையாக ஒதுக்குவதையேகூட பயன்படுத்தவில்லை என்றால், பிரயோஜனமில்லை என்பதை நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

**திரு. க. சுப்பு :** நான் சொல்வது, சென்ட் பர்சென்ட் மத்திய அரசே பொறுப்பேற்றுக்கொள்கிற திட்டங்கள் இருக்கின்றன. அதைப்போலவே 50 சதவிகிதம், 50 சதவிகிதம் என்று இரண்டு அரசுகளும் பொறுப்பேற்றுக் கொள்கிற திட்டங்களும் இருக்கின்றன. அதாவது மேட்சிங் ஆகக் கொடுத்து செயல்படுத்தும் திட்டங்கள். நான் அவைகளைப்பற்றிக் குறிப்பிடவில்லை. சென்ட் பர்சென்ட் மத்திய அரசே பொறுப்பேற்று செயல்படுத்தும் திட்டங் களுக்கான தொகையே குறைக்கப்பட்டிருக்கிறது என்றுதான் நான் சொல்லுகிறேன்.

**திரு. எம். பி. சுப்பிரமணியம் :** நான் இந்தப் புள்ளிவிவரங்களுக்குள் அதிகமாகப் போக விரும்பவில்லை. அதுபற்றிய விவாதத்திற்குள்ளும் நான் போக விரும்பவில்லை. இருந்தாலும் இதற்காக ஒதுக்கப்படும் தொகை இன்னும் கூடுதலாக இருக்க வேண்டும் என்பதை மட்டும் வலியுறுத்த விரும்புகிறேன். மத்திய அரசானாலும் சரி, மாநில அரசானாலும் சரி, கோரிக்கை என்பது ஒன்றுதான்.

இந்த வரவு-செலவுத் திட்டத்தின் மூலமாக ஒரு குறிப்பிட்ட வருமான வரி விதிப்புக்குள் வருகிற சுமார் 10 லட்சம் பேர் விடுவிக்கப்பட்டிருக்கிறார்கள் என்கிற செய்தி சம்பளம் வாங்குகிற பல்வேறு தொழிலாளர்களுக்குப் பலன் அளிக்கிறது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அதைப்போலவே இந்த வரவு-செலவுத் திட்டத்தில் தரப்பட்ட வரிச் சலுகை மூலமாக பலன் அடையக்கூடியவர்கள் ஏறத்தாழ 2½ கோடி மக்கள் இருக்கிறார்கள். கடந்த பல ஆண்டுகளாக அமுலில் இருந்து வருகிற இன்னொன்றையும் நான் குறிப்பிட விரும்புகிறேன். அதாவது மத்திய அரசு பொது விநியோகத்தில் கொடுக்கிற அரிசி, கோதுமை போன்றவைகளுக்கு ஒரு கிலோவுக்கு எவ்வளவு மான்யம் கொடுக்கிறது என்பதையும் குறிப்பிட விரும்புகிறேன். ரேஷன் கடைகள் மூலமாகக் கொடுக்கிற அரிசி கிலோ ஒன்றுக்கு மத்திய அரசு 60 காசு மானியம் தருகிறது. கோதுமைக்கு கிலோ ஒன்றுக்கு 54 காசு மான்யம் தருகிறது. ரேஷன் துணி, ஸ்டேண்டர்ட் கிளாத்.

[திரு. எம். பி. சுப்பிரமணியம்] [1985 ஏப்ரல் 11

(பிற்பகல் 12-25)

ஒரு சதுர மீட்டருக்கு இரண்டு ரூபாய் மானியமாகக் கொடுக்கப்பட்டு வருகிறது. இதனால் ஏழையெளிய மக்கள் பயன் அடைகிறார்கள் என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன். இதற்கும் மேலாக கிராமத்திலுள்ள விவசாயிகளுக்கு நன்மை பயக்க வேண்டும் என்பதற்காக 50 கிலோ கொண்ட உர மூட்டை ஒன்றுக்கு 50 ரூபாய் மானியம் கொடுக்கப்படுகிறது என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன். இதற்கும் மேலாக தொழிலாளர்களுடைய நலனை உத்தேசித்து, ஏற்கெனவே 8.33 சதவீதத்திலிருந்து 20 சதவீதம் வரையில் 750 ரூபாய் சம்பளம் இருப்பவர்கள் மாத்திரம் முழுமையாகப் பெறுவதற்கும் அதற்கு மேல் சம்பளம் பெறுகிறவர்கள் 750 ரூபாய் மட்டும் வாங்க வேண்டும் என்ற நிலையை மாற்றி, மாதம் ஒன்றுக்கு 1,600 ரூபாய் சம்பளம் வாங்கினாலும், அதற்குரிய முழு போனசையும் பெற வழிவகை செய்யப்பட்டிருக்கிறது என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன்.

கிராஜூவட்டியைப் பொறுத்தவரையில், ஐம்பதாயிரம் ரூபாய் வாங்கினாலும், அதற்கு வரி விலக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது. இவைகளையெல்லாம் பார்க்கும் போது, ஏழைகளுக்கு விரோதமான அரசு, பணக்காரர்களுக்குச் சாதகமான அரசு, திருமதி இந்திரா காந்தி அவர்களுடைய கொள்கையிலிருந்து மாறி விட்டார்கள், தவறிவிட்டார்கள் என்பது எல்லாம் அரசியலுக்காகப் பேசப்படுவதே தவிர உண்மையானது அல்ல என்பதை இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

இன்றையதினம் 20 அம்சத் திட்டமாக இருந்தாலும், வேறு எந்தத் திட்டமாக இருந்தாலும், கூடுமான வரையில் நலிந்தவர்களுக்குச் சில பலன்கள் கொடுக்க வேண்டும் என்ற நல்லெண்ணத்தோடு தீட்டினாலும், அதை அமுல் படுத்துகிற பொறுப்பு மாநில அரசின் கையில் இருப்பதால், அதன் வெற்றி, தோல்வி இந்த மாநில அரசின் கையில்தான் இருக்கிறது, மத்திய அரசாங்கத்தின் கையில் இல்லை என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன்.

பெட்ரோலுக்கு விலை ஏற்றியதால், மண்ணெண்ணெய் விலை உயர்கிறது, பஸ் கட்டணம் உயர்கிறது, ஆட்டோ கட்டணம் உயர்கிறது என்ற குறைபாடு இருக்கிறது என்பதை நான் உணர்கிறேன். ஆனால் இதிலே ஒன்றைப் பார்க்க வேண்டும். ஏற்கெனவே நாம் குரூட் ஆயில் வாங்கிய நாடுகளுக்கு, ஆயிரம் கோடி ரூபாய் கூடுதலாகக் கொடுக்க வேண்டியிருக்கிறது. அந்த நாடுகளில் டாலருக்கு மதிப்பு உயர்ந்து, நம்முடைய ரூபாய்க்கு மதிப்பு குறைந்து விட்டதால், இப்படி கூடுதலாகக் கொடுக்க வேண்டியிருக்கிறது. இந்த ஆயிரம் கோடியைக் கொடுக்காமல், அதற்கேற்றவாறு பெட்ரோலைக் குறைத்து



1985 ஏப்ரல் 11] [திரு. எம். பி. சுப்பிரமணியம்]

வாங்கலாம் என்றால், பிறகு பெட்ரோல் பற்றாக்குறை ஏற்படும். அல்லது இந்தப் பணத்தை பொது நிதியிலிருந்து கொடுக்கலாம் என்றால், இதை வாங்காதவர்கள் மீது சுமத்த வேண்டிய நிலை ஏற்படுகிறது. அது நியாயம் இல்லை என்பதால்தான், பெட்ரோலை யார் உபயோகிக்கிறார்களோ அவர்களிடம் வசூலிக்க வேண்டும் என்ற முறையில்—ஏரோபிளேனில் பயணம் செய்பவர்கள்தான் அதற்குரிய கட்டணத்தை கொடுக்க வேண்டும், பஸ்ஸில் பயணம் செய்பவர்கள்தான் பஸ் கட்டணத்தைக் கொடுக்க வேண்டும்—மற்றவர்கள் தலையில் அதைச் சுமத்துவது நியாயம் அல்ல என்ற முறையில், இந்த வரி உயர்த்தப்பட்டிருக்கிறது என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன்.

பொதுவாகச் சொல்ல வேண்டும் என்றால், இந்த வரவு-செலவுத் திட்டத்திலே குறிப்பிட்டிருப்பது போல பழைய திட்டங்களுக்கு, ஸ்பில்-ஓவர் திட்டங்களுக்கு, மிகவும் புதுத் திட்டங்களுக்கு கால்கோள் விழா நடவும், 1985-86 ஆம ஆண்டுக்கு கர்நாடகா முதலமைச்சர் அவர்கள் சொன்னதைப் போல இந்த அரசும் "ஹாலிடே" கொடுத்துவிட்டதோ என்று கேட்டு என்னுடைய வார்த்தைகளை முடித்துக்கொள்கிறேன்.

(மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் தலைமை)

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, 1985-86 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையின்மீது நடைபெற்ற பொது விவாதத்தில் இந்த அவையைச் சேர்ந்த பல்வேறு உறுப்பினர்கள் கலந்துகொண்டு தங்கள் தங்கள் கருத்துக்களைத் தெரிவித்திருக்கிறார்கள். நிதிநிலை அறிக்கையை உள்ளன்போடு, உவகை பெருக்கோடு வரவேற்று, தங்களுடைய ஆதரவையும், ஒத்துழைப்பையும் நல்க முன்வந்துள்ள உறுப்பினர்கள் அத்தனை பேருக்கும் என்னுடைய நன்றியை முதற்கண் தெரிவித்துக்கொள்வதிலே பூரிப்படைகிறேன்.

இந்த நிதிநிலை அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள கொள்கைகள், கோரிக்கைகள், திட்டங்கள் மற்றவற்றை முழுவதும் ஏற்றுக்கொள்ள முடியா விட்டாலும், அவரவர்களுடைய கொள்கைக்கேற்ப ஏற்றுக்கொண்டு இந்த மாநிலம் மேலும் வளரவும், பெரும் நன்மைகள் எய்தவும், மக்களுடைய வாழ்க்கைத் தரம் உயரவும் பல்வேறு சீரிய பரிந்துரைகளை எடுத்துச் சொல்லி யிருப்பதற்காகவும் உள்ளபடியே உள்ள சில குறைபாடுகளைச் சுட்டிக்காட்டி அந்தக் குறைபாடுகள் நீங்க வேண்டும் என்று சொல்லி, சில மட்டங்களில் நடைபெறுகிற குற்றங்களைச் சுட்டிக்காட்டி, அந்தக் குற்றங்கள் களையப்பட

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1985 ஏப்ரல் 11

வேண்டும் என்றும் மாண்புமிகு உறுப்பினர்கள் கருத்துக்களை எடுத்துத் தெரிவித்து அரசினுடைய ஆக்கப் பணிகளுக்கு உதவிகரமாக இருப்பவர்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்ள நான் கடமைப்பட்டிருக்கிறேன். இந்த நிதிநிலை அறிக்கையில் 1985-86 ஆம் ஆண்டிற்கான

(பிற்பகல் 12-30)

தன்மைகளை எடுத்துச்சொல்கின்றபோது, நமக்குக் கிடைக்கின்ற நிதி ஆதாரங்கள், நிதி வசதிகள் ஆகியவற்றை அடிப்படையாக வைத்து, ஏற்கெனவே நடைபெற்றுக்கொண்டிருக்கின்ற, நடைபெற்று வருகின்ற குறிக்கோள்களை நாம் நிறைவேற்ற வேண்டியவர்களாக இருக்கிறோம் என்பது மட்டுமல்ல, புதிய திட்டங்கள் தீட்டி அவற்றை நடைமுறைக்குக் கொண்டு வருவதன் மூலம் நாம் மக்களுடைய தேவைகளை நிறைவேற்றுவதிலேயும் ஈடுபட்டுக்கொண்டிருக்கின்றவர்களாக இருக்கிறோம். அந்த வகையிலே உறுப்பினர்கள் பலரும் தங்களுடைய கருத்துக்கள் பலவற்றை இங்கே எடுத்துத் தெரிவித்திருக்கின்றார்கள். இந்த நிதிநிலை அறிக்கையிலே நான் குறிப்பிட்டிருப்பதே வேறு. மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்கள் பேசுகின்றபோது கூட சொன்னார்கள். திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே நடைபெற்ற பல்வேறு சீரிய பணிகளைப்பற்றி இங்கே எடுத்துச் சொல்லியிருப்பது மட்டுமல்லாமல், அதிலே நடைபெற்ற பணிகளைப்பற்றி நான் எழுதிய கட்டுரைக் குறிப்புக்களையும் இங்கே வைத்து எடுத்துச் சொன்னார்கள். அவற்றிலிருந்து கடுகளவும் நான் மாறவில்லை. அந்தக் கருத்திலே நான் வேறுபடுவதும் இல்லை. அது 'ஸ்டேட்மென்ட் ஆஃப் பேக்ட்'. அபிப்பிராயங்களை, கொள்கைகளை அறிவித்திருக்கின்ற நிலைமைகளை எடுத்துச் சொன்னேன். நிதிநிலை அறிக்கைகளிலே, 1984 ஆம் ஆண்டுக்கும் அதற்கு முன்னாலும் நடைபெற்றவைகளைப் பற்றியும், அப்போது மேற்கொள்ளப்பட்ட திட்டங்கள், கட்டுப்பாடுகள் என்னென்ன என்பதைப்பற்றியும், அவற்றை எந்த அளவுக்கு முடித்திருக்கிறோம், எந்த அளவுக்கு முடிக்க இருக்கிறோம் என்பதையும், வருங்காலத்தில், 1985-86-லே எடுத்துக்கொள்ள இருக்கின்ற திட்டங்கள் என்னென்ன என்பதைப்பற்றியும் எடுத்துச் சொல்கிறோம். ஏழாவது ஐந்தாண்டுத் திட்டம் முழுவதும் திட்டமிடப்பட்டு முழுமை பெற்ற பிறகு, நாம் இங்கே இருக்கின்ற திட்டங்கள், சிலபல திட்டங்கள் எப்படி இருக்கும் என்று கோடிட்டுக் காட்டி இருக்கின்றேனே தவிர, அதற்கு முன்னால் நடைபெற்ற காங்கிரஸ் ஆட்சி செய்யவில்லை என்றோ, அதற்குப் பிறகு இருந்த திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி செய்யவில்லை என்றோ, சொல்லவில்லை என்பதை நான் இங்கே குறிப்பிடுகிறேன். நிர்வாகத்தைப் பொறுத்தவரையில்,



1985 ஏப்ரல் 11] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

வெள்ளைக்காரன் ஆட்சி இருந்து, பிறகு காங்கிரஸ் ஆட்சி வந்து, அதற்குப் பிறகு திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி வந்து, அதற்குப் பிறகு அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியும் அமைந்து தொடர்ந்து பணிகளை ஆற்றி வருகின்றன என்பதைத்தான் நான் பல இடங்களில் எடுத்துச் சொல்லி வருகிறேன். வெள்ளைக்காரர்கள் ஆண்டபோதுகூட, முக்கியமாக சென்னை மாநிலம், பம்பாய் மாநிலம், வங்க மாநிலம் ஆகிய மாநிலங்களில் அட்மினிஸ்ட்ரேஷனைச் சிறப்பாக நடத்திக்கொண்டிருந்தார்கள். அப்போது பெஸ்ட் அட்மினிஸ்ட்ரேஷனாகப் பார்க்கும்போது, மிகச் சிறந்த நிர்வாகமாக இருந்தது சென்னை மாநிலம்தான். அந்த நேரத்திலேயிருந்து வந்திருக்கின்ற ஆட்சிகள் தொடர்ந்து பணிகளை, திட்டங்களை நடைமுறைப்படுத்தி வந்திருக்கின்றன என்பதைக் குறிப்பிட்டுச் சொல்கிறேனே தவிர வேறல்ல. ஏற்கெனவே நடைபெறவில்லை, இப்போது நடைபெறுகிறது என்று நான் எப்போதும் குறிப்பிடவில்லை. அதற்கு நான் பதில் சொல்லவேண்டிய அவசியம் ஏற்படாது என்று நினைக்கிறேன். இந்த பட்ஜெட்டிலே இந்த அவையிலே எதுவுமே இல்லை என்று சொல்கின்றார்கள். அதிலே என்னென்ன நடைபெற்றிருக்கின்றது என்பதை நான் சுட்டிக்காட்ட வேண்டிய அவசியத்தில் இருக்கின்றேன். ஏற்கெனவே எதுவுமே நடைபெறவில்லை என்று சொல்லவில்லை. வெள்ளைக்காரன் ஆட்சிக் காலத்தில் செய்திருக்கின்றார்கள். காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில் செய்திருக்கின்றார்கள். அதற்குப் பிறகு வந்த திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் செய்திருக்கின்றார்கள். அன்றைக்குக் கிடைத்த வாய்ப்பு வசதிகளை வைத்து அவர்கள் பணியாற்றியிருக்கின்றார்கள். அது தொடர்ந்து நடைபெற்றுக்கொண்டிருக்கின்றது என்பதை நான் எடுத்துச்சொல்கிறேன். ஏற்கெனவே இருக்கின்ற நிலைமைகள் குறைபாடு உடையன, எங்களுடைய பட்ஜெட்டிலே இருப்பதுதான் சரி என்று சொல்ல வரவில்லை. என்னைப் பொறுத்தவரையில், நான் அப்படிக் குறை சொல்லவில்லை. பதில் சொல்லும் போதும் சரி, நான் அப்படிச் சொன்னதில்லை. இருக்கின்ற நிலைமைகளைப் பார்க்கும்போது, நாம் நல்ல வளர்ச்சி பெற்று வந்திருக்கிறோம். நம்மால் முடிந்த அளவுக்கு நாம் காரியங்களைச் செய்து வந்திருக்கிறோம். நாம் செய்ய நினைத்தவைகளை எல்லாம், முழுவதையும் செய்ய முடியாததற்குக் காரணம்; நாம் இங்கே கட்டுப்படுத்தப்பட்டிருக்கிறோம் என்று சொல்கிறேன். கட்டுப்படுத்தப்பட்டிருப்பதற்குக் காரணம் நம்மிடம் அதிகாரங்கள் இல்லை. போதிய அளவுக்கு இல்லை.

(பிற்பகல் 12-35)

இந்த நிதி ஆதாரங்களைப் பெறுவதற்கு, நிதி ஆதாரங்களைச் சேர்ப்பதற்கு நம்மிடம் அதிகாரங்கள் இல்லை. பெரும்பகுதி நிதி ஆதாரங்கள் சேருமிடம் மத்திய அரசாக இருக்கும் முறையில் இன்றைக்குள்ள அரசியலமைப்புச் சட்டம்

அமைந்திருக்கிறது. இவைகளில் மாற்றங்கள் ஏற்படுமானால், அவைகள் மூலமாக இந்த மாநிலம் இன்னும் சிறந்த நிலைமைக்குப் போகக்கூடும் என்பதற்கான காரண காரிய விளக்கங்களை எடுத்துக் கூறியிருக்கிறோம். அதைப் பொறுத்து திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும் எந்த வேறுபாடுமில்லை. தொடர்ந்து அந்தக் கருத்தைக் கொண்டு வந்திருக்கிறோம். அவர்கள் ஒன்றைச் சுட்டிக் காட்டும்போது, மாநில சுயாட்சி, மாநில தன்னாட்சி என்றெல்லாம் வரும்போது, அதுபற்றிய நிலைமைகளை எல்லாம் பேரவையிலே மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்கள் சுட்டிக் காட்டினார்கள். இன்றும் இங்கே சுட்டிக் காட்டினார்கள். ஆக, அதிலே ஏற்படும் தன்மையைப் பார்க்கும்போது, தமிழ்நாடு தன்னாட்சி பெற வேண்டுமென்று சொல்வது வேறு, மாநில சுயாட்சி பெறவேண்டுமென்று சொல்வது வேறு. மாநிலம் என்று தமிழ்நாடு சேர்ந்த பிறகு, பிரிவினை என்று சொல்லக்கூடாது, அதற்கு இடம் கிடையாது. தமிழ்நாடு தன்னாட்சி பெற வேண்டுமென்று சொல்லும்போது, இன்டிபென்டன்ட் ஸ்டேட் என்று பொருள். சுயாட்சி என்றால் பிரித்துக் கொண்டு போகிறது என்று பொருள். ஆனால் மாநில சுயாட்சி என்ற தன்மையில் பார்க்கும்போது, கூட்டாட்சி என்ற அமைப்பின்கீழ் இருப்பதால், அதில் தவறில்லை. அதிலே முதலில் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களுக்கு ஐயப்பாடு இருந்தது. அந்த அடிப்படையில் அவர்கள் கருத்துக்களை எடுத்துச் சொன்னார்கள். சுயாட்சி என்று சொல்லும்போது, அதில் பிரிவினையைக் குறிப்பிடுவதாக இருக்கக்கூடாது என்று கருதப்பட்டது. தன்னாட்சி வேண்டுமென்றால், அது பிரிவினையைக் குறிக்கும். மாநில சுயாட்சி என்று சொல்லும்போது, மாநிலத்திற்கு அதிக அதிகாரம் கொடுக்கும் உரிமையைக் கேட்கும் ஒன்று அது என்று தெளிவுபடுத்திய பிறகு, ஒப்புக்கொண்டார்கள். அண்ணா அவர்கள் சுயாட்சி என்ற தன்மையைத் தொடர்ந்து சொல்லியிருக்கிறார்கள். நான் அதைச் சேர்த்திருக்கிறேன் என்றாலும், மாண்புமிகு முதல்வரவர்களுடைய ஒப்புதலோடுதான் சேர்த்திருக்கிறேன். அவர்களும் அதை ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள் என்பதைத் தெளிவுபடுத்த விரும்புகிறேன். இதனை ஐயப்பாட்டுக்கு இடமில்லாமல் தெளிவாக வைக்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். பி. சுப்பிரமணியம் அவர்கள் எதற்கு அதிக அதிகாரம், இருக்கும் அதிகாரம் போதாதா என்று கேட்கிறார்கள். தப்பித் தவறி மத்திய அரசு அதிக அதிகாரங்களைக் கொடுக்க முன்வந்தாலும், அதை வேண்டாமென்று சொல்லி விடுவார்களோ என்ற எண்ணம் ஏற்படுகிறது. நாங்கள் இல்லை, அவர்களே வந்து ஆட்சியில் உட்காருவதாக வைத்துக் கொள்வோம். அப்போது அதிக அதிகாரங்கள் வேண்டாமா? மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். பி. சுப்பிரமணியம் அவர்கள் நம்மோடு இருக்கும்போது கேட்டார் . . . (சிரிப்பு)



**திரு. எம். பி. சுப்பிரமணியம் :** மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் தேவையில்லை என்று நான் சொல்லவில்லை. இன்னும் ஒரு படி கீழே போய், கீழே உள்ளவர்களுக்கும் அதிகாரம் தேவை என்றுதான் சொல்கிறேன். காங்கிரஸ் கட்சி ஆளும் மாநிலங்கள்கூட அதிக அதிகாரம் கேட்கின்றன என்று குறிப்பிட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** எதற்கு அதிக அதிகாரம், என் அதிகாரம் என்று கேட்டதால், இந்த விளக்கம் வந்தது. கட்சிக் கருத்தின் அடிப்படையில் பார்க்கப்படவில்லை. மேற்கு வங்கத்தை ஆண்ட டாக்டர் பி. சி. ராய் அவர்களே பல தடவை இதை வற்புறுத்தியிருக்கிறார்கள். நம்முடைய மாநிலம் மத்திய-மாநில அரசுகளின் உறவைக் காப்பாற்ற வேண்டுமென்று சொல்லி, ஒரு பெருந்தன்மையின் அடிப்படையில் வேறுபாடு; மாச்சரியங்கள், குறைபாடுகள் இருந்தாலும், அந்த உறவு கெடாமல் இருக்க வேண்டுமென்ற கருத்தின் அடிப்படையில், திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியும், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியும் நடைபெற்றுக் கொண்டு வந்துள்ளது. ஆனால் மேற்கு வங்கத்தில் காங்கிரஸ் கட்சி ஆட்சி இருந்தபோது, திரு. பி. சி. ராய் அவர்கள் இந்திய விடுதலை நாளைக் கொண்டாட மாட்டேன் என்று சொன்னார். திரு. சஞ்சீவி ரெட்டி அவர்களும் இதை வற்புறுத்தியிருக்கிறார்கள். எதற்காகச் சொல்ல வருகிறேன் என்றால், கட்சியின் அடிப்படையில் இல்லை. பண்டித ஜவஹர்லால் நேரு அவர்கள் அரசியல் அமைப்புச் சட்டத்தை உருவாக்குவதற்காக குழுவை அமைத்து, பாராளுமன்றத்திலே உரையாற்றும்போது, எந்த நோக்கத்திற்காக இது அமைக்கப்படுகிறது, எந்த நோக்கத்தை அது நிறைவேற்றித் தர இருக்கிறதென்று தெரிவிக்கப் பேசியிருக்கிறார்கள்.

(பிற்பகல் 12-40)

அதிலே சொல்கிறபோது, மாநிலங்கள் முழு சுயாட்சித் தன்மை பெறும் அளவுக்கு அதிகாரங்கள் இருக்க வேண்டுமென்று சொன்னார்கள். அதாவது மிச்சப்பட்ட அதிகாரங்கள் அனைத்தும் மாநிலங்களின் கையில் இருக்க வேண்டுமென்ற முறையில். பண்டித நேரு அவர்கள் அன்றைக்கு அதனைத் துவக்கி வைத்துப் பேசினார்கள். அவர் அன்றைக்குச் சொன்ன கருத்துக்கும் பிறகு சுதந்திரம் வந்து அரசியல் அமைப்புச் சட்டம் ஏற்பட்டதற்குப் பிறகு சொன்ன கருத்துக்கும் எவ்வளவு வேறுபாடு தெரிந்தது. இந்திய யூனியன் ஆகி, இந்திய யூனியனின் அரசியல் அமைப்புச் சட்டத்திற்குத் தலைவராக டாக்டர் அம்பேத்கார் அவர்களை நியமித்திருந்தார்கள். அதற்குப் பிறகு, சுதந்திரம் ஏற்பட்டதற்குப் பிறகு, நாட்டில் பல்வேறு சூழ்நிலைகள் நிலவின. பாகிஸ்தான் பிரிக்கப்பட்டபோது ஏற்பட்ட பிரச்சினைகள், வங்காளப் பிரச்சினை இன்னும்

உள்நாட்டில் நிலையற்ற தன்மை போன்ற பிரச்சினைகள் எல்லாம் ஏற்பட்டதால்தான், டாக்டர் அம்பேத்கார் அவர்களே கூட இதற்கு ஆதரவாக இருக்க வேண்டிய அளவுக்கு நிலைமை இருந்தது. மத்திய அரசாக இருந்தாலும் சரி அல்லது மாநில அரசாக இருந்தாலும் சரி, இங்குள்ள அனைவருக்கும் சேர்த்துத்தான் இரண்டு அரசுகளும் இருக்கின்றன. இரண்டு அரசுகளும் இங்குள்ள மக்கள் அனைவருக்கும் சொந்தம்தான். தமிழக அரசில் மக்களுக்கு எவ்வளவு உரிமை இருக்கிறதோ அதே அளவு மத்திய அரசிலும் மக்களுக்கு உரிமை இருக்கிறது. ஆனால் பங்கீடு முறை மூலம் ஏற்படுகிற கால தாமதத்தின் காரணமாக, செய்ய வேண்டிய காலத்தில் அல்லது செய்ய வேண்டியவர்கள் திட்டங்களை நிறைவேற்ற முடியாமல் போய்விடுகிறது. அதிகாரங்கள் பரவலாக ஆக்கப்படுவதன் மூலம், அந்தந்த மாநிலங்கள் தங்களுக்குத் தேவையான நிதி ஆதாரங்களை தாங்களே திரட்டி, அதன் அடிப்படையில் திட்டங்களை நிறைவேற்றும் அளவில் செயல்பட முடியும். இப்போது தினசரி இரண்டு அல்லது 3 அதிகாரிகள் டில்லிக்குப் போகும் நிலை இருக்கிறது. டெல்லிக்குப் போய் பேச வேண்டியது, அப்படியே திரும்ப வேண்டியது. நாள்தோறும் இரண்டு, மூன்று இடங்கள் விமானத்தில் இதற்காக ரிசர்வ் பண்ணி வைக்க வேண்டிய நிலை ஏற்பட்டிருக்கிறது. இப்படி எல்லாம் நமக்குப் பலவிதமான சிரமங்கள் இருக்கின்றன. ஆனால் டெல்லிக்குப் பக்கத்தில் இருக்கிற அரியானா, பீகார், உத்தரப் பிரதேசம் போன்ற மாநிலங்களை எடுத்துக்கொண்டால், அவர்கள் எல்லாம் அடிக்கடி போய் சாதித்து வருகிற நிலை இருக்கிறது. தென் மாநிலங்களில் இருப்பவர்களுக்கு அம்மாதிரி நிலை இல்லை. ஆகவேதான் இதில் அவசியம் ஒரு மாற்றம் தேவை. மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் இங்கே ஒன்றைச் சொன்னார். மாவட்ட அளவிலும், ஊராட்சி ஒன்றிய அளவிலும், மன்றங்கள் அளவிலும் அதிகாரங்கள் பரவலாக்கப்பட வேண்டுமென்று குறிப்பிட்டார். அதில் நமக்கு மாறுபாடான கருத்து இல்லை. அதை நடைமுறைப்படுத்தினால், நம்முடைய ஊராட்சி ஒன்றியங்கள், பஞ்சாயத்துக்கள் எல்லாம் செம்மையாகச் செயல்படும் நிலை ஏற்படும். அந்த வகையில் நாம் அனைவரும் சேர்ந்து சில பல அதிகாரங்களைப் பிரித்துக் கொடுப்பதில் கூட ஆட்சேபனை இல்லை. அப்படிக் கொடுப்பதன் மூலம் காலதாமதம் இல்லாமல் காரியங்களைச் செய்யும் வகையில் முழுப் பொறுப்பையும் அவர்களிடத்தில் ஒப்படைக்கலாம். அதில் வருகின்ற சாதக பாதகங்களை அவர்களேதான் அனுபவிக்க வேண்டும் என்கிற முறையில் அதை அவர்களிடத்தில் ஒப்படைப்பதில் கூட தவறில்லை. அதிகாரங்களைப் பரவலாக்குவதன் மூலம், உரிமை அளிப்பதன் மூலம், நிதி ஆதாரங்களைப் பெருக்கிக் கொள்வதற்கான வாய்ப்பு நல்குவதன் மூலம் மத்தியிலுள்ள அரசின் வலு குறைந்துவிடும் என்கிற வாதத்திற்குப் பொருளில்லை. காரணம் இன்



றைக்கு உலகத்திலே வலிமையான நாடுகள் இரண்டு இருக்கின்றன. ஒன்று அமெரிக்கா, இன்னொன்று ரஷ்யா. அமெரிக்கா முதலாளித்துவ நாடு, ரஷ்யா பொதுவுடைமை நாடு. "யுனைட்டெட் ஸ்டேட்ஸ் ஆப் அமெரிக்கா" என்றால் பல ஸ்டேட்டுகள் ஒன்றாகச் சேர்க்கப்பட்ட ஒரு பெடரேஷன் என்று பொருள். அதுபோல் 'யூனியன் ஆப் சோவியத் சோஷலிஸ்ட் ரிப்பப்ளிக்' என்றால் 16, 17 ரிப்பப்ளிக்குகள் ஒன்றாகச் சேர்ந்து இருக்கின்றன என்று பொருள். இன்னும் சொல்லப்போனால், இந்த ரிப்பப்ளிக்குகள் சோவியத் நாட்டிலிருந்து பிரிந்து போகும் உரிமை கூட கொடுக்கப்பட்டிருக்கிறது. அதன் அடிப்படையில் பின்லாந்த் என்ற ரிப்பப்ளிக் பிரிந்து போய், அவர்கள் தனியாக வாழ முடியாது என்ற நிலையில் மறுபடியும் ரஷ்யாவுடன் அந்த நாடு சேர்ந்துவிட்டது. அந்த வகையில் இன்றைக்கு ரஷ்யா வலு குறைந்த நாடல்ல. ரஷ்யாவின் வலிமை இன்றைக்கு பாராட்டும் அளவுக்கு இருக்கிறது. அதன் தலைமை நல்ல வலிமையில் இருக்கிறது. இன்றைக்கு அந்த நாடு முழு மொழி உரிமை, முழு மாநில உரிமை, நிதி வாயில்களைத் திரட்ட முழு உரிமை, தொழிலை வளர்க்க முழு உரிமை இப்படி எல்லாம் முழு உரிமையை அளித்திருக்கிறது. ஆனால் பாதுகாப்பைப் பொறுத்தவரையில் மட்டும், அதன் பொறுப்பு மத்தியில் இருக்கிறது.

(பிற்பகல் 12-15)

அதனுடைய வெளி விவகாரம், வெளிநாட்டுத் தொடர்பு மற்றவர்களிடம் இருக்கிறது. ஆனால் ரஷ்யா இன்னும் ஒரு படி மேலேயே போயிருக்கிறது. ஒரு ரிப்பப்ளிக் தன்னுடைய உறுப்பினரையும் அனுப்பி வைக்கலாம். தனக்குக் கீழே இருக்கிற ரிப்பப்ளிக் தன்னுடைய உறுப்பினரையே அனுப்பி வைக்கலாம் என்று வைத்திருக்கிறார்கள். அப்படிப்பட்ட ரஷ்யாவும் இதைக் காப்பாற்றுகிறது. அமெரிக்காவானாலும் அதை காப்பாற்றுகிறது. ஆகவே மாநிலங்களுக்கு . . . . .

திரு. எம். பி. சுப்பிரமணியம் : சோவியத் நாட்டை உதாரணமாகக் காட்டுகிறார்கள். அவர்களது பொது மொழி ரஷ்ய மொழி. அதைத்தான் அவர்கள் பெரும்பாலும் பயன்படுத்துகிறார்கள். அப்படி இந்தியாவிலும் ஒரு பொது மொழியாக இந்தியை ஏற்றுக்கொள்ள நீங்கள் தயாராக இருக்கிறீர்களா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இன்றைக்கு ரஷ்யாவில் இருநூற்றுச் சில்லறை மொழிகள் இருக்கின்றன. அதிலே ஒப்புக்கொள்ளப்பட்ட மொழிகள் நூற்றுச் சில்லறை மொழிகள்தான். புத்தகங்கள் வெளியிடும்போது, அந்த மொழியில்தான் வெளியிடுகிறார்கள். அதைக்கூட அவர்கள் 23 மொழிகளில் தான் வெளியிடுகிறார்கள். ரஷ்ய மொழி என்பது எல்லோராலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட மொழியாக இருக்கிறது. காரணம், இருக்கிற அத்தனை

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1985 ஏப்ரல் 11

மொழிகளிலும், அதிகமாகப் பேசப்படுகிற மொழி ரஷ்ய மொழிதான். விஞ்ஞானத்தை வளர்க்கவும், வெளித் தொடர்பு கொள்ளவும், இலக்கியத்தை வளர்த்த மொழியாகவும், ஒரு நாட்டின் பொது மொழியாக, ஆட்சி மொழியாக, மக்களே ஒருவருக்கொருவர் தொடர்பு கொள்ளும் மொழியாக ரஷ்ய மொழிதான் இருந்து வருகிறது. அப்படிப்பட்ட ஒரு மொழி இந்தியாவில் இருக்கிறது என்று சொன்னால், அரசியல் நிர்ணய சபையில் ஒருமுறை நமது கண்ணியத்திற்குரிய காயிதே மில்லத் முகமது இஸ்மாயில் அவர்கள் பேசுகிறபோது, இந்தியாவிலேயே வலுவான மொழி, பண்பாடு காக்கிற மொழி, சிறந்த தொடர்புடைய மொழி, பொது மொழி என்ற ஒன்று இருக்க வேண்டுமென்றால், அது என்னுடைய தாய் மொழி தமிழ் ஆகத்தான் இருக்க வேண்டுமென்று அங்கே சொன்னதுதான் நினைவுக்கு வருகிறது. இந்தியை நாம் ஏற்றுக்கொள்ளாமல் இருப்பதற்குக் காரணம், இதுதான். ரஷ்ய மொழியை அவர்கள் பெருவாரியாக ஏற்றுக்கொள்வதற்குக் காரணம், அது அதிகத் தொடர்பு உள்ள மொழியாக இருப்பதுதான். அதே அளவுக்கு அவர்கள் ஆங்கிலத்திலும் தொடர்பு கொண்டு, வெளி விவகாரங்களைக் கவனிக்கிறார்கள். இன்றைக்கு ஆங்கிலம் நமக்கு எப்படித் தேவைப்படுகிறதோ, அப்படி அவர்களுக்கும் ஆங்கிலம் தேவைப் படுகிறது.

தமிழை மட்டும் வைத்துக்கொண்டு தமிழ்நாடு வாழும் என்று நான் சொல்ல வரவில்லை. நலத் திட்டங்கள், சமூகப் பணிகள் ஆகியவை செய்வதற்கு தமிழ் தேவைப்படுகிறது. உலகத்தோடு தொடர்பு கொள்ள கட்டாயமாக ஆங்கிலம் தான் இன்றும் நமக்குத் தேவைப்படுகிறது. வெளிநாட்டு அறிவியல், தொழில் நுட்பம் போன்றவைகளுக்கு ஆங்கிலத்தைத்தான் பயன்படுத்துகிறோம்.

**திரு. எம். பி. சுப்பிரமணியம்:** தொடர்பு மொழியாக ஆங்கிலம் பெரும்பான்மையாகப் பயன்படுவதாகச் சொல்கிறார்கள். தமிழ் மொழி அதைவிட பல கட்டங்களில் உயர்ந்த மொழிதான் என்பதை நானும் ஒப்புக் கொள்கிறேன். ரஷ்யாவில் ரஷ்ய மொழி 1917 க்குப் பிறகுதான் வளர்ந்தது. ஆங்கிலத்தின் உதவி இல்லாமல் இப்போது அவர்கள் எல்லாவற்றையும் படிக்கிறார்கள். தங்களுக்கு என்று ஒரு பொது மொழி தேவையென்று அவர்களும் கருதுவதால், ஆங்கிலம்தான் தொடர்பு மொழியாக இருக்க வேண்டுமென்று சொல்வது, பொருளற்றதாகிவிடும் என்று கருதுகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** நிதியமைச்சர் அவர்கள் ஒரு மணி நேரம் தன் உரையை ஆற்றுவார்கள் என்று நாம் எதிர்பார்க்கிறோம். கூடுமானவரையில் உறுப்பினர்கள் அவரது உரையில் குறுக்கிடாமல் இருந்தால், விரைவாக அவர்கள் முடிக்க முடியும்.



1985 ஏப்ரல் 11]

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்;** இப்போதும் ரஷ்ய பள்ளிக் கூடங்களில் மேல் வகுப்புகளில் படிக்கும் மாணவர்கள் கட்டாயமாக வெளி மொழியொன்றை, அதுவும் ஆங்கிலத்தைப் படித்தாக வேண்டும் என்று இருக்கிறது. ஜப்பானில் 10-வது வகுப்புக்கு மேல் கட்டாயமாக ஆங்கில மொழி கற்க வேண்டும். அதுதான் இன்டர்நேஷனல் மொழி என்று வைத்திருக் கிறார்கள். நம்முடைய மொழிக்கே அப்படிப்பட்ட ஒரு உலகத் தொடர்பு கொண்ட மொழியாக இருக்கவேண்டுமென்று பார்த்தால், அது இந்தி இல்லை யென்பதுதான் எங்களுடைய வாதம்.

பெருவாரியான மக்கள் பேசுகிறார்கள், அதனால் இந்தியை ஏற்றுக் கொள்ளுங்கள் என்றால், அறிஞர் அண்ணா அவர்கள் ஒரு முறை சொன்னதைப் போல், இந்தியாவிலேயே அதிகமாக இருக்கிற பறவை காக்காய்தான். ஆகவே காக்காய்தான் நமது தேசியப் பறவையாக இருக்க முடியும். குறைந்த எண்ணிக்கையுள்ள மயில் தேசியப் பறவையாக இருக்க முடியாது என்று கூறியதுதான் நினைவுக்கு வருகிறது. அதையெல்லாம் விளக்கமாகச் சொன்னால், நேரம் இருக்காது. திரு. எம். பி. சுப்பிரமணியம் அவர்கள் இதைக் கிளப்பியதால், இதைச் சொன்னேனே தவிர, வேறல்ல. என்றாலும்கூட அந்த நிலைமைகளை அறிந்து கொள்ள வேண்டுமென்பதற்காகத்தான் இவற்றைச் சுட்டிக் காட்டினேன். அந்த நிலைமைகளை ஆராய வேண்டும் என்பதற்காகத்தான் இவற்றைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

(பிற்பகல் 12-50)

மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் கலைஞர் அவர்கள் பல்வேறு நிலைமைகளை இங்கே சுட்டிக்காட்டினார்கள். ஏற்கெனவே ஒதுக்கப் பட்டிருந்ததைவிட, தற்போது கல்வித் துறையிலும், மருத்துவத் துறையிலும், வேறு பல துறைகளிலும் எத்தனை சதவீதம் குறைவாக ஒதுக்கப் பட்டிருக்கிறது என்பதை எடுத்துக்காட்டினார்கள். ஒரு நாட்டில் சாதாரணமாக ஒரு 40, 50 ஆண்டுகாலக் கணக்குகளை எடுத்துப் பார்ப்போமானால், துறைகள் கொஞ்சம் கொஞ்சமாக விரிவடைந்து வந்திருப்பதைப் பார்க்கலாம், செலவழித்த பணம் அதிகமாகியிருக்கின்றது. இவ்வாறு துறைகள் அதிகமாகும்போது, முன்பு ஒரு துறைக்கு நூறு விழுக்காடு என்றிருந்தது, பின்னால் 25 விழுக்காடு என்று குறையலாம். இன்னும் அதிகமான அளவிற்குத் துறைகள் வருகிறபோது, விழுக்காடு இன்னும் குறையலாம். அது மட்டு மல்லாமல், விழுக்காடு கணக்கைப் பார்த்தால், முன்பு கல்விக்கு 25 விழுக்காடு செலவழித்தோம், இப்போது 19 சில்லறை விழுக்காடுதான் செலவழிக்கிறோம் என்று எடுத்துக்காட்டினார்கள். ஆனால் அளவு அதோடு நின்றுவிடுவதில்லை. சில பல துறைகளில் விழுக்காடு குறைகிறது என்றால், வேறு பல துறைகளில்

விழுக்காடு உயர்ந்திருக்கும் என்று பொருள். மொத்தத்தைக் கூட்டி வருகிற போது, 100 சதவிகிதம் என்றுதான் வரும். சில பல துறைகளில் ஒரு விழுக்காடு என்றிருந்தது, பின்னால் .7, .5 என்று குறைந்து வந்திருப்பதைச் சுட்டிக் காட்டினார்கள். நான் சிலபல துறைகளில் கூடுதலாகியிருப்பதையும் சுட்டிக்காட்டினால் இரண்டும் சரிசமமாக மாறிவிடும்.

சோஷியல் செக்யூரிட்டி மற்றும் வெல்ஃபேர் என்பதன்கீழ் 1974-75 ஆம் ஆண்டில் 5.1 விழுக்காடு இருந்தது, இப்போது 6.46 என்று உயர்த்தியிருக்கிறோம். "ஃபுட் சப்சிடி" என்பது முன்பு .2 விழுக்காடு இருந்தது. இப்போது 4.2 விழுக்காடு என்று வருகிறது. ஏற்கெனவே 1979-80-இலேகூட அரிசி கிலோ ரூ. 1.75-க்குத் தரும்போது இரண்டு லட்சம் ரூபாய் சப்சிடி தரவேண்டிய அவசியம் வந்தது. நாளுக்குநாள் அதிகமானவர்களுக்குத் தரவேண்டியிருப்பதால், இப்போது ஒரு கோடியே 18 லட்சம் குடும்ப கார்டுகளுக்கு அரிசி வழங்க வேண்டியிருப்பதால், அரசினுடைய 'சப்சிடி' அளவும் வளர்ந்து வளர்ந்து சென்ற ஆண்டு ,116 கோடி ரூபாய் தந்திருக்கிறோம். இப்போதுகூட 90 கோடி ரூபாய் உணவு சப்சிடிக்காகத் தரவேண்டி இருந்தது.

1974-75-ல் கம்யூனிடி டெவலப்மெண்ட்டுக்கு 5.5 விழுக்காடு என்று இருந்தது, 1985-86-ல் 8.16 விழுக்காடாக உயர்ந்திருக்கிறது. பப்ளிக் ஹெல்த், சானிடேஷன், வாடர் சப்ளை ஆகியவற்றை எடுத்துக்கொள்வோமானால், 1974-75-ல் 1.3 விழுக்காடாக இருந்தது இப்போது 6.3 விழுக்காடாக உயர்ந்திருக்கிறது. அதேமாதிரி 'அர்பன் டிவிஷன்'இல் அப்போது .2 விழுக்காடாக இருந்தது, இப்போது .7-ஆக ஆகியிருக்கிறது. 'கேபிடல் அவுட்லே ஆன் இர்ரிகேஷன்' மற்றும் மற்றவைகளுக்கு 1974-75-ல் 24.5 சதவிகிதம் ஆக இருந்தது. இப்போது 36.5 விழுக்காடாக ஆகியிருக்கிறது. இவ்வாறு சில இனங்களில் குறைவதும், சில இனங்களில் ஏறுவதும் இயற்கை என்பதை இந்த நேரத்தில் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

கல்வித் துறையைப்பற்றி எடுத்துச்சொல்கிறபோது, முடிந்த அளவுக்கு உயர்த்திக்கொண்டுதான் வந்திருக்கிறோம். அப்போதிருந்த நிதி ஆதாரத்தின் அடிப்படையிலே, 1976-77 ஆம் ஆண்டு 146 கோடி ரூபாய் செலவழித்தோம்.

(பிற்பகல் 12-55)

இப்போது 468 கோடி ரூபாய் செலவழிக்கிறோம். ஆனால் 468 கோடி ரூபாய் செலவழிக்கிறோம் என்று நாம் கல்வித் துறைக்கு பொதுவாக ஒதுக்கினாலும் கூட, இப்போது நாம் ஏற்றுக்கொண்டிருக்கிற முறைகளின் அடிப்படையில் சிறுவர் குழந்தைகள் மாணவ மாணவியர்கள் ஆகிய அத்தனை பேர்களுடைய கல்வி நலம், உடல் நலம் மற்றைய எல்லா நலன்களையும் சேர்த்துக் கணக்கிட



வேண்டும். நாம் கல்வி என்ற அடிப்படையிலே 468 கோடி ரூபாய் ஒதுக்கினாலும், சிறுவர் சிறுமியர் உடல் நலம் கருதி சத்துணவுத் திட்டத்திற்கு இந்த ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் 163 கோடி ரூபாய் ஒதுக்கியிருக்கிறோம். எட்டாவது வகுப்பு வரை படிக்கும் ஏழை எளிய குழந்தைகளுக்குச் சீருடை, இலவசப் புத்தகங்களுக்காக 25 கோடி ரூபாய் ஒதுக்கியிருக்கிறோம். அத்தனையும் இந்தப் பள்ளி மாணவ மாணவியர்களின் நலம், உடல் நலம், கல்வி நலம், அவர்களுடைய அறிவு நலம், ஆற்றல் நலம் ஆகிய அத்துணையும் சேர்த்துக் கணக்கிட்டுப் பார்த்தால், இந்த ஆண்டு வரவு செலவுத் திட்டத்திலே இவ்வளவு செலவுகளுக்கிடையிலே 656 கோடி ரூபாய் செலவழிக்கின்ற ஒரு சூழ்நிலைதான் ஏற்படுகின்றது. ஆனால் சத்துணவுத் திட்டத்தைப் பொறுத்தவரையில், மாண்புமிகு உறுப்பினர்கள் பலரும் எடுத்துச் சொன்னார்கள். அந்தக் கருத்திலே எனக்கு ஒன்றும் மாறுபட்ட கருத்து கிடையாது. சத்துணவு போட வேண்டுமென்ற கொள்கையை பலரும் ஆதரித்திருக்கிறார்கள். அதனால் ஏற்பட்ட விளைவுகளை நாம் நன்றாகக் காண்கிறோம். பொருளாதார வல்லுநர்கள் எல்லாம் அதைப்பற்றிச் சொல்லியிருக்கிறார்கள். நேரம் இல்லாததால் அதையெல்லாம் விட்டுவிடுகின்றேன். திரு. மால்கம் ஆதிசேஷய்யா அவர்கள்கூட முதலிலே அதற்குச் செலவழிப்பதை விட பொருளாதார வளர்ச்சிக்கு மற்றவற்றிற்கு இந்தப் பணத்தைத் திருப்பி விட்டால், நாடு நலம் பெறும் என்று சொன்னார்கள். பிறகு திருச்சியிலே நடைபெற்ற ஒரு ரோட்டரி சங்கத்தினுடைய ஆண்டு விழாவிலே பேசும்போது, அவர் "நான் முதலிலே அந்தக் கருத்தைக் கொண்டிருந்தேன், பிறகு நானே சிலபல இடங்களிலே பார்த்துவிட்டு வந்ததற்குப் பிறகு, இந்த நாட்டினுடைய சூழ்நிலைகளை ஆராய்ந்த பிறகு, இந்தமாதிரி சத்துணவு போடுவதால் பலன் ஏற்படுகிறது என்பதை உணர்ந்து அதை ஆதரிக்கிறேன்" என்று எல்லாம் சொன்னார்கள். ஆனால் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன கருத்துக்களில் எல்லாம் நான் மாறுபடவில்லை. சத்துணவுத் திட்டம் செம்மையாக நடைபெற வேண்டும், சிறப்பாக நடைபெற வேண்டும். நாம் ஒதுக்கிய 163 கோடி ரூபாயும் ஒழுங்காகப் போய்ச் சேர வேண்டும் என்ற கருத்தைத் தெரிவித்திருக்கிறார்கள். அதிலே நான் மாறுபடவில்லை. அதற்கான தன்மைகள் ஏற்பட வேண்டுமென்றுதான் இன்றும் நான் நினைக்கிறேன். ஆகவே இடையிலே போய்ச் சேராத சூழ்நிலை ஏற்படுகிறது என்கின்ற கருத்துக்கள் வரும்போது, நமக்கு மன வேதனை தருகின்ற அளவுக்குத்தான் அது இருக்கின்றது. அதைச் செம்மைப்படுத்துவதற்கான சிலபல வழிமுறைகள், கண்காணிப்பு முறைகள் எல்லாம் இருக்குமேயானால் நல்லது. இப்போது

இருக்கிற கண்காணிப்பு முறைகளிலே அப்படிப்பட்ட சீர்கேடுகள் வந்து விடுகின்றன. ஆகவே அதைப் போக்குவதற்கான வழி முறைகளை மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்களும், உறுப்பினர்களும் சேர்ந்து தெரிவிக்கலாம். எப்படிப்பட்ட கட்டுப்பாடு, கண்காணிப்பு முறைகள் எல்லாம் இருந்தால், அதிலேயிருந்து விடுபட முடியும் என்று யோசனை கூறலாம். சில இடங்களிலே 98 மாணவர்கள் வருகை என்று எழுதி விடுகிறார்கள். அவர்களுக்கு என்று பொருட்களை ஒதுக்கி விடுகிறார்கள். ஆனால் உள்ளபடியே வந்தவர்கள் 38 அல்லது 40 பேர்கள்தான் என்கிறார்கள். வெள்ளிக்கிழமை, வியாழக்கிழமை வந்தவர்களுக்கும் ஞாயிற்றுக்கிழமை வந்ததாகக் கணக்கிட்டுவிடுகிறார்கள். ஆனால் வந்தவர்களின் எண்ணிக்கை குறைவு என்று மாண்புமிகு உறுப்பினர்கள் சில பேர்கள் சொன்னார்கள். அந்தக் குறைபாடுகள் இருந்து கொண்டிருக்கின்றன. கிட்டத்தட்ட 61 ஆயிரத்துச் சில்லறை சமையல் கூடங்கள் இருக்கிற இடங்களிலே இப்படிப்பட்ட தன்மைகள் வரும்போது, பொது மக்களுடைய ஒத்துழைப்பு, கண்காணிப்பு இருக்க வேண்டும். அது அந்த வகையிலே இருந்தால் நல்லது. அந்தச் சீரிய யோசனையை இந்தத் துறையையும் ஆராயச் சொல்லியிருக்கிறோம் ; கீழ்மட்டத்திலே சில்பல குளறுபடிகள் ஏற்படும்போது, நாம் நல்ல நோக்கோடு நிறைவேற்றுகின்ற சில திட்டங்கள்கூட நிறைவேற்றப்பட முடியாமல் போய்விடுகின்றதைப் பார்க்கின்றோம்.

தமிழகத்தைப் பொறுத்தவரையில், நிர்வாகம் என்றைக்குமே சிறப்பாகத்தான் இருந்துவந்திருக்கின்றது என்ற கருத்தைத்தான், என்னைப் பொறுத்த வரையிலும், நான் தொடர்ந்து சொல்லி வந்திருக்கின்றேன். மற்றைய மாநிலங்களை ஒப்பிடும்போது, நம்முடைய மாநிலம் சீர்கேடு அடைந்துவிடவில்லை. அந்த வகையிலே பார்க்கின்றபோது, கடுமையான வறட்சி வந்த நிலையிலேயும், இரண்டு ஆண்டுக் காலம்—72 ஆண்டுக் கால வரலாற்றிலே—1982-83, 1983-84 ஆம் ஆண்டுகளில் இருந்த அவ்வளவு கடுமையான வறட்சி இல்லை என்று புள்ளிவிவரங்கள் சொல்கின்ற வகையிலேகூட, நாம் திட்டத்திற்கு ஒதுக்கிய பணத்தைவிட கூடுதலாகத்தான் செலவழித்திருக்கிறோமே தவிர, அதிலே குறைவாக இல்லை. மின்சாரத்திற்கு ஒதுக்கிய பணத்தையும் நாம் குறைக்கவில்லை. அதற்கு செலவழிக்கிற பணத்தைச் செலவழித்துக் கொண்டிருக்கிறோம். ஆக மின்சாரம் மிகமிக முக்கியம் என்பதை உணர்ந்து தமிழகத்தைப் பொறுத்தவரையிலும், 1980-81-லிருந்து 1984-85 வரையில் ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் நாம் ஒதுக்கீடுக்கு ஒத்துக்கொண்டது 3,150 கோடி ரூபாய். ஆனால் நாம் மொத்தத்திலே செலவழித்தது 3,600 கோடி ரூபாய். கிட்டத்தட்ட 450 கோடி ரூபாய்க்குமேல் நாம் திட்டச் செலவைக் கூடுதலாக ஆக்கியிருக்கிறோமே தவிர குறைக்கவில்லை.





ஏன் இதைச் சொல்கிறேன் என்றால், இதிலே எல்லாம் நாம் பின்னடைந்து விடவில்லை. சில்பல மாநிலங்கள் ஒப்புக்கொண்ட தொகையிலே 75 சதவீதம் 60 சதவீதம், 55 சதவீதம் செலவழிக்கிற அளவுக்கு நிலைமைகள் இருக்கிற போது, நாம் இந்த அளவுக்கு வந்திருக்கிறோம் என்று தெரிவித்துக் கொள்கிறேன். ஏழாவது ஐந்தாண்டுத் திட்டம் இன்னும் முடிவு பெறவில்லை. அது முடிவு பெறுவதற்கு முன்னால், டென்டேட்டிவாக, நாம் ஒப்புக் கொண்டிருக்கிற தொகை ரூ. 1,002 கோடி 61 லட்சம் ரூபாய். நாம் நம்முடைய நிதிநிலை அறிக்கையில் 100 கோடி ரூபாய் கூடுதலாகத்தான் செலவழிக்க முடியும். எனவே, திட்டச் செலவை அதிகமாக ஆக்க வேண்டுமென்ற அளவுக்கு மொத்தம் 1,102 கோடி ரூபாய் என்று நாம் ஒதுக்கி வைத்திருக்கிறோம். 99 கோடியே 39 லட்சம் ரூபாய் கூடுதலாக ஆகியிருக்கிறது. முதலிலே நாம் சத்துணவுத் திட்டத்திற்கு ஒதுக்கியது திட்டத்திலே சேர்க்காமல். இந்த மாநில அரசே செலவழிக்க வேண்டுமென்று தனியாக வைத்தோம். அப்படி வைத்ததற்குக் காரணம் இது ஒரு சிறப்புக்குரிய திட்டம் ; தேவையான திட்டம். இதற்குத் தனி நிதி ஒதுக்கீடு மத்திய அரசு செய்ய வேண்டுமென்று கேட்டுப் பார்க்கலாம் ; வற்புறுத்திப் பார்க்கலாம் என்ற அளவுக்கு நாம் வற்புறுத்தினோம். இது நல்ல திட்டம் என்று ஏற்றுக்கொண்டார்கள். ஆனால் அதற்கு நிதி ஒதுக்கீடு செய்யவில்லை.

(பிற்பகல் 1-00)

அப்போதைய நிதியமைச்சர் அவர்கள் ஒப்புக்கொண்டார். ஆனால் அதற்கான நிதியைமட்டும் ஒதுக்கவில்லை . . .

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** அவையின் அனுமதியோடு அவையின் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** அதற்குப் பிறகு நாமே முழுப் பொறுப்பேற்றுக் கொண்டோம். ஆனால் சென்ற ஆண்டு அண்டையிலிருக்கிற ஆந்திர மாநிலம் இந்தச் செலவின் ஒரு பகுதியைத் திட்டச் செலவின் கீழேயே கொண்டு வந்து காட்டியிருக்கிற காரணத்தால், அதைப் போலவே நாமும் முடிவெடுத்து இன்றையதினம் சத்துணவுத் திட்டத்திற்காக ஆகிற செலவில் ஒரு பகுதியை திட்டச் செலவின் கீழே கொண்டு வருகிறோம்.

அடுத்து, மத்திய அரசின் உதவி என்று வருகிறபோது, அதை ஒரு நியாயத்தின் அடிப்படையில் வழங்க வேண்டும் என்று வற்புறுத்துகிறோம். இந்த நாட்டில் வளர்ந்து வருகிற மாநிலங்கள் என்ற அடிப்படையில் பார்க்கும்போது, தமிழ்நாடு, மகாராட்டிரம், குஜராத், வங்காளம், பீகார், ஹரியானா

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1985 ஏப்ரல் 11

மற்றும் பஞ்சாப் போன்ற மாநிலங்கள் வளர்ந்து வருகிற மாநிலங்களாகச் சொல்லுகிறார்கள். எனவே அவைகளையெல்லாம் ஒரு நிலையில் நிறுத்தி வைத்துவிட்டு, வளராத மாநிலங்களை வளரவிட்டுவிட்டு, அவையெல்லாம் சமமான பிறகு, எல்லாவற்றையும் ஒருங்கே வளர விடுவது என்பது பொருளாதார முன்னேற்றத்திற்குச் சரிப்பட்டு வராது. வளருகிற மாநிலங்களின் தேவைகளையும் மனதில் வைத்துக்கொண்டுதான் எதையும் செய்ய வேண்டும். ஏழு, எட்டு நாட்களுக்கு முன்னால் மத்திய அரசின் நிதித் துறையின் இணைச் செயலாளர் குறிப்பிடுகிறபோது, 1985-86 ஆம் ஆண்டுக்கு 7,806 கோடியே 87 லட்சம் மாநிலங்களுக்காக மத்திய அரசு நிதி ஒதுக்கீடு செய்திருக்கிறது என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். அது எந்த அளவுக்கு எந்தெந்த மாநிலங்களுக்கு ஒதுக்கப்பட்டிருக்கிறது என்ற விவரத்தையும் அவர் அப்போது கொடுத்திருக்கிறார்.

உத்திரப் பிரதேசம் 1,176 கோடியே 92 லட்சம் ரூபாய்.
பீகார் 820 கோடியே 68 லட்சம்
மேற்கு வங்காளம் 784 கோடியே 19 லட்சம்
மத்தியப் பிரதேசம் 572 கோடி.
ஆந்திரப் பிரதேசம் 552 கோடி.
மகாராட்டிரம் 474 கோடி.
தமிழ்நாடு 465 கோடி.

கிட்டத்தட்ட தமிழ்நாடு, மகாராட்டிரம், பீகார், பஞ்சாப், குஜராத் போன்ற மாநிலங்கள், மக்கள் தொகை அடிப்படையில் பார்த்தால், ஒன்றாக வைத்து எண்ணப்பட வேண்டிய அளவுக்குள்ள மாநிலங்களாகும். அப்படிப் பார்க்கும் போது, நமக்கு 465 கோடி ரூபாய் கிடைக்கும்போது, உத்திரப் பிரதேசத்திற்கு 1,176 கோடி ஒதுக்கப்பட்டிருக்கிறது. வருகிற ஆண்டுக்காக இந்த அளவுக்கு நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது என்ற காரணத்திற்காக நான் இதையெல்லாம் இங்கே சுட்டிக்காட்ட வேண்டியிருக்கிறது. இதனாலே நாம் பாதிக்கப் பட்டிருக்கிறோம்.

நாம் மட்டுமல்ல, கருநாடகம் பாதிக்கப்பட்டிருக்கிறது என்று அவர்களும் சொல்லுகிறார்கள். அதைப் போலவே மகாராட்டிரமும், குஜராத்தும், ஹரியானாவும், பஞ்சாபும் பாதிக்கப்பட்டிருக்கின்றன என்று அவர்களும் சொல்கிறார்கள். காரணம் அதற்காக பார்முலாவை, வாய்ப்பாட்டை மாற்றி விட்டார்கள். ஏற்கெனவே இருந்த காட்கில் பார்முலாவை மாற்ற வேண்டுமென்று நாம் கேட்டோம். ஆனால் அப்படியே விட்டிருந்தாலும்கூட, நமக்கு 300 சில்லறைக் கோடிக்கு மேல் கிடைத்திருக்க வேண்டும். ஆனால் அதை மாற்றிவிட்டு, இப்போது 25 சதவீதம் மக்கள் தொகைக்கு என்று வைத்து



1985 ஏப்ரல் 11] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

விட்டு, 75 சதவீதம் பின்தங்கிய தன்மைக்கு என்று மாற்றிவிட்டார்கள். நம்முடைய மாநிலத்தை அவர்கள் முற்போக்கு மாநிலமாக, வளர்ந்துவிட்ட மாநிலமாக எடுத்துக்கொண்டு, 75 சதவீதத்தில் ஒன்றும் கிடைக்காதபடி செய்துவிட்டார்கள். 'பாபுலேஷன் பேசிஸ்' என்று வைத்தால்கூட நாம் 1951-ல் இருந்ததைக் கணக்கில் கொண்டால்தான், நியாயம் கிடைக்கும் என்றோம். அல்லது 1971 ஆம் ஆண்டு என்று வைத்தால் பெர் கேப்பிடா, எக்ஸ்பென்டிச்சரை எடுத்துக் கொள்ளாமல், 1981 ஆம் ஆண்டுக் கணக்கை எடுத்துக் கொண்டார்கள். எனவே இதைத் திரும்பத் திரும்ப எடுத்துச் சொல்வதற்குக் காரணம் இந்தச் சிந்தனைகளை வளர்த்துக் கொண்டே போனால், என்றைக்காவது ஒருநாள் இதைச் செயல்படுத்த முடியும்.

தந்தை பெரியார் அவர்கள் அடிக்கடி ஒன்றைக் குறிப்பிடுவார்கள். நாம் ஒரு மரத்தை வெட்டினால், உடனே அது விழுந்துவிடவில்லையே என்று. விட்டுவிடக் கூடாது. வெட்டிக் கொண்டே இருந்தால், என்றைக்காவது அந்த மரம் விழுந்துவிடும் என்பார்கள். அதைப்போல் இந்தச் சிந்தனைக் கருத்துக்களை திரும்பத் திரும்ப எடுத்துச் சொல்வதறகுக் காரணம், மீண்டும் மீண்டும் எடுத்துச் சொன்னால், அதற்கு ஏற்ற ஊக்கமும் உணர்வும் மக்களிடத்தில் ஏற்பட வேண்டும். இந்த உணர்வுகளும் சிந்தனைகளும் வலுப்பெறும் நேரத்தில் அது கட்டாயமாகச் செயலாக்கம் பெறும் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது.

அடுத்து, புதிய திட்டங்கள் என்ற வகையில் எதையும் செய்யவில்லை என்று சொல்லப்பட்டது. ஏற்கெனவே இருந்த திட்டங்களுடைய வளர்ச்சியைக் கருதி, அதில் ஒரு பர்சென்டேஜை உயர்த்துவது என்பது ஒன்று. ஏற்கெனவே இல்லாத புதிய திட்டங்கள் என்ற அடிப்படையில், மாண்புமிகு உறுப்பினர்களுக்கு நாம் ஏற்கெனவே ஒரு தனி புத்தகமாக ரூபாய் 54 கோடிக்கு உரிய வகையில் விவரம் கொடுத்து, அதை எந்தெந்த வழியில் செலவிட இருக்கிறோம் என்று தெரிவித்திருக்கிறோம். அந்தத் தொகை செலவிடப்பட இருக்கிற பாங்கையும் எடுத்துச் சொல்லியிருக்கிறோம்.

ஏற்கெனவே தமிழகத்தில் வேளாண்மைத் துறையைப் பார்த்தால், ஏறத்தாழ 55, 60 லட்சம் டன் உணவுப்பொருள்கள் இங்கே உற்பத்தியான நிலைமை மாறி, இந்த ஆண்டு 70, 80 லட்சத்தையும் தாண்டி இறுதியாக 100 லட்சம் டன் அளவுக்கு வந்து சேர்ந்திருக்கிறது. இந்த நிலை இன்னும்

(பிற்பகல் 1-05)

வளர்க்கப்படுமானால், வெளி மாநிலங்களிலிருந்து உணவுதானியம் கொள்முதல் செய்ய வேண்டிய அவசியம் ஏற்படாது என்பதைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

வளர்ச்சியைப்பற்றி டாக்டர் கலைஞர் அவர்கள் தெளிவுபட எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அந்தப் புள்ளிவிவரங்களை நான் மறுபடியும் எடுத்துச் சொல்ல வேண்டியதில்லை என்று கருதுகிறேன். ஒதுக்கீடு செய்வதைப் பொறுத்தவரையில், நாலாயிரத்து சில்லறை கோடி ரூபாய் இன்வெஸ்ட்மென்ட் பீகாரில் இருந்தது. நம்முடைய மாநிலத்தில் ரூ. 600 கோடியாக எட்டு வருஷத்திற்கு முன்பு இருந்தது இப்போது ரூ. 1,100 கோடி அளவிற்கு வருகிறது. இன்வெஸ்ட்மென்ட் அதிகமாகப் பண்ணுகிற இடத்திலேதான் தொழில் வளரும். மூலப் பொருள்களை உற்பத்தியாக்குகிற தொழிற் சாலைகளை உருவாக்குகிற அதிகாரம் மத்திய அரசிடம் இருக்கிறது. மூலப் பொருள்களை உற்பத்தி செய்தால்தான், சிறு தொழில்கள் ஏராளமாக, நன்கு வளர முடியும். ஆகவே திரும்பத் திரும்ப வதிகமாக 'இன்வெஸ்ட்மென்ட்' செய்ய வேண்டும். மூலப் பொருள்கள் இருக்கின்ற இடத்திலே தொழிற் சாலையை ஆரம்பிக்க வேண்டும் என்பது சென்ற நூற்றாண்டின் சித்தாந்தம். உலகம் போகிற போக்கில் இப்போதுள்ள சித்தாந்தம், எங்கே இன்டிலிஜென்ஸ். டேலன்ட், அதாவது எங்கே அறிவுக் கூர்மை, திறமை இருக்கிறதோ அந்த இடத்திற்கு உலகிலுள்ள மூலப் பொருள்களைக் கொண்டு வந்து சேர்த்து அங்கே பொருள்களை உற்பத்தி செய்து உலகிற்கு அனுப்பலாம் என்பதுதான். இதற்குச் சிறந்த எடுத்துக்காட்டு ஜப்பான் நாடு. ஜப்பான் நாட்டில் இரும்பு கிடையாது, நிலக்கரி கிடையாது, பெட்ரோல் கிடையாது, அலுமினியம் கிடையாது. தொழிலுக்கு வேண்டிய இந்த நான்கு மூலப் பொருள்கள் இல்லாத ஜப்பான் நாடு தனக்குள்ள அறிவுக் கூர்மை, தொழில் நுட்பத் திறமை ஆகியவற்றை வைத்துக்கொண்டு சிறப்பாகச் செயல்படுகிறது. அதைப்போலவே அகில இந்தியாவில் தமிழகத்திலேதான் மிகச் சிறந்த டெக்னீஷியன்களை உருவாக்கித் தருகிற நிலைமை இருக்கிறது. அதைத்தான் டாக்டர் கலைஞர் அவர்களும் குறிப்பிட்டுக் காட்டினார்கள். அந்த வகையிலே குடியரசுத் தலைவர் பரிசை இந்த மாநிலம்தான் பெற்றது. அப்போதும் சரி, இப்போதும் சரி, அகில இந்தியாவிலே போப்பால் போன்ற இடங்களுக்குச் சென்று பார்த்தால், ரூர்கேலா, துர்காபூர் போன்ற இடங்களில் உள்ள இரும்புத் தொழிற்சாலைகளுக்குச் சென்று பார்த்தால், அங்கேயுள்ள தொழில் நுட்ப அறிஞர்களும், கைவினைஞர்கள், விஞ்ஞானிகளும் பெரும்பாலோர் தமிழகத்தைச் சேர்ந்தவர்களாக, தென்னகத்தைச் சேர்ந்தவர்களாகத்தான் இருக்கிறார்கள். வேலையில்லாத் திண்டாட்டத்தைப்பற்றி டாக்டர் கலைஞர் அவர்களும் மற்றும் பலரும் சுட்டிக்காட்டினார்கள். படிக்கின்ற வாய்ப்புக்களை அதிகமாக உருவாக்கித் தருகிற மாநிலத்தில் வேலையில்லாத் திண்டாட்டம் கொஞ்சம் அதிகமாகத்தான் இருக்கும். அந்த வகையிலே பார்க்கும்போது,





கேரளம், தமிழ்நாடு, மகாராஷ்டிரம், வங்காளம், டில்லி போன்ற இடங்களில் படிக்கிறவர்களுக்கு அதிகமாக வாய்ப்புகள் தருகிறபோது, அதற்கேற்ற தன்மை வரும். இருந்தாலும் வேலைவாய்ப்புகளை உருவாக்குவதில் திட்டமிட்டு பல்வேறு திட்டங்களை மேற்கொண்டிருக்கிறோம். அதற்கான புள்ளி விவரங்களை எடுத்துச் சொல்லலாம் என்றாலும், நேரம் இடம் கொடுக்காததால் விடுகிறேன்.

டாக்டர் கலைஞர் அவர்கள் எடுத்துத் தெரிவித்ததைப்போல கிணற்றுப் பாசனத்திற்கு மின் இணைப்பு வழங்குவதில் என்றைக்கும் தமிழகம்தான் முன்னணியில் இருந்தது. காங்கிரஸ் ஆட்சிக் காலத்திலேயிருந்து, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி வந்த பிறகும், அதற்கு முதலிடம் தந்து வளர்த்தோம். இப்போது பத்தரை இலட்சம் பம்ப் செட்டுக்களுக்கு மின் இணைப்புத் தந்து முன்னணியில் நாம் இருக்கிறோம். நம்முடைய மாநிலத்தில் பத்து இலட்சத்து 22 ஆயிரம் மின் இணைப்புகளை சென்ற ஆண்டில் கொடுத் திருக்கிறோம். மேற்கு வங்கத்தில் 31 ஆயிரமும், உத்திரப் பிரதேசத்தில் 4 இலட்சத்து 84 ஆயிரமும், மத்திய பிரதேசத்தில் 4 இலட்சத்து 30 ஆயிரமும், குஜராத்தில் 2 இலட்சத்து 74 ஆயிரமும் மின் இணைப்புகள் வழங்கப்பட் டுள்ளன. அவர்கள் எல்லாம் குறைவாக இணைப்பு வழங்கியிருக்கும்போது, நாம் மட்டும் அதிகமாக வழங்கியிருக்கிறோம். ஏனென்றால் நாம் ஆற்றுப் பாசனத்தில் நூற்றில் 90 பங்கு தண்ணீரைப் பயன்படுத்திவிட்டோம். தமிழ் நாட்டில் எவ்வளவு ரிசோர்சஸ் இருக்கிறதோ அவ்வளவையும் முழுவதுமாகப் பயன்படுத்தி விட்டோம். மற்ற மாநிலங்களில் குறிப்பாக ஆந்திராவில் 55 சத விதம் தண்ணீர் வீணாகிறது. கேரளாவில் 75 சதவிதம் தண்ணீர் வீணாகிறது. இவைகள் எல்லாம் இங்கே திருப்பி விடப்பட வேண்டும் என்று நாம் சொல்லு கிறோம். காவிரி நதி நீர் திட்டத்தைப்பற்றி மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். பி. சுப்பிரமணியம் அவர்களும், டாக்டர் கலைஞர் அவர்களும் சொன்னார்கள். காவிரி ஒப்பந்தம் காலாவதியாகிவிட்டது என்பது தவறு. காலாவதியாகவில்லை. இன்னும் ஒரு ஒப்பந்தம் போடும் வரையில், அந்த ஒப்பந்தம் நீட்டிக்கப்பட வேண்டும். அந்த ஒப்பந்தத்தின்படி, கர்நாடகா அரசு நடக்க வேண்டும் என்று வற்புறுத்தி வருகிறோம். அந்த ஒப்பந்தத்தை மீறி கர்நாடகா அரசு எந்தச் செயலையும் செய்யக்கூடாது என்பதும் எப்போதும் காணாத அளவிற்கு தமிழ் நாட்டைக் கேட்காமல் சிலபல அணைத் திட்டங்களை நிறைவேற்றி நீரைத் தேக்கி வைத்து தமிழகத்திற்கு நீர் வர

(பிற்பகல் 1-10)

விடாமல் இருப்பது இந்த அரசின் நீண்டகாலக் குறை. இதைத் தீர்த்து வைக்க வேண்டிய பொறுப்பு மத்திய அரசுக்கு இருக்கிறது. "நீங்கள் இரண்டு பேர்களும் உட்கார்ந்து தீர்த்துக்கொள்ளுங்கள்" என்று சொல்கின்றார்கள். அப்படி உட்கார்ந்து கிட்டத்தட்ட 15, 20 தடவைகளாவது பேசியிருப்போம். இரண்டு பேர்களும் விவகாரம் பண்ணிக்கொண்டிருக்கின்றார்களே தவிர, தீர்த்துக் கொள்ளுகின்ற மாதிரி இல்லை. ஒன்று உச்ச நீதிமன்றம் தீர்க்க வேண்டும் அல்லது தனி டிரிபூனல் தீர்க்க வேண்டும். அல்லது மத்திய அரசாவது தீர்க்க வேண்டும். நாம் 1924 ஆம் ஆண்டு ஒப்பந்தத்திலே இருப்பதைவிட அதிகமாகக்கூட கேட்கவில்லை. ஒப்பந்தத்திலே என்ன கேட்கப்பட்டிருக்கிறது? 1974 ஆம் ஆண்டு உபரி நீரை, ஏதாவது இருக்குமானால் மட்டும் பங்கிட்டுக் கொள்வது என்பதுபற்றி மறுபடியும் 50 ஆண்டுக்காலம் கழித்து யோசிக்கலாம் என்று சொல்லப்பட்டிருக்கிறதே தவிர, மறுபடியும் அடிப்படையிலேயிருந்து கிளப்பப்பட வேண்டும், அப்படிப் பேச வேண்டும் என்று இல்லை. நீரைப் பொறுத்தவரையில், கர்நாடகத்திலும் சிலபல நிலைமைகள் இருப்பதன் காரணமாகத்தான் நாம் அதைத் தொடர்ந்து வற்புறுத்தி அதற்குத் தீர்வு காண வேண்டும் என்று கேட்டுக்கொண்டிருக்கிறோம். அதற்குத் தீர்வு காண வேண்டும் என்று மாண்புமிகு உறுப்பினர்கள் ஒப்புக்கொள்கின்றார்கள், நாங்களும் ஒப்புக்கொள்கிறோம்.

மின் கட்டணத்தைப் பொறுத்தவரையில், விவசாயிகளுக்கு மேற்கு வங்காளத்தில் விதிக்கின்ற அளவுக்கு நாம் விதித்திருந்தால் நமக்குக் கூடுதலாக ரூபாய் 76 கோடி கிடைக்கும். நாம் மின் கட்டணத்தைக் குறைத்து கொடுத்திருக்கிறோம் அந்த விவசாயிகளுக்கு. உத்தரப் பிரதேசத்தில் விதித்திருப்பது போல விதித்திருப்போமானால், நமக்கு 87 கோடி ரூபாய் கூடுதலாகக் கிடைத்திருக்கும். குஜராத்திலே விதித்திருப்பதுபோல விதித்திருந்தால், ரூபாய் 75 கோடி அளவிற்குக் கிடைத்திருக்கும்.

வீட்டிற்கு மின்சாரம் தருவதிலேகூட தொடர்ந்து ஓரளவிற்கு மற்ற மாநிலங்களோடு ஒப்பிடும்போது, நாம் குறைந்த அளவுக்குத்தான் கொடுத்துக்கொண்டு வருகிறோம். ஒரு யூனிட்டிற்கு 55 காசுதான் விதிக்கிறோம். மேற்கு வங்காளத்திலே 62 காசு. உத்தரப்பிரதேசத்தில் 64 காசு. உயர் அழுத்த மின்சாரம் கொடுக்கும்போதுகூட, நாம் ரூபாய் 67½ யிலிருந்து 71¼ வரை வாங்குகிறோம். ஆனால் மேற்கு வங்காளம் ரூபாய் 76 லிருந்து 80 வரை விதித்திருக்கிறது. குஜராத் மாநிலம் ரூபாய் 79 லிருந்து ரூபாய் 81 வரை விதிக்கிறது. ஆகவே எந்த வகையில் பார்த்தாலும், கட்டணம் குறைந்த அளவிலேதான் நாம்





விதித்துக்கொண்டிருக்கிறோம். இப்போது கூட நாம் மின்வெட்டுப் போட்டிருப்பது, 1,540 மொத்த உயர் அழுத்தம் மின்சாரம் பெறும் தொழிற்சாலைகளுக்குத்தான். 30 சதவிகிதத்திலிருந்து 40 சதவிகிதம் வெட்டு இருக்கின்றது 947 தொழிற்சாலைகளுக்கு. 50 பர்செண்ட் வெட்டு 33 தொழிற்சாலைகளுக்கு. மின் வெட்டுக்கு உள்ளாகியிருக்கின்ற தொழில்கள் 980. ஆனால் குறைவழுத்த மின் சக்தி எந்தத் தொழிற்சாலைக்கும் மின்வெட்டு போடவில்லை. அவை கிட்டத்தட்ட 1,84,750 என்று இருக்கின்றன. ஆனால் தூத்துக்குடி மின் நிலையத்திலிருந்து மின்சாரம் கிடைத்தால், அந்த வெட்டை ஓரளவுக்கு தளர்த்தக்கூடும் என்று எடுத்துச்சொல்லியிருக்கின்றார்கள்.

அம்பாசங்கர் குழு அறிக்கைபற்றி மாண்புமிகு உறுப்பினர் திரு. எம் பி. சுப்பிரமணியம் அவர்கள் எடுத்துச்சொன்னார்கள். அதைப்பற்றிய விளக்கத்தை நான் பேரவையிலே தந்திருக்கிறேன். இங்கேயும் சொல்கிறேன். அம்பாசங்கர் குழு பிற்பட்டோர் பற்றி ஒதுக்கீடு செய்துள்ள நியாயம் பற்றி ஆய்வு செய்து அரசுக்கு அறிக்கை அளிக்குமாறு அரசு நிர்வாக ஆணையின்மூலம் கேட்டுக்கொள்ளப்பட்டது. 20, 21 உறுப்பினர்கள் அதில் இடம் பெற்று ஆராய்ந்திருக்கின்றார்கள். ஏன் இப்போது அந்த அவசியம் ஏற்பட்டது என்று சொன்னால், சுப்ரீம் கோர்ட்டிலே ஒரு வழக்கு தொடுத்திருக்கின்றார்கள். இந்த ஒதுக்கீட்டைப் பொறுத்தவரையிலே, ஆரம்பக் கட்டத்திலே, முதலிலே 16 சதவிகிதம் தாழ்த்தப்பட்டவர்களுக்கு, 25 சதவிகிதம் பிற்படுத்தப்பட்டவர்களுக்கு என்று இருந்தது. திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தில் 16 சதவிகிதம் என்பதை 18 சதவிகிதம் என்று உயர்த்தி, 25 சதவிகிதத்தை 31 சதவிகிதமாக உயர்த்தினார்கள். ஆனால் அது 50 சதவிகிதத்திற்குமேல் போகக்கூடாது என்று ஒரு சுப்ரீம் கோர்ட்டு தீர்ப்பின் காரணமாக, ஒரு தீர்ப்பு அல்ல, பல்வேறு தீர்ப்புகள் எடுத்திருக்கின்றார்கள். பல்வேறு வகைகளிலே எடுத்திருக்கின்றார்கள். அதன் காரணமாக 43 என்ற கட்டத்தில் அடிப்படையில் 31 சதவிகிதம் என்று தரப்பட்டது. அதற்குப் பிறகு சில பல மாநிலங்கள் கூடுதலாகத் தந்தது என்று அடிப்படையைக் காரணமாக வைத்து, அந்தந்த மக்களுடைய எண்ணிக்கையை வைத்து, அதற்குத் தகுந்தாற்போல் ஒதுக்கீடு செய்யலாம் என்று வந்தது. உயர்நீதிமன்றத் தீர்ப்புகள் வந்ததன் காரணமாக 50 சதவிகிதம் பிற்படுத்தப்பட்டவர்கள், 18 சதவிகிதம் தாழ்த்தப்பட்டவர்கள், பழங்குடி மக்கள் என்று வந்தது. 1980 லேயிருந்து தொடர்ந்து இதுவரையிலே அந்த முறை எல்லா இடங்களிலும் பின்பற்றப்பட்டு வருகிறது. 1980-லே 2, 3 பேர்கள் "இந்த 50 சதவிகிதம் என்று ஆக்கியது தவறு. பழையபடிதான் இருக்க வேண்டும். இரண்டாவது சட்டநாதன் குழுவிலே சொல்லப்பட்ட சரத்துக்களை நிறைவேற்றவில்லை. அந்த சட்டநாதன் குழுவிலே சில பல

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1985 ஏப்ரல் 11

(பிற்பகல் 1-15)

வகுப்பாரை பிற்பட்டோர் வகுப்பிலிருந்து நீக்கவேண்டும் என்று சொன்னார்கள். அதன்படி நீக்கவில்லை என்றார்கள். அந்தப்படி நீக்கவில்லை. ஆகவே, அதன் காரணமாக இப்போது 50 சதவிகிதம் ஒதுக்குவதைத் தடுத்து நிறுத்த வேண்டும். ஏற்கெனவே இருந்தது போல 31 சதவிகிதம் ஒதுக்க வேண்டும் என்று வழக்குப் போட்டார்கள். உச்ச நீதி மன்ற நீதிபதி, 50 சதவிகிதம் எந்த அடிப்படையில் உயர்த்தினீர்கள், அந்த மக்களுடைய எண்ணிக்கை என்ன, பிற்பட்டவர்களுக்கு என்ன இலக்கணம் வைத்திருக்கிறீர்கள், எந்த அடிப்படையில் அவர்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டது, அதற்குக் காரணம் என்ன, அதில் உள்ள நியாயம் என்ன என்று கேட்க ஆரம்பித்த பிறகு, புள்ளி விவரங்களை அதற்காகச் சேகரிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. சென்சஸ் கணக்கிலே ஜாதி, மற்றவைகளைக் குறிப்பிடக்கூடாது என்று சொல்லிவிட்டதால் அதிலே இந்து, முஸ்லீம், கிருத்துவர் என்பதுதான் சேர்க்கப்பட்டது. அதிலே ஜாதிப் பெயர்கள் இல்லை. எனவே அதிலிருந்து புள்ளி விவரங்களை எடுக்க முடியாது. இதற்கென்று ஒரு குழுவை அமைத்து, அதன்மூலம் ஆராய்ந்து பார்க்கலாமென்று சொன்னார்கள். எங்களுக்கு அவகாசம் தாருங்கள் என்று கேட்டோம். குழு ஆராய்ந்து அறிய ஒரு ஆண்டும், அரசு அதை ஆராய்ந்து இறுதியாகத் தன்னுடைய பதிலைத் தர ஓராண்டும் என்று 2 ஆண்டுகள் அவகாசம் தந்தார்கள். அம்பாசங்கர் தலைமையிலான குழு அமைத்து, அவர்கள் பணியை மேற்கொண்டார்கள். அவர்கள் சென்ற மாதம்தான் அந்த அறிக்கையைத் தந்தார்கள். 2 ஆண்டுகள் முடிந்துவிட்டதால், மேலும் கால அவகாசம் கேட்டோம். 31—3—1985 வரையில் அவகாசம் தருகிறோமென்று சுப்ரீம் கோர்ட் சொன்னது. அம்பாசங்கர் தலைமையிலான குழுவின் ரிப்போர்ட்டில் பல உறுப்பினர்கள் மாறுபட்ட, வேறுபட்ட கருத்துக்களைச் சேர்த்துத் தந்திருக்கிறார்கள். சட்டத்துறையும், தொடர்புள்ள மற்ற துறைகளும் அதை ஆராய்ந்து கொண்டிருக்கிறார்கள்.

**டாக்டர் மு. கருணாநிதி :** 50 சதவிகிதம் இருப்பதற்கு என்ன நியாயம் அதை நீங்கள் நிரூபிக்க வேண்டுமென்று தான் சுப்ரீம் கோர்ட் ஓர் அறிவிப்பு செய்திருக்கிறது. அதன்படி அந்த 50 சதவிகிதம் இருப்பதற்கான நியாயத்தைக் கண்டுபிடிக்கத் தான் அந்தக் குழுவின் தலைவர் முனைந்திருக்க வேண்டுமே தவிர 50 சதவிகிதம் இருப்பது நியாயமல்ல, 31 சதவிகிதம் இருப்பது போதுமானது என்று குழுவின் தலைவர் பரிந்துரை செய்வது இந்த அரசுக்கு ஒத்ததுதானா?



1985 ஏப்ரல் 11]

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** 18 சதவிகிதம் தாழ்த்தப்பட்டவர்களுக்கும் பழங்குடி மக்களுக்கும், 50 சதவிகிதம் பிற்பட்ட மக்களுக்கும் என்று ஒதுக்கியிருக்கிறோம். 31 சதவிகிதத்திலிருந்து 50 சதவிகிதமாக ஏன் செய்தீர்கள், அதற்கு என்ன காரணம், என்ன அடிப்படை என்று கேட்டார்கள். அந்தக் கருத்து மட்டுமல்லாமல், வேறு சில பிரச்சினைகளும் அம்பாசங்கர் குழுவிடம் ஒப்படைக்கப்பட்டது. பல வகுப்பினர்கள், எங்களையும் பிற்பட்டோர் பட்டியலில் சேருங்கள், சேருங்கள் என்று சொல்ல முன் வந்தார்கள். அதையும் சேர்த்து ஆராயும்படி குழுவைக் கேட்டுக்கொண்டோம்.

**டாக்டர் மு. கருணாநிதி :** இன்னும் அதிகமான வகுப்பினர்கள் கேட்கும் போது, 50 சதவிகிதம் என்பது நியாயப் படுத்த வேண்டிய ஒன்றாக இருக்கிறது. அதை 60 சதவிகிதமாக ஆக்க வேண்டுமென்று சொல்லியிருந்தால அதை வரவேற்று இருக்கலாம். அதற்குப் பதிலாக 31 சதவிகிதமாகவே இருக்கலாமென்று சொல்லுவது முறைதானா? அது சுப்ரீம் கோர்ட்டில் வழக்கு தொடுக்கிறவர்களுக்கு சாதகமாக அமையாதா என்று கேட்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** அந்தக் கருத்துக்கு வருகிறேன். சட்டநாதன் குழு சில வகுப்பினரை விலக்கும்படியாகச் சொல்லியிருக்கிறது. அதை ஏன் விலக்கவில்லை என்று சுப்ரீம் கோர்ட் கேட்டது. சட்டநாதன் குழு ஓர் அறிக்கையைத் தந்தது. அவர்கள் கூறிய கருத்துக்கள் அத்தனையையும் அரசு ஏற்றுக்கொள்ளவில்லை. சிலபல கருத்துக்களை ஏற்றுக் கொண்டோம். நாட்டுக்கு ஒத்து வராததை ஏற்றுக்கொள்ளவில்லை. சட்டநாதன் குழு கூட தெளிவுபடச் சொல்லவில்லை. 10, 12 வகுப்பினரை நீக்கலாம் என்று சொன்னார்களே தவிர, இன்னின்ன வகுப்பினரை நீக்குங்கள் என்று சொல்லவில்லை. அந்த 10, 12 வகுப்பினர் யார் என்று தெரியவில்லை. அந்தப் பிரச்சினையையும் தீர ஆராய இவர்களிடம் கொடுத்தோம். இந்த நேரத்தில் ஒன்றை மட்டும் தெரிவித்துக்கொள்கிறேன். அம்பாசங்கர் குழு கொடுத்த அறிக்கையிலுள்ள அத்தனை பரிந்துரைகளையும் இந்த அரசு ஏற்றுக்கொள்ள வேண்டுமென்ற அவசியமில்லை. அவர்கள் கொடுத்திருக்கிற கருத்துக்களிலே சில பல கருத்துக்கள் நமக்கு மாறுபட்டதாக இருக்கலாம். அதை ஆராய்ந்து, அரசு ஒரு முடிவெடுத்த பிறகுதான் முழு விவரங்கள் தரப்படும். ஒன்றை மட்டும், சட்டப் பேரவையில் தெரிவித்ததுபோல, இந்த அவையிலும் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த அரசைப் பொறுத்தவரையில் கொண்டுள்ள எண்ணம், எக்காரணம் கொண்டும் 50 சதவிகிதத்திற்குக் குறையக்கூடாது என்பதுதான். அந்த அடிப்படையிலே தான் சுப்ரீம் கோர்ட்டில் வாதாடுகிறோம். அந்த அடிப்படையில் இந்த அரசு நடவடிக்கை எடுக்குமென்று கூறிக்கொள்ள

விரும்புகிறேன். ஆனால் அம்பாசங்கர் சொல்லியிருக்கிற முழுக் கருத்தையும் நாம் ஏற்றுக்கொண்டு தான் ஆக வேண்டுமென்ற அவசியம் இல்லை. அதற்கு மாறுபட்ட முடிவை எடுப்பதற்கு கூட இந்த அரசுக்கு அதிகாரம் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**டாக்டர் மு. கருணாநிதி :** அம்பாசங்கர் அறிக்கையில் 20, 21 கருத்துக்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. சுப்ரீம்கோர்ட்டில் இது எடுத்துக்கொள்ளப்படும் போது அம்பாசங்கர் கருத்துக்களை மட்டும் எடுத்துக்கொள்ளும் வகையில் அணுகுமா அல்லது அதன் இதர உறுப்பினர்கள் சொல்லியுள்ள கருத்துக்களையும் எடுத்துக்கொள்ளும் வகையில் அணுகுமா என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** சுப்ரீம் கோர்ட் இதனை அணுகும்போது அம்பாசங்கரின் கருத்தை மட்டும் எடுத்துக்கொள்ளாது. உறுப்பினர்கள் மாறுபட்ட கருத்துக்களைச் சொல்லியிருந்தால் அவற்றையும் கருத்தில் எடுத்துக்கொள்வார்கள். அவருடைய கருத்தை மட்டும் எடுத்துக் கொள்கிற சூழ்நிலை கூடாது, அப்படி நடக்கவும் செய்யாது. எந்த வகையில் பார்த்தாலும் இந்த மாநிலத்தினுடைய அடிப்படை உணர்வு, வளர்த்துக் கொண்டு வந்திருக்கிற சமூக நீதி ஆகியவற்றின் அடிப்படையில்தான் இதனை முடிவு செய்ய வேண்டும். அந்த எண்ணத்தில் நாம் இருப்பதால் இந்த விஷயத்தில் யாரும் பீதியடையக்கூடாது. பத்திரிகையில் சிலபல செய்திகள் வருவதன் மூலம் மக்களிடையே இது வேகத்தை ஊட்டக் கூடும். ஆனால் நம்முடைய சமூக நீதி காப்பாற்றப்படும் அளவுக்கு இந்த அரசு இதில் கண்ணும் கருத்துமாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**டாக்டர் மு. கருணாநிதி :** ஏற்கெனவே மாநில சுயாட்சிக்காக ராஜமன்னார் குழு அமைக்கப்பட்டிருந்தது. இப்போது இருக்கிற அரசு இதிலே இன்னும் புரட்சிகரமான விஷயங்களைக் காண்பதற்காகவோ அல்லது வேறு இதுபற்றி தெரிந்துகொள்வதற்காகவோ ராமபிரசாத் ராவ் கமிஷன் ஒன்றை அமைத்திருக்கிறது. அதுபோல் அம்பாசங்கர் இந்த 50 என்பதை நீட்டிப்பதாக இல்லை என்கிற காரணத்தால் சுப்ரீம் கோர்ட் இதுபற்றி ஆராய்ந்து அறியப் போகிறது. இந்நிலையில் குழு அமைக்கப்பட்ட நோக்கத்திற்கு மாறுபாடாக அம்பாசங்கர் செயல்பட்டுள்ளதால் அம்பாசங்கர் குழுவைக் கலைத்துவிட்டு உள்ளபடியே பிற்பட்டோர் நலனில் அக்கறை கொண்டவர் தலைமையில் ஒரு கமிட்டி அமைக்கப்படுமா?



**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** ஏற்கெனவே ராஜமன்னார் குழு இருக்கிற சூழ்நிலையையொட்டி, மத்திய மாநில உறவைப்பற்றி ஓர் அறிக்கை வெளியிட்டது. அந்தக் குழுவின் அறிக்கையின் அடிப்படையில் அது ஆராய்ந்த தன்மையில் ஏதாவது மாற்றங்கள் தேவையா, காலத்தின் தன்மை, உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பு போன்ற எல்லாவற்றையும் மேலும் ஆராய்ந்து, மேலும் செம்மையாக அறிக்கை தருவதற்காகத் தான் ராமபிரசாத் ராவ் தலைமையில் இன்னொரு குழு அமைக்கப்பட்டது. இங்கே பேசப்பட்ட பிரச்சினையைப் பொறுத்தவரையில் 31 ஆம் தேதி என்று சுப்ரீம்கோர்ட் காலக் கெடு வைத்தது. இந்த காலக் கெடு போதாது, இன்னும் இதற்கு காலக்கெடு தர வேண்டுமென்று தமிழக அரசு சார்பாக கேட்டுக் கொள்ளப்பட இருக்கிறது என்பதைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன். டாக்டர் கலைஞர் அவர்கள் சொல்கிற கருத்தின்படி கமிஷன் சொல்லியிருக்கிற கருத்துக்கள் நமக்கு பாதகமாகவோ அல்லது நம்முடைய கருத்துக்கு ஒட்டி வராமல் இருந்தாலோ வேறு ஒரு கமிஷன் அமைக்க வேண்டுமென்ற சூழ்நிலை ஏற்பட்டால் அதுபற்றி அரசு ஆலோசிக்கும். ஆனால் திட்டவட்டமாகவும் தெளிவாகவும் அதை அமைக்கும் என்று நான் சொல்லவில்லை. அதற்கான சூழ்நிலை ஏற்பட்டால் மாத்திரமே அது சாத்தியம். எந்த வகையிலும் நாம் நியாயம் பெற வேண்டும், சமூக நீதி பெற வேண்டும் என்பது தான் நம்முடைய எண்ணம், நோக்கம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து, நான்காவது ஊதியக் குழுவின் அறிக்கை நேற்றையதினம் மாண்புமிகு முதலமைச்சரிடத்திலும் என்னிடத்திலும் தரப்பட்டிருக்கிறது. முன்னாள் நீதிபதி திரு. என். எஸ். இராமசாமி தலைமையில் நான்காவது ஊதியக் குழு அமைக்கப்பட்டது. திருமதி அஞ்சனி தயானந்த், ஐ.ஏ.எஸ். அதன் உறுப்பினராகவும், திரு. கௌரிசங்கர், ஐ.ஏ.எஸ்., அதன் செயலாளராகவும் பணியாற்றினர். 9—6—1984-ல் இது அமைக்கப்பட்டது. 14-6-1984 அன்று இந்தக் குழு பொறுப்பேற்று அதன் பிறகு விண்ணப்பங்கள் போன்றவைகளைச் சேகரிக்க ஆரம்பித்து அதன் அடிப்படையில் வேலை தொடங்கியது அந்த வகையில் உள்ளபடியே குழு தன்னுடைய வேலையைத் தொடங்கியது ஆகஸ்ட் மாதத்திலிருந்து தான். அதற்கு பிறகு 10—4—1985 அன்று அதாவது நேற்றையதினம் குழு தன்னுடைய அறிக்கையை என்னிடத்திலும் மாண்புமிகு முதலமைச்சரிடத்திலும் தந்துள்ளது. இவ்வளவு குறுகிய காலத்தில் 4-வது ஊதியக் குழு ஆராய்ந்து அறிந்து தன்னுடைய அறிக்கையை தந்ததற்காக அதில் பணியாற்றியவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்த அறிக்கையை அரசு ஆராய்ந்து அறிந்து, இருக்கிற நிலைமைகளின்படி எல்லாவற்றையும் பார்த்து,

முடிந்த முடிவாக என்ன முடிவு என்பதை அறிய எப்படியும் ஒரு மாத காலம் ஆகும் முந்தைய ஊதியக் குழுவின் அறிக்கையை அப்படியே ஏற்றுக் சொல்லிவிட்ட காரணத்தால் பிறகு தனி நபர் குழு போட வேண்டிய நிலை ஏற்பட்டது. அப்படிப்பட்ட நிலைமைகளுக்கு இடம் இல்லாமல் நியாயத்தின் அடிப்படையில் செய்ய இயலுமா என்பதைப் பற்றியும் அரசு யோசிக்கும் என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன்.

(பிற்பகல் 1-25)

அடுத்ததாக, கடலூர் அருகே தேவாரம்பட்டினத்தில் படகு விபத்தில் 6—3—1985 அன்று பெரியவர்கள் 43 பேர்களும், சிறுவர் சிறுமிகள் 10 பேர்களும், ஆக 53 பேர்கள் இறந்துவிட்டதாகவும், அவர்களுக்கு தக்க நஷ்டஈடு வழங்கப்பட வேண்டுமென்றும் மாண்புமிகு உறுப்பினர்கள் தெரிவித்தார்கள். இறந்தவர்களின் வாரிசுகளுக்கு தமிழக அரசு ரூ. 2,000 வீதம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் நிதியிலிருந்து கருணைக் கொடையாக வழங்கப்பட்டிருக்கிறது. இப்போது அதற்குப் பிறகு, அது போதாது என்று, இந்தியப் பிரதமர் அவர்களிடம் சொல்லப்பட்டு, ஓரளவு தொகை அளிக்கப்பட வேண்டுமென்று நாம் கேட்டிருந்தோம். அந்த அடிப்படையில் மத்திய அரசின் பிரதமர் நிதியிலிருந்து. மாண்புமிகு பிரதமர் அவர்கள் இறந்துபோன பெரியவர்களுக்கு ரூ. 5,000-மும், சிறுவர் சிறுமியருக்கு ரூ. 2,500-ம் வழங்கலாம் என்று ஆய்வு செய்து நிதியுதவி அளித்திருக்கிறார்கள். மத்திய அரசு தருகிற ரூ. 5,000-த்துடன் நாம் தருகிற ரூ. 2,000 சேர்ந்து ரூ. 7,000 அவர்களுக்குத் தரப்படுகிறது. இறந்து போனவர்கள் மீனவர்களாக இருந்தால், மீனவர் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம், ஆயுள் காப்பீட்டுக் கழகத்திடமிருந்து ரூ. 15,000 வரை கிடைக்கும் வாய்ப்பு இருக்கிறது என்று சொன்னோம். அப்படிப்பட்டவர்கள் யாரும் இருந்தால் தெரிவிக்கலாம் என்றும் சொல்லியிருக்கிறோம்.

மற்றொன்று, ஆசிரியர்களுடைய பிரச்சினைகளைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லோருமே வலியுறுத்தினார்கள். அவர்களுக்கு முதலில் ஒரு வேண்டுகோளாக ஒன்றை வைக்க விரும்புகிறேன். ஆசிரியர்களுக்கென்று பல்வேறு கோரிக்கைகள், பிரச்சினைகள் இருந்து கொண்டுதான் இருக்கின்றன. கூடுமானவரையில் அரசும், ஆங்காங்குள்ள பிரச்சினைகளைத் தீர்ப்பதில் கண்ணுங்கருத்துமாக இருந்து கொண்டு பிரச்சினைகளைத் தீர்க்கிறது. அவ்வப்போது எழும் பிரச்சினைகளுக்குத் தக்கவாறு வினாவிடைகள் விடைகள் மூலமும், கவன ஈர்ப்புத் தீர்மானங்கள் மூலமும் தெளிவு பெறுவதற்கான தன்மைகள் இருக்கின்றன. அதையும் மீறி பல்வேறு சலுகைகள்





நிறைவேற முடியாத நிலைமையில், நிறைவேற்றப்பட வேண்டுமென்று சொல்கிறபோது, நான் சொல்வது கூடுமான வரையில் அதிகாரிகளிடமும் கல்வியமைச்சரிடமும் பேச்சுவார்த்தைகள் மூலம் தீர்த்துக்கொள்ள முயற்சி எடுப்பது நல்லது என்று திரும்பத் திரும்பச் சொல்லியிருக்கிறேன்.

இப்போதும் கூட போராட்டத்தில் ஈடுபட்டிருக்கிற ஆசிரியர் பெருமக்களையும், அதற்குக் காரணமாக இருப்பவர்களையும் நான் கேட்டுக்கொள்வது, இந்தப் போராட்டத்தை உடனடியாக நிறுத்த வேண்டுமென்பதுதான், பேசித் தீர்த்துக் கொள்ளலாம் என்ற அடிப்படையில், இதை நிறுத்த வேண்டுமென்று நேற்றுகூட பேரவையின் சார்பாகக் கேட்டுக் கொண்டேன். ஒன்றை மட்டும் நான் குறிப்பிட விரும்புகிறேன். உறுப்பினர்களுக்கு நானும் கல்வியமைச்சரிடத்தில் பேசி, இதற்கு ஒரு முடிவெடுக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறேன். நிதித்துறை சார்பாகத்தான் அப்படிச் சொல்லியிருக்கிறேன். ஆசிரியர்கள் பிரச்சினைகளுக்கு உடனடியாக ஒரு முடிவு எடுக்க வேண்டுமென்பதில் அக்கறை கொண்டு, அவர்களுடைய பிரதிநிதிகள் பள்ளிக் கல்வி இயக்குநரோடு பேச்சுவார்த்தை நடத்த, கல்வி அமைச்சர் மூலம், ஏற்பாடு செய்கிறேன் என்று சொல்லியிருக்கிறேன். அதை மறுபடியும் வலியுறுத்தியிருக்கிறேன். இருக்கிற பிரச்சினைகள் எல்லாம் அதிகாரிகள் மட்டத்தில் ஆராய்ந்து முடிவெடுங்கள் என்று சொல்லி, அது செகரட்டரி அளவுக்கு வருகிறபோது, கல்வியமைச்சரும் நானும் உட்கார்ந்து கல்வித் துறைச் செயலாளருடன் பேசி, எதை எதை உடனடியாகத் தீர்க்கலாம் என்று பேசி நடவடிக்கை எடுக்கமுடியும் என்று கல்வியமைச்சரிடம் நான் சொல்லியிருக்கிறேன். அப்படியே இயக்குநரிடத்திலும் சொல்லியிருக்கிறேன். இப்போது ஏற்பட்டிருக்கிற இந்தப் பிரச்சினையைப் பொறுத்தவரையில், ஆசிரியர் பிரதிநிதிகள் எடுத்துக் சொன்ன கருத்துக்களை நானும் ஆராய்ந்தேன். கல்வி அமைச்சரிடத்திலும் இதுபற்றி எடுத்துச் சொல்லியிருக்கிறேன்.

தேர்வாணைக் குழு மூலம் தேர்ந்தெடுக்க வேண்டுமென்று ஒரு முறை வைத்து ஆண்டுக்கு ஒரு முறை, 6 மாதத்திற்கு ஒரு முறை அவ்வப்போது அடிக்கடி அவர்களைச் சேர்ப்பார்களேயானால், அது சரியா இல்லையா என்ற பிரச்சினை வந்திருக்காது. ஆசிரியர்கள் பிரதிநிதிகள் எடுத்துச் சொன்ன மாதிரி, அது நியாயமாக இருக்கமுடியும். ஆனால் 4 ஆண்டு, 5 ஆண்டு, 6 ஆண்டு காலமாக விட்டுவைத்துவிட்டு, அவர்களை 10(ஏ) (1) மூலம் பெற்று, ஐந்தாண்டுக் காலம் கழித்து அவர்களை வேண்டாம் என்று சொல்லி வீட்டுக்கு அனுப்புவது நியாயமில்லை என்பதை நான் ஏற்றுக் கொள்கிறேன், அதைவிட, அங்கே வைக்கப்படும் இன்டர்வியூவில், அரை நிமிடம், ஒரு நிமிடம்

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1985 ஏப்ரல் 11

அன்றுதான் கேள்விகள் கேட்கிறார்கள். ஒரு ஆசிரியரின் தன்மையைப் பற்றி அரை நிமிடக் கேள்வியில் எப்படிப் புரிந்துகொள்ள முடியும்? அதையும் நான் ஏற்றுக்கொள்கிற சூழ்நிலை இல்லை. ஆகவேதான், நானும் கல்வி யமைச்சரும் சேர்ந்து பேசி, அதைப் பற்றி ஒரு முடிவைத் தெரிவிக்கிறோம் என்பதை மீண்டும் உங்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். அதாவது

(பிற்பகல் 1-30)

ஏற்கெனவே 10(ஏ) (1)-இல் வேலை பார்த்தவர்களில் எனக்குத் தெரிவித்த கருத்துப்படி—ஒரு 800 பேரை எடுத்திருக்கிறார்கள். ஒரு 800 பேருக்கு மேல் சேர்க்கப்படாமல் இருக்கிறார்கள். அவர்களில் 3 ஆண்டுகள், 4 ஆண்டுகள், 5 ஆண்டுகள் வேலை செய்தவர்கள் எல்லாம் வெளியில் அனுப்பப்பட்டிருக் கிறார்கள் என்று சொன்னார்கள். அவர்களைப் பொறுத்து நான் சொல்வது, ஓராண்டு காலத்திற்கு மேலாகத் தொடர்ந்து பணியாற்றி இருப்பவர்கள் அத்தனை பேரையும் நிரந்தரமாக எடுத்துக் கொள்வதற்கான முயற்சியை கல்வித் துறை அமைச்சர் மூலமாக அரசு செய்யும் என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். ஓராண்டுக் காலம், அதற்குப் பிறகும் இடம் காலி யாக இருக்குமானால், காலியாகவுள்ள இடங்களிலே, தேர்வாணைக் குழு தேர்ந்தெடுத்திருப்பவர்களில் தகுதியுடையவர்கள் இருந்தால், அவர் களைப் போடலாம். அவர்களில் தகுதியில்லாதவர்கள் இருப்பார்களானால், அவர்களை விலக்கிவிட்டு, ஓராண்டுக்குள் வேலை செய்தவர்களில் தகுதியுள்ள வர்கள் இருப்பார்களானால் அவர்களைச் சேர்க்கலாம். மாண்புமிகு உறுப்பினர் திரு. மயில்சாமி அவர்கள் தெரிவித்ததற்கு இணங்க ஏற்கெனவே இரண்டு ஆண்டு பணியாற்றி வீட்டுக்கு அனுப்பப்பட்டவர்களை அரசாணை மூலமாக நிரந்தரப்படுத்துவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

மாண்புமிகு உறுப்பினர்கள் சொன்னதைப்போல, தேர்வாணைக் குழு மூலமாகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறவர்களைக் கூட எதிர்காலத்தில் ஏற்படுகின்ற காலியிடங்களில் நிரப்பிக்கொண்டுவருவதில்கூட கடினம் இருக் காது என்று சொன்னார்கள். அதையும் அரசு ஆராய்ந்து அந்த முறையைக் கடைப்பிடிக்கும். ல்தர்வாளைக் குழுவைக் கலந்து இந்த அரசு இதைச் செய்யும் என்று கூறிக் கொள்கிறேன்.

இன்னொன்று நான் கேள்விப்பட்டேன். எந்த அளவுக்கு அது உண்மை என்று தெரியவில்லை. தீவிரமாக ஆராய்ந்து சொல்ல வேண்டுமென்று சொல்லி இருக்கிறேன். அதாவது, தேர்வாணைக் குழுவில் தேர்ந்தெடுக்கப் பட்டங்களின் பி.டி. படித்தவர்களைக்கூட தேர்ந்தெடுத்திருக்கிறார்கள் என்று சொன்னார்கள். அது உண்மையா இல்லையா என்று தெரியவில்லை.



1985 ஏப்ரல் 11] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

இதை நான் முழுக்க முழுக்க உண்மை என்றும் சொல்லவில்லை. இதை ஆராயும்படி சொல்லியிருக்கிறேன். அப்படி ஆராய்ந்து பார்த்து தகுதி யுள்ளவர்களை மட்டும்தான் பணியில் அமர்த்த முடியும் என்று கூறிக் கொள் கிறேன். இன்னொன்றையும் கூற விரும்புகிறேன். நானும் மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களிடத்திலே இது குறித்துக் கூறி இருக்கிறேன். நானும் கல்வி அமைச்சரும் கலந்து பேசி, தேர்வாணைக் குழுவிற்குப் போகிற நிலைமையையே மாற்றி, வேறு ஒரு ஏற்பாடு செய்து ஆசிரியர்களைத் தேர்ந் தெடுக்கலாமா என்று யோசித்துக் கொண்டிருக்கிறேன். காரணம், ஆண்டு தோறும் சுமார் 1000, 1500, 2000 செகண்டரி கிரேடு ஆசிரியர்கள், பட்டதாரி ஆசிரியர்கள், முதுநிலை பட்டதாரி ஆசிரியர்களைத் தேர்ந் தெடுத்துக் கொண்டிருக்கிறோம். இவ்வாறு 2000 ஆசிரியர்களைத் தேர்ந் தெடுக்கும்போது இதற்காகவே ஒரு தனி அமைப்பு ஏற்படுத்துவதற்காக ஒரு முயற்சி செய்யலாமா என்பதுபற்றி யோசித்துக் கொண்டிருக்கிறோம். அதைக் கல்வி அமைச்சரிடமும், முதலமைச்சரிடமும் கலந்துகொண்டு அப்படி ஒரு ஏற்பாட்டைச் செய்யலாம் என்று இருக்கிறேன். இவ்வாறு உடனுக்குடன் தேர்ந்தெடுக்கப்படும் நிலை இருந்தால், இப்போது ஏற்பட்டிருக்கிற இந்தச் சங்கடங்கள் எல்லாம் ஏற்பட்டிராது. தேர்வாணைக் குழு தேர்ந்தெடுக்கும் வரை காத்திருந்து, பணியிடங்களை நிரப்புவதால்தான் இந்தச் சங்கடங்கள் ஏற்படுகின்றன. அதுவும் அவர்கள் அரை நிமிடத்தில் ஒரு கேண்டிடேட்டை எடை போடுவது என்பது நியாயமாக இருக்காது. அதை மாற்றியமைக்க இயலுமா என்பதற்கு முயற்சி செய்கிறேன். இதைத் திட்டவட்டமாகச் சொல்லவில்லை. இதற்கு முயற்சி செய்கிறேன். எனக்கே அது பொருத்தமாகப் படுகிறது. இவ்வாறு கல்வி அமைச்சர் அவர்களையும் கலந்துகொண்டு, மற்றும் முதலமைச்சர் அவர்களையும் கலந்துகொண்டு, மாற்று ஏற்பாடு செய்கிற வரையும், இதுவரையிலே தேர்வாணைக்குழுவால் தேர்ந்தெடுக்கப்பட்டவர் களுக்கு வாய்ப்புக் கொடுத்து, அடுத்து நடைபெறுகின்ற முயற்சிகளில் செய்ய லாமா என்று யோசித்துக் கொண்டிருக்கிறோம் என்பதைத் தெரிவித்து இதனால் எவருக்கும் பாதகம் ஏற்படாது என்பதையும் தெரிவித்துக்கொள் கிறேன். ஆகவே, இந்தப் பிரச்சினைகள் வருகின்றபோது அவ்வப்போது இவைகள் தீர்வதற்கான முயற்சிகளிலே அரசு ஈடுபடும் என்பதையும் தொடர்ந்து ஈடுபடும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும் கல்வித்துறை கொள்கைக் குறிப்பின் மீதான விவாதத்தைத் தனியாக அடுத்த திங்களில் பேச இருப்பதன் காரணமாக, முழு விவரங்கள் அப்போது பேசலாம்; அதற்கு இடையிலே கூட பேசி முடிவுகளை எடுக்கலாம் என்று சொல்லி என்னுடைய உரையை முடிக்கிறேன். வணக்கம்.

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள், ஆசிரியர்கள் ஓரளவு மனம் மகிழத்தக்க அளவிலே அறிவிப்புச் செய்ததற்கு ஆசிரியர் சமுதாயம் சார்பிலே நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆனால் அதிலே ஒரேயொரு விஷயம். வீட்டுக்கு அனுப்பப்பட்டவர்கள், மீண்டும் எடுக்கப்படுவதைப் பற்றிச் சொன்னார்கள். இப்போது இருப்பவர்கள், நாளையோ மறுநாளோ வீட்டிற்கு அனுப்பப்படலாமோ என்ற ஐயப்பாட்டிலே இருக்கிறார்கள். ஆகவே தற்காலிக ஏற்பாடாக இருபாவர்களை அனுப்பாத நிலைக்கு ஏற்பாடு செய்தால் நலமாக இருக்கும்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** உடனே எப்படிச் செய்ய முடியும்? அரசாங்கம் ஆர்டர் போடவேண்டும். தேர்வாணைக்குழு தேர்ந்தெடுத்திருக்கிறது. அவர்களைக் கலந்து பேச வேண்டும். அவர்களை எல்லாம் கலந்து ஆலோசித்துச் செய்வோம். நான் சொன்ன கருத்துப்படி அதில் ஏற்படுகிற சங்கடங்கள் எல்லாம் தீர்க்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(பிற்பகல் 1-35)

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** திரு. மீனாட்சிசுந்தரம் அவர்கள் எழுந்து ஒரு விளக்கம் கேட்கிறார்கள். இதுமாதிரி திரு. சீத்தாபதி அவர்களும் ஒரு நாள் விளக்கம் கேட்டபோது, எதற்கு விளக்கத்திற்கு அனுமதித்தீர்கள் என்று கேட்டார்கள். இதுமாதிரி சில சந்தர்ப்பங்களில் அனுமதி கொடுக்க வேண்டிய அவசியம் இருந்தால் அனுமதிக்கிறோம். சட்டப்படி பார்த்தால் அனுமதிக்க முடியாது. அது திரு. மீனாட்சிசுந்தரம் அவர்களுக்கும் பொருந்தும். ஆகவே இந்தச் சந்தர்ப்பத்திலே அவர்கள் அதைக் கவனத்திலே கொள்ள வேண்டும்.

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, தலைவர் அவர்களுடைய கட்டளைக்குக் கீழ்ப்படிகிறேன். நான் கேட்டது விளக்கம். விடப்பட்ட பேச்சை மீண்டும் தொடர்ந்து பேசுவதற்கு அவர் அனுமதி கேட்டார் என்பதை நான் . . . ,

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** கேட்பது விளக்கமா அல்லது விடப்பட்டதற்குக் கேட்கிறாரா என்பது அவர் பேசின பிற்பாடுதான் தெரியுமே தவிர முதலிலேயே நாம் தெரிந்துகொள்ள முடியாது. சில சமயத்தில் விளக்கம் கேட்கிறபோது உறுப்பினர்கள், அமைச்சர்கள், இதை விட்டுவிட்டார்கள், இதற்கு என்ன விளக்கம் என்று கூடக் கேட்டிருக்கிறார்கள் அப்படிக் கேட்காமல் இல்லை.



**திரு. பா. ரா. தாமஸ் :** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் கல்வி அமைச்சர் அவர்களோடு கலந்து பேசி, நிரந்தரப்படுத்தப்படாத 10 (எ) (1) ஆசிரியர்களை நிரந்தரப்படுத்தக் கூடிய பெரும் முயற்சியை மேற்கொள்ள இருப்பது குறித்தும், ஏனைய சலுகைகளை வழங்க இருப்பது குறித்தும் எங்கள் அணியில் சார்பிலும், தமிழ் நாடு பட்டதாரி-முதுகலைப் பட்டதாரி ஆசிரியர் கழகத்தின் சார்பிலும் அமைச்சர் அவர்களுக்கு நன்றியையும், பாராட்டையும் தெரிவித்துக் கொள்கிறோம். அதேநேரத்தில், விரைவாக இந்தப் பிரச்சினையை முடிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்வதோடு கூட இன்னும் அதிக முக்கியமான பிரச்சினையாக உள்ள எல்.டி.சி.-ஐ தனியார் பள்ளி ஆசிரியர்களுக்கும், மாநகராட்சி, நகராட்சிப் பள்ளி ஆசிரியர்களுக்கும் விரிவுபடுத்துவது குறித்தும் திட்டவட்டமான நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன் . . .

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** தாங்கள் கேட்டுவிட்டதை மறுபடியும் பேச வேண்டாம்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, நான் கேட்டுக்கொண்டபடி ஆசிரியர்களாக இருக்கிற நீங்கள் இந்தப் போராட்டத்தை உடனே நிறுத்தி வைப்பதற்கும், மேற்கொண்டு அரசின் இப்படிப்பட்ட முயற்சிகளுக்கு ஆதரவு தருகிற அளவுக்கு நீங்கள், உங்களுடைய உதவியையும் செய்யும்படியாக நான் கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. பா. ரா. தாமஸ் :** துணைத் தலைவர் அவர்களே, இன்று பிற்பகல் உடனடியாகச் சென்று நாங்கள் நடவடிக்கைக் குழுவைக் கூட்டி அமைச்சர் அவர்கள் கூறிய கருத்துக்களுக்கு ஏற்ப நடவடிக்கை எடுப்போம். என்று உறுதி கூறுகிறேன்.

5. அரசின் தீர்மானங்கள்.

**(1). சட்டப் பேரவையின் பொதுக் கணக்குக் குழுவில் பணியாற்ற ஐந்து உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்தல்.**

**மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் :** மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவரவர்களே,

"1985-86 ஆம் நிதியாண்டிற்குரிய சட்டப் பேரவை பொதுக் கணக்குக் குழுவில் பணியாற்ற கீழ்க்கண்ட ஐந்து சட்டமன்ற மேலவை உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள் :—

1. திரு. மு. மாசிலாமணி
2. திரு. க. கலைமணி

[1985 ஏப்ரல் 11

3. திரு. அ. மயில்சாமி
4. திருமதி வி. ஜெயலட்சுமி
5. திரு. க. மீனாட்சிசுந்தரம்"

என்று முன்மொழிகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** அவை முன் உள்ள பிரச்சினை—

"1985-86 ஆம் நிதியாண்டிற்குரிய சட்டப் பேரவை பொதுக் கணக்குக் குழுவில் பணியாற்ற கீழ்க்கண்ட ஐந்து சட்டமன்ற மேலவை உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள் ;—

1. திரு. மு. மாசிலாமணி
2. திரு. க. கலைமணி
3. திரு. அ. மயில்சாமி
4. திருமதி வி. ஜெயலட்சுமி
5. திரு. க. மீனாட்சிசுந்தரம்"

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

**(2) சட்டப் பேரவையின் மதிப்பீட்டுக் குழுவில் பணியாற்ற ஐந்து உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்தல்.**

**மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் :** மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவரவர்களே,

"1985-86 ஆம் நிதியாண்டிற்குரிய சட்டப் பேரவை மதிப்பீட்டுக் குழுவில் பணியாற்ற கீழ்க்கண்ட சட்டமன்ற மேலவை உறுப்பினர்கள் ஐவர் தேர்ந்தெடுக்கப்படுவார்கள் :—

1. திரு. எஸ். ஆர். இராதா
2. திரு.காடுவெட்டி கண்ணப்பன்
3. திரு. சி. இராமலிங்கம்
4. திரு. ஏ. ஜே. தாஸ்
5. திரு. ஆர். கணேசன் என்கிற மிசா ஆர். கணேசன்"

என்று முன்மொழிகிறேன்.



1985 ஏப்ரல் 11]

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** அவை முன் உள்ள பிரச்சினை—

"1985-86 ஆம் நிதியாண்டிற்குரிய சட்டப் பேரவை மதிப்பீட்டுக் குழுவில் பணியாற்ற கீழ்க்கண்ட சட்டமன்றப் மேலவை உறுப்பினர்கள் ஐவர் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்;—

1. திரு. எஸ். ஆர். இராதா
2. திரு.காடுவெட்டி கண்ணப்பன்
3. திரு. சி. இராமலிங்கம்
4. திரு. ஏ. ஜே. தாஸ்
5. திரு. ஆர். கணேசன் என்கிற மிசா ஆர். கணேசன்"

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

**(3) சட்டப் பேரவையின் துணைச் சட்ட ஆய்வுக் குழுவில் பணியாற்ற ஐந்து உறுப்பினர்களை நியமனம் செய்தல்.**

**மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் :** மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவரவர்களே,

"1985-86 ஆம் நிதியாண்டிற்குரிய சட்டப் பேரவை துணைச் சட்ட ஆய்வுக் குழுவில் பணியாற்ற கீழ்க்கண்ட ஐந்து உறுப்பினர்களை மேலவை நியமனம் செய்கிறது ;—

1. திரு. ஆர். டி. சீத்தாபதி
2. திரு. சி. ஆர். கோலப்பா
3. திரு. நெல்லை பாலாஜி
4. திருமதி தாரா செரியன்
5. திரு. ஆர். கணேசன் என்கிற மிசா ஆர். கணேசன்"

என்று முன்மொழிகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** அவை முன் உள்ள பிரச்சினை :

"1985-86 ஆம் நிதியாண்டிற்குரிய சட்டப் பேரவை துணைச் சட்ட ஆய்வுக் குழுவில் பணியாற்ற கீழ்க்கண்ட ஐந்து உறுப்பினர்களை மேலவை நியமனம் செய்கிறது :—

(மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்) [1985 ஏப்ரல் 11

1. திரு. ஆர். டி. சீத்தாபதி
2. திரு. சி. ஆர். கோலப்பா
3. திரு. நெல்லை பாலாஜி
4. திருமதி தாரா செரியன்
5. திரு. ஆர். கணேசன் என்கிற மிசா ஆர். கணேசன் "

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

(4) சட்டப் பேரவையின் பொது நிறுவனங்கள் குழுவில் பணியாற்ற ஐந்து உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்தல்.

**மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் :** மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவரவர்களே,

" 1985-86 ஆம் நிதியாண்டிற்குரிய சட்டப் பேரவை பொது நிறுவனங்கள் குழுவில் பணியாற்ற கீழ்க்கண்ட ஐந்து சட்டமன்ற மேலவை உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள் :

1. திரு. க. சுப்பு.
2. செல்வி ஆ. லீலாவதி.
3. திரு. அ. ப. சிவராமன்.
4. திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்.
5. திரு. மு. செ. சங்கரலிங்கம் ".

என்று முன்மொழிகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** அவை முன் உள்ள பிரச்சினை :

" 1985-86 ஆம் நிதியாண்டிற்குரிய சட்டப் பேரவை பொது நிறுவனங்கள் குழுவில் பணியாற்ற கீழ்க்கண்ட ஐந்து சட்டமன்ற மேலவை உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள் :—

1. திரு. க. சுப்பு.
2. செல்வி ஆ. லீலாவதி.
3. திரு. அ. ப. சிவராமன்.
4. திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்.
5. திரு. மு. செ. சங்கரலிங்கம் ".

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.



1985 ஏப்ரல் 11]

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** மேலவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. மீண்டும் அவை நாளை, வெள்ளிக் கிழமை, காலை 10 மணிக்குக் கூடும்.

பின்னர், அவை ஒத்தி வைக்கப்பட்டது.

(பிற்பகல் 1-39)

6. அவை முன் வைக்கப்பட்ட ஏடுகள்.

அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

169. தமிழ்நாடு மின்னனு நிறுவனத்தின் 1983-84 ஆம் ஆண்டிற்கான ஏழாம் ஆண்டறிக்கை. (தமிழ் மற்றும் ஆங்கிலம்). [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619(A) பிரிவின்கீழ் அவை முன் வைக்கப்படுகிறது].

170. சோழன் பொறியியற் கழகத்தின் 1983-84 ஆம் ஆண்டிற்கான பத்தாம் ஆண்டறிக்கை. (தமிழ்) [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619 ( A ) பிரிவின் கீழ் அவை முன் வைக்கப்படுகிறது].

171. தமிழ்நாடு சர்க்கரைக் கழகத்தின் 1982-83 ஆம் ஆண்டிற்கான ஒன்பதாம் ஆண்டறிக்கை (தமிழ் மற்றும் ஆங்கிலம்). [1966 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619 (A ) பிரிவின்கீழ் அவை முன் வைக்கப்படுகிறது].

ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள், ஏனைய தாள்கள்.

இல்லை.

Vol 214 No. 5

25

பொருளடக்கம்
தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை நூலகம்
26 டிசம்பர் 1985
எழும்பூர் சென்னை-600 008

பக்கங்கள்

1 வினாக்கள்—விடைகள் .. 471—498

2 அறிவிப்புகள்—

(1) ஆளுநரிடமிருந்து செய்தி .. 498

(2) பேரவையிலிருந்து செய்தி .. .. 499

(3) அவைக் குழுவிற்கு உறுப்பினர்கள் தேர்தல் 499

(4) உரிமைக் குழுவிற்கு உறுப்பினர்கள் தேர்தல் 500

(5) பார்வையாளர் மாடங்களில் அமர்ந்துள்ளவர்கள் நடந்து கொள்ள வேண்டிய முறை 519

(6) கவன ஈர்ப்புத் தீர்மானம் .. .. 521

3 உரிமைப் பிரச்சினை—

'அண்ணா' பத்திரிகையில் அவை நடவடிக்கை குறித்து வெளியான செய்தி குறித்து .. .. .. 501—502

4 கவன ஈர்ப்பு—

(1) தொலைக் காட்சியில் தமிழ் ஒளிபரப்பு நேரம் குறைக்கப்பட்டுள்ளது குறித்து 502—506

(2) நாச்சியார் கோவில் அரசினர் மேல்நிலைப் பள்ளியில் பயிலும் பதினோராம் வகுப்பு மாணவர்கள் மதிப்பெண் சான்றிதழ்களில் 'CANCELLED' என்ற முத்திரையைப் பொறித்து விட்டதால், அவை செல்லாதவையாகியுள்ளது குறித்து .. 506—511

(3) 1985 மார்ச்சு மாதம் 10-ஆம் வகுப்புப் பொதுத் தேர்வு எழுதிய மாணவர்கள் ஆங்கிலம் மற்றும் கணித வினாத் தாள்கள் குறைபாடு உள்ளனவாக இருந்தது குறித்து .. .. 511—519

5 மேலவை விதி 82-ன் கீழ் அமைச்சரின் அறிக்கை—

தமிழ் நாடு பட்டதாரி, முதுகலைப் பட்டதாரி ஆசிரியர்கள் சங்கத்தின் கோரிக்கைகள் குறித்து அரசு முடிவு குறித்து .. 520—521

D-2 C 22—1

V211,32 N85
N85.214.4-5;1
143949

**மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் :** தலைவர் அவர்களே, எங்கெங்கே விடுதிகள் அல்லது ஓட்டல்கள் இல்லையோ அங்கெல்லாம் ஓட்டல்களை ஆரம்பிப்பது என்பது சுற்றுலாத் துறையின் நோக்கமுமல்ல, திட்டமுமல்ல. ஓட்டல்கள் கட்டுவது அல்லது தங்குவதற்கு இடம் கட்டுவது என்பது தனியார் முயற்சிகளைப் பொறுத்தும் நகரப் பகுதிகளின் தேவைகளைப் பொறுத்தும் மேற்கொள்ளப்படுகிறது. அதற்கு அரசு ஊக்கம் அளித்து வருகிறது. சுற்றுலாத் துறைக்கு ஊக்கம் அளிக்கும் வகையில் சுற்றுலாத் தலங்கள் இருக்கும் பகுதிகளில் தனியார் அதிகமாக லாபம் கிடைக்காது என்று கருதி, அந்த அடிப்படை வசதிகளைச் செய்யாமல் இருந்தால், அத்தகைய இடங்களில் சுற்றுலாவின் வளர்ச்சியை அடிப்படையாகக் கொண்டு இத்தகைய விடுதிகளை அமைக்கும் திட்டத்தில் இத்துறை ஈடுபடுகிறது. அந்த அடிப்படையில் எதிர்காலத்தில் கடலூர் பகுதியில் அல்லது பண்ருட்டி வழியாகச் செல்கிற தஞ்சை நெடுஞ்சாலைப் பகுதிகளில் எங்கெங்கே இத்தகைய வசதிகள் மற்றும் சூழ்நிலைகள் ஏற்படுகின்றனவோ அதையொட்டி எதிர்காலத்தில் இது பரிசீலிக்கப்படும்.

**திரு. எல். ஜெயச்சந்திரன் :** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறியதைப்போல், தற்சமயம் அப்படி சுற்றுலா விடுதிகளை அமைக்கும் எண்ணம் அரசுக்கு இல்லை என்றாலும், தனியார் அதுபோன்ற சுற்றுலா விடுதிகளை ஆரம்பிப்பார்களானால், அதற்கு அரசு நிதி உதவி செய்ய முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் :** தனியார் இதனைப் போன்ற ஓட்டல்கள் அல்லது விடுதிகள் கட்டுவதற்கு தமிழக அரசின் பல்வேறு நிதி உதவி நிறுவனங்கள் கடன் வழங்கி வருகின்றன. மத்திய அரசிலும் இதற்காகக் கடன் உதவிகள் வழங்குகிறார்கள்.

**திரு. சி. இராமலிங்கம் :** தென்னாற்காடு மாவட்டத்தின் தலைநகரான கடலூர் — திருப்பாப்புலியூர் பகுதியில் உள்ள மஞ்சகுப்பம் மிகவும் புகழ் பெற்ற இடமாகும். அங்கே வெள்ளைக்காரர் ஆதிக்கம் இருந்தபோது, ராபர்ட் கிளைவ் கூட அங்கே இருந்து ஆட்சி செலுத்தியதாக வரலாறு இருக்கிறது. அதைப்போலவே சைவக் குரவர்களில் ஒருவரான அப்பரின் நினைவாக அறநிலையத் துறையின் சார்பிலும் ஒரு நினைவு ஆலயம் இருக்கிறது. திருப்பாப்புலியூரில் புகழ்பெற்ற ஞானியார் மடமும் இருக்கிறது. எனவே இவர்களின் நினைவாகவாவது அறநிலையத் துறையின் மூலமாகவாவது ஒரு விடுதி கட்டி சிறப்பிக்க அரசு முன்வருமா ?



**மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் :** தனியாகக் கேள்வி போட்டால், இதைப்பற்றி அறநிலையத் துறையிலிருந்து விரிவாகப் பதில் தர முடியும். கிளைவ் பற்றி இப்போது நினைவுச் சின்னம் எழுப்பி அவருக்காக நிகழ்ச்சி நடத்துவது சுற்றுலாத் துறைக்குப் பயன் தராது. நம் சமுதாயத்திற்கும் பயன் அளிக்காது.

(முற்பகல் 10-05)

**திரு. அ. ப. சிவராமன் :** தலைவர் அவர்களே, சுற்றுலாப் பயணிகளைக் கவருகிற வகையில் பழுப்பு நிலக்கரிச் சுரங்கம் பண்ருட்டிக்கு அருகில் இருக்கிறது. அதைப் போலவே இராமலிங்க அடிகளார் பிறந்த வடலூரும் பண்ருட்டிக்கு அருகில் உள்ளது. உலகப் புகழ் பெற்ற பொம்மையைச் செய்கிற அப்பாளு பத்தர் மற்றும் அவர் குடும்பம் பண்ருட்டிக்கு அருகிலே உள்ளது. ஆகவே, பண்ருட்டியில் சுற்றுலா மாளிகை அமைக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் :** சமயத் துறையிலேயும், அறிவுத் துறையிலேயும் புகழ்பெற்ற வள்ளல் இராமலிங்க அடிகளார் பிறந்த, சரித்திரச் சின்னங்களை உருவாக்கியிருக்கின்ற வடலூர் பகுதியை இந்தியாவினுடைய சிறந்த தேசிய சுற்றுலா மையமாக, வழிபாட்டு மையமாக ஆக்க வேண்டும் என்ற கருத்து அரசின் பரிசீலனையில் இருக்கிறது. அதையொட்டித்தான் நான் முதலிலே குறிப்பிடும்போது, தஞ்சாவூர் நெடுஞ்சாலையில் அப்படிப்பட்ட தங்கும் இடம் அமைக்க முடியுமா என்பதை சுற்றுலாத் துறை பரிசீலிக்கும் என்று தெரிவித்தேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. சிவராமன் சொல்லுகிற கருத்தின் அடிப்படையில், இந்தக் கருத்துக்கள் பரிசீலிக்கப்படும்.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** கடலூர், தென்னாற்காடு மாவட்டத் தலைநகராக இருப்பதால், கடலூருக்கு அருகில் உள்ள சில சுற்றுலா மையங்களைப் பார்வையிட கடலூரில் தங்கி சென்று வருகிறவர்கள் இருக்கிறார்கள். ஆகவே அந்தக் கண்ணோட்டத்திலேதான் திரு. ஜெயச்சந்திரன் கேள்வியை எழுப்பினார்கள். இப்போது சுற்றுலா விடுதியை அங்கே அமைக்காவிட்டாலும், இளைஞர் விடுதியையாவது அமைக்க அமைச்சர் அவர்கள் முயற்சிகளை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் :** தென்னாற்காடு மாவட்டத்தைப் பொறுத்தவரையில், மிகச் சிறந்த ஆன்மீக தலங்களும், சுற்றுலாப் பயணிகளைக் கவர்கின்ற அளவிற்கு தலங்களும் நிறைய இருக்கின்றன. ஆனால்

[illegible]

இவ்வளவு காலமாக அவைகள் கண்டுபிடிக்கப்படாத பகுதிகளாக, அறிவிக்கப்படாத பகுதிகளாக இருந்து வந்திருக்கின்றன. சிதம்பரத்தைப் பொறுத்த வரையில், புகழ்பெற்ற ஆலயம் இருப்பதால், சிதம்பரத்தை நோக்கிச் செல்கிற மக்களுக்கு அடிப்படை வசதிகள் செய்து தர வேண்டும் என்று சுற்றுலாத் துறையின் சார்பிலே விடுதி கட்டப்பட்டு சிறப்பாக நடைபெற்று வருகிறது. அதற்கு அருகிலே பிச்சாவரம் என்ற இயற்கை வளம் நிறைந்த, நீர் வளம் நிறைந்த காட்டுப்பகுதி இருக்கிறது. இது பேரறிஞர் அண்ணா அவர்களால் பாராட்டப்பெற்ற பகுதி. அந்தப் பகுதியை இந்தியாவினுடைய மிகச் சிறந்த சுற்றுலாப் பகுதியாக வளர்க்க வேண்டும் என்ற அண்ணாவின் கருத்தை ஒட்டி, அங்கே சுமார் 20 இலட்சம் ரூபாய் செலவில் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டிருக்கின்றன. இன்னும் 12 இலட்சம் ரூபாய் செலவில் திட்டங்கள் மேற்கொள்ளப்பட இருக்கின்றன.

அதைப் போலவே கல்ராயன் மலைப் பகுதியைப் பொறுத்த வரையில், நல்ல மலைவாசஸ்தலமாக ஆக்க முடியும் என்ற திட்டம் பரிசீலனையில் இருக்கிறது. அதைப் போலவே வள்ளலார் பிறந்த வடலூர் பகுதியிலும்—தமிழகத்தின் தலைசிறந்த தத்துவ ஞானியாக விளங்கிய அவருடைய கருத்துக்களை, இராமகிருஷ்ண பரமஹம்சர் வாழ்ந்த அதே காலத்திலே வாழ்ந்த இராமலிங்க அடிகளாரின் சிறப்புகளை இந்தியாவிற்கும், உலகத்திற்கும், எடுத்துச் சொல்ல வேண்டும் என்ற கருத்து மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவர் அவர்களால் இந்த நாட்டுக்கு அறிவிக்கப்பட்டு—சுற்றுலாப் பயணிகள் பார்த்து வணங்கிச் செல்லும் வகையில் ஏற்படுத்த, அதற்கான திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன.

அதைப் போலவே சமயப் புலவர்களில் மிகச் சிறந்த திருமுறை தந்த, சைவ சமயத்திற்கும், 1300 ஆண்டுகளுக்கு முன்பு சிறப்புத் தந்த திருநாவுக்கரசர் பிறந்து வாழ்ந்த அந்தப் பகுதியும் அங்கே இருக்கிறது. ஆகவே இவ்வளவு சரித்திரச் சிறப்பு மிக்க, வரலாற்றுச் சிறப்புமிக்க, தமிழ் மக்களுடைய பெருமைகளை எடுத்து விளக்குகிற பகுதிகளும், இயற்கைச் சிறப்பு மிக்க பகுதிகளும் உள்ள தென்னாற்காடு மாவட்டம் விரைவிலே சுற்றுலாப் பயணிகளுடைய கவனத்தைக் கவர்கிற அளவிற்கு, நம்முடைய தமிழகத்தின் வரைபடத்திலே இடம் பெறுகிற திட்டங்கள் சுற்றுலாத் துறையின் ஆய்வில் இருக்கின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதையொட்டி இப்படிப்பட்ட [illegible] இடங்கள் அல்லது இளைஞர் விடுதிகள் அமைக்க திட்டங்கள் எடுத்துக்கொள்ளப்படும்.



1985 ஏப்ரல் 12]

**சுற்றுலாத் துறையினால் சிற்றுண்டிச்சாலைகள் அமைக்கப்படுதல்.**

*22. வினா.—திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்: மாண்புமிகு செய்தி மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தமிழகத்தில், நெடுஞ்சாலைகளின் முக்கிய இடங்களில், உணவு விடுதி மற்றும் சிற்றுண்டிச் சாலைகளை அமைக்கும் கருத்துரு ஏதும் சுற்றுலாத் துறையின் பரிசீலனையில் உள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விவரங்கள் யாவை?

மாண்புமிகு திரு. இராம. வீரப்பன்: (அ) ஆம்.

(இ) உடனடியாக தேனி, காரைக்குடி ஆகிய இடங்களில் நெடுஞ்சாலை ஓய்வு விடுதிகள் அமைக்கப்படவிருக்கின்றன. மேலும் காஞ்சிபுரம், நாகப்பட்டினம், புதுக்கோட்டை, திருநெல்வேலி, சேலம், செஞ்சி, தூத்துக்குடி ஆகிய இடங்களில் அமைக்கும் திட்டம் சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தினால் பரிசீலிக்கப்பட்டு வருகிறது.

(முற்பகல் 10-10)

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்: தலைவர் அவர்களே, இங்கே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்ட இந்த சிற்றுண்டிச் சாலைகள் மோட்டல்ஸ் என்று சொல்லக்கூடிய வகையைச் சார்ந்ததாக இருக்குமா அல்லது சாதாரணமாக நடத்தக்கூடிய கேன்டீன் என்ற வகையைச் சார்ந்ததாக இருக்குமா? ஏற்கனவே ஓரிரு விடுதிகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. அங்கு நெடுஞ்சாலையையொட்டி அமைக்கப்பட்டிருக்கின்ற அத்தகைய உணவு விடுதிகளிலே பெரும்பாலும் தேசிய மயமாக்கப்பட்டுள்ள நம்முடைய அரசுப் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளில் செல்கின்றவர்களுக்கு அந்த வழியில் உணவுப் பொருள்கள் கிடைக்காத சூழ்நிலை இருக்கின்றது. பிரயாணிகள் சென்ற பிறகுதான் உணவு தயாரிக்க வேண்டுமென்ற நிலைமைகள் இருப்பதால், அந்த வண்டிகளை அதுவரை அங்கேயே நிறுத்தி வைக்க முடியவில்லை. ஆகவே இந்தத் துறையானது, போக்குவரத்துத் துறையோடு கலந்து ஆலோசித்து, எந்தெந்த இடங்களில் எந்தெந்த நேரங்களில் பேருந்துகளை நிறுத்துவது என்று ஏற்பாடு செய்தால், பயணிகளுக்கு வசதியாக இருக்கும். நேரத்தையும் சிக்கனப்படுத்த முடியும். பயணிகளும் இந்தப் பேருந்துகளில் செல்வதற்கு வசதியாக இருக்கும். இந்தக் கருத்துக்களை அரசு பரிசீலனை செய்து, இனிமேலாவது அமைக்கப்படுகின்றபோது, இந்த வசதிகள் இருக்கும்படியாக ஏற்பாடுகள் செய்வார்களா என்று தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

[1985 ஏப்ரல் 12

மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் : மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, இந்த நெடுஞ்சாலை வழிகளிலே அமைக்கப்படுகின்ற இந்த விடுதிகள், சிற்றுண்டிச் சாலைகள் மாத்திரமல்ல. அவசரத்திற்கு ஒரு இரவு அல்லது பகல் நேரத்தில் தங்கி ஓய்வு பெற்றுச் செல்கின்ற அளவுக்கு அனைத்து வசதிகளும் அடங்கியதாக அந்த விடுதிகள் இருக்கின்றன. ஆங்கிலத்திலே அதை 'மோட்டல்ஸ்' என்று அழைக்கின்றார்கள். அது தமிழிலே நெடுஞ்சாலை ஓய்வு விடுதிகள் என்று மொழி பெயர்க்கப்பட்டிருக்கின்றது. இப்போது தமிழகத்திலே 3 இடங்களிலே அப்படிப்பட்ட நெடுஞ்சாலை ஓய்வு விடுதிகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. உளுந்தூர்ப்பேட்டை, இராணிப்பேட்டை, கிருஷ்ணகிரி ஆகிய இடங்களிலே சுமார் 10 லட்சம் ரூபாய் முதலீட்டிலே ஒவ்வொன்றும் அமைக்கப்படுகிறது.

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கின்ற அந்தக் குறை அங்கே சொல்லப்பட்டு வருகிறது. அதற்கு அடிப்படையாக இருக்கின்ற ஒரு காரணம், போக்குவரத்துக் கழகத்தைச் சார்ந்த பேருந்துகள், இந்த விடுதிகளுக்கு அருகிலே வந்து நிறுத்துகின்ற பழக்கத்தை மேற்கொள்வதில்லை. அவர்கள் என்ன காரணத்தினாலேயோ வழக்கமாகப் பழகிவிட்டிருக்கிற வேறு உணவு விடுதிகள் இருக்கின்ற இடங்களிலே போய் நிறுத்துகிறார்கள். ஆகவே சுற்றுலாத் துறை போக்குவாத்துத் துறையோடு அடிக்கடி தொடர்பு கொண்டு, நெடுந்தொலைவு பயணம் செய்கின்ற இந்தப் பேருந்துகளை, திருவள்ளுவர் போக்குவரத்துக் கழ்கத்தைச் சார்ந்த பேருந்துகளையாவது இந்த முக்கியமான நெடுஞ்சாலை ஓய்வு விடுதிகள் ஓரத்திலே நிறுத்தினால், அது வருகின்ற நேரத்தை அவர்கள் நிச்சயமாக ஆக்கிக்கொண்டால், அந்தப் பேருந்துகள் வருகின்ற நேரத்திலேயாவது பயணிகளுக்குத் தேவையான சிற்றுண்டி அல்லது உணவு வகைகளை அவர்கள் தயாரித்து வழங்க முடியும். அப்படி இல்லாமல் அந்தப் பேருந்துகள் வருவது நிச்சயமற்ற நிலைமையில் இருக்கின்றபோது, அவர்கள் சிற்றுண்டிகளையோ, உணவுகளையோ தயாரித்து வைத்திருந்து அது செலவாகாமல் இருந்தால், அது நஷ்டத்திலே கொண்டுபோய் விட்டுவிடும். அரசாங்கம் தொடங்குகின்ற தொழில் என்றாலே, அது நஷ்டத்திலே நடக்கும் என்று தனியார் சொல்கின்ற சூழ்நிலையில் அப்படிப்பட்ட நஷ்டத்தை ஏற்படுத்துகின்ற முயற்சியிலே சுற்றுலாத் துறை ஈடுபடாது. ஆயினும் அவ்வப்போது திருவள்ளுவர் போக்குவாத்துக் கழகத்துடன் தொடர்பு கொண்டு பேசி சில பேருந்துகளை நிறுத்துவதற்கு அவர்கள் ஒப்புதல் அளித்திருக்கின்றார்கள். அப்படி அந்தப் பேருந்துகளை நிறுத்துகின்ற நேரத்தில், சிற்றுண்டிகளை, உணவு வகைகளை அவர்கள் தயார் செய்து தருகின்றார்கள், ஆகவே அதை



1985 ஏப்ரல் 12]

இன்னும் விரிவுபடுத்த வேண்டுமென்று நாம் கேட்டிருக்கிறோம். அதே நேரத்தில் போக்குவரத்துக் கழகத்திலே கேட்டுக்கொண்டு, தமிழகம் முழுவதும் இப்படிப்பட்ட நெடுஞ்சாலைகளில் 60 இடங்களில் பேருந்துகளை நிறுத்தினால், அங்கே கழிப்பறைகள், பெண்கள் அல்லது ஆண்கள் தங்குவதற்கு, சிறிது நேரம் அவர்கள் ஓய்வு பெற்றுக்கொள்வது என்பது மட்டுமல்ல, அந்த பேருந்து நிற்கின்ற நேரத்தில், 'மூத்திரப்பிறை' அதாவது 'பாத்ரூம்' போன்ற வசதிகளைச் செய்யவிருக்கிறோம். அந்தத் திட்டங்களின் அடிப்படையிலே சுமார் 50 இடங்களிலே நெடுஞ்சாலைகளிலே அவ்வாறு அமைப்பது என்று போக்குவரத்துக் கழகங்கள் முடிவெடுத்திருக்கின்றன. அதிலே 26 இடங்களிலே இப்போது வேலைகள் தொடங்கப்பட்டிருக்கின்றன. அவைகளுக்கு அப்பாற்பட்டு, ஒரு பகல் அல்லது இரவு நீண்ட தூரம் பயணம் செய்யும் பயணிகள் 2 அல்லது 3 மணி நேரம் ஓய்வு எடுத்துத் தங்கிச் செல்லும் அளவுக்கு இந்த விடுதிகள் அமைக்கப்படுகின்றன.

(முற்பகல் 10-15)

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : மாண்புமிகு அமைச்சரவர்கள் கூறிய விளக்கத்திற்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். ஏற்கெனவே அமைக்கப்பட்டிருக்கின்ற இத்தகைய சிற்றுண்டிச் சாலைகளிலே உணவு தயாரிப்பதற்குத் தேவையான தானியங்கள், மற்றவைகள் வாங்க வேண்டுமென்றால், அந்த அந்தப் பகுதிகளிலேயே நல்ல தரமாகவும், மலிவானதாகவும் கிடைக்கக்கூடிய இடங்களில் வாங்குவதற்கு அனுமதி கொடுப்பதில்லை என்று சொல்லப்படுகிறது. அப்படி அனுமதி இப்போது இல்லாவிட்டால், இனிமேலாவது எந்தப் பகுதியில் சிற்றுண்டிச் சாலை இருக்கிறதோ அந்தப் பகுதியிலேயே உயர்தரமான தானிய பருப்பு வகைகளை வாங்குவதற்கு சம்பந்தப்பட்ட சிற்றுண்டிச் சாலைகளை நடத்தும் மேலாளர்களுக்கு உரிமை அளிக்கும் ஒரு கருத்தை துறை பரிசீலிக்குமா ?

மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் : மாண்புமிகு உறுப்பினரவர்கள் சொல்கிற கருத்து இதுவரை துறையின் கவனத்திற்குக் கொண்டுவரப்படவில்லை. ஆனால் இதற்கென்று சில விதிமுறைகள் வகுக்கப்பட்டிருக்கின்றன. அரசுத் துறைகளிலே நடத்தப்படும் இப்படிப்பட்ட விடுதிகளுக்குப் பணம் செலவு செய்து பொருள்களை வாங்கும்போது, சில நடைமுறைகளைப் பின்பற்ற வேண்டுமென்று விதிகள் வகுக்கப்படுகின்றன. தனியார் நடத்தும் நிறுவனங்களில் தேவைக்கேற்ப கொள்கைகளை மேற்கொள்ள முடியும். அரசு நடத்தும்போது, மாநிலம் முழுவதும் சில அடிப்படைகளை வைத்து, சில சில விதிமுறைகள் உருவாக்கப்படுகின்றன. அங்கேயுள்ள நிர்வாகிகள் நினைத்த நேரத்தில் நினைத்த இடத்தில் பொருள்களை வாங்கலாமென்று அனுமதி அளித்தால், அதற்குப் பிறகு மாண்புமிகு உறுப்பினரவர்களிடமிருந்தே,

'இப்படி வாங்க அனுமதிப்பதால் ஊழல் நடக்கிறதே' என்றும், 'ஒரே இடத்திலே வாங்குகிறார்களே' என்றும் கேள்வி பிறக்கும். வாழை முள்ளின்மேல் பட்டாலும், முள் வாழையின் மேல் பட்டாலும் வாழைக்குத்தான் சேதம். இந்தப் பிரச்சினையில் கம்பிமேல் நடப்பதைப் போல அரசின் நிர்வாகம் நடக்க வேண்டியிருக்கிறது. அதுவும் வணிகத் துறை நிர்வாகம் அப்படி நடக்க வேண்டியிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லும் பிரச்சினை பரிசீலிக்கப்படும். இவ்வாறு உத்தரவுகளுக்காக, ஆணைகளுக்காகக் காத்திராமல், தேவையான பொருள்களைக் குறைந்த விலையில் வாங்க முடியுமானால், வாங்குவதற்கு அனுமதி வழங்குவது பற்றிய பிரச்சினை பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும்.

**திரு. அ. ப. சிவராமன் :** மாண்புமிகு உறுப்பினரவர்கள் கேட்டுக்கொண்டதற்கிணங்க, அமைச்சரவர்கள் விளக்கமொன்றைத் தந்தார்கள். இப்படிப்பட்ட விடுதிகளில் தரப்படும் உணவு வகைகள் சாதாரண மக்கள் வாங்கி, உபயோகிக்கும் வகையில் இல்லை என்று சொல்லப்படுகிறது. இதைக் கருத்திற்கொண்டு, நெடுஞ்சாலைத் துறையால் கட்டப்பட இருக்கும் சிறிது நேரம் இளைப்பாறும் விடுதிகளில் சிற்றுண்டிச் சாலைகள் அமைத்து அதன் மூலம் தரப்படும் சிற்றுண்டி வகைகளை சாதாரண மக்களும் வாங்கிப் பயன்படுத்தும் வகையில் இந்த விடுதிகளை அமைக்க அரசு முன்வருமா ?

**மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் :** போக்குவரத்துக் கழகங்கள் அமைக்க இருக்கின்ற 60 இடங்களிலே, சில தேவையான இடங்களிலே சிற்றுண்டிகள் கிடைக்க வசதியும் சேர்த்து அமைக்கத்தான் திட்டம் மேற்கொள்ளப்படுகிறது. அப்படி அமைக்கும்போது, சிற்றுண்டி வழங்கும் உரிமையை துறையே ஏற்று நடத்துவதா, தனியார்களுக்குக் கொடுப்பதா என்பதுபற்றி பின்னர் முடிவெடுக்கப்படும்.

**திரு. எல். ஜெயச்சந்திரன் :** மாண்புமிகு அமைச்சரவர்கள் போக்குவரத்துக் கழகங்களின் பேருந்துகள் இதுபோன்ற மோட்டல்களுக்குச் சரியாக வருவதில்லை என்பதால், அவர்கள் தேவைக்கேற்ப செய்ய முடியவில்லை என்று சொன்னார்கள். கடந்த 30 ஆம் தேதி உளுந்தூர்பேட்டை வைரம் மோட்டலுக்கு 7¾ மணிக்கு நான் சென்றிருந்தேன். சிற்றுண்டி 8 மணிக்குத்தான் கிடைக்குமென்று சொன்னார்கள். குறைந்த அளவுக்கு வரும் பயணிகளுக்கான வசதிகளைச் செய்யக்கூடிய அளவுக்குக்கூட சிற்றுண்டி விடுதிகள் இல்லையென்பது அரசுக்குத் தெரியுமா ? வரும் பயணிகளுக்கு குறைந்த அளவுக்குச் சிற்றுண்டி கிடைக்க நடவடிக்கைகளை அரசு எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.



(முற்பகல் 10-20)

**மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் :** காலையில் 7¾ மணிக்கு சென்றபோது 8 மணிக்குத்தான் சிற்றுண்டி தயாராகும் என்று அங்கே தெரிவித்ததாக உறுப்பினர் சொல்கிறார். ஒருவேளை 8 மணிக்கு அங்கு செல்ல வேண்டிய பேருந்து 7¾ மணிக்குச் சென்றதோ என்னவோ தெரியவில்லை. ஒருவேளை டிரைவருடைய பேருந்து ஓட்டும் வேகத்தினால் அப்படி அந்தப் பேருந்து முன்கூட்டியே சென்றுவிட்டதோ என்னவோ தெரியாது. எட்டு மணிக்குச் செல்லும் பேருந்திலுள்ள பயணிகளுக்காக சற்று முன்கூட்டியே சிற்றுண்டி போன்றவைகளைத் தயார் செய்து வைத்துவிட்டால்கூட, இட்டிலி ஆறியிருக்கிறது என்று புகார் வரும். இப்படியெல்லாம் இதில் நடைமுறைச் சிக்கல்கள் இருக்கின்றன. ஆகவே இதையெல்லாம் பரிசீலிக்க வேண்டியிருக்கிறது. இதிலே என்ன அபாயம் இருக்கிறது என்பதையும் சொல்கிறேன். ஓட்டல் நடத்துவது என்பது யானையைக் கட்டி தீனி போடுவது போன்றது. எங்கேயாவது கொஞ்சம் சறுக்கிவிட்டால் நஷ்டத்தில் கொண்டு போய் விடும். செய்த உணவுப் பண்டங்களை வீணாக்க முடியாது. அப்போதும் நஷ்டம் வரும். எனவே இதை மிகவும் ஜாக்கிரதையாகப் பார்க்க வேண்டியிருக்கிறது. அதேநேரத்தில் நம்முடைய நாக்குக்கு ருசியாக, சூடாகத் தயாரிக்க வேண்டிய பொறுப்பும் இருக்கிறது. சூடே ஒரு ருசி என்று ஒரு பழமொழி இருக்கிறது. அந்தவகையில் பேருந்துகள் வரும் நேரங்களையொட்டி சிற்றுண்டி மற்றும் உணவுப் பண்டங்களைத் தயாரிப்பதற்குரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று நாம் ஆலோசனை வழங்க முடியும்.

**திரு. ஜேப்பியார் :** திருவள்ளுவர் போக்குவரத்து போன்ற கழகப் பேருந்துகள் எல்லாம் தனியார் நடத்தும் ஓட்டல்களின் முன்புதான் நிறுத்தப்படுகின்றன. சுற்றுலாத் துறையின்கீழ் உள்ள ஓட்டல்களின் முன்பு அவைகளை நிறுத்தி அந்த வகையில் பயணிகளுக்குச் சுவையான சிற்றுண்டி வழங்குவதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்படுமா ?

**மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் :**— உறுப்பினர் தாமதமாக வந்ததனால் இப்படிக் கேட்கிறார் என்று கருதுகிறேன். இதற்கான பதிலை விளக்கமாக சற்று முன்பு சொல்லியிருக்கிறேன். உறுப்பினர் அதைக் கேட்டுத் தெரிந்து கொள்ளலாம்.

**திரு. எல். ஜெயச்சந்திரன் :** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கே பேருந்து வரும் நேரம்பற்றிச் சொன்னார்கள். ஆனால் நான் காரில்தான் அன்றைக்குச் சென்றேன். நான் சொல்வதெல்லாம் பேருந்து வருகின்ற நேரம்

என்று இல்லாமல், காலையிலிருந்தே ஒரு பத்து பேர்கள் சாப்பிடக் கூடிய அளவுக்கு சிற்றுண்டி தயார் செய்து வைத்துவிட்டால், நிச்சயம் உணவுப் பொருள்கள் வீணாகாது. உள்ளபடியே இந்த மோட்டல்களில் சரியாக உணவுப் பொருள்கள் இல்லாத காரணத்தால், யாரும் மோட்டல்களில் தங்காமல் சென்று விடுகிறார்கள். அந்த வகையில் எப்போதும் கொஞ்சமாவது சிற்றுண்டி அல்லது உணவு இருந்தால், தங்குவதற்கு வருகின்றவர்களையும் ஈர்க்க முடியும. நான் பேருந்தில் செல்லவில்லை, காரில்தான் சென்றேன் என்பதை மறுபடியும் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் :** நான் அந்த சந்தேகத்தினால்தான் கேட்டேன். 7¾ மணிக்குச் சென்றார்கள் என்றால், நிச்சயம் காரில்தான் போயிருப்பார்கள் என்று எனக்குத் தெரியும். அதனால்தான் உறுப்பினர் பேருந்தில்தான் சென்றார்களா என்று கேட்காமலேயே என்னுடைய பதிலைச் சொன்னேன். மோட்டல்களைப் பொறுத்தவரை, நெடுஞ்சாலை ஓய்வு விடுதிகளைப் பொறுத்தவரை, அங்கு நடத்தப்படுகின்ற உணவு விடுதி என்பது லாப நோக்கத்தோடு நடத்தப்படுவது அல்ல. சுற்றுலாவை வளர்ப்பதற்காக நெடுந்தூரம் செல்லும் பயணிகள் தங்கி ஓய்வெடுப்பதற்காக, நண்பர்களோடு அல்லது குடும்பத்தோடு 10 அல்லது 15 மைல்களுக்குள் இருக்கிற இடங்களைச் சென்று பார்க்கும் வகையில் அவர்களுக்கு வேறு வசதிகள் இல்லாத நிலையில், 'டூரிசம் புரமோஷன்' என்ற அளவில் இது கொண்டு வரப்பட்டது. அப்படி நாம் செய்கின்றபோது இதனாலே அரசுக்கு இழப்பு வருகிறது. இழப்பைப் பொருட்படுத்தாமல் இத்தகைய திட்டங்களைத் தொடர்ந்து நிறைவேற்றி வருகிறோம். அப்படி நாம் செய்யும்போது, சாதாரண உணவு விடுதிகளைப் போல இங்கேயும் காலையில் 6 மணியிலிருந்து இரவு 10 மணி வரை சிற்றுண்டி மற்றும் உணவுகள் கிடைக்கும் வகையில் அவைகளை வைத்துக்கொள்ள முடியாத சூழ்நிலை இருக்கிறது. குறிப்பிட்ட நேரத்தில் வந்து நிற்கின்ற பேருந்தில் வருகின்ற பயணிகளுக்குத் தேவையான உணவை அல்லது சிற்றுண்டியைத்தான் அவர்கள் தயார் செய்து வைக்க முடியும். ஆகவேதான் நெடுஞ்சாலையில் வருகின்ற பேருந்தில் பயணம் செய்பவர்களுக்காக 8 மணிக்குப் பேருந்து வருகிறது என்றால், 8 மணிக்குத்தான் உணவைத் தயாராக வைத்திருக்கிறார்கள். இங்கே மாண்புமிகு உறுப்பினர் அரசு நடத்துகின்ற விடுதியைப் பார்த்து அக்கறையோடு சென்றிருக்கிறார்கள். ஆனால் காரில் போகிறவர்கள் பொதுவாக உளுந்தூர்பேட்டை பஸ் ஸ்டாண்டில் இருக்கிற ஓட்டலில் போய் இட்டிலி சாம்பார் சாப்பிட்டுவிட்டு அவர்கள் வழிக்குப் போய்விடுகிறார்கள். இங்கே முன்பே குறிப்பிட்டதுபோல், நம்முடைய விடுதிகளில் கட்டணம் அதிகம் என்று சில பேர் பிரச்சாரம்



செய்கிறார்கள். அதுமட்டுமல்ல. அங்கே போக விரும்புகிறவர்களையும் ஏன் அங்கே போகிறீர்கள் என்று கேட்கிறார்கள். நாம் அங்கு பணியாற்றுகின்றவர்களுக்கு சம்பளம், போனஸ் எல்லாம் கொடுத்து 'எம்பிளாயர்' என்ற வகையில் நாமே முன்மாதிரியாக இருக்க வேண்டியிருக்கிறது. அரசே நடத்துகிற காரணத்தால், லாப நஷ்டம் கருதாமல், லாபம் இல்லாவிட்டாலும்கூட, நஷ்டம் அதிகம் இல்லாத வகையில், விலையை வைத்திருக்கிறோம். அந்த வகையில் உறுப்பினர் சொல்வதுமாதிரி நடந்திருக்கலாம், இல்லையென்று சொல்லவில்லை இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் அரசே நடத்துகிற காரணத்தால், நஷ்டம் வந்தால்கூட பரவாயில்லை என்று சொல்கிற காரணத்தால், இனிமேல் காலையில் 7 மணிக்கே சிற்றுண்டி தயாராக கட்டாயமாக வைத்திருக்க வேண்டும் என்கிற முறையில் ஆலோசனையும் சொல்லி, அதற்குரிய

(முற்பகல் 10-25)

விளம்பரமும் வைக்க முயற்சிக்கலாம். ஆனால் இந்தப் பிரச்சினைகள் எல்லாமே அங்கு பொருட்கள் விற்பனையாகும் அளவைப் பொறுத்திருக்கின்றன. இப்போது அரை மணிக்கொரு தடவை பேருந்துகள் சாலைகளில் செல்கின்றன. அப்போது அந்த ஓட்டல்களின் முன்பு நின்று பயணிகள் சிற்றுண்டி அருந்த, சாப்பிட்டுச் செல்ல துணை புரிகிறது. அரை மணி நேரம், ஒரு மணி நேரம் அந்த உணவுப் பொருட்கள் விற்பனையாகாமல் இருந்தால், அந்த உணவில் அதிக வித்தியாசம் வராது. ஆகவே எல்லா மாண்புமிகு உறுப்பினர்களும் இவ்வளவு அக்கறையோடு இருக்கிறபோது, அரசும், சுற்றுலாத் துறையும், சுற்றுலா வளர்ச்சிக் கழகமும் இதிலே தீவிர அக்கறை செலுத்தும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** தலைவர் அவர்களே, நான் கேள்வி கேட்கவில்லை. ஆனால் தங்களுக்கு முன்புள்ள விளக்கு, நேராக என் முகத்தை மறைக்கிறது. ஆகவே நான் கையைத் தூக்கியிருந்தாலும் தங்களுக்குத் தெரிவதில்லை. ஆகவே அந்த விளக்கை சற்று தள்ளி வைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** தங்களது முகமும் தெரிகிறது. அந்த முகத்தில் உள்ள அகமும் தெரிகிறது.

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** என் முகத்தில் மட்டும்தான் என் அகத்தைப் பார்க்கிறீர்களா ? ஆண்மையான என் உள்ளம் அதாவது என் அகம் தங்களுக்கு தெரியவில்லையா ?

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** நல்ல தமிழில் உதாரணமாகச் சொன்னேன்.

**திருமதி வி. ஜெயலட்சுமி :** தலைவர் அவர்களே, உறுப்பினர் திரு. ஜெயச்சந்திரன் அவர்கள் கேட்ட கேள்விக்கு அமைச்சர் அவர்கள் பதில் அளிக்கும்போது, " சிறிது ஆறிவிட்டாலும், உங்களைப் போன்ற உறுப்பினர்கள் அந்த ஓட்டல்களுக்குச் செல்லும்போது அதை மீண்டும் புதிதாகத் தயார் செய்யவேண்டியிருக்கிறது " என்று சொன்னார்கள். எவ்வளவுதான் விரைவாகச் செய்தாலும், பத்து பதினைந்து பேர்கள் என்று வந்துவிட்டால், உடனடியாக அவ்வளவு பேருக்கும் கொடுக்க முடியாது என்பதை, நான் ஒரு இல்லத்தரசி என்ற முறையில் சொல்லிக்கொள்ள முடியும். அந்த அடிப்படையில் இப்போது ஒன்றைத் தெரிவித்துக்கொள்கிறேன். 'ஹாட் கேஸ், ரெஃப்ரிஜிரேட்டர் போன்ற சாதனங்கள் அத்தகைய இடங்களில் இருந்தால், நிறைய பண்டங் களைத் தயார் செய்துவைத்துக்கொண்டு, வேண்டிய நேரத்தில் அவைகளைப் பரிமாற முடியும். அத்துடன் காய்கறி போன்ற சமையலுக்குத் தேவையான மூலப்பொருட்களையும் அதில் பாதுகாத்து வைக்க முடியும். ஆகவே அத்தகைய சாதனங்களை அந்த உணவு விடுதிகளில் எல்லாம் வைக்க அனுமதி யளிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் :** தலைவர் அவர்களே, பெரிய பெரிய உணவு விடுதிகளில் வேண்டுமானால், ' ஹாட் கேஸ், ரெப்ரிஜிரேட்டர் ' போன்ற சாதனங்களை வைத்திருப்பார்கள் என்று நான் கருதுகிறேன். பல இடங்களில் அதுபற்றி விசாரித்தும் இருக்கிறேன். ஆனால் மோட்டல்கள் என்பவை சிறிய அடிப்படையில் அமைந்துள்ள, குறைவாக சிற்றுண்டி, உணவுப் பொருட்கள் தயாரிக்கும் இடமாகும். இவைகள் முழுவதுமாக அதனுடைய விற்பனை அடிப்படையிலேயே அதனுடைய வரவு செலவை நிர்ணயிக்கிற அளவில் நடத்தப்பட்டு வருகின்றன. அங்கே தேவைக்கேற்பத் தான் பொருட்கள் தயாரிக்கப்படுகின்றன. அந்த அடிப்படையில் இருக்கிற போது, அங்கேயெல்லாம் ஃபிரிஜ் போன்ற விலை உயர்ந்த பொருட்களை வைக்க முடியுமா? அப்படி பண்டங்களைப் போட்டு சுட்டுவிட்டு, மறுநாள் எப்படியெல்லாம் பெயர் மாற்றி வைத்துக்கொள்ள முடியும் என்பது போன்ற விவரங்களையெல்லாம், சட்டமன்றப் பேரவையில்கூட ஒரு உறுப்பினர் அவர் கள், ஓட்டல்காரர்களுக்கே தெரியாத பல விபரங்களை அன்றைக்குக் கொடுத் தார்கள். ஆகவே அரசாங்கம் ஒரு வியாபாரத் துறையில் நுழைகிறபோது, மிகுந்த ஜாக்கிரதையோடு இருக்க வேண்டியிருக்கிறது. காரணம், காணம் தப்பினால் மரணம் என்ற அளவில் இருக்க வேண்டியிருக்கிறது. ஆகவே மாண்புமிகு உறுப்பினர்கள் சொல்கின்ற கருத்தின் அடிப்படையில் அத்தகைய ஓட்டல்கள் இயங்காமல் இருக்குமேயானால், அவைகளையும் சீர்படுத்த துறை முயற்சி எடுக்கும்.





**திரு. சி.ரா. லெட்சுமிகாந்தன் :** தலைவர் அவர்களே, சரியோ தவறோ ஒரு பழக்கம் இப்போது நடைமுறையில் இருக்கிறது. தனியார் ஓட்டல்கள் முன்பு நிறுத்தப்படும் திருவள்ளுவர் மற்றும் அரசுப் பேருந்துகளின் ஓட்டுநர் களுக்கும், நடத்துனர்களுக்கும் அந்த ஓட்டல்களில் இலவசமாகச் சிற்றுண்டியோ, உணவோ அளிக்கும் பழக்கம் இருக்கிறது. அதன் காரணமாகத் தான் இந்தப் பேருந்துகளை அந்தத் தனியார் ஓட்டல்கள் முன்பு அவர்கள் நிறுத்துகிறார்கள் . என்ற கருத்தும் இருக்கிறது. ஆகவே அரசு நடத்தும் 'மோட்டல்களில்' இந்த ஓட்டுநர்களுக்கும், நடத்துனர்களுக்கும் இலவசமாக உணவு அளிக்கும் விதத்தில் நிதி வசதி அளித்துவிட்டால், அவர்களுக்கும் ஊக்கமாக இருக்கலாம். ஆகவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதுகுறித்து பரிசீலனை செய்து, நம்முடைய கட்டுப்பாட்டில் இருக்கிற சிற்றுண்டி விடுதிகளில் இதை ஏற்பாடு செய்து வழிவகைகளை உருவாக்கலாம் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் :** தலைவர் அவர்களே, ஒரு சிக்கலான பிரச்சினையை மாண்புமிகு உறுப்பினர், சொல்கிறபோதே சரியோ, தவறோ என்று ஆரம்பித்திருக்கிறார். அதில் 50 சதவிதம் சரி, 50 சதவீதம் தவறு என்று ஒப்புக்கொள்ளவேண்டியதுதான் என்று அவரே முடிவெடுத்து இதைச் சொல்லியிருக்கிறார். அரசாங்கம் இதை நடத்துகிறபோது, இன்னொரு அரசுத் துறையில் பணியாற்றுகிறவர்களுக்கு இலவச உணவுத் திட்டம் என்பதை திடீரென்று அறிவிக்க முடியாது. ஆனால் நம்முடைய அரசிலே பல

(முற்பகல் 10-30)

திட்டங்களைத் தீட்டி, பல சலுகைகளை, பல உதவிகளைத் தொழிலாளர் களுக்குச் செய்துகொண்டு வருகிறோம். அந்த அடிப்படையிலே இதையும் ஒரு சலுகையாக, உதவியாக வழங்குவதற்குக்கூட துறை பரிசீலிக்க முடியும். மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களோடு கலந்து பேசி, " போக்குவரத்துத் துறையிலே எங்களுடைய பேருந்துகளிலே இருக்கின்ற ஓட்டுநர்கள், நடத்துநர்களுக்கு அவர்கள் பேருந்துகளை நிறுத்துகிறபோது, இப்படி இலவசமாக அரசாங்க அனுமதியோடு உணவு வழங்கலாம் " என்கிற வேண்டுகோளை வைத்தால், அதையும் நம்முடைய சுற்றுலா வளர்ச்சிக் கழகம் பரிசீலிக்கும். காரணம் எதைச் செய்தாலும், தெரிந்து கொண்டு செய்வது நல்லது. தெரியாமல் சரியோ தவறோ என்று இருக்கும்போது, மாண்புமிகு உறுப்பினர்கள் நல்ல உள்ளம் இருக்கும்போது சரி என்பார்கள். கோபம் வருகிறபோது அதையே தவறு என்று வாதிப்பார்கள். நாங்கள் சரி என்கிற போது பாராட்டைப் பெற முடியவில்லை; தவறு என்கிறபோது

தாக்குதலையும் சமாளிக்க வேண்டியிருக்கிறது. ஆகவே இது ஒன்றும் பெரும் கஷ்டமான காரியம் இல்லை. அடிப்படைக் காரணம், இது மாத்திரம்தான் என்றால், அதை சுற்றுலா வளர்ச்சிக் கழகம் பரிசீலிப்பதிலே ஒன்றும் இடையூறு இல்லை.

## செம்மங்குப்பத்தில் உள்ள தொடக்கப் பள்ளி

* 23 வினா.—திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தென் ஆற்காடு மாவட்டம், கடலூர் ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த செம்மங்குப்பம் கிராமத்தில் உள்ள தொடக்கப் பள்ளிக்கு, பல ஆண்டுகளாகக் கட்டிடம் இல்லாமல் இருப்பதால் மாணவர்கள் அவதிப் படுகிறார்கள் என்பது உண்மையா ?

(இ) ஆம் எனில், இது குறித்து அரசு எடுத்த நடவடிக்கை யாது ?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** (அ) மற்றும் (இ) செம்மங்குப்பம் கிராமத்தில் பள்ளிக்கட்டிடம் 4—6—1983-ல் கட்டி முடிக்கப்பட்டு 1—7—1983 முதல் இந்தக் கட்டிடத்தில் பள்ளி நடைபெற்று வருகிறது.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** தலைவர் அவர்களே, குறிப்பிட்ட அந்தக் கட்டிடம் எவ்வளவு செலவில் கட்டப்பட்டது, எத்தனை அறைகள் அமைக்கப் பட்டிருக்கின்றன என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** தலைவர் அவர்களே, எவ்வளவு செலவு என்பது குறித்து இப்போது புள்ளிவிவரம் இல்லை. எத்தனை அறைகள் என்பது குறித்தும் கிடையாது. ஆனால் அது 1979 ஆம் ஆண்டு வேலை ஆரம்பிக்கப்பட்டு, அவ்வாறு ஆரம்பிக்கப்பட்ட நேரத்திலிருந்த ஒப்பந்தக்காரர், சரியான முறையில் நடக்காத காரணத்தால், அவரை ரத்து செய்துவிட்டு, புதிய ஒப்பந்தக்காரருக்குக் கொடுக்கப்பட்டதாகத்தான் விவரம் இருக்கிறது. மேற்கொண்டு விவரமில்லை.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** வினா எண் 24 மற்றும் வினா எண் 25 ஒன்றாக எடுத்துக்கொள்ளப்படும்.



## தலைஞாயிறு ஆரம்பச் சுகாதார நிலையம்

* 24 வினா.—திரு. க. மீனாட்சிசுந்தரம் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தஞ்சாவூர் மாவட்டம் தலைஞாயிறு ஆரம்ப சுகாதார நிலையத்தை அரசினர் மருத்துவமனையாக உயர்த்தும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(இ) ஆம் எனில், அது எப்பொழுது முதல் செயல்படுத்தப்படும் ?

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே :** (அ) இத்தகைய செயற்குறிப்பு ஏதும் தற்போது பரிசீலனையில் இல்லை.

(இ) இவ்வினா எழாது.

* 25 வினா.—திரு. க. மீனாட்சிசுந்தரம் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தஞ்சாவூர் மாவட்டம், தலைஞாயிறு ஆரம்ப சுகாதார நிலையத்தில், போதுமான அளவு மருத்துவர்கள் இல்லை என்பதை அரசு அறியுமா ?

(இ) ஆம் எனில், இது குறித்து அரசு எடுத்த நடவடிக்கை யாது ?

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே ;** (அ) தலைஞாயிறு ஆரம்பச் சுகாதார நிலையத்திற்காக ஏற்படுத்தப்பட்ட மூன்று மருத்துவர்கள் பதவிகளும் நிரப்பப்பட்டு, அவர்கள் பணியில் இருக்கிறார்கள்.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** தலைவர் அவர்களே, தஞ்சாவூர் மாவட்டத்தில் உள்ள தலைஞாயிறு பேரூராட்சிப் பகுதி, போக்குவரத்துச் சாதனங்கள் மிகவும் குறைவான, பல்வேறு குறுகிய கிராமங்களைக் கொண்ட ஒரு பகுதி. அங்கேயிருந்து ஓர் அரசு மருத்துவமனைக்குச் செல்ல வேண்டும் என்று சொன்னால், திருத்துறைப்பூண்டிக்குச் செல்ல வேண்டும், இல்லையேல் நாகப்பட்டினத்திற்குச் செல்ல வேண்டும். அவை இரண்டுமே மிக நீண்ட தூரத்தில் இருக்கக்கூடிய பகுதிகளாக இருக்கின்றன. இடையிலே நீர்முளை என்ற ஊரிலே ஓர் அரசு மருத்துவமனை ஏற்படுத்தப் போவதாகச் சொன்னார்கள். இப்போது அது இயங்குகிறதா என்று தெரியவில்லை. ஆகவே இப்போது செயற்குறிப்பு இல்லாவிட்டாலும், வருங்காலத்திலாவது

தலைஞாயிறு ஆரம்ப சுகாதார நிலையத்தினை அரசு மருத்துவமனையாக உயர்த்திடும் நிலையில் இந்தக் கோரிக்கையை அரசு பரிசிலிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே :** தலைவர் அவர்களே, ஆரம்ப சுகாதார நிலையங்களைப் பொறுத்தவரையிலே, அவற்றிலே பத்து அல்லது பன்னிரண்டு அல்லது 20 ஆரம்ப சுகாதார நிலையங்களை ஆண்டுதோறும் மேம்பட்ட ஆரம்பச் சுகாதார நிலையங்களாகச் செய்துகொண்டு வருகிறோம். ஏற்கெனவே ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் நான்கு ஆரம்பச் சுகாதார நிலையங்களுக்கு ஒரு மேம்பட்ட ஆரம்பச் சுகாதார நிலையம் இருக்க வேண்டும் என்று வலியுறுத்தினார்கள். ஆனால் இது இருபது அம்சத் திட்டத்தின்கீழ் வருவதால், ஆரம்பச் சுகாதார நிலையங்களை மேம்படுத்து வதற்கான பண ஒதுக்கீட்டை மத்திய அரசு செய்தால், நன்றாக இருக்கும் என்று சொன்னோம். மத்திய அரசும் முதலிலே தருவதாக இருந்தார்கள். ஆனால் பிறகு "தர முடியாது, நீங்களே பார்த்துக்கொள்ளுங்கள்" என்று சொல்லிவிட்டார்கள். அடிப்படையிலே நான்கு ஆரம்பச் சுகாதார நிலையங் களுக்கு ஒரு மேம்படுத்தப்பட்ட ஆரம்பச் சுகாதார நிலையம் என்று இருந்தாலும்கூட, தமிழகத்தில் பல ஆரம்பச் சுகாதார நிலையங்களை, மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையமாக—தாலுக்கா மருத்துவமனை அந்தஸ்திற்குக் கொண்டு வந்திருக்கிறோம். அந்த வகையிலே தஞ்சாவூர் மாவட்டத்திலேயும் ஒவ்வொரு மாவட்டத்திலேயும், ஒவ்வொன்றாக நாம் மேம்படுத்தப்பட்ட ஆரம்பச் சுகாதார நிலையமாக ஆக்கிக்கொண்டு வருகிறோம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஏற்கெனவே இதைப்பற்றிச்

(முற்பகல் 10-35)

சொல்லியிருக்கிறார்கள். தலைஞாயிறுக்கு நானும் சென்று பார்த்திருக்கிறேன். அங்கேயும் நல்ல வகையிலே ஒரு இடம் இருக்கிறது. ஒரே ஒரு சிக்கல் என்ன வென்றால், எத்தனை நோயாளிகள் வருகிறார்கள் என்று கணக்கு எடுக்க வேண்டும். அதுமட்டுமல்ல, எவ்வளவு தூரத்தில் இருக்கிறது என்றும் பார்க்க வேண்டும். பல தேர்வுகள் இருக்கின்றன. அந்த அடிப்படைத் தேவைகள் பூர்த்தி செய்யப்படுமானால், உடனடியாகச் செய்வதற்கு சாத்தியக் கூறுகள் இருக்கின்றன. இருந்தாலும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன காரணத்திற்காக, நான் முழுமையாக தகவலைச் சேகரித்து, அதைப் பரிசீலித்து பிறகு முடிவு எடுக்கத் தயாராக இருக்கிறேன்.

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** தலைவர் அவர்களே, வருகின்ற நோயாளி களினுடைய எண்ணிக்கையைப் பார்த்தும் அதைச் செய்ய வேண்டுமென்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். வருங்காலத்திலே பரிசிலிப்பதாக அவர்கள்





சொல்லியிருக்கிறார்கள். ஆகவே அந்த மக்கள் சார்பிலே நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். நோயாளிகள் அதிகமாக வருவதற்குக் காரணம் இருக்கின்ற டாக்டர்கள் குறைவாக இருக்கின்றார்கள் என்பதுதான். டாக்டர்கள் நிறைய இருந்தால், நோயாளிகள் நம்பி வருவார்கள். மூன்று டாக்டர்கள் இப்போது பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள் என்று சொல்கிறார்கள். ஒருசமயம் இந்தக் கேள்விக்குப் பதில் சொல்கிற நேரத்திலே, இன்றைக்கு ஒருவேளை போஸ்ட்டிங் தந்திருக்கிறார்களோ என்னவோ எனக்குத் தெரியாது. நான் ஊரிலிருந்து 8 ஆம் தேதி மேலவைக் கூட்டத்திற்கு வருகின்ற வரையிலே, இரண்டு டாக்டர்கள்தான் இருந்தார்கள், பெண் டாக்டர் இல்லை. 8 ஆம் தேதிக்கு மேலே போஸ்ட்டிங் போட்டார்களோ என்னவோ தெரியாது. ஆனால் ஏற்கெனவே இதுமாதிரி ஒருமுறை இந்தக் கேள்விக்கு பதில் சொல்லி அவர்கள் "போஸ்ட்டிங் போட்டிருக்கிறோம்" என்று சொன்னதற்குப் பிறகு, நான் ஊருக்குப் போய்ப் பார்ப்பதற்கு முன்பாகவே, கூட்டத்தை முடித்துவிட்டுப் போவதற்கு முன்பாகவே, அந்த டாக்டர் அந்த இடத்தை விட்டு மாற்றம் செய்யப்பட்டுவிட்டார். ஆகவே இப்போது மூன்று டாக்டர்கள் இல்லை என்று மீண்டும் வலியுறுத்துகிறேன். மூன்று டாக்டர்கள் பணியாற்றுகிறார்கள் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்வது உண்மைதானா என்று அறிய விரும்புகிறேன். ஆகவே வருகின்ற டாக்டர்கள் ஒழுங்காகப் பணியாற்றினால், நிறைய நோயாளிகள் வருவார்கள். அந்த அடிப்படையிலே டாக்டர்களை நியமிக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பரிசீலிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே :** தலைவர் அவர்களே, எல்லா டாக்டர்களும் இருக்கிறார்கள். அதே நேரத்தில் இன்னொரு பிரச்சினையும் இருக்கிறது. ஒவ்வொரு மாவட்டத்திலேயும் ஒரு மருத்துவமனையை விஸ்தரிக்கும்போது, எந்த அளவுக்கு நாம் முதலிடு செய்யக்கூடிய பணத்துக்கு நல்ல வகையில் அங்கே நன்மை கிடைக்கும் என்பதையும் பார்க்க வேண்டி யிருக்கிறது. இரண்டு ஆஸ்பத்திரிகளிலே எந்த ஆஸ்பத்திரியை மேம்படுத்தப் பட்க்கூடிய, நன்றாக விஸ்தரிக்கக்கூடிய ஆஸ்பத்திரியாக ஆக்க முடியும் என்று முடிவு செய்ய வேண்டிய நேரத்திலே ஒரு ஆஸ்பத்திரிக்கு முதலிடம் கொடுக்கப்படும்; இன்னொன்றுக்கு இரண்டாவது இடம் கொடுக்கப்படும். எல்லா ஆரம்பச் சுகாதார நிலையங்களையும் மேம்படுத்தப்பட்ட ஆரம்பச் சுகாதார நிலையங்களாக ஆக்குவது என்ற ஆசை நமக்கு இருக்கிறது; செய்ய வேண்டுமென்ற ஆர்வம் இருக்கிறது. இருந்தாலும் படிப்படியாகத்தான் அரசாங்கம் செய்ய முடியும். அந்த வகையிலே ஒரு மருத்துவமனையிலே ஏராளமாகப் பிரச்சினை வருகிற நேரத்திலே, நோயாளிகளுடைய

எண்ணிக்கையை மட்டும் வைத்துக்கொண்டு பார்க்க முடியாது. பல சாத்தியக் கூறுகள் இருக்கின்றன. அதற்குச் சில கோட்பாடுகள் இருக்கின்றன. அவைகளை எல்லாம் பூர்த்தி செய்தால், அந்த இடங்களுக்கு முதலிடம் கொடுக்கப்படுமென்ற நிலைமைகள் வருகின்றன. மாண்புமிகு உறுப்பினர் சொன்னதற்குப் பிறகு, நான் கவனம் செலுத்திக் கொண்டிருக்கிறேன். அதற்கு முன்பு கூட நான் பலமுறை அங்கு போய்ப் பார்த்திருக்கிறேன். வருகிற 19 ஆம் தேதி நான் நாகப்பட்டினம் போக இருக்கிறேன். நமக்கு எவ்வளவு சாத்தியக்கூறுகள் இருக்கின்றனவோ அவ்வளவுக்குச் செய்ய முடியும். அதே நேரத்திலே அங்கே ஆஸ்பத்திரியை மட்டும் விஸ்தரித்தால் போதாது. குவார்டர்ஸ் கட்ட வேண்டும். அவைகள் எல்லாவற்றிற்கும் 10, 15 லட்ச ரூபாய் செலவாகும் என்பதையெல்லாம் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிந்து கொள்ள வேண்டுமென்பதை அவர்களுடைய கவனத்திற்கு நான் கொண்டு வருகிறேன்.

**திரு. அ. ப. சிவராமன் :** தலைவர் அவர்களே, இந்த ஆரம்பச் சுகாதார நிலையங்களில் வரையறுக்கப்பட்ட பகுதிகளிலே—பணியாற்றுவதற்கு என்று புதிய பணியாளர்களை இந்த அரசு நியமித்து, ஆயிரக்கணக்கான பணியாளர் களை வீடுதோறும் சென்று இந்தப் பணியை ஆற்றிக் கொண்டிருக்கிறார்கள். இவர்கள் அந்தப் பகுதியிலே தங்கி பணியாற்றுவதற்கு வீடுகள் கட்டித் தரப் பட்டிருக்கின்றன. ஆனால் அந்த வீடுகளில் அவர்கள் தங்குவதில்லை என்ற குற்றச்சாட்டு பொதுவாக மக்களிடையே சொல்லப்படுகிறது. இது உண்மையா? இது வருங்காலத்திலே தவிர்க்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே :** தலைவர் அவர்களே, அவர் களுக்கு வீடு கட்டிக் கொடுக்கவில்லை. கட்டிக்கொடுக்கிற நிலைமையிலும் இல்லை. இருந்தாலும் அங்கேயிருந்து பணியாற்ற வேண்டுமென்று வலியுறுத்திக் கொண்டிருக்கிறோம். யாராவது எங்கேயாவது பணியாற்ற வேண்டிய இடத்தில் இல்லாமல், பணியாற்றாமல் இருப்பார்களேயானால், அவர்கள்மீது நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறோம். அப்படி நடவடிக்கை எடுத்தால், "ஏன் நடவடிக்கை எடுத்தீர்கள், ஏன் சஸ்பெண்ட் செய்தீர்கள்" என்று கேட்கிறார்கள்; கேட்கப்பட்டிருக்கிறது. இருந்தாலும் யார்மீது நடவடிக்கை எடுக்க வேண்டுமோ, அவர்கள்மீது தாட்சண்யம் இல்லாமல் அரசாங்கம் நடவடிக்கை எடுக்கும்.

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் மிக விரிவாகவே பதில் தந்திருக்கிறார்கள். மூன்று டாக்டர்கள் பணியாற்று கிறார்கள் என்று மீண்டும் வலியுறுத்துகிறார்கள், ஆனால் மூன்று டாக்டர்கள்



இல்லை என்று நான் மீண்டும் வலியுறுத்துகிறேன். அடுத்து, கோயில்பத்து; வெள்ளப்பள்ளம் ஆகிய பகுதிகளில்—தலைஞாயிறு ஏரியாவிலே—ஆரம்பச் சுகாதார நிலைய எல்லைக்குள்ளே இரண்டு இடங்களிலே அகதிகள் முகாம்கள் இருக்கின்றன. இப்போது இருக்கின்ற அந்த இரண்டு டாக்டர்களும்கூட அந்த அகதிகள் முகாம்களுக்குத்தான் செல்வதற்கு நேரம் இருக்கிறதே தவிர, மருத்துவ மனையின் நோயாளிகளைக் கவனிப்பதற்கு நேரம் இல்லை. அதற்காக கூடுதலாக டாக்டர்கள், அகதிகள் முகாம்களைப் பார்ப்பதற்கு நியமிக்கப்பட்டிருக்கிறார்களா என்றால்—அங்கு இருக்கிற டாக்டர்கள்தான் சென்று கொண்டிருக்கிறார்கள், நான் பார்த்து வருகிறேன், என்னிடத்திலே அவர்களும் சொன்னார்கள்—கூடுதலாக நியமிக்கப்படவில்லை. ஆகவே இவை களையெல்லாம் கருத்திலே கொண்டு அங்கே கூடுதலாக டாக்டர்களை நியமிப்பதற்கு அகதிகள் முகாம்களைப் பார்ப்பதற்காக தனியாக ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அந்தச் சுகாதார நிலையத்திலே கழிப்பிட வசதி இல்லை. உட்புறச் சுவர் இல்லை; மூன்று வேன்கள் இருக் கின்றன. அதில் இரண்டு வேலை செய்யவில்லை. அங்கே கேணி இருக் கிறது; மோட்டார் இருக்கிறது. கேணி தூர் வாரப்படாததால் போதிய தண்ணீர் இல்லை. குடியிருப்பு இருக்கிறது; பராமரிப்பு இல்லை. இது சுகாதார நிலையத்தில் உள்ள குறைபாடுகள். ஆகவே இந்தக் குறைபாடு கள் அனைத்தையும் மாண்புமிகு அமைச்சர் அவர்களே பார்த்து விட்டுத்தான் வந்திருக்கிறார்கள். ஆனால் அதன்மீது எந்தவித நடவடிக்கையும் எடுக்கப் படவில்லை. எனவே இவைகள் எப்போது சீர்திருத்தப்படும் என்று அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 10-40)

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே :** மாண்புமிகு உறுப்பினர் அவர்களே இரண்டையும் குறிப்பிடுகிறார்கள். நான் ஏற்கெனவே அந்த இடத்தைப் போய்ப் பார்த்துவிட்டு வந்தேன். இரண்டு வேன்கள் நன்றாக வேலை செய்து கொண்டிருக்கின்றன. ஒரு வேன் பழுதுபட்டதால், சென்ட்ரல் ஒர்க்ஷாப்புக்கு 27—11—1984 அன்று அனுப்பப்பட்டது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இந்த விவரங்களைக் கேட்பார் என்று எதிர்பார்த்துதான் தகவல்களை அறிந்து வந்திருக்கிறேன். அந்த வேன் அங்கே ரிப்பேர் செய்யப்பட்டு வருகிறது. இந்த வேன்களை ரிப்பேர் செய்வதைப் பொறுத்து சில விதிமுறைகளை நாம் வைத்துக்கொண்டிருக்கிறோம். ஒரு குறிப்பிட்ட அளவுக்கு மேல் சேதம் ஏற்பட்டால், சென்ட்ரல் ஒர்க்ஷாப்புக்கு அனுப்ப வேண்டும் என்று விதி இருப்பதால், அதன்படி அங்கே அனுப்பி வைக்கப்பட்டிருக்கிறது. அடுத்து மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒரு நல்ல யோசனையைச் சொல்லியிருக் கிறார்கள். அங்கே அதிகமாக அகதிகள் வருகிற காரணத்தால், அதன்

அடிப்படையில் அந்த மருத்துவ மனையை விஸ்தரிக்கலாமா என்று கேட்டிருக்கிறார். அது ஒரு நியாயமான வாதமாகத் தோன்றுகிறது. அங்கே எவ்வளவு அகதிகள் வருகிறார்கள் என்று பார்த்து, மறுவாழ்வுத் துறை அமைச்சர் அவர்களிடம் கலந்து அந்த மருத்துவமனையை விரிவுபடுத்தவும் கூடுதலாக ஒரு டாக்டரைப் போடவும் ஏற்பாடு செய்யலாமா என்பது குறித்து ஆராயப்படும்.

**திரு. பா. ரா. தாமஸ் :** நம் மாநிலத்தில் ஆரம்பச் சுகாதார நிலையங்கள் அரசினர் மருத்துவ மனைகளாக உயர்த்தப்பட வேண்டுமென்றால், அந்தப் பகுதிவாழ் மக்கள் நன்கொடையாக ஒரு தொகையைக் கொடுக்க வேண்டும் என்று விதி இருக்கிறது. அவ்வாறு போதுமான நன்கொடை கொடுக்கும் பகுதிகளில் உள்ள ஆரம்பச் சுகாதார நிலையங்களை முன்னுரிமை அடிப்படையில் மருத்துவ மனைகளாக மாற்றுவதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே :** முதலில் ஒரு குறிப்பிட்ட கட்டணத்தைச் செலுத்திவிடுவார்களானால், அங்கே மருத்துவ மனைகளை ஆரம்பிக்கலாம் என்ற வழக்கம் இருக்கிறது. ஆனால் இந்த ஆரம்பச் சுகாதார நிலையத்தைப் பொறுத்தவரையில், நாம் அந்த அடிப்படையைக் கையாள வில்லை. அதற்கு பதில் என்ன அடிப்படையைப் பயன்படுத்துகிறோம் என்றால், இதற்கென்று ஒரு "லாஜிஸ்டிக்ஸ்" இருக்கிறது. அதாவது எத்தனை சாலைகளுக்கு இடையே இது இருக்கிறது, எத்தனை கிராமங்களுக்கு இடையே இது இருக்கிறது, ஹிண்டர் லேண்டு என்பார்கள். அப்படி எத்தனை கிராமங்களுக்கு இந்த ஆரம்ப சுகாதார நிலையம் பயன்படுகிறது என்பதையெல்லாம் பார்க்கிறோம். அதுமட்டுமல்ல. அதற்கு அருகில் வேறு ஏதாவது தாலுக்கா மருத்துவமனை இருக்கிறதா என்று பார்க்கிறோம். ஒரு மருத்துவ மனை உருவாக்க வேண்டுமென்று ஒரு லட்சம் ரூபாய் கொடுத்துவிட்டால் மட்டும் போதாது. அங்கிருந்து ஐந்து கிலோ மீட்டர் தூரத்தில் தாலுக்கா மருத்துவ மனை ஏதேனும் இருக்கிறதா என்று பார்க்கிறோம். அப்படிப்பட்ட நிலையில் ஒரு லட்சம் ரூபாய் கொடுத்தாலும், ஆரம்பச் சுகாதார நிலையத்தை மேம்படுத்த முடியாது. ஏனென்றால் தாலுக்கா மருத்துவ மனை அருகில் இருக்கிறது. அப்படி தாலுக்கா மருத்துவ மனை இல்லை என்றால், 50 படுக்கை வசதிகளைக் கொண்ட முழு மருத்துவமனை இருந்தாலும், இதைச் செய்ய முடியாது. எனவே டிஸ்ட்டிரிக்ட் ஹெல்த் ஆபீசர், டைரெக்டர் ஆப் பப்ளிக் ஹெல்த், டைரெக்டர் ஆப் பிரைமரி ஹெல்த் சென்டர்ஸ் ஆகியோர் பார்த்து 'ரெகமண்ட்' செய்து அனுப்புகிறார்கள். இந்த மாவட்டத்தில் மூன்று ஆரம்பச் சுகாதார நிலையங்களைப் பிரையாரிட்டி கொடுத்து எடுத்துக் கொள்ளலாம் என்று அனுப்புகிறார்கள். அதில் நாம் நம் அனுபவத்தைப் பயன்படுத்தி எந்த இடத்தை இந்த ஆண்டு எடுத்துக் கொள்ளலாம் என்று தேர்ந்தெடுக்கிறோம். இந்த ஆண்டு ஒன்று, அடுத்த ஆண்டு ஒன்று என்று எடுத்து மேம்படுத்துகிறோம். எனவே ஒரு லட்சம் ரூபாய் கொடுத்துவிட்டால் மட்டும் போதாது. அதற்கு மேல் ஐந்து லட்சம் ரூபாய் அதிகமாகச் செலவாகிறது. ரெக்கரிங் ஆக ரூபாய் 5 லட்சம் செலவாகிறது. இதை மனதில் கொண்டுதான் நாம் முடிவெடுத்துக்கொள்ள வேண்டியிருக்கிறது.



**திரு. அ. ப. சிவராமன் :** தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது, ஹெல்த் ஒர்க்கர்களுக்கு விடுதிகள் கட்டப் படவில்லை என்று குறிப்பிட்டார்கள். தன்னிறைவுத் திட்டத்தின்கீழ் பண்ருட்டி, குறிஞ்சிப்பாடி, நெல்லிக்குப்பம் போன்ற இடங்களில் இத்தகைய விடுதிகள் கட்டித் தரப்பட்டிருக்கின்றன. அவர்களுக்காகவே அவை ஒதுக்கப்பட்டிருக்கின்றன. இருந்தாலும் அவர்கள் அங்கே குடி போகவில்லை என்ற குற்றச் சாட்டு அந்தப் பகுதிகளிலிருந்து வருகிறது. எனவே இந்தக் குறையையும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நிவர்த்தி செய்வாரா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே :** நான் ஏற்கெனவே சொன்னபடி, குறைபாடு இருந்தால், உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. தாட்சண்யம் இல்லாமல் நடவடிக்கை எடுக்கப்பட்டால், அது குறித்தும் சில நேரங்களில் கேள்விகள் கேட்கப்படுகின்றன. அண்மையில் பேரவையிலும் இத்தகைய கேள்விகள் எழுப்பப்பட்டு, நான் பதில் சொல்ல வேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கிறது. என்றாலும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லுகிற யோசனையை நல்ல யோசனையாகக் கருதுகிறேன். விவரம் கொடுத்தால், உடனடியாக நடவடிக்கை எடுக்கிறேன் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

## திருக்குறள்.

* 16 வினா.—**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) திருக்குறளை, தேசிய நூலாக அங்கீகரிக்க நடவடிக்கை எடுக்குமாறு, தமிழக புலவர் குழுவிடமிருந்து, அரசுக்குக் கோரிக்கை ஏதேனும் வந்துள்ளதா ?

(இ) ஆம் எனில், மாநில அரசு, இப்பொருள் குறித்து மத்திய அரசுக்குக் கடிதம் ஏதும் எழுதியுள்ளதா ?

(உ) மத்திய அரசிடமிருந்து, அக்கடிதத்திற்கு பதில் ஏதேனும் வந்துள்ளதா ?

(எ) ஆம் எனில், அதன் விவரங்கள் யாவை ?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** (அ), (இ), (உ) ஆம்.

(எ) மைய அரசு திருக்குறளின்மீது கொண்டுள்ள பெருமதிப்பினை வலியுறுத்திக் கொண்டு, அசே சமயம் சமய சார்பற்ற அரசில் நாம் ஒரு நூலை மட்டும் தேசிய மறையாக ஏற்றுக் கொள்ள முடியாது, ஏனெனில் அது சமயத்துக்கும் அரசுக்கும் இடையில் ஒரு வேறுபாடான கருததினைத் தோற்றுவிக்கும். மேலும் எந்த ஒரு நூலுக்காவது தனிச் சிறப்புத் தகுதி அளித்தால், அதுபோன்று பிற மொழிகளில் உள்ள மற்ற நூல்களின் சார்பில் இம்மாதிரி கோரிக்கைகள் உண்டாகலாம் என்று கூறி, திருக்குறளை தேசிய மறையாக அறிவிக்குமாறு இவ்வரசு கூறிய யோசனையை மைய அரசு ஏற்க இயலவில்லை என கூறியுள்ளது. திருக்குறளின் சமய சார்பற்ற தன்மையையும், சமுதாய முன்னேற்றக் கொள்கைகளை விளக்கும் சிறப்பையும் சுட்டிக்காட்டி, மறு பரிசீலனை செய்து ஏற்கெனவே கொடுத்துள்ள யோசனையை ஏற்க முன்வருமாறு தமிழ் நாடு அரசு மீண்டும் மத்திய அரசினை வற்புறுத்தியது. அதற்கு எந்த ஒரு நூலையும் தேசிய நூலாக அறிவிப்பது சரியன்று என்று பதில் மைய அரசிடம் இருந்து பெறப்பட்டது. எனவே இம்முயற்சி கைவிடப்பட்டது.

(முற்பகல் 10-45)

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** மைய அரசு கூறுகின்ற காரணங்களை எங்களாலே ஏற்றுக்கொள்ள முடியவில்லை. சமயசார்பற்ற அரசு, ஆகவே எந்த ஒரு நூலையும் தேசிய நூலாக ஏற்றுக்கொள்ள முடியாது என்று சொல்லுகிறார்கள். திருக்குறள் சமய சார்பற்ற நூல் மட்டுமல்லாமல், உலகத்திலே பைபிளுக்கு அடுத்தபடியாக மிக அதிகமான மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்ட சிறந்த நூல், சர்வ தேச நூலாக இருக்கிறது. ஆகவே திருக்குறள் சமயசார்பற்ற நூல் என்பதை தமிழக அரசு மத்திய அரசுக்கு வலியுறுத்திக் கூறுமா ?

இன்னுமொன்று. இந்தியாவினுடைய தேசியப் பறவையாக மயில் அங்கீகரிக்கப்பட்டிருக்கிறது. மயிலை எடுத்துக்கொண்டால், அது சமயசார்புடைய பறவைதான். முருகனுடைய வாகனமாக வர்ணிக்கப்படுகிறது. சமய சார்புடைய பறவையை தேசியப் பறவையாக மத்திய அரசு அங்கீகரித்துள்ள சூழ்நிலையில் சமயசார்பற்ற, மிகச் சிறந்த அறிஞர்களால் ஏற்றுக்கொள்ளப் பட்ட உலகப் புகழ் பெற்ற திருக்குறளை சாக்குப்போக்குச் சொல்லி ஏற்றுக்



கொள்ள மாட்டோம் என்று மத்திய அரசு சொல்லுவது தமிழர்களால் ஏற்றுக் கொள்ள முடியாத கருத்து. ஆகவே நம்முடைய மாநில அரசு "நம்முடைய திருவள்ளுவர் இயற்றிய நூல், ஆகவே அவருக்குப் பெருமை அளிக்க வேண்டும்" என்ற கண்ணோட்டம் இல்லாமல், உலக மக்கள் அனைவராலும் ஏற்றுக்கொள்ளக்கூடிய கருத்துக்கள் உள்ள சிறந்த நூல் என்ற அடிப்படையில் இதை தேசிய நூலாக அறிவிக்க வேண்டும் என்ற கருத்தை மீண்டும் அரசின் சார்பில், நேரில் பிரதமர் அவர்களைச் சந்தித்து வலியுறுத்த தக்க நடவடிக்கை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** இது சமய சார்பற்ற நூல் என்பதை வலியுறுத்துகிற அதே சமயத்தில் அவர்கள் சொல்லுகிற இன்னு மொரு காரணத்தையும் நாம் பார்க்க வேண்டும். "வேறு பல மொழிகளில் உள்ள நூலை தேசிய நூலாக ஆக்கச் சொல்லி கோரிக்கை வரும் நிலைமை உருவாகலாம். அப்போது நாட்டின் பல்வேறு மொழிப் பிரிவினர்களிடையே கருத்து வேறுபாடுகள் தோன்றும்" என்ற கருத்தையும் அவர்கள் சொல்லி யிருக்கிறார்கள். நாம் இப்போது சொன்னதை பரிசிலனைக்கு அவர்கள் எடுத்துக்கொள்ளும்போது வேற்று மொழியைச் சேர்ந்தவர்கள், குறிப்பாக சீக்கியர்கள் பஞ்சாப் மொழியில் இருக்கின்ற கிரந் சாஹிப்-பை தேசிய நூலாக ஆக்கச் சொல்லி கோரலாம் என்ற சிரமம் அவர்களுக்கு இருக்கிறது. அதைப் போலவே ஒவ்வொரு மாநிலத்திலும் உள்ள ஏதாவது ஒரு நூலை தேசிய நூலாக ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று சொல்லலாம். ஆகவே இந்த நூலைப் பொறுத்த மட்டில் அல்லாமல் நூல் தொடர்பு கொண்ட மொழிப் பிரச்சினையைப் பொறுத்து இருப்பதால், அவர்கள் ஏற்க முடியாது என்று சொல்லியிருக்கிறார்கள்.

**திரு. சி. ரா லெட்சுமிகாந்தன் :** இந்தியாவில் அரசியல் சட்டத்தின்படி 14 மொழிகள் அங்கீகரிக்கப்பட்ட மொழிகளாக இருக்கின்றன. தமிழகத்தின் சார்பில் திருக்குறளை தேசிய நூலாக மதிக்க வேண்டும் என்று சொல்லும் போது, அதைப் போலவே யாராவது வடபுலத்திலிருந்து சிறந்த நூலாக அங்கீகரிக்க வேண்டும் என்று சொன்னால், நிச்சயமாக அதற்கு நாம் குறுக்கே இருக்கப் போவதில்லை. மதிக்கத் தகுந்த நூல்களை மத்திய அரசு மதிக்க வேண்டும் என்பதுதான் நம்முடைய கருத்து. அப்படிப்பட்ட நூல்கள் பிற மாநிலத்து மொழிகளிலே இருந்தால், அதற்குக் குறுக்கே நாம் நிற்கப் போவதில்லை. அந்தப் பரந்த மனப்பான்மையோடு மத்திய அரசு இந்தக் கோரிக்கையை மீண்டும் பரிசீலனை செய்து நல்ல முடிவு எடுக்க வேண்டும் என்று கேட்க தீவிர முயற்சிகளை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மேற்கொள்வாரா என்று அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 10-50)

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, அவர்கள் சொல்கின்ற கருத்துப்படி மற்ற மொழிகளிலே உள்ள நூல்களையும் ஏற்றுக்கொள்ளலாம் என்று சொல்வோமானால், அப்படி அதை தேசிய நூலாக ஏற்றுக்கொள்ள வேண்டுமென்ற கொள்கையை அவர்கள் ஏற்றுக் கொண்டால் அது ஒரு நூலாக, ஒரு தேசிய நூலாக இருந்தால் நாம் எதிர் பார்க்கின்ற பெருமை, மதிப்பு திருக்குறளுக்கு ஏற்படும். ஆனால் 10 நூல்கள் தேசிய நூல்கள் என்று வந்தால், அதிலே ஒரு நூலாகத்தான் திருக்குறள் வர வேண்டும். அந்தப் பெருமை இப்போதே திருக்குறளுக்கு இருக்கின்றது. இப்போது இருக்கின்ற பிரச்சினை மொழிப் பிரச்சினையாக இருக்கின்ற காரணத்தினாலேயே அவர்கள் கொஞ்சம் அச்சப்படுகின்றார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. க. மீனாட்சிசுந்தரம்:** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, திருக்குறளை தேசிய நூலாக ஆக்க வேண்டுமென்ற கோரிக்கையிலே, நம் முடைய அமைச்சருக்கோ அல்லது நம்முடைய அரசுக்கோ எந்தவிதமான கருத்து வேறுபாடும் கிடையாது. அதிலே உள்ள சிக்கல்களைத் தான் அவர் கள் எடுத்துச் சொல்கின்றார்கள். பொதுவாக 14 தேசிய மொழிகள் நம் நாட்டிலே இருக்கின்றன. திருக்குறள் எத்தனையோ மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டிருந்தாலும், நம் நாட்டிலே உள்ள 14 மொழிகளிலும் மொழி பெயர்க்கப்பட்டு அதைப் பரப்பினால் மற்ற மாநிலங்களில் உள்ளவர்கள் அதன் பெருமையை உணர்ந்து அதற்கு எதிர்ப்பு தெரிவிக்காமல் இருக்கலாம். ஆகவே அந்த வகையில் அதற்கான நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ளுமா?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** அப்படிப்பட்ட முயற்சிகளை நாம் மேற்கொள்ளலாம்.

**திரு. நெல்லை பாலாஜி;** தலைவர் அவர்களே, திருக்குறளை நம்முடைய அரசு ஊழியர்கள் கட்டாயம் படித்தாக வேண்டும். ஏனெனில் அது தமிழ் வேதமாகக் கருதப்படுகிறது. எனவே தமிழ் நாடு அரசு ஊழியர்கள் அத்தனை பேர்களும் கட்டாயமாக திருக்குறளைப் படித்தாக வேண்டும் என்ற அளவில் ஏதாவது ஒரு சட்டம் இயற்றப்படுமா என்று கேட்டுக் கொள்கிறேன்,





**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** தலைவர் அவர்களே, அவர் களும் கட்டாயமாக திருக்குறளைப் படித்துப் 'பாஸ்' செய்து அதற்குப் பிறகுதான் இந்த அரசு வேலைக்கு வந்திருக்கின்றார்கள் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

## Part-Time Teachers.

* 17 Q.—Thiru P. R. THOMAS: Will the Hon. the Minister for Education be pleased to state:

(*a*) whether it is a fact that Part-time Teachers in the Vocational Stream, are not covered by the Family Benefit Fund Scheme; and

(*b*) if so, whether the Government will come forward to extend this scheme to them also?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** (அ) ஆம்.

(இ) பகுதி நேர பணியாளர்களுக்கு இத்திட்டத்தை அமல்படுத்த விதிகளில் இடமில்லை.

**திரு. பா. ரா. தாமஸ்:** தலைவர் அவர்களே, நம்முடைய ஆட்சியிலே மக்களுக்குப் பல நல்வாழ்வுத் திட்டங்களை வழங்கி வரும்போது, இந்தப் பகுதி நேர ஆசிரியர்கள், இரண்டு பகுதி நேர ஆசிரியர்களாகப் பணியாற்ற லாம் என்று சொல்லி, அவர்கள் மேல்நிலைப் பள்ளிகளிலே காலையிலும் மாலை யிலும் முழுமையாக இருக்க வேண்டியிருக்கிறது. அவர்கள் ஏறத்தாழ முழு நேர ஊழியர்களாகவே இருக்கின்ற முறை வருகிறது. அப்படி அவர்கள் பணியாற்றுகின்றார்கள். நம்முடைய மாண்புமிகு நிதி அமைச்சர் அவர் கள்கூட, அந்த ஆசிரியர்களை ஏன் முழு நேர ஆசிரியர்களாக ஆக்கக்கூடாது என்று நான் ஒருமுறை கேட்டபோது, ஒருவேளை ஃபேஸ்ட் புரோகிராம்-லே கொண்டு வரலாம் என்ற கருத்தைக்கூட ஒரு முறை சொல்லியிருக்கிறார்கள். இதையெல்லாம் கருத்திலே கொண்டு இந்த சாராரை மட்டும் விட்டுவிடாது அவர்களுக்கும் இந்தச் சலுகையை அளிக்க அமைச்சர் அவர்கள் முன்வருவார் களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** தலைவர் அவர்களே, முதலில் முழுநேரப் பணியாளர்களாக ஆக்குகின்ற ஒரு திட்டத்தை நாம் செயல்படுத் தினால்தான், இந்தப் பயனை அவர்களுக்குத் தரமுடியும். அதற்கான சாத்தியக்கூறு இருக்கின்றதா என்பதைப்பற்றி நாம் ஆராயலாம்.

**திரு. பா. ரா. தாமஸ் :** தலைவர் அவர்களே, அதற்காகத்தான் ஒரு கருத்தைச் சொன்னேன். கன்டிஜென்ட் ஸ்டாப்புக்கு ஒரு ரூபாயைக் கழித்துக்கொண்டு இந்தச் சலுகையைக் கொடுக்கிறார்கள். திடீரென்று இறந்துவிட்டால், அந்தக் குடும்பம் நிர்கதியாக நிற்கக்கூடாது என்ற காரணத்தினால் தானே நாம் இதைச் செய்கிறோம். அப்படி இருக்கும்போது, இந்த நிலைமையைக் கருத்தில் கொண்டு, இந்தச் சலுகையை அளிக்க அரசு விரைவாக, தீவிரமாகப் பரிசீலனை செய்யுமா என்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** தலைவர் அவர்களே, இந்தப் பிரச்சினையை அரசு நன்கு உணர்கின்றது. ஆகவே அவர்களுக்கு எந்த வகையில் உதவலாம் என்பதை அரசு பரிசீலிக்கும்.

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** தலைவர் அவர்களே, நம்முடைய முதலமைச்சர் அவர்கள் வாழ்க்கைக்கான தொழிற்கல்வியின் சிறப்பை உணர்ந்து, அதற்கு ஒரு புதிய திட்டத்தைக் கொண்டு வந்து, அதைச் சிறப்பாக அமல்படுத்துவதற்காக கல்வித் துறையிலே அதிகமான நிதியை ஒதுக்கீடு செய்து வருகின்ற ஆண்டிலே, அந்தத் திட்டத்தை விரிவுபடுத்தவிருக்கிறோம் என்று நம்முடைய அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கின்றார்கள். அந்தத் தொழிற்கல்வியைச் சொல்லிக்கொடுக்கின்ற ஆசிரியர்கள், பார்ட்-டைம் ஆசிரியர்களாக, பகுதிநேர ஆசிரியர்களாக இருக்கின்றார்கள். அவர்கள் ரூ. 300, ரூபாய் 300 ஆக இரு வேளைகட்கும், ரூபாய் 600 வாங்குகின்றார்கள். தொழிற் கல்வி பயின்று அதற்குப் பின்னாலே வெளியிலே சென்றால், தொழில் மூலம் பிழைக்க முடியும் என்ற நம்பிக்கை மாணவர்களுக்கு வருவதற்கேகூட, இந்த ஆசிரியர்களிடத்திலே பயில்கின்ற மாணவர்கள் இவர்கள் 300 ரூபாய்தான் சம்பளம் வாங்குகின்றார்கள் என்று எண்ணாத அளவுக்கு இருக்க வேண்டும். அந்த மனப்பான்மை ஏற்படாத அளவுக்கு இருந்தால்தான், அதை மிகச் சிறப்பாகக் கற்பார்கள், பின்பற்றுவார்கள். அது நமக்கு நன்றாகத் தெரியும். ஆகவே அந்த ஆசிரியர்களை 'பார்ட் டைம்' ஆக வைத்திருக்காமல், நாம் தொழிற் கல்வியை வளர்க்கின்ற இந்நேரத்தில், அவர்களை நிரந்தரப்படுத்த வேண்டும். அவர்களுக்கு என்று ஒரு தகுதியை நிர்ணயித்து, அந்தத் தகுதியிருந்தால், அவர்களை முழுநேர ஊழியர்களாக, முழு நேர ஊதியம் பெறுகின்றவர்களாக மாற்றி ஊதியத்தை மாற்றி உயர்த்தி அமைக்கின்ற உத்தேசம் அரசுக்குண்டா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** தலைவர் அவர்களே, பகுதிநேர ஆசிரியர்களாக நாம் நியமித்திருப்பதே இந்தத் தொழிற் கல்வித் திட்டம் வெற்றி பெறவேண்டும் என்பதற்காகத்தான். ஒருவேளை அந்தத் தொழில்



கல்வியானது அந்தப் பள்ளிக்குத் தேவையில்லை என்ற நிலைமை ஒரு இரண்டு ஆண்டுககாலத்திலே ஏற்படுமானால், பகுதி நேர ஆசிரியர்களாக இருந்தால், மாற்றிக்கொள்ளலாம்.

(முற்பகல் 10-55)

வேறு ஆசிரியர்களை வைத்து, வேறு தொழிலைச் சொல்லித் தரலாம். முழு நேர ஆசிரியர்களாக வைத்துக்கொண்டால், ஆசிரியர்கள் இருப்பார்கள். தேவை இருக்கிறதோ இல்லையோ அந்தத் தொழிலைச் சொல்லித் தந்து கொண்டிருக்க வேண்டுமென்ற நிலை ஏற்படுகிறது. அது மட்டுமல்லாது, தொழிற் கல்வி என்று வரும்போது, பல வகையான தொழில்களைச் சொல்லித் தர விரும்புகிற நேரத்தில், ஆசிரியர்கள் பயிற்சி பெற்றவர்களாக இருக்க வேண்டுமென்பதோடு, அதில் அனுபவம் உள்ள தொழிலாளர்கள், ஸ்கில்ட் ஒர்க்கர்ஸை இந்தப் பணியில் அமர்த்தும் வாய்ப்பும் இருக்கிறது. தொழிற் கல்வியில் வெற்றி பெற வேண்டுமென்ற அடிப்படையில், இந்தப் பகுதி நேர ஆசிரியர்களை நியமிக்கிறோம். ஆசிரியர்களை பகுதி நேர ஆசிரியர்களாக வைத்துக் கொண்டால், அரசுக்கு லாபம் என்ற அடிப்படையில் அல்ல. அவர்கள் 300 ரூபாய் ஊதியம் வாங்கும்போது, மாணவர்களே அவர்களை இருவிதமாகப் பார்ப்பதாகச் சொன்னார்கள். அந்தப் பாடத்தைச் சொல்லிக் கொடுக்கும்போது, அவர்கள் தப்பாக நினைக்க மாட்டார்கள். பகுதி நேர ஆசிரியர்களுக்கு எவ்வளவு சம்பளம் தர வேண்டுமோ அதைத் தான் தருகிறோம். அதையும் இப்போது உயர்த்தியிருக்கிறோம்.

உடுக்குறியிடாத வினாக்கள்.

## Unemployed Persons.

1. Q.—Thiru P. R. THOMAS : Will the Hon. the Minister for Rehabilitation and Employment be pleased to state the number of unemployed persons, who have registered their names and were in the live list as on 1st February 1985, in the Office of the Assistant Director, Professional and Executive Employment Office, Thiagaraya Nagar, Madras ?

விடை—

சென்னை, தியாகராய நகரில் உள்ள தொழில் மற்றும் வேலைவாய்ப்பு அலுவலகத்தில், பதிவு செய்து 1—2—1985 ஆம் நாளன்று உயிர் பதிவேட்டில் இருந்த வேலையில்லாதவர்களின் எண்ணிக்கை 37,274.

ஹஜ்ரத்சகன் ஷாவலி தர்கா.

2. வினா.—திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) சேலம் மாவட்டம், வேலூரில் உள்ள ஹஜ்ரத்சகன் ஷாவலி தர்கா பொறுப்பாட்சிக்குச் சொந்தமான நஞ்சை, புஞ்சை நிலங்கள் ஏதும் உண்டா?

(இ) ஆம் எனில், அதன் பரப்பளவு எவ்வளவு? அதன்மூலம் ஆண்டு தோறும் கிடைக்கும் வருமானம் எவ்வளவு?

(உ) மேற்படி வருமானம் எவ்வகையில் செலவிடப்படுகிறது?

விடை.—

(அ) மேற்படி வக்ஃபிற்கு வேலூர் நகரில் (சேலம்) 25 எக்கர் நஞ்சை நிலம் சொந்தமாக உள்ளது.

(இ) வக்ஃபு நிலங்களின் மூலம் கிடைக்கும் ஆண்டு வருமானம் ரூபாய் 6,165 ஆகும்.

(உ) இந்த நிலங்களின் மூலம் கிடைக்கும் வருமானம் முழுவதும் மேற்படி தர்காவினை நிர்வகிப்பதற்கும் உருஸ் விழாவிற்குமே பயன்படுத்தப்படுகிறது.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி (*) அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

## 2. அறிவிப்புகள்.

### (1) ஆளுநரிடமிருந்து செய்தி.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : ஆளுநர் அவர்கள் 1985 ஆம் ஆண்டு அழகப்பா பல்கலைக் கழகச் சட்ட முன்வடிவை ஆய்விற்கு எடுத்துக் கொள்வதற்கு தனது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.



### (2) பேரவையிலிருந்து செய்தி.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்டு, சட்டமன்ற மேலவையின் இசைவிற்காக மாண்புமிகு பேரவைத் தலைவரால் கையொப்பமிட்டு அனுப்பி வைக்கப்பட்டுள்ள கீழ்க்கண்ட சட்ட முன்வடிவுகளின் பிரதிகளை மாண்புமிகு பேரவைத் தலைவரிடமிருந்து பெற்றுள்ளேன் :

1. 1985 ஆம் ஆண்டு தமிழ் நாடு ஊராட்சிகள் (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 22/1985).

2. 1985 ஆம் ஆண்டு தமிழ் நாடு மாவட்ட நகராட்சிகள் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 23/1985).

3. 1985 ஆம் ஆண்டு அழகப்பா பல்கலைக் கழகச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 24/1985)

### (3) அவைக் குழுவிற்கு உறுப்பினர்கள் தேர்தல்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : 1985-86 ஆம் நிதியாண்டிற்குரிய அவைக் குழுவிற்கு தேர்ந்தெடுக்கப்பட வேண்டிய 6 உறுப்பினர் பதவிகளுக்கு, கீழ்க்கண்ட உறுப்பினர்கள் முறையாக நியமனம் செய்யப்பட்டுள்ளார்கள்.

1. திருமதி வி. ஜெயலட்சுமி
2. திரு. மிசா ஆர். கணேசன்
3. திரு. பா. ரா. தாமஸ்
4. திரு. மு. மாசிலாமணி
5. கவிஞர் முத்துலிங்கம்
6. திரு. வி. வி. வி. ஆனந்தம்.

நியமனம் செய்யப்பட்டுள்ள உறுப்பினர்கள் எண்ணிக்கையானது, அதாவது 6, நிரப்பப்பட வேண்டிய காலியிடங்களின் எண்ணிக்கைக்குச் சமமாக இருப்பதால், இந்த 6 உறுப்பினர்களும், அவைக் குழுவிற்கு முறையாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர் என்று அறிவிக்கிறேன்.

மேலவை விதி 173 (1)-படி கீழ்க்கண்ட இரண்டு உறுப்பினர்களை அவைக் குழுவின் உறுப்பினர்களாக நான் நியமிக்கிறேன்.

1. செல்வி ஆ. லீலாவதி
2. திரு. மு. செ. சங்கரலிங்கம.

மேலவைத் துணைத் தலைவர் அவர்கள் அலுவல் முறையில், அவைக் குழுவின் தலைவர் ஆவார்.

### (4) உரிமைக் குழுவிற்கு உறுப்பினர்கள் தேர்தல்

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** 1985-86 ஆம் நிதியாண்டிற்குரிய உரிமைக் குழுவிற்குத் தேர்ந்தெடுக்கப்பட வேண்டிய ஒன்பது உறுப்பினர் பதவிகளுக்கு, கீழ்க்கண்ட உறுப்பினர்கள் முறையாக நியமனம் செய்யப் பட்டுள்ளார்கள்.

1. திரு. ஏ. ஜே. தாஸ்
2. திரு. க. மீனாட்சிசுந்தரம்
3. திரு. அ. மயில்சாமி
4. திரு. மானாமதுரை இரா. இராஜேந்திரன்
5. திரு. இ. மதுசூதனன்
6. திரு. பா. அங்கமுத்து
7. திரு. காடுவெட்டி கணபதி
8. திரு. ஜேப்பியார்
9. செல்வி ஆ. லீலாவதி.

நியமனம் செய்யப்பட்டுள்ள உறுப்பினர்களின் எண்ணிக்கையானது, அதாவது ஒன்பது நிரப்பப்பட வேண்டிய காலியிடங்களின் எண்ணிக்கைக்குச் சமமாக இருப்பதால், இந்த ஒன்பது உறுப்பினர்களும், உரிமைக் குழுவிற்கு முறையாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர் என்று அறிவிக்கிறேன்.

மேலவை விதி 156 (1)ன்படி மாண்புமிகு மேலவை முன்னவர், மேலவைத் துணைத் தலைவர் ஆகியோர் இந்தக் குழுவின் உறுப்பினர்களாவர்.

சட்டமன்ற மேலவை விதிகளின் 156 (4) விதியின் கீழ் துணைத் தலைவர் அவர்களை இக்குழுவின் தலைவராயிருக்கும்படி நான் நியமித்துள்ளேன்.





(முற்பகல் 11-00)

### 3. உரிமைப் பிரச்சினை.

### 'அண்ணா' பத்திரிகையில் அவை நடவடிக்கை குறித்து வெளியான செய்தி குறித்து.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** திரு. க. மீனாட்சிசுந்தரம், எம்.எல்.சி. அவர்கள் 14—3—1985 அன்று மேலவையில் ஓர் உரிமைப் பிரச்சினையை 'அண்ணா' பத்திரிகையின் மீது எழுப்பினார். உறுப்பினரின் விளக்கத்திற்குப் பிறகு உரிய பத்திரிகை ஆசிரியருக்கு எழுதி அவர்களது பதில் கிடைத்தவுடன் எனது தீர்ப்பினை அளிப்பதாகத் தெரிவித்தேன். 'அண்ணா' பத்திரிகை ஆசிரியருக்கு எழுதிக் கேட்டதில், அவர் தமது பதிலில்—

"சட்டமன்ற மேலவையில் 14—3—1985 அன்று நடவடிக்கையைப் பொறுத்து மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜேப்பியார் அவர்கள் பேசிக்கொண்டிருக்கும்போது மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. கருணாநிதி அவையை விட்டு வெளியே சென்றதைப் பற்றிய விவரங்களில் தவறு ஏதும் இருப்பதாக நாங்கள் கருதவில்லை.

மேற்படி செய்தியில் 'ஜேப்பியார் சரமாரியாக குற்றச்சாட்டு—சபையிலிருந்து கருணாநிதி வெளியேறினார்' என்றும் அன்றைய இதழுக்கான சுவரொட்டியில் 'மேலவையில் இருந்து கருணாநிதி ஓட்டம்' என்றும் போடப் பட்டிருப்பது குறித்தும் தான் உரிமைப் பிரச்சினை எழுப்பப்பட்டுள்ளது என்று கருதுகிறோம்.

மேற்படி தலைப்பும், சுவரொட்டி வாசகங்களும் அவை உறுப்பினர்களின் உரிமையை மீற வேண்டும் என்ற நோக்கத்தில் எங்களால் வெளியிடப்படவில்லை. மேலும் அவை உறுப்பினர் யாருடைய மனமாவது இந்தச் செய்தியால் புண்படும் என்று தாங்கள் கருதினால் அதற்காக வருத்தம் தெரிவித்துக் கொள்ளுகிறோம் . . . . இந்தக் குறிப்பிட்ட நிகழ்ச்சியில் அவையின் உரிமையை மீறுவதோ, எந்த உறுப்பினரின் மனத்தைப் புண்படுத்துவதோ எங்களின் நோக்கமல்ல என்பதையும் மேற்படி செய்தித் தலைப்பை வெளியிட்டதில் எவ்வித உள்நோக்கமும் எங்களுக்குக் கிடையாது என்பதையும் திட்டவட்டமாகத் தெரிவித்துக் கொள்கிறேன்" என்று கூறியுள்ளார்.

இத்தருணத்தில் 23—2—1978 அன்று இந்த அவைக்கு நான் வழங்கிய தீர்ப்பினை நினைவுபடுத்த விரும்புகிறேன்—

"பத்திரிகைகள் இந்த அவையின் நடவடிக்கைகளை உண்மையாகவும், சரியாகவும் பிரசுரிக்க வேண்டும். கூட்டியோ, திரித்தோ பிரசுரிக்கக்கூடாது. உறுப்பினர் சொல்லாத சொற்களையோ பெயர்களையோ தாங்களாகவே

ஊகித்துச் சொல்லவும் கூடாது. மற்றொரு பத்திரிகையிலும் அம்மாதிரி பிரசுரித்து இருக்கிறது என்று கூறுவது ஒரு பொறுப்புள்ள பத்திரிகையின் சரியான வாதம் இல்லை.''

அவையின் நடவடிக்கைகளை, கட்சி சார்புள்ள பத்திரிகைகள் தமது விருப்பத்திற்கு ஏற்றவாறு, தங்கள் கண்ணோட்டத்தில் வெளியிடுவதால்தான் இம்மாதிரியான பிரச்சினைகள் எழுகின்றன. அவை நடவடிக்கையை எந்த வித கண்ணோட்டமுமின்றி, நடந்ததை நடந்தபடி பிரசுரிக்க வேண்டும். வேறு பொருள்படும்படி தலைப்புகள் கொடுப்பதையும் கட்சிப் பத்திரிகைகள் தவிர்க்க வேண்டும்.

'அண்ணா' பத்திரிகை ஆசிரியர், அவையின் உரிமையை மீறுவதோ, எந்த ஒரு உறுப்பினரின் மனத்தைப் புண்படுத்துவதோ தங்கள் நோக்கம் அல்லவென்றும் மேற்படி செய்தித் தலைப்பை வெளியிட்டதில் எவ்வித உள்நோக்கமும் கிடையாது எனவும் கூறியிருப்பதோடு, தமது பத்திரிகையிலும் சுவரொட்டியிலும் வெளியான தலைப்புக்கு வருத்தம் தெரிவிப்பதாலும் நான் முன்பு இதுபோன்ற பிரச்சினைகளில் அளித்த தீர்ப்பின் அடிப்படையிலும், இவ்வவையின் பெருந்தன்மையையும், கண்ணியத்தையும் கருத்திற்கொண்டு இப்படிப்பட்ட நிகழ்வுகளை பெரிதுபடுத்த வேண்டாமென்கிற நோக்கோடும், இனிமேல் இவ்வாறு அவை நடவடிக்கைகளுக்கு வேறு பொருள்படும்படி தலைப்பிடுவதைத் தவிர்க்க வேண்டுமெனக் கூறி, இவ்வுரிமைப் பிரச்சினையை இத்துடன் முடித்துக்கொள்ளலாமென தீர்ப்பளிக்கிறேன்.

### 4. கவன ஈர்ப்பு.

### (1) தொலைக் காட்சியில் தமிழ் ஒளிபரப்பு நேரம் குறைக்கப்பட்டுள்ளது குறித்து.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** தலைவர் அவர்களே, கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து மாண்புமிகு செய்தி மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்:—

"தொலைக் காட்சியில் தமிழ் ஒளிபரப்பு நிகழ்ச்சிகள் குறைக்கப்பட்டு தேசிய நிகழ்ச்சிகள் பெயரில் பிற மொழிகளின் ஆதிக்கம் அதிகரிக்கப்பட்டிருப்பதால் ஏற்பட்டிருக்கும் நிலை குறித்து".

**மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் :** தலைவரவர்களே, அவை முன் ஒரு விவர அறிக்கை * வைக்கப்பட்டுள்ளது.

*600 ஆம் பக்கத்தில் இணைப்பு I ஆக அச்சிடப்பட்டுள்ளது.



(மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் தலைமை)

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** இது குறித்து தமிழக அரசின் சார்பாக கடிதம் எழுதப்பட்டும், எந்த நடவடிக்கையும் எடுக்கப்பட்டதாகத் தெரியவில்லை. இந்தக் கோரிக்கை குறித்து பரிசீலிப்பதாக மத்திய ஒளிபரப்புத் துறை அமைச்சர் கடிதத்தில் தெரிவித்திருப்பதாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. இப்போது ஸ்ரீலங்கா தமிழர் பிரச்சினை குறித்து வெகு விரைவில் மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய தலைமையில் பிரதமர் அவர்களைச் சந்திக்க தூதுக் குழுவினர் செல்ல இருப்பதால், அந்தச் சமயத்தில் இது குறித்தும் நம்முடைய உணர்வுகளை பிரதமரிடம் தெரிவிக்க இந்த வாய்ப்பினைப் பயன்படுத்தலாம் அல்லவா? அந்த வகையில் இந்த அரசு இது குறித்து நடவடிக்கை எடுக்க முன்வருமா ?

**மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் :** இந்தப் பிரச்சினை குறித்து மத்திய செய்தி ஒலிபரப்பு அமைச்சர் அவர்களுக்கு ஒரு டெலக்ஸ் செய்தியும் அதையொட்டி ஒரு கடிதமும் அனுப்பப்பட்டது. அதற்கு அவர்கள் இதைப் பரிசீலிப்பதாக பதில் தெரிவித்திருக்கிறார்கள். இதைத் தவிர வேறு அமைச்சர் கல்கத்தாவிலே ஓரிடத்தில் அதைப்பற்றிப் பரிசீலிப்பதாகத் தெரிவித்ததாகச் செய்தி வந்திருக்கிறது. அந்தத் துறையிலேயிருந்து எங்களுக்குக் கிடைத்திருக்கிற, அதிகாரபூர்வமற்ற தகவல் என்னவென்றால், "தேசிய ஒளிபரப்பு நிகழ்ச்சியை இப்பொழுது நாங்கள் மாற்றவில்லை. இப்பொழுது நடைபெற்றுக் கொண்டிருக்கிற 8-30-ல் இருந்து 9 வரையுள்ள நிகழ்ச்சி ஸ்பெஷல் புரோகிராம், மாநிலங்களில் இருந்து தயாரிக்கின்றவற்றை நாடு முழுவதும் ஒளி பரப்புவதற்காக வழங்கப்படுகின்ற ஒரு நிகழ்ச்சி" என்று தெரிவித்திருக்கிறார்கள்

(முற்பகல் 11-05)

காரணம், இப்போது ஒளிபரப்பப்படுகிற நிகழ்ச்சிகள், பம்பாய் தொலைக் காட்சி நிலையத்தால், தயாரிக்கப்பட்டு, வெளியிடப்படுகின்றன. ஆகவே இந்த நிகழ்ச்சித் தொடர்புகள் முடிந்தவுடன், அவர்கள் வழக்கம் போல இரவு 9-20 மணிக்கு தேசிய ஒளிபரப்பு நிகழ்ச்சிகளைத் தொடர்ந்து நடத்துவார்கள் என்று நாம் கருதலாம். இருந்தாலும், தேவையானால் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், இந்தியப் பிரதமர் அவர்களுக்கு விரைவில் இது குறித்து ஒரு நேர்முகக் கடிதம் நினைவுபடுத்தி எழுதலாம் என்று துறை முடிவெடுத்திருக்கிறது. அந்த முயற்சியே போதும் என்று கருதுகிறேன்.

ஸ்ரீலங்கா பிரச்சினை என்பது தமிழ் மக்களின் உயிர்ப் பிரச்சினை. உயிர் போய்க்கொண்டிருக்கிற பிரச்சினை. அந்த அளவுக்கு, இந்த ஒளிபரப்புப் பிரச்சினையை மத்திய அரசின் செய்தி ஒளிபரப்புத் துறை கொண்டு போகாது என்று கருதுகிறேன்.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** இப்போது பல மாவட்டங்களில் மறு ஒளிபரப்பு நிலையங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன. ஆனால் அவற்றில் தேசிய நிகழ்ச்சிகள், டெல்லி, பம்பாய் நிகழ்ச்சிகள் மட்டுமே ஒளிபரப்பப்படு கின்றன. சென்னைத் தொலைக்காட்சியில் இந்த மாவட்ட மறு ஒளிபரப்பு நிலையங்கள் ஒளிபரப்புவதில்லை. இதையும் நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவந்து, மத்திய அரசுக்கு இதைத் தெரி வித்து, எப்படி தேசிய நிகழ்ச்சிகளை ஒளிபரப்புகிறார்களோ, அப்படி சென்னைத் தொலைக்காட்சியின் தமிழ் நிகழ்ச்சிகளையும் ஒளிபரப்ப ஏற்பாடு களைச் செய்ய வேண்டுமென்று, தமிழக அரசின் சார்பில் வலியுறுத்தப்படுமா?

இன்னொன்று, இரண்டு சானல் ஒளிபரப்பு சிஸ்டம் வைத்துக் கொண்டு, யார் யார் தேசிய நிகழ்ச்சிகளைக் காண விரும்புகிறார்களோ, அவர்கள் ஒரு சானலைப் பயன்படுத்திக் கொள்ளவும், யார் யார் சென்னைத் தொலைக் காட்சி நிகழ்ச்சிகளைப் பார்க்க விரும்புகிறார்களோ அவர்கள் இன்னொரு சானலைப் பயன்படுத்திக் கொள்ளவும் வாய்ப்புக் கிடைக்கும் நிலையில், இரண்டு சானல் முறை கொண்டு வரப்பட வேண்டுமென்பதை, மத்திய அரசுக்கு மாநில அரசு வலியுறுத்துமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் :** துணைத் தலைவர் அவர்களே, இப்போது அத்தகைய மறு ஒளிபரப்பு நிலையங்கள் தமிழ் நாட்டில் 6 இருக் கின்றன. அத்தகைய ரிலே ஸ்டேஷன்கள் குறைந்த சக்தியுள்ள நிலையங்கள், 100 வாட்ஸ் என்ற அளவில், 15—20 மைல் சுற்றளவுக்குத்தான் நிகழ்ச்சிகள் தெரியக்கூடிய அத்தகைய ஒளிபரப்பும் சக்தி உள்ள நிலையங்களாக செயல்படுகின்றன. அது இப்போது இந்தியாவோடு இணைக்கப்பட்டிருக்கிற 'சாட்டிலைட்' மூலம் ஒளிபரப்பப்படுவதால், தேசிய நிகழ்ச்சிகள் மட்டும் தெரிகின்ற வகையில் அமைந்திருக்கின்றன. ஆகவே சென்னையிலிருந்து ஒளி பரப்பப்படும் நிகழ்ச்சிகளை அந்தக் கருவிகள் எடுக்கும் சக்தியில்லை. காரணம் அதற்கு மைக்ரோ வேவ் என்ற சாதனத்தை இணைத்தால்தான், சென்னை நிலையத்திலிருந்து ஒளிபரப்பும் நிகழ்ச்சிகளை அந்தக் கருவி ரிலே செய்யும். இப்போது டெல்லியிலிருக்கும் 'சாட்டிலைட்' மூலமாக ஒளிபரப்பிக் கொண் டிருக்கிறார்கள். இந்த மைக்ரோ வேவ் தொடர்பு இங்கேயும் ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டிருக்கிறோம். கொடைக்கானலில் ஏற்படுத்தப்பட்



டிருக்கிற 10 கிலோ வாட் ரிலே ஸ்டேஷனுக்கு மைக்ரோ வேவ் கொடுக்கும் இயந்திரங்களை ஆர்டர் செய்திருக்கிறார்கள் என்று தெரிகிறது. அதுவும் தனது முழு சக்தியைப் பயன்படுத்தி ரிலே செய்வதற்கு ஒன்றிரண்டு ஆண்டு களாகும் என்று தெரிகிறது. ஆகவே, இந்த தொலைக் காட்சி நிலையங்கள் அமைக்கப்பட்டாலும், அதனுடைய முழுமையான பயன் நாட்டு மக்களுக்குக் கிடைக்கவில்லையென்ற கருத்தை மத்திய அரசிடம் தெரிவித்திருக்கிறோம். அதிலே ஒன்றுதான், மைக்ரோ வேவ் இணைப்புக் கொடுப்பது என்பது. மைக் ரோவேவ் இணைப்பை அவர்கள் கொடுக்க துரிதமாக முயற்சி எடுக்க வேண்டு மென்று நமது அரசும் வற்புறுத்திக் கொண்டிருக்கிறது. மீண்டும் வற் புறுத்தும்.

இன்னொரு துரதிருஷ்டமான சம்பவம், மற்ற பிராந்தியங்களுக்கு கலர் ஒளிபரப்பு சாதனங்களை டெல்லியிலிருந்து வழங்கிவிட்டார்கள். சென்னைத் தொலைக்காட்சி நிலையத்திற்கு, 3—4 ஆண்டுகளாக வழங்குவதாகச் சொல் கிறார்கள். மிகப் பெரிய பகுதியாக இருக்கிற தெற்கு பிராந்திய (சதர்ன் ரீஜன்) நிலையமான சென்னைக்கு, கலர் ஒளிபரப்பு சாதனமாக கலர் ஓ.பி. வேன் கிடைக்கவில்லை. அதை வழங்க வேண்டுமென்று மீண்டும் வலியுறுத்திச் சொல்லியிருக்கிறோம். மூன்று ஒலிபரப்பு அமைச்சர்கள் மத்திய அரசில் மாறி மாறி வந்து விட்டார்கள். ஒவ்வொருவரும் விரைவில் தருவதாக வாக் களிக்கிறார்கள். ஆனால் இன்னும் அந்த இயந்திரங்கள் வரவில்லை. அதனால் தேசிய நிகழ்ச்சிகளில் பங்கேற்க கிடைக்கக்கூடிய வாய்ப்பு நமது மாநிலத் திற்குக் குறைந்து கொண்டு வருகிறது.

(பிற்பகல் 11-10)

மற்ற மாநிலங்களிலே (கலர்) வண்ண நிகழ்ச்சிகள் தயாரித்துத் தருகிறார் கள். அதை, தேசிய ஒளி பரப்பிலே பரப்புகிறார்கள். ஆனால் நம் முடைய சென்னையிலேயிருந்து தரவேண்டுமானால், பிளாக் அண்ட் வொயிட் டாகத்தான் கொடுக்க முடியும். ஆகவே தேசிய நிகழ்ச்சிகளில் ஒளி பரப்பப் படுகின்ற வண்ணக் காட்சிகள் மக்களைக் கவர்கின்ற அதே சூழ்நிலையில், சென்னை நிலையத்திலிருந்து கொடுக்கப்படும் நிகழ்ச்சிகள் பிளாக் அண்ட் வொயிட்டாக இருப்பதனால், அவை மக்களாலே கவரக்கூடிய சூழ்நிலையைப் பெறத் தவறி விடுகின்றன.

தொலைக்காட்சி மூலமாக இன்றைக்கு வயது வந்த கல்வி பெறாதவர் களுக்கு கல்வியைக் கற்பிப்பதற்கும், இளைஞர்கள், மாணவர்கள் அறிவு வளர்ச்சிக்கான செய்திகளைப் பெறுவதற்கும், மக்களுக்குக் கலை நிகழ்ச்சி களை வழங்குவதற்கும் அரசினுடைய சமுதாயத் திட்டங்களை கிராமப் பகுதியிலே கொண்டு செல்வதற்கும்தான், அரசு இந்தத் துறையை விரிவு

படுத்திக் கொண்டிருக்கிறது. ஆனால் தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் மக்களிடம் சென்று பலன் கொடுக்க வேண்டுமானால், வண்ண ஒளி பரப்புக் கருவிகள் நமக்குக் கிடைத்தாக வேண்டும். நாம் மத்திய அரசைக் கேட்டிருக்கிறோம். ஆகவே மைக்ரோ வேவ், கலர் ஒளி பரப்புக் கருவி இவைகள் எல்லாம் மிக விரைவிலே தென்னகத்திற்கு வரவேண்டும் என்று கேட்டுக் கொண்டிருக்கிறோம். விரைவிலே கிடைக்கும் என்று நம்புகிறோம்.

**(2) நாச்சியார் கோவில் அரசினர் மேல்நிலைப் பள்ளியில் பயிலும் பதினோராம் வகுப்பு மாணவர்கள் மதிப்பெண் சான்றிதழ்களில் "CANCELLED" என்ற முத்திரையைப் பொறித்து விட்டதால், அவை செல்லாதவையாகியுள்ளது குறித்து.**

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன் :—

"தஞ்சை மாவட்டம், நாச்சியார்கோவில் அரசினர் மேல்நிலைப் பள்ளியில் பயிலும் 11-ஆம் (பிளஸ் 1) வகுப்பு மாணவர்கள் அனைவருடைய 10-ஆம் வகுப்பு மதிப்பெண் சான்றிதழ்கள் அனைத்திலும் "CANCELLED" என்ற முத்திரையை பொறித்துவிட்டதால், அவைகள் செல்லாதவையாகி, அதனால் மாணவர்களும், பெற்றோர்களும் அல்லல்படுவது குறித்து."

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, அவைமுன் ஒரு விவர அறிக்கை @ வைக்கப்பட்டிருக்கிறது.

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இப்போது சில விவரங்களைச் சொல்லுகிறேன். அந்தப் பிரச்சினைகளை மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் பார்வையிட்டு, கவனிக்கும்படியாகக் கேட்டுக்கொள்கிறேன். இந்த நாச்சியார்கோவில் அரசினர் மேல்நிலைப் பள்ளியிலே 152 மாணவர்களுடைய பிளஸ் 1 சர்ட்டிபிகேட்டுகளில் எப்படியோ "CANCELLED" என்ற முத்திரையைப் பொறித்து விட்டார்கள். அந்தத் தவறுக்குப் பொறுப்பேற்க வேண்டியவர் தலைமையாசிரியரேயாவார். அந்த முத்திரை பொறிக்கப்பட்டதற்குப் பின்னாலே ஒரு மாணவன் வெளியிலே சென்று உத்தியோகத்திற்குச் செல்கிற நேரத்தில் "CANCELLED" என்று போடப்பட்டிருக்கிறது, எனவே தேர்ச்சி அடைந்ததாக ஆகாது என்று கூறி திருப்பி அனுப்பப்பட்டு, வேலை இழக்கக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டது.

---

**@ 601-602 ஆம் பக்கங்களில் இணைப்பு II ஆக அச்சிடப்பட்டுள்ளது.**



அதற்குப் பின்னால், இங்கே கவன ஈர்ப்பு தரப்படுகிறது. இது ஒரு முக்கியமான பிரச்சினை. விவர அறிக்கையில் தரப்பட்டிருக்கின்ற பதிலைப் பார்க்கும் போது, இது ஒரு பெரிய தவறு அல்ல என்பதுபோல் உணர்வு ஏற்படுகிற வகையில் அமைந்திருப்பதாகத் தோன்றுகிறது. 'கான்சல்டு' என்று போட்டிருப்பதற்கு யார் பொறுப்பு? பொதுவாக அதற்குத் தலைமை ஆசிரியர்தான் பொறுப்பு. மற்றவர்கள் மீது பழியைச் சாட்டுவதுபோல் இதில் விவரம் இருக்கிறது என்றாலும், மற்றவர்கள் மீது பொறுப்பு சொல்ல முடியாது. தலைமை ஆசிரியரைக் காப்பாற்றும் முறையில் இந்த பதில் தயாரிக்கப்பட்டிருக்கிறது. இதில் மிகப் பெரிய பாதகம் ஏற்பட்டுவிடப் போவதில்லை என்பது போல் கூறப்பட்டு இருக்கிறது. மாணவர்களும், பெற்றோர்களும் அல்லல்படத் தேவை இல்லை என்று இருக்கிறது. எப்படி அல்லல்படத் தேவையில்லை என்று சொல்ல முடியும்? இப்போது நீங்கள் திருத்தித் தருகிறீர்கள். அதுபோல் திருத்தித் தருவதைக்கூட அந்தத் தலைமையாசிரியர் செய்ய முடியாது என்பதை அவரே உணரவில்லை. அந்தச் சான்றிதழ்களை இடைநிலைக் கல்வி வாரியத்தினுடைய செயலாளர்தான் திருத்த வேண்டும். இவ்வாறு சட்டம் இருந்தாலும், அந்தச் சட்டமே தெரியாமல், அந்த மாணவர்களுக்கு 'இது செல்லுபடியாகும்' என்று அவரே எழுதித் தந்திருக்கிறார். அதன் நகல்கூட என் கையிலே இருக்கிறது.

(மணியடிக்கப்பட்டது)

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** மாண்புமிகு உறுப்பினர் விளக்கம் பெறலாம். . . .

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** துணைத் தலைவர் அவர்களே, விளக்கம் தான் கேட்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** விளக்கம் பெறலாம். ஆனால் அது பிரசங்கமாக அமைய வேண்டாம்.

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** இதிலே குற்றவாளிகளுக்கு உடந்தைபோல இந்த அறிக்கை இருக்கிறது. "பெற்றோர் அல்லல்படத் தேவை இல்லை. நாங்களே தருகிறோம்" என்று சொல்கிறார்கள். சான்றிதழ்களையும் திருத்தித் தருகிறார்கள். பள்ளிகளிலே இருப்பவர்களுக்குத் தந்து விடுகிறார்கள். ஆனால் வெளியிலே சென்றிருப்பவர்களுக்குத் தரவில்லை. அவர்கள் உத்தியோகத்திற்குப் போக முடியவில்லை. அதனாலே பாதிப்பு ஏற்பட்டிருக்கிறது. அதைப்போல மற்றுமொரு முக்கியமான பிரச்சினை சொல்ல விரும்புகிறேன்.

[திரு. க. மீனாட்சிசுந்தரம்] [1985 ஏப்ரல் 12

(முற்பகல் 11-15)

என்னவென்று சொன்னால், அது நம்முடைய அவையினுடைய பிரச்சினை. நான் 'கால் அட்டென்ஷன்' தருகிறேன். கால் அட்டென்ஷனுக்கு என்ன பதில் தரப்படும் என்பது எனக்குத் தெரியாது. ஆனால் அது தந்ததற்குப் பின்னாலே அந்தத் தலைமை ஆசிரியர், அவருடைய பகுதியிலே ஒரு நிகழ்ச்சியை ஏற்பாடு செய்கிறார். ஒரு பெரியவரை அழைத்துச் சென்று அங்கே பேச வைக்கிறார். பேசியவரின் பெயரைச் சொல்லக்கூட நான் கடமைப்பட்டிருக்கிறேன். அவர் பெயர் திரு. திருக்குறள் முனுசாமி. அவர் பேசும்போது, இந்தத் தலைமை ஆசிரியர் ஏதோ தவறு செய்து விட்டதாக அசெம்பிளியிலே 'ரேக் ஆப்' செய்யப்பட்டிருக்கிறது . . . .

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** உறுப்பினர் அவர்கள் ஒரு கேள்வி கேட்டு, அதன் மேலே அந்த விவரங்களைப் பற்றி பின்னாலே பேசலாம். விவரங்களைக் குறித்து உறுப்பினர் பேச வேண்டுமென்று சொன்னால், இதுவல்ல நேரம். கவன ஈர்ப்பின் மீது இரண்டு சப்ளிமெண்டரிதான் கேட்கலாம். உறுப்பினர் அவர்கள் சொற்பொழிவு மாதிரி 10 நிமிடங்களாகப் பேசிக் கொண்டிருக்கிறார்கள். உறுப்பினர் ஏதாவது விவரம் சொல்ல வேண்டுமானால், பின்னாலே பேசுகிறபோது அந்த விவரங்களைச் சொல்லலாம். ஏதாவது ஒரு குறிப்பை மட்டும் சொல்லலாம்.

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** அவர் பேசியிருக்கிறார், "பள்ளி டைரக்டர் திரு. கோபாலன் எனக்கு மிகவும் வேண்டியவர். தலைமை ஆசிரியர் திரு. பக்கிரிசாமி செய்தது மிகச் சிறிய தவறு ; அவர் மிகவும் பயப்படுகிறார் ; அவர் பயப்படத் தேவையில்லை என்று என்னிடம் திரு. கோபாலன் சொல்லியிருக்கிறார். ஆகவே அவருக்குச் சாதகமாக பதில் வர இருக்கிறது" என்று சொல்லியிருக்கிறார். ஆகவே அரசாங்கத்தினுடைய இரகசியங்கள் எப்படி வெளியே போகின்றன ? இது அவரைக் காப்பாற்றுவதற்காகத் திட்டமிட்டு தயாரிக்கப்பட்ட குறிப்பா, தவறு செய்தவர் மீது நடவடிக்கை எடுப்பது தேவையில்லையா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, 10-வது பரீட்சை எழுதி, எஸ்.எஸ்.எல்.சி. சான்றிதழ்களை மாணவர்கள் பெறுகிறார்கள். இன்றைக்கு அதைக் கொடுத்து 11-வது வகுப்பிலே சேருகிறார்கள். அந்தச் சான்றிதழ்கள் அங்கே பள்ளியிலே இருக்கின்றன. இப்போது ஒரு மாணவர் டி.சி, வாங்கியதற்குப் பிறகு, அந்தச் சான்றிதழைப்



1985 ஏப்ரல் 12] [திரு. செ. அரங்கநாயகம்]

பார்க்கிறபோது, அதிலே 'கேன்சல்டு' என்ற முத்திரை பொறிக்கப்பட்டிருக்கிறது. அதிலே யாரும் கையெழுத்துப் போடவில்லை. கேன்சல்டு என்று போடப்பட்டிருக்கிறது. அதற்குப் பிறகு பார்க்கிறபோது, 152 எஸ்.எஸ்.எல்.சி புத்தகங்களிலே அதைப்போல 'கேன்சல்டு' என்ற முத்திரை போடப்பட்டிருக்கிறது. அதற்குக் கீழே எஸ்.எஸ்.எல்.சி. போர்டு செக்ரடரியும் கையெழுத்துப் போடவில்லை ; சேர்மனும் போடவில்லை ; யாரும் கையெழுத்துப் போடவில்லை. 'கேன்சல்டு' என்று குறிக்கப்பட்டிருக்கிறது. அந்தச் சான்றிதழ்களை ஒழுங்காக வைத்திருக்கும் பொறுப்பு தலைமை ஆசிரியரைச் சார்ந்தது தான். ஆகவே இப்போது அந்தத் தலைமை ஆசிரியரே அதில் 'கேன்சல்டு' என்று போட்டிருந்தார் என்று நாம் நினைப்போமேயானால், அது அவ்வளவு சரியாக இருக்காது என்பதைத்தான் நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். ஆகவே அவர்களுடைய கருத்தின்படி, அவருடைய ஒரு வாக்குமூலத்தின்படி, அங்கே அவருக்கு ஆகாத ஒரு ஆசிரியர் சில ஆசிரியர் அல்லாத ஊழியர்களை வைத்துக்கொண்டு, அவர் இல்லாதபோது அந்த பீரோவைத் திறந்து அந்தச் சான்றிதழ்களை எடுத்து 'கேன்சல்டு' என்று முத்திரை பொறித்து, அவருக்கும், அந்தப் பள்ளிக்கும், மாணவர்களுக்கும் ஒரு பாதகத்தை விளைவித்திருக்கிறார்கள் என்று அவர் சொல்கிறார். அதை விசாரித்துக் கொண்டிருக்கிறார்கள். அதில் தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றே அரசு விரும்புகிறது. இதிலே தலைமை ஆசிரியர் செய்திருப்பாரா என்று பிரைமா ஃபேசி அனுமானத்தின் மேலே பார்த்தால் கூட, அவர் இருக்கிற சர்ட்டிபிகேட் புத்தகங்களை எல்லாம் எடுத்து, 'கேன்சல்டு' என்று போட்டு, தனக்கே ஒரு பாதகத்தைத் தேடிக்கொள்வார் என்று நம்புவதற்கு அதில் கொஞ்சம் கூட இடமில்லை. ஆனால் அவருக்கு வேண்டாதவர்கள் செய்திருக்கக் கூடும் என்பதற்கு ஒரு அடிப்படை இருக்கிறது. வேண்டாத ஒரு ஆசிரியர் அங்கே இருப்பதாக அவரும் குறிப்பிட்டிருக்கிறார் ; அவருடைய பெயரை நான் இங்கே சொல்ல விரும்பவில்லை. அந்தக் குறிப்பிட்ட ஆசிரியர் மாணவர்களைத் தூண்டி விட்டு, அங்கே வேலை நிறுத்தம் செய்யச் சொல்லி, அந்த மாணவர்களிடத்திலே ஒரு அமைதியின்மையையும், உருவாக்கியிருக்கிறார்கள். ஆகவே இதிலே சம்பந்தப்பட்டவரைக் கண்டுபிடித்து, அரசு தக்க நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். குறிப்பாக மாணவர்களை வேலை நிறுத்தம் செய்யத் தூண்டக்கூடிய யாரையும் ஆசிரியராக வைத்துக் கொள்கிற ஒரு எண்ணம் இந்த அரசுக்கு இல்லை என்பதை இந்த நேரத்திலே குறிப்பிட விரும்புகிறேன். இது பள்ளியாக இருந்தாலும் சரி, கல்லூரியாக இருந்தாலும் சரி, ஆசிரியர்கள் மாணவர்களுக்குக் கட்டுப்பாட்டையும்,

ஒழுங்கையும்தான் சொல்லித் தரவேண்டுமே தவிர, அரசாங்கச் சம்பளத்தை வாங்கிக்கொண்டு மாணவர்கள் மத்தியிலே ஒழுங்கின்மையையும், கட்டுப்பாடின்மையையும் வளர்க்கும் முயற்சியிலே ஈடுபடுகிற யாரையும் ஆசிரியராக ஏற்றுக்கொள்ள இந்த அரசு தயாராக இல்லை. அப்படி விசாரணையிலே ஏதாவது ஏற்படுமானால், அதற்குத் தக்கபடி அவர்கள் பதில் சொல்லவும், அதற்குரிய தண்டனையை ஏற்றுக்கொள்ளவும் கடமைப் பட்டிருக்கிறார்கள் என்பதையும் நான் இந்த நேரத்திலே குறிப்பிட விரும்புகிறேன். ஆகவே, இதை விசாரித்து, குற்றம் யார் செய்திருந்தாலும், அதற்குரிய தண்டனையை நாம் வழங்கலாம். இப்போது மாணவர்கள் பாதிக்கப்படாத அளவிற்கு அரசு நடவடிக்கை எடுத்திருக்கிறது.

**திரு. க. மீனாட்சிசுந்தரம்:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, தலைமை ஆசிரியர் தந்திருக்கிற அந்தக் குறிப்பை வைத்துக்கொண்டு நம்முடைய கல்வி அமைச்சர் அவர்கள் வேறு ஒரு ஆசிரியர் அங்கு தவறு செய்கிறார் என்ற குற்றச்சாட்டைச் சாட்டி, "அவருக்குச் சாதகமாக சிலர் இருக்கிறார்கள், அப்படிப்பட்டவர்களை நாங்கள் தண்டிக்க வேண்டிய அவசியம் இருக்கும்" என்று சொல்லி, ஆனால் இறுதியாக யார் தவறு செய்தாலும், நடவடிக்கை எடுப்போம் என்று சொல்கிறார்கள். நான் ஒன்றை மட்டும் உங்களுக்குக் குறிப்பிட்டுக் காட்ட விரும்புகிறேன். அவர் மற்ற ஆசிரியர்களைப் பற்றிச் சொன்னார்கள்.

(முற்பகல் 11-20)

அந்தத் தலைமை ஆசிரியர் எம்.ஏ., பி.எட். படித்தவர், ஆனால் அவர் தன்னை எம்.ஏ., எம்.லிட் படித்தவர் என்று விளம்பரப்படுத்திக்கொள்வதோடு, அங்குள்ள கல்வெட்டு ஒன்றிலும் அவ்வாறே பொறித்துக் கொண்டிருக்கிறார் என்பதற்கான சான்றை மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் கொடுக்க விரும்புகிறேன். (புகைப்படம் ஒன்று அமைச்சரிடம் அளிக்கப்பட்டது.) அதுமட்டுமல்ல, அவர் பல்வேறு விழாக்களை ஏற்பாடு செய்வது, விழாக் களுக்குப் பெரிய மனிதர்களை அழைத்து வருவது என்றெல்லாம் திட்டமிட்டு விளம்பரப்படுத்தி, இதற்காகப் பணம் வசூலிப்பது, பிறகு விழாக்களை நடத்துவதே இல்லை என்பது போன்ற நிகழ்ச்சிகளில் ஈடுபட்டு வருகிறார். பல பெரியவர்களை வைத்துக்கொண்டு தனக்குச் சாதகமாக எதையும் செய்து கொள்ளலாம் என்று நம்பிக்கை கொண்டு செயல்பட்டு வருகிறார். அதுமட்டு மல்ல. அங்கே ஒரு கூட்டுறவுப் பண்டகசாலை இருக்கிறது. அந்தப் பண்டக



சாலை மூலம் பொருள்களை விற்காமல் அவர் தனக்குத் தெரிந்த ஒரு வியாபாரியைக் கொண்டு வந்து பேனா வியாபாரம் செய்து, ஆயிரக்கணக்கான ரூபாய் சம்பாதித்திருக்கிறார் என்று சொல்லப்படுகிறது. இதையெல்லாம் எதிர்த்த ஒரு ஆசிரியர்—அவர் அங்கே கூட்டுறவுப் பண்டக சாலையின் இயக்குநராக இருந்திருக்கிறார். அவரை இவர் இயக்குநர் பொறுப்பிலிருந்து சட்ட விரோதமாக நீக்கியுள்ளார். அவர் மீது இப்போது தலைமையாசிரியர் பழி சுமத்தியிருக்கிறார். எனவே இந்த நிலையில் சரியான நேரடி விசாரணை ஒன்றை ஏற்பாடு செய்து, தெளிவாக உண்மையைக் கண்டு பிடிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்வதோடு, குற்றவாளி யாராக இருந்தாலும், அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். படிக்கும் மாணவர்களைப் பொறுத்தவரையில், நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. வெளியே பள்ளியை விட்டுப் போய்விட்ட மாணவர்களைப் பற்றி அரசு என்ன செய்ய இருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** மாணவர்கள் பாதிக்கப்படாதவாறு தக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. மற்ற பிரச்சினைகளைப் பொறுத்தவரை, விசாரித்து தக்க நடவடிக்கை எடுப்போம். தலைமையாசிரியராக இருந்தாலும் சரி, ஆசிரியராக இருந்தாலும் சரி, விசாரணையின் அடிப்படையில் நடவடிக்கை மேற்கொள்ளப்படும். ஆனால் தலைமை ஆசிரியர் மீது சந்தேகப்படக்கூடிய அடிப்படை எதுமில்லை. அவருக்கு வேண்டாதவர்கள் இதைச் செய்து தலைமை ஆசிரியர் மீது குற்றம் சுமத்த முயற்சி செய்திருப்பார்களோ என்றுதான் எண்ண வேண்டியிருக்கிறது.

**(3) 1985 மார்ச்சு மாதம் 10 ஆம் வகுப்புப் பொதுத் தேர்வு எழுதிய மாணவர்கள் ஆங்கிலம் மற்றும் கணித வினாத்தாள்கள் குறைபாடு உள்ளனவாக இருந்தது குறித்து.**

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** மாண்புமிகு உறுப்பினர்கள் திருவாளர்கள் பா. ரா. தாமஸ், சி. ரா. லெட்சுமிகாந்தன், அ. மயில்சாமி, எல். ஜெயச்சந்திரன், திருமதி வி. ஜெயலட்சுமி மற்றும் செல்வி ஆ. லீலாவதி ஆகியோர் ஒரு கவன ஈர்ப்புத் தீர்மானத்திற்கு முன்னறிவிப்பு கொடுத்திருக்கிறார்கள். நான் முதலில் திரு. பா. ரா. தாமஸ் அவர்களை அழைக்கிறேன். அதற்குப் பிறகு ஒவ்வொரு உறுப்பினரும் ஒரு விளக்கம் கேட்பதோடு நிறுத்திக்கொள்ள வேண்டும். இல்லையென்றால் இதற்கே அதிகமாக நேரம் தேவைப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[1985 ஏப்ரல் 12

திரு. பா. ரா. தாமஸ் : மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, கீழ்க்காணும் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களின் கவனத்தை ஈர்க்க விரும்புகிறேன்.

" 1985 மார்ச்சில் பத்தாம் வகுப்புப் பொதுத் தேர்வு எழுதிய மாணவர்கள் கணிதம் மற்றும் ஆங்கில வினாத் தாள்கள் குறைபாடுகள் உடையவைகளாக இருந்ததால், அம்மாணவர்கள் அவதிக்குள்ளாகியதும் இதன் விளைவாக அம்மாணவர்களும் அவர்களுடைய பெற்றோர்களும் அடைந்துள்ள இன்னல் குறித்து."

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, இது குறித்த விவர அறிக்கை@ ஒன்று அவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

திரு. பா. ரா. தாமஸ்: பொதுவாக ஆங்கிலத்தில் " Questioning is an art " என்பார்கள். அதற்கு ஏற்ற முறையில் ஆங்கிலக் கேள்வித்தாள் அமையாது, மாணவர்களுடைய மொழி வளம், பயிற்சி மொழி என்ன என்று கூட சிந்திக்காமல் அவர்களின் கற்பனைக்கும் சிந்தனைக்கும் அப்பாற்பட்டு, 5 வரிகளில் விடை எழுதக்கூடிய வினாக்களுக்கு 20 வரிகளில் விடை எழுத வேண்டும் என்று சொன்னதால், மாணவர்கள் பெரிய அதிர்ச்சியையும் கலக்கத்தையும் அடைந்திருக்கிறார்கள். அதுமட்டுமல்ல. செய்யுள் பகுதியில் " அப்ரீசியேஷன் " என்ற முறையில் நாம் போதிக்க வேண்டிய முறை இருக்க —இது கல்வியமைச்சர் அவர்களுக்கும் நன்கு தெரியும்—செய்யுள் நடையை உரைநடையாக மாற்று என்று கேட்டதன் மூலமாக ஆங்கில போதனைக்கே முற்றிலும் முரணாகக் கேட்டிருக்கிறார்கள். அதைப் போலவே கணிதப் பாடத்தில் 5 மார்க் பெற வேண்டிய கேள்விகளையெல்லாம் 2 மார்க் கேள்விகளாக மாற்றிக் கொடுத்திருக்கிறார்கள். இதன் காரணமாக மிகச் சிறந்த மாணவர்கள்—100-க்கு 100 விழுக்காடு வாங்குகிற மாணவர்கள்கூட 50 விழுக்காடுக்கு மேல் பெற முடியாத நிலை உருவாகியிருக்கிறது. ஒரு சில கேள்விகளுக்கு ஆசிரியர்களேகூட விடை எழுத முடியாத அளவுக்கு வினாக்கள் இருந்திருக்கின்றன. இப்படி மாணவர்கள் பெரிய பாதிப்புக்குள்ளாகியிருக்கிற காரணத்தால், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதிகாரிகளைக் கலந்து மாண

@ 602 ஆம் பக்கத்தில் இணைப்பு I ஆக அச்சிடப்பட்டுள்ளது.





ர்களுக்குக் கருணை மதிப்பெண்கள் வழங்கச் செய்து, மாணவர்கள் மற்றும் பெற்றோர்களின் கலக்கத்தைப் போக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: விடைத்தாள்களைத் திருத்தும் பணி தொடங்கிவிட்டது என்று கருதுகிறேன். இங்கே குறிப்பிட்ட விடைத் தாள்களைப் பொறுத்தவரை, மாணவர்கள் எப்படி எழுதியிருப்பார்கள் என்று ஆசிரியர்களும் அங்கே இருப்பவர்களும் நன்கு அறிவார்கள். எனவே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல், பிரச்சினை இருந்தால், மாணவர்கள் அதைக் கடினமாகக் கருதி எழுதியிருந்தால், திருத்துபவர்களே கொஞ்சம் தாராளமாக நடந்துகொள்ள வேண்டும் என்ற அறிவுரையை நாம் ஏற்கெனவே வழங்கியிருக்கிறோம்.

(முற்பகல் 11-25)

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, ' தாராளமாக நடந்துகொள்ள வேண்டும் ' என்பது சற்று தெளிவாக இல்லை. தேர்வாளர்களுக்குத் திட்டவட்டமாக குறிப்புகள் கொடுத்தாலொழிய, அவர்கள் இவ்வளவு மதிப்பெண்கள் போட வேண்டும், இன்னின்ன முறைகளை, இன்னின்ன கோட்பாடுகளைக் கையாள வேண்டும் என்று சொன்னாலொழிய, மாணவர்களுக்கு நியாயம் கிடைக்காது. ஆகவே அமைச்சர் அவர்கள் ' தாராள மனப்பான்மையுடன் ' என்று சொல்லும்போது, அதற்குரிய ' கைட் லைன்ஸ் ' என்ன என்பதைச் சொல்ல வேண்டும்.

இன்னுமொன்று. வினாத் தாள்களையெல்லாம் சம்பந்தப்பட்ட தலைமை ஆசிரியர்கள், பணி மூப்புடைய ஆசிரியர்கள் ஆகியவர்களைக் கொண்டே தயாரித்தால், இந்தப் பிரச்சினைகள் ஏற்படாது.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : ஒவ்வொரு உறுப்பினரும் ஒரு கேள்வியைக் கேட்கலாம் என்று சொன்னேன். நான்கு கேள்விகளைச் சேர்த்து ஒரு கேள்வியாக மாண்புமிகு உறுப்பினர் கேட்கிறார்.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : ஆகவே அனுபவம் வாய்ந்த உயர்நிலைப் பள்ளி, மேல்நிலைப் பள்ளித் தலைமையாசிரியர்கள், ஆசிரியர்கள் ஆகியவர்களைக் கொண்டு வினாத்தாள்களைத் தயாரிக்கிற ஏற்பாட்டைச் செய்தால், இந்தப் பிரச்சினைகள் ஏற்படாது என்பதை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வந்து இது குறித்து அமைச்சர் அவர்கள் தக்க நடவடிக்கை எடுப்பார்களா என்று அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** துணைத் தலைவர் அவர்களே, வினாத் தாள்களைத் தயாரிப்பதில் தலைமையாசிரியர்களையும், அந்தந்தப் பாடங்களை நடத்துகிற ஆசிரியர்களையும் சேர்த்துக்கொள்ள வேண்டும் என்ற கோரிக்கை நியாயமானது. அதைப்பற்றி அரசு பரிசீலிக்கும். இது குறித்து இயக்குநருக்குத் தக்க அறிவுரை வழங்கப்படும்.

'தாராள மனப்பான்மையுடன்' என்று சொல்லும்போது, மாணவர்களுக்காக மாண்புமிகு உறுப்பினர்கள் எவ்வாறு பரிந்து செய்கிறார்களோ அதே உணர்வோடு அமைச்சரும், அரசும் பரிந்து பேசுகிறது என்பதைத் தெரிவிக்கிற வார்த்தையாக அதை எடுத்துக்கொள்ள வேண்டும். ஒரு தேர்வு சம்பந்தமான நுணுக்கங்களை, விவரங்களை எல்லாம் அவையிலே கேட்டு வெளிப்படுத்துவது என்பது அவ்வளவு சரியல்ல.

**திரு. அ. மயில்சாமி :** துணைத் தலைவர் அவர்களே, கணிதத்திலே 27 மதிப்பெண்களுக்கு ஏற்றவாறு கேள்விகள் இருந்த காரணத்தாலேதான் இவ்வளவு பிரச்சினைகள் இருந்திருக்கின்றன. 27 மதிப்பெண்களுக்கு மாணவர்கள் எழுத முடியாத அளவிற்கு கேள்விகள் தயாரிக்கப்பட்டிருக்கின்றன. அதனாலேதான் இவ்வளவு பெரிய பிரச்சினைகள் வந்திருக்கின்றன. ஏற்கெனவே மாண்புமிகு உறுப்பினர்கள் குறிப்பிட்ட மாதிரி, இரண்டு, மூன்று ஆண்டுகளுக்கு முன்பு இப்படிப்பட்ட பிரச்சினைகள் வந்த நேரத்தில் அந்தத் தேர்வு எழுதுகிற மாணவர்களுக்கு அதற்குரிய மதிப்பெண்கள் போடுவது என்பது வழக்கமாக இருந்து வந்தது. விடைகளை எழுதுகிறவர்கள் என்ன எழுதியிருந்தாலும், அதற்குரிய மதிப்பெண்களைப் போட வேண்டும் என்ற நிலைமை இருந்தது. இந்த நிலைமையை மீண்டும் கொண்டு வந்து எல்லா மாணவர்களுக்கும் அந்த 27 மதிப்பெண்களைப் போட்டால் ஓரளவிற்கு மாணவர்களுக்கும், பெற்றோர்களுக்கும் கவலை நீங்கிவிடும். அதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** துணைத் தலைவர் அவர்களே, 27 மார்க் எல்லோருக்கும் தர வேண்டும் என்பதைவிட, அந்த 27 மார்க் போக மீதியுள்ள 73 மார்க்குக்கு அவர்கள் வாங்கிய மதிப்பெண்ணை நூற்றுக்கு எவ்வளவு என்று பார்த்து மாற்றிப் போட்டுக்கொள்வது அதைவிட சிறந்ததாக, அறிவுபூர்வமாக இருக்கும். 27 மதிப்பெண்கள் சும்மா படிக்காத மாணவர்களுக்கும் தருவது என்பது முறையாக இருக்காது. மற்றபடி தாராளமாக நடத்து கொள்வோம் என்று சொல்லும்போது, எங்கள் எண்ணத்தை,





உள்ளத்தைப் புரிந்து கொள்ளலாம். விவரமாக இங்கே பேசுவது என்பது தேர்வைப் பற்றிய நம்பிக்கையைத் தளர்த்திவிடும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. எல். ஜெயச்சந்திரன்:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இந்தத் தவறு ஏற்பட்டுவிட்டது என்று செய்தித் தாளில் அறிவித்தவுடன், பள்ளிக் கல்வி இயக்குநர் அங்கீகரிக்கப்பட்ட ஆசிரியர் சங்கத்தினரை அழைத்துப் பேசியிருந்தால், இதுபோன்ற தவறுகள் ஏற்படாமல் இருந்திருக்கும். ஏற்பட்ட தவறை எப்படி நிவர்த்தி செய்யலாம் என்று சங்கத்தினரோடு ஆலோசனை செய்திருந்தால், பல்வேறு பிரச்சினைகளைத் தீர்த்திருக்கலாம். இதுபோன்ற பிரச்சினைகள் ஏற்படாமல் இருக்க வருங்காலத்திலாவது அங்கீகரிக்கப்பட்ட ஆசிரியர்களுடைய சங்கத்தினரை அழைத்து இயக்குநர் அவர்கள் பேசுவார்களா என்று அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** துணைத் தலைவர் அவர்களே, இப்போது இங்கே ஒரு யோசனையைச் சொல்லியிருக்கிறார்கள். அந்த யோசனையை ஏற்றுக்கொள்ளலாம். மேலும் 'கொஸ்டியன் பேங்க்' வைத்திருக்கிறோம். அதிலே உள்ள கேள்விகளைப் பயன்படுத்திக் கொள்ளலாம். இன்னும் நான் அதை முழுக்கப் பார்க்கவில்லை, விவரமாகத் தெரிந்துகொள்ள வேண்டிய நிலைமைகள் இருக்கின்றன.

பொதுவாக மாணவர்கள் குறிப்பிட்ட கேள்விகளைப் படிப்பதும், குறிப்பிட்ட கேள்விகளுக்கு மட்டும் மாணவர்களைத் தயார்படுத்துவதும், அதை எதிர்பார்த்து அவர்கள் வருவதும், வினாத்தாளைப் பார்த்தவுடன் அவர்கள் மயக்கமடைந்து விழுவதும் போன்ற நிலைமைகளை வைத்துக்கொண்டு வினாத் தாள்களை மதிப்பிடுவது சரியாக இருக்காது என்று கருதுகிறேன்.

(முற்பகல் 11-30)

ஆகவே குறிப்பிட்ட கேள்விகளுக்கு மாணவர்களைத் தயாரித்து அனுப்புகின்ற முறை தொடக்கப் பள்ளிகளிலே இல்லை என்று நாம் சொல்ல முடியாது. அந்த முறைகளுக்குப் பலியான அந்த மாணவர்கள் இதுபோன்ற கேள்வித் தாள்கள் வரும்போது, நிச்சயம் பீதி அடையத்தான் அடைவார்கள், மயக்கமடைவார்கள். அவர்கள் 10 நிமிடத்திலே எழுந்து போகக்கூடிய நிலைமைகள் ஏற்படும். ஆக இரு தரப்பிலும் தவறுகள் இருக்கலாம், என்று நான் கருதுகிறேன். ஆக வினாத் தாள்களையும் சரியாக உருவாக்க நாம் முயற்சிகளை

மேற்கொள்ள வேண்டும். அதிகமாகக் கடினமான கேள்விகளைக் கேட்காமலும், ஏறத்தாழ 75 சதவிகிதம் மாணவர்கள் நன்கு புரிந்துகொண்டு எழுதக்கூடிய அளவுக்கு இந்த வினாத் தாள்களைத் தயாரிக்கின்ற வகையிலே நாம் ஆசிரியர்களுக்கு அறிவுரை கூறலாம். ஆனால் அதே நேரத்தில் குறிப்பிட்ட கேள்விகளுக்கு மட்டும் மாணவர்களைத் தயாரிக்கின்ற பழக்கத்தை நம் பள்ளிகளிலேயிருந்து ஒழித்தாக வேண்டும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திருமதி வி. ஜெயலட்சுமி :** மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, பரிட்சை ஹாலில் பரிட்சை எழுதிய மாணவர்களுக்குக் கூடுமான வரையில் ஒரு 27 சதவிகிதம் மார்க்குகள் போடலாம் என்பது பற்றி இப்போது மாண்புமிகு உறுப்பினர்கள் கேட்டுக்கொண்டிருந்தார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்களும் இதுபற்றி கவனிக்கப்படும் என்று சொன்னார்கள் என்று கருதுகிறேன். விருதுநகர், செங்கற்பட்டு போன்ற கல்வி சரகங்களிலேயிருந்து பல மாணவர்கள் பரிட்சை ஹாலிலேயிருந்து வெளியேறிவிட்டதாகக் கேள்விப்படுகிறேன். அத்தகைய நிலைமையில் இந்த இரண்டு பரிட்சைத் தாள்களையும் எவ்வாறு மாணவர்கள் எழுதியிருப்பார்கள் என்பதை மனதில் கொண்டு குறைந்தபட்ச மார்க்குகள் கொடுக்க வேண்டிய வாய்ப்புகள் இருக்கும் என்று இருந்தால், இந்த இரண்டு பாடங்களுக்காவது மீண்டும் மாணவர்களை அழைத்து பரிட்சை எழுதவைக்க முடியுமா என்பதைக் குறித்து சிந்தித்துப் பார்க்க வேண்டும். ஏனென்றால், என்னுடைய பகுதியைச் சேர்ந்த விருதுநகர் சரகத்திலும் கோயில்பட்டி சரகத்திலும் அநேக மாணவர்கள் பரிட்சை எழுதாமலேயே எழுந்து சென்றுவிட்டதாகக் கேள்விப்பட்டேன். அங்கே இருக்கின்ற ஆசிரியர்கள் அவர்களுக்கு ஒரு தைரியம் கொடுக்கும் வகையில் ஏதாவது என்கரேஜிங்காகச் சொல்லியிருந்தால் கூட, கேள்விக்குத் தெரிந்த பதிலை எழுதியிருந்தால்கூட பரவாயில்லை. கேள்விக்கு முரணான பதிலை எழுதினோம் என்ற வாய்ப்புகூட இல்லாத வகையில், பல மாணவர்கள் பயந்து தன்னுடைய மனப் பிராந்தியிலே எழுந்து வெளியிலே சென்றுவிட்டிருக்கின்றார்கள். அத்தகைய நிலைமை இருக்கும் போது, மீண்டும் மறுபரிசீலனை செய்து இந்த இரண்டு பாடங்களிலாவது மாணவர்களை மீண்டும் அழைத்து பரிட்சை எழுத வைக்க முடியுமா என்று இந்த அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, விடைத்தாள்களைத் திருத்துகின்றபோது, அது உண்மையிலேயே கடினமானதுதானா, போதிக்கப்படாததுதானா. அந்தப் பகுதியிலே தான் வந்திருக்கின்றதா என்பது தெளிவாகத் தெரியவில்லை. ஓரளவுக்கு



மாணவர்கள் எழுதியிருந்தால், அரசைப் பொறுத்தமட்டில், இந்தத் தேர்வு நடத்துவதில் பெரும்பாலான மாணவர்கள் வெற்றி பெறுவதற்கான முறையிலே தான் தேர்வு முறைகளை வைத்திருக்கிறோம். இதிலே, இப்போது மாண்புமிகு உறுப்பினர்கள் சொல்வதுபோல, 27 மார்க்குகள் போடலாம் என்று வைத்துக் கொண்டால், அடுத்த ஆண்டும் இந்தக் கோரிக்கை நிச்சயமாக வரத்தான் செய்யும். படிக்காத மாணவர்களுக்கு, இந்தத் தேர்விலே படிக்காமலேயே மார்க்குகள் வாங்கி பாஸ் ஆகமுடியும் என்ற நம்பிக்கை வந்துவிட்டால், அது சரியல்ல. ஆகவே இந்த நிகழ்ச்சியில் நாம் எந்த முடிவையும் மேற்கொள்ளக் கூடாது. நம்முடைய பேச்சும் அந்த விதத்தில் அமைந்துவிடக்கூடாது என்று தான் கருதுகிறேன். அந்தக் காரணத்திற்காகத்தான் நான் சர்வ ஜாக்கிரதையாகச் சொல்கின்றேன். ஆகவே நான் தாராள மனதுடன் என்று சொல்லியிருக்கின்ற வகையில் அந்தக் கருணை உள்ளத்தோடு இந்த அரசு நடக்கும். இதிலே மேற்கொண்டு விவரங்களைக் கேட்க வேண்டாம் என்று சொல்லிக் கொள்கிறேன்.

**செல்வி ஆ. லீலாவதி :** இந்த இரண்டு மூன்று கவன ஈர்ப்புத் தீர்மானங்களை ஒரு 5, 6 பேர்கள் கொடுத்திருக்கின்றார்கள். இப்போதும் என்னுடைய பெயர் கடைசியாக வருகிறது. நான் பெண் என்ற காரணத்தினால் அப்படிப் போட்டிருக்கின்றார்களா ? ஏதாவது ஒரு முறை வைக்க வேண்டும். அதாவது ஆல்பபட்டிக்கல் ஆர்டரில் வைக்க வேண்டும்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** யார் யாரிடம் இருந்து முதலிலே தீர்மானங்கள் வந்திருக்கின்றனவோ அந்த வரிசைப்படி வந்திருக்கிறது. இந்த கவன ஈர்ப்புத் தீர்மானத்தை முதன் முதலில் திரு. பா. ரா. தாமஸ் அவர்கள் கொடுத்திருக்கின்றார்கள். உறுப்பினர் அவர்கள் கொடுத்தது கடைசியில். ஆகவே யாரிடமிருந்து முதலில் வந்ததோ அவர் பெயர் முதலில் வந்திருக்கின்றது. ஆண் என்பதற்காகவோ, பெண் என்பதற்காகவோ அல்ல.

**செல்வி ஆ. லீலாவதி :** மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கொடுக்கும்போதுதான் மாண்புமிகு உறுப்பினர் திரு. பா. ரா. தாமஸ் அவர்களும் கொடுத்துக்கொண்டிருந்தார்கள். செக்ரட்டரி அவர்களும் சொன்னார்கள். இப்போதுதான் அவரும் கொடுத்திருக்கின்றார்கள் என்று. ஏறத்தாழ ஒரே நேரத்தில், ஒரே நாளில்தான் கொடுத்திருக்கிறோம். ஒரு சில நிமிடங்கள் வித்தியாசமாக இருக்கலாம். ஆகவே ஆல்பபட்டிக்கல் ஆர்டரில் பெயர்கள் இருக்கலாம். அவர் பெயரில் உள்ளபடி, ப, அடுத்து என் பெயரில் உள்ள 'லீ' என்று ஆர்டரில் போட்டிருக்கலாம் என்று சொல்லிக் கொள்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** மாண்புமிகு உறுப்பினர் திரு. பா. ரா. தாமஸ் அவர்கள் ஏதோ சொல்ல நினைக்கின்றார்.

**திரு. பா. ரா. தாமஸ் :** நான் ஏராளமான கவன ஈர்ப்புத் தீர்மானங்களைக் கொடுத்திருக்கிறேன். நான் அவர் கொடுத்ததற்கு முன்பே கொடுத்திருக்கிறேன். நான் வேறு தீர்மானத்தைக் கொடுக்கும் நேரத்தில் அவர்கள் இந்தத் தீர்மானத்தைக் கொடுத்திருக்கின்றார்கள். இதை நான் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** மாண்புமிகு உறுப்பினர் திரு. பா. ரா. தாமஸ் அவர்கள், தான் வந்தபோது அவர் ஒரு கவன ஈர்ப்புத் தீர்மானத்தைக் கொடுத்ததாக ஒத்துக்கொள்கின்றார்கள். ஆனால் இந்த கவன ஈர்ப்புத் தீர்மானத்தை தான் முன்னதாகவே கொடுத்ததாகவும், மாண்புமிகு உறுப்பினர் செல்வி லீலாவதி கொடுத்திருக்கின்ற தீர்மானத்திற்கு முன்னதாகவே இதைத் தான் கொடுத்ததாகவும் சொல்கின்றார்கள். ஆகவே எந்த கவன ஈர்ப்புத் தீர்மானம் என்பது உறுப்பினர் செல்வி லீலாவதி அவர்களுக்குத் தெரியுமா என்று திரு. தாமஸ் அவர்கள் கேட்கின்றார்கள்.

(முற்பகல் 11-35)

இரண்டாவதாக, ஒரே நாளிலே இரண்டு உறுப்பினர்கள் இரண்டு தீர்மானங்களைக் கொடுத்தால்கூட, ஒரு உறுப்பினருக்கு முன்னாலே மற்றொருவர் கொடுத்து, அதற்கு முன் நம்பர் போட்டு செயலாளரிடம் கொடுக்கும்போது, அந்த எண்ணுக்கான கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்தவரின் பெயர் முன்னால் வந்து விடுகிறது. அவர் கொடுத்ததும் அதே தீர்மானம்தானா என்பதை விசாரிக்க வேண்டும். சாதாரணமாக இதில் எந்தவிதத் தவறும் ஏற்படாது. மேலே கேள்வியைக் கேட்கலாம்.

**செல்வி ஆ. லீலாவதி:** மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, விவர அறிக்கையிலே சிறந்த பேராசிரியர்களால் கேள்வித் தாள்கள் தயாரிக்கப் பட்டன என்று சொல்லப்பட்டிருக்கிறது. இரண்டாவதாக, தோராயமாக மார்க்குகள் கொடுக்கப்படுமென்றும் சொல்லப்பட்டிருக்கிறது. சிறந்த பேராசிரியர்களுக்கும், இந்தப் பாடத்திற்கும் சம்பந்தமில்லை. அதை நடத்தும் ஆசிரியர்களை வைத்து வினாத் தாள்களைத் தயார் செய்தால் அது மிக நலமாக இருக்கும். சில நேரங்களிலே, மாணவர்களை நாங்கள் தேர்வு





களுக்குத் தயார் செய்யும்போது, குறிப்பிட்ட கேள்விகள் வரும் என்று சொல்லுவோம். ஆனால் பேராசிரியர்கள் வினாத் தாள்களைத் தயாரிப்பதால், வேறுவிதமான வினாத் தாள்கள் வந்துவிடுகின்றன. பேராசிரியர்களுக்கு இதில் அனுபவம் இல்லாததால், அதாவது மேல்நிலைக் கல்வி அல்லது உயர் நிலைக் கல்வியிலே அவர்கள் பாடம் சொல்லிக் கொடுக்காததால், எது முக்கியம், எது முக்கியமல்ல என்று தெரியாமல், 'கேள்விகளைக் கேட்டுவிடுகிறார்கள். ஆகையால் இதைத் தவிர்த்து, பாடங்களை நடத்தும் ஆசிரியர்களே வினாத் தாள்களைத் தயாரிப்பதற்கான நடவடிக்கைகளை எடுக்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, பேராசிரியர்கள் வினாத் தாள்கள் தயாரிப்பது சரியல்ல என்று சொல்வது முறையல்ல. பாடத்தை நடத்துகிறவர்கள்தான் தயாரிக்க வேண்டுமென்று சொல்வதும் சரியல்ல. இவர்களும் தயாரிக்கலாம், அவர்களும் தயாரிக்கலாம். எனவே பாடங்களை நடத்துகிறவர்கள்தான் தயாரிக்க வேண்டுமென்று சொல்லுவதை ஏற்றுக்கொள்ள முடியாது. வெளியிலிருந்து வந்து பரிசோதிக்கும்போது, மாணவர்கள் திறனும் தெரியும். ஆசிரியர்கள் எப்படிச் சொல்லித் தந்திருக்கிறார்கள் என்பதையும் தெரிந்துகொள்ள வாய்ப்பு இருக்கிறது. எனவே பேராசிரியர்கள் வினாத் தாள்கள் தயாரிப்பதில் எந்த விதத் தவறுமில்லை. 'கொஸ்டின் பேங்க்' வைத்து, கேள்விகளைத் தயாரிக்கும் வழக்கத்தை ஏற்படுத்தி, அந்தப் பணி சிறப்பாக நடைபெற்றுக் கொண்டிருக்கும் அந்த முறையைப் பயன்படுத்திக் கொண்டால், இத்தகைய பிரச்சினைகள் வராது.

## 2. அறிவிப்புகள்—தொடர்ச்சி.

### (5) பார்வையாளர் மாடங்களில் அமர்ந்துள்ளவர்கள் நடந்துகொள்ள வேண்டிய முறை பற்றி.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** புற மாடங்கள், பார்வையாளர் மாடங்களில் (விசிடர்ஸ் காலரி) இருக்கிறவர்கள் அவையில் உள்ள உறுப்பினர்களுக்கு வணக்கம் செய்வதோ அல்லது அவையில் உள்ள உறுப்பினர்கள் டதில் வணக்கம் செய்வதோ அவையின் மரபாகாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

5. மேலவை விதி 82-ன்கீழ் அமைச்சரின் அறிக்கை.

தமிழ் நாடு பட்டதாரி, முதுகலைப் பட்டதாரி ஆசிரியர்கள் சங்கத்தின் கோரிக்கைகள் குறித்து அரசு முடிவு குறித்து.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, அண்மையில் தமிழ் நாடு பட்டதாரி, முதுகலைப் பட்டதாரி ஆசிரியர்கள் சங்கம் கோரிக்கைகள் சிலவற்றை முன் வைத்து போராட்டம் நடத்திக் கொண்டிருக்கிறது. அவற்றில் அரசு எடுத்துள்ள முடிவுகள் சிலவற்றை—நேற்றைய தினம் பேரவையிலே சொல்லப்பட்ட ஒன்று—மேலவையின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

ஆசிரியர்கள் ஓய்வு பெறும்போது ரூபாய் 10,000 வழங்குவதற்கான தமிழ் நாடு சிறப்பு வைப்பு நிதி பணிக்கொடை திட்டத்தினை தனியார் பள்ளிகளுக்கும் விரிவுபடுத்தும் ஆணை விரைவில் வெளியாகும்.

பணிக் காலத்தில் இறந்து விடுவோர் குடும்பத்திற்கான உதவித் தொகை ரூ. 10,000-த்திலிருந்து ரூபாய் 20,000 ஆக உயர்த்தும் சலுகையை உள்ளாட்சி மன்றம் மற்றும் தனியார் பள்ளி நிறுவனப் பணியாளர்களுக்கு விரிவுபடுத்தும் ஆணை வெளியிடப்பட்டுவிட்டது.

அரசுப் பள்ளிகளில் 3—3—1973-க்குப் பிறகு தற்காலிகப் பணியில் சேர்ந்து பின்னர் தேர்வாணைக் குழுவால் தேர்ந்தெடுக்கப்பட்ட பட்டதாரி ஆசிரியர்கள், மொழி ஆசிரியர்கள் மற்றும் உடற்பயிற்சி இயக்குநர்கள் ஆகியோர்களுடைய பணியை அவர்கள் பணிக் காலத்தில் பணி முறிவு இல்லாமல் இருப்பதற்கு உட்பட்டு அவர்கள் தற்காலிகப் பணியில் சேர்ந்த தேதி முதல் வரன்முறை செய்ய அரசு முடிவு செய்துள்ளது.

(முற்பகல் 11-40)

மேல்நிலைப் பள்ளிக்கூட வகுப்புகளில் பணிபுரியும் உட்படுத்தப்படா ஆசிரியர்களில் கணிதம் மற்றும் அறிவியல் பாட ஆசிரியர்களுக்கு ஏற்கெனவே 10 மாத பட்ட மேற்படிப்பு சான்றிதழ் வகுப்பு நடத்த அரசு ஆணையிட்டுள்ளது. அதே போன்ற சான்றிதழ் பயிற்சியை வரும் 1985-86-ல் பொருளாதாரம், மனையியல், நிலவியல் போன்ற பாட ஆசிரியருக்கும் நடத்த அரசு முடிவு செய்து அதற்கான நிதி ஒதுக்கமும் செய்யப்பட்டுள்ளது. தனியார் பள்ளிக்கூடங்கள் பலவற்றில் ஆசிரியர்களுக்கு ஒவ்வொரு மாதமும், கடைசி வேலை நாளன்று சம்பளம் கொடுக்கப்படாமல் காலத் தாழ்வு ஏற்படுகிறது. இதைத் தடுக்க அரசு புதிய சம்பளப் பட்டுவாடா முறையை விரைவில் அமுல்படுத்த



இருக்கிறது. இதன்படி உதவிக் கல்வி அதிகாரிகள், மாவட்டக் கல்வி அதிகாரிகள், மற்றும் பெண்கள் பள்ளிக்கூட ஆய்வாளர்கள் பெயரில் தனி வைப்புக் கணக்கு தொடங்கப்பட்டு அதன் மூலம் தனியார் பள்ளிக்கூட ஆசிரியர்களுக்கும் ஒவ்வொரு மாதமும் கடைசி நாளன்று சம்பளம் தர ஏற்பாடு செய்யும்.

இந்த அரசு ஆசிரியர்களுடைய கோரிக்கைகளை எப்போதும் பரிவுடன் பரிசீலித்து தக்க நடவடிக்கை எடுத்து வருவது ஆசிரியப் பெருமக்களுக்கு நன்கு தெரியும். எனவே தமிழ் நாடு பட்டதாரி மற்றும் முதுகலைப் பட்டதாரி ஆசிரியர்கள் இவற்றை ஏற்று தங்களுடைய போராட்டத்தைக் கைவிடுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

2. அறிவிப்புகள்—தொடர்ச்சி.

(6) கவன ஈர்ப்புத் தீர்மானம் பற்றி.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** கவன ஈர்ப்புத் தீர்மானங்களைப் பொறுத்தவரையில் மாண்புமிகு உறுப்பினர்கள் திருவாளர்கள் பா. ரா. தாமஸ், எல். ஜெயச்சந்திரன், அ. மயில்சாமி, சி. ரா. லெட்சுமிகாந்தன் ஆகியோர்களால் 23—3—1985 அன்று கொடுக்கப்பட்டது. திருமதி வி. ஜெயலட்சுமி மார்ச் 28 அன்று கொடுத்திருக்கிறார்கள். செல்வி ஆ. லீலாவதி மார்ச் 28 அன்று கொடுத்திருக்கிறார்கள். மார்ச் 27 அன்று கொடுக்கப்பட்டு 28 ஆம் தேதிய சீல் இருக்கிறது. நம்பர்கள் கொடுக்கப்பட்டிருப்பதைப் பொறுத்தவரை, 2391, 2397, 2416, 2417 என்று செயலாளரால் நம்பர் கொடுக்கப்பட்டிருக்கிறது.

6. அரசின் சட்டமுன்வடிவுகள்.

(1) 1985 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 22/1985).

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** துணைத் தலைவர் அவர்களே,

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, 1985 ஆம் ஆண்டு, தமிழ்நாடு ஊராட்சிகள் (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு @ (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 22/1985) ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்"

என்று முன்மொழிகிறேன்.

---

@ 603–606 ஆம் பக்கங்களில் இணைப்பு IV ஆக அச்சிடப்பட்டுள்ளது

[1985 ஏப்ரல் 12

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** முன்மொழியப்பட்ட தீர்மானம்—

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, 1985 ஆம் ஆண்டு, தமிழ்நாடு ஊராட்சிகள் (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 22/1985) ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்".

உறுப்பினர்களுக்கு, அடுத்து வருகின்ற சட்ட முன்வடிவும் இதே பொருள் பற்றியதாக இருப்பதால், உறுப்பினர்கள் பேசும்போது, இரண்டு சட்ட முன் வடிவுகள் மீதும் பொதுவாகப் பேசலாம். பிறகு நிறைவேற்றும்போது, சட்ட முன்வடிவுகளை தனித் தனியாக நிறைவேற்றலாம்.

சில அமைச்சர்கள் சட்ட முன்வடிவை முன்மொழிந்து விட்டு அமர்ந்து விடுகிறார்கள். அந்த வகையில் உறுப்பினர்கள் பேசியதற்குப் பிறகும் அவர்கள் பேசலாம் அல்லது சட்ட முன்வடிவை முன்மொழிந்து அப்படியே அதன் நோக்கத்தை விளக்கிய பின், உறுப்பினர்களின் பேச்சுக்குப் பின்பும் விளக்கம் அளிக்கலாம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** துணைத் தலைவர் அவர்களே, உறுப்
பினர்கள் தங்கள் தங்கள் கருத்துக்களைத் தெரிவித்ததற்குப் பிறகு, இறுதியிலே
என்னுடைய விளக்கத்தினை அளிக்கிறேன். இதிலுள்ள முக்கியமான
விஷயங்களை நான் ஏற்கெனவே பேரவையிலே அறிவித்துள்ளேன். அது
பத்திரிகையிலும் வந்திருக்கிறது. இப்பொழுது இருக்கின்ற சட்டத்தைத்
திருத்தம் செய்திருக்கிறோம். சட்டத்திலே முக்கியமாகத் திருத்தப்பட்
டுள்ளது எது என்றால், பதவிக்காலம் 5 ஆண்டுகள் என்று இருப்பதை 4
ஆண்டுகளாக் குறைத்திருக்கிறோம். அடுத்து, மாவட்ட ஆட்சித் தலைவர்
களுக்கு உறுப்பினர்களை நியமிக்கின்ற அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது.
குறிப்பிட்ட எண்ணிக்கையிலே அவர்கள் அப்படி நியமிக்கலாம் என்கிற வகை
யிலே சட்டத்திலே வழிவகை செய்யப்பட்டிருக்கிறது. இவற்றைத் தவிர
முக்கியமான திருத்தங்கள் ஒன்றும் இதில் இல்லை. பழைய சட்டத்தைத்
தான் மீண்டும் கொண்டு வந்திருக்கிறோம். உறுப்பினர்கள் கருத்துக்களைத்
தெரிவித்ததற்குப் பிறகு, அரசின் சார்பில் இறுதியில் கருத்துக்களைச் சொல்
கிறேன்.



1985 ஏப்ரல் 12]

(முற்பகல் 11-45)

**திரு. சி.ரா. லெட்சுமிகாந்தன் :** இச்சட்டமுன்வடிவை நாங்கள் வரவேற்
கின்றோம். நீண்ட காலத்திற்குப் பிறகு ஊராட்சி மன்றங்களுக்கும்,
நகராட்சி மன்றங்களுக்கும் தேர்தல் நடத்த வழிவகை செய்திருக்கின்ற தமிழக
அரசின் முயற்சிகளை நாங்கள் வரவேற்று, பாராட்டுகின்றோம். மாண்புமிகு
அமைச்சர் திரு. ப. உ. சண்முகம் அவர்கள் இந்தப் பொறுப்பை ஏற்றிருக்கிற
நேரத்தில், அன்றையதினம் மேலவையில் உறுதியாகச் சொன்னார்கள்.
நிச்சயமாக உள்ளாட்சி மன்றத் தேர்தல்கள் நடக்கும், செப்டம்பர் மாதம்
புதிய தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் பதவியேற்பார்கள், மீண்டும்
தனியதிகாரிகள் பதவி நீட்டிப்பிற்கான சட்ட முன்வடிவை நாங்கள் இங்கே
கொண்டுவரமாட்டோம் என்று அழுத்தம் திருத்தமாக இந்த அவையில் உறுதி
மொழியைத் தந்திருக்கிறார்கள். அவர்கள் கொடுத்த அந்த உறுதி மொழியின்
அடிப்படையில், இப்போது கொண்டுவரப்பட்டிருக்கிற சட்டமுன்வடிவை நான்
வரவேற்று, விரைவில் உள்ளாட்சி மன்றங்களுக்கான தேர்தல்களை நடத்தி,
ஜனநாயகப் பிரதிநிதிகளை அங்கே பொறுப்பில் அமர்த்தி, இன்னல் படுகின்ற,
அல்லல் படுகின்ற கிராம மக்களுக்கு, நகர்ப்பகுதி மக்களுக்கு நிவாரணம் தர
முயற்சி எடுக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.
அதிலே மாற்றம் இருக்கக்கூடாது என்பதை வலியுறுத்த விரும்புகிறேன்.
காரணம் பல்லாண்டு காலமாக, தனி அதிகாரிகளுடைய பதவிக் காலத்தில்
மக்கள் படுகிற அல்லல்களையும் இன்னல்களையும் இரண்டு அவைகளிலும்
மக்கள் பிரதிநிதிகள் அதிகமாகவே சொல்லியிருக்கிறார்கள். நான் அதை
மீண்டும் சொல்ல விரும்பவில்லை. 2—3 மாத காலத்தில் அவர்களுக்கு
நிவாரணம் வரப்போவது குறித்து, நான் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன்.

அந்த அடிப்படையில் தேர்தல்கள் நடந்து மக்கள் பிரதிநிதிகள் பொறுப்
பேற்றுக்கொள்கிற வகையில், இடைக்காலத்திலே நிர்வாகத்தைச் செம்மைப்
படுத்துவதற்காகவும், நடவடிக்கைகளைக் கண்காணிப்பதற்காகவும் அமைச்சர்
அவர்கள் சில அறிவிப்புகளைச் செய்திருக்கிறார்கள். இங்கும் சொல்வார்கள்
என்று எதிர்பார்க்கிறேன். அந்த நடவடிக்கைகளையும் விரைவில் எடுத்து
அவைகளை அமல்படுத்த வேண்டுமென்று கேட்டுகொள்வதோடு, அந்தக்
கண்காணிப்புக் குழுக்களில் அதிகாரிகள் மட்டும் இடம் பெறாமல், அதிகாரப்
பற்றற்ற மக்கள் பிரதிநிதிகளும் இடம் பெற வேண்டுமென்ற கருத்தைச்
சொல்லிக்கொள்கிறேன். அப்போது தான் சரியான முறையில் கண்காணிக்க
முடியும். தனி அதிகாரிகளின் நிர்வாகத்தில் சில குறைபாடுகள் இருக்கின்றன
என்று சொன்ன பிறகு, அதற்காகப் போடப்படும் குழுக்களில், மீண்டும்

அதிகாரிகளே இடம் பெற்றால், அதனால் நன்மை கிடைக்காது. அன்றைய தினம், மாண்புமிகு உறுப்பினர் திரு. சுப்பு அவர்கள் மிக அழகாக, எல்லோருடைய மனதிலும் ஆழமாகத் தைக்கிற விதத்தில் அதிகாரிகள் பற்றி கருத்துச் சொன்னார்கள்.

(மாற்றுத் தலைவர் திருமதி வி. ஜெயலட்சுமி தலைமை)

யார் ஆட்சிப் பொறுப்பில் இருந்தாலும், சில அதிகாரிகள் செய்கிற தவறுகள் காரணமாக, அரசாங்கமே பதில் சொல்கிற அவசியம் வருகிறது என்று அதிகாரிகள் செய்யும் தவறுகளை அவர்கள் சுட்டிக் காட்டினார்கள். ஆகவே அந்தக் குழுக்களில் மக்கள் பிரதிநிதிகள் இடம் பெற்றாக வேண்டும் என்று நான் வலியுறுத்துகிறேன். அதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

இன்னொரு கருத்தையும் சொல்ல விரும்புகிறேன். இந்தத் தேர்தல்கள் நடந்து முடிந்தவுடன், உள்ளாட்சி மன்றப் பிரதிநிதிகளுக்கான இந்த அவையின் 21 காலியிடங்களை நிரப்பவும் அமைச்சர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இந்த 21 இடங்களும் பல்லாண்டு காலமாகக் காலியாக இருக்கின்றன. ஆகவே உள்ளாட்சித் தேர்தல்கள் நடந்த சூட்டோடு, இந்தத் தேர்தலுக்கும் நடவடிக்கை எடுக்கும் வகையில், தேர்தல் கமிஷனைக் கலந்து ஆலோசித்து, இந்த 21 இடங்களை நிரப்ப நடவடிக்கை எடுக்க வேண்டும். அது இந்த மாமன்றத்தின் மரியாதையை உயர்த்தும். காலியாகவுள்ள 21 இடங்களுக்குப் புதிய உறுப்பினர்கள் வந்தால், மன்ற நடவடிக்கைகள் மேலும் சிறப்பாக அமையும் என்பதை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

இப்போது கோடைக்காலம் ஆரம்பித்துவிட்டது. மழைக் காலத்தில் கூட குடிநீர்ப் பஞ்சம் இருக்கும் பகுதிகள் நமது நாட்டில் ஏராளமாக இருக்கின்றன. அமைச்சர் அவர்களுக்கு நன்றாகத் தெரிந்த ஊர், அவர்கள் சொந்த ஊர், வடாற்காடு மாவட்டத்தில் உள்ள திருவண்ணாமலை. அங்கே குடிநீர்ப் பஞ்சம் என்பது எப்போதும் பெரிய தலைவலியாக இருக்கிறது. அப்படிக் கிடைக்கிற கொஞ்ச நீரும், தூய்மைக் குறைவாக இருப்பதால், அதை மக்கள் குடிக்க அஞ்சுகிறார்கள். அதைப்போலவே தென்னாற்காட்டில் திண்டிவனம் அப்படிப்பட்ட குடிநீர்ப் பஞ்சத்துக்கு ஆளான ஊராகும். அங்கேயும் இந்தப் பிரச்சினை நிரந்தரமாக இருக்கிறது. அங்கே சென்று மேகாமிடக்கூடிய அதிகாரிகள், அமைச்சர்கள், இங்கே சென்னையிலிருந்தே குடிநீர் கொண்டு போகும் நிலைமை இருக்கிறது. அந்த அளவுக்கு திண்டிவனத்தில் குடிநீர்ப்



பஞ்சம் ஏற்பட்டிருக்கிறது. இதில் அமைச்சர் அவர்களுக்கும் அக்கறை உண்டு. அவர்கள் இதுகுறித்து நடவடிக்கை எடுத்து, திண்டிவனம், திருவண்ணாமலை, போளூர் போன்ற பகுதிகளில், வருகிற காலத்தில் இந்தப் பிரச்சினை ஏற்படாமல் பார்த்துக் கொண்டு தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல், தென்னாற்காடு மாவட்டத் தலைநகரான கடலூரில் ஏற்பட்டிருக்கிற குடிநீர்ப் பிரச்சினை. அங்கே நிலத்தடி நீர் இல்லாமல் இல்லை. ஆனால் அந்தத் தண்ணீரை வழங்க சரியான மின் சப்ளை கிடைக்கவில்லையென்ற காரணத்தால், சரியாகத் தண்ணீர் வழங்க முடியவில்லை.

(முற்பகல் 11-50)

அங்கே குடிநீர் வழங்குவது என்பது இன்றியமையாக் கடமை என்ற காரணத்தால், அங்கே மின்சாரம் வழங்குவது என்பது அதற்குத் தடையாக இருக்கக்கூடாது. அதோடு மட்டுமல்லாமல், அந்தப் பணிக்கு தனியாக மின் சார சப்ளை இருக்க வேண்டும். இந்தக் காரணத்தினால், அங்கே குடிநீர் வழங்குவது தடைபடக்கூடாது. அதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாற்றுத் தலைவர் (திருமதி வி. ஜெயலட்சுமி) :** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கவனத்திற்கு ஒன்றைக் கொண்டுவர விரும்புகிறேன். இப்போது வந்திருக்கிற சட்டமுன்வடிவின்மீது பேசவேண்டிய விஷயங்கள் ஏதாவது இருந்தால், அதைப் பேசினால் நலமாக இருக்கும். மற்ற விவரங்களைப் பற்றி கொள்கை விளக்கக்குறிப்பின்மீது விவாதம் வரும்போது பேசலாம் என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** மாற்றுத் தலைவர் அவர்களே, இந்தச் சட்ட முன்வடிவை வரவேற்றுவிட்டுத்தான் பேசுகிறேன். அது தொடர்பான ஒரு சில கருத்துக்களையும் மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவந்தால், நடவடிக்கை எடுப்பதற்கு உகந்ததாக இருக்கும் என்ற அடிப்படையில்தான் இவற்றைப் பேசுகிறேன். முடித்து விடுகிறேன்.

**திரு. ஆர். டி. சீத்தாபதி :** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. லெட்சுமிகாந்தன் அவர்கள், சட்ட முன்வடிவுகளின் மீது பேசும்போது, எப்போதும் வரவேற்றுவிட்டுத்தான் எல்லாக் கருத்துக்களையும் சொல்வது அவருடைய மரபு என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (சிரிப்பு)

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** ஆகவே, இது ஒரு இன்றியமையாத பிரச்சினை என்பதை மாத்திரம் சொல்லிக்கொள்கிறேன்.

அடுத்து, கடலூரில் நிலத்தடி கழிவுநீர்த் திட்டம் இல்லாத காரணத்தினால், மக்கள் மலேரியா, மூளைக் காய்ச்சல் போன்ற கொடிய வியாதிகளுக்கு ஒவ்வொரு ஆண்டும் பலியாகும் கொடுமை தொடர்ந்து ஏற்பட்டுக்கொண்டு வருகிறது. இதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கவனித்து, நிலத்தடி கழிவுநீர் திட்டம் நிறைவேற ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

கடைசியாக, ஒரேயொரு கருத்தைச் சொல்லி முடித்துக்கொள்கிறேன். நலிந்த நிலையில் உள்ள சில நகராட்சிகள் பொருளாதாரச் சீர்குலைவால் உயர்நிலைப் பள்ளிகளையும், மற்ற பள்ளிகளையும் தங்களால் நடத்த முடியவில்லை என்றும், அவைகளை அரசே ஏற்று நடத்த வேண்டும் என்றும், தீர்மானங்கள் நிறைவேற்றி, அரசுக்கு அனுப்பி பல மாதங்கள் ஆகின்றன. சில நகராட்சிகள் அவ்வாறு தீர்மானங்கள் அனுப்பி ஓரிரு ஆண்டுகள்கூட ஆகின்றன. எனவே அவைகளை ஏற்று அரசாங்கமே நடத்துவதில் இனியும் தாமதம் செய்யாமல், அவற்றை ஏற்று நடத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

நேற்றைய தினம் சட்டமன்றப் பேரவையில் மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் பத்தாயிரம் ரூபாய் ஓய்வூதிய உதவித்தொகை தனியார் பள்ளிகளுக்கும் வழங்கப்படும் என்று சொன்னார்கள். ஆனால் நகராட்சி, மாநகராட்சிப் பள்ளிகளுக்கு அது விரிவுபடுத்தப்படாமல் இருக்கிறது. இதற்கு உள்ளாட்சித் துறை தனியாக ஆணை பிறப்பிக்க வேண்டும் என்று சொன்னார்கள். அதையும் மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவந்து, அவர்கள் தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு, மீண்டும் இச் சட்டமுன்வடிவை வரவேற்று, அமைகிறேன்.

**திரு. சி. இராமலிங்கம் :** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, ஊராட்சி, பேரூராட்சிகளுக்குத் தேர்தலை நடத்துவது குறித்த சட்ட முன்வடிவு மாண்புமிகு அமைச்சர் திரு. ப. உ. சண்முகம் அவர்களால் கொண்டுவரப் பட்டிருப்பதை வரவேற்கிறேன். சுமார் நூறு ஆண்டுகளுக்கு முன்னால் வாலாஜா, மதுரை, கல்கத்தா என்று இந்தியா முழுவதற்கும் மூன்று நகராட்சிகள்தான் இருந்தன. முன்பே கல்கத்தா மாநகராட்சியாக ஆகி விட்டது. அண்மையில் மதுரையையும் மாநகராட்சியாக ஆக்கிவிட்டோம்.



அது போல் வாலாஜாவையும் மாநகராட்சியாக ஆக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். வாலாஜா, இராணிப்பேட்டை, ஆற்காடு ஆகிய மூன்று நகராட்சிகளையும் இணைத்து ஒரே மாநகராட்சியாக ஆக்கலாம். வாலாஜா மன்னர்கள் ஆண்ட நகரம். வரலாற்றுச் சிறப்பு பெற்ற நகரம். எனவே அங்கே வருமானம் இல்லாவிட்டாலும், அதை மாநகராட்சியாக ஆக்கினால், சரித்திர முக்கியத்துவம் வாய்ந்ததாக அது அமையும் என்று சொல்லிக் கொள்கிறேன்.

அடுத்து, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் துப்புரவுப் பணியாளர்கள் சரியாகப் பணி செய்யாவிட்டல், நடவடிக்கை எடுக்கப்படும் என்று சொன்னார்கள். அவர்கள் எப்போதும் ஒழுங்காக வேலை செய்கிறார்கள். அவர்களுக்கு

(முற்பகல் 11-55)

மேலே இருக்கக் கூடிய கன்சர்வன்சி இன்ஸ்பெக்டர்கள் தான், காலையிலே வந்து வேலை செய்துவிட்டால் போதும், மத்தியானம் வரவேண்டாமென்று அவர்களை அனுப்பிவிடுகிறார்கள். அவர்கள் தற்காலிக ஸ்வீப்பர்களை வைத்து வேலை செய்யும்போது, 5 பேர்களை வைத்தால், 10 பேர்கள் என்று கணக்கு எழுதிவிடுகிறார்கள். அவர்களால் தான் நாங்கள் எல்லாம் ஒழுங்காக வேலை செய்ய முடியவில்லை என்று சொல்கிறார்கள். நான் சென்னை மாநகரத்திலே ஆரிய சமாஜத்தின் தலைவராக இருக்கிறேன். பல வட்டங்களிலே அந்தச் சிப்பந்திகளை நான் அணுகி, "நீங்களே துப்புரவுத் தொழிலாளியாக இருக்கிறீர்கள். நீங்களே பார்த்துக் கொண்டிருக்கும்போது, உங்கள் பகுதியிலே அசுத்தமாக இருக்கிறது" என்று கேட்டபோது, "எங்களுக்கு இருக்கக்கூடிய சி.ஐ.கள் தான் எங்களை எல்லாம் சரியாக வேலை செய்ய விடாமல் எங்களை எல்லாம் விட்டுக்குப் போங்கள் என்று சொல்லிவிடுகிறார்கள்" என்று சொன்னார்கள். அதேபோல ஓட்டல்களிலேயும் அசுத்தமாக இருக்கிறது. ஓட்டல்களிலே வேலை செய்பவர்களைக் கேட்கிறபோது, "இன்ஸ்பெக்டர்கள் வருகிறார்கள், ஏதாவது கொடுத்தால், சாப்பிட்டு விட்டுப் போய்விடுகிறார்கள்: எதையும் பார்ப்பது இல்லை" என்று சொல்கிறார்கள். அதுபோல டீ கடைகளிலே, அண்ணா சாலையிலே உள்ள தேவி டாக்கீஸ் பகுதிக்குப் போனால், ஒரே துர்நாற்றம். என்னவென்று பார்த்தால், டீ கடையிலே உள்ள கழிவுத் தண்ணீரை ரோடுகளிலே ஊற்றிவிடுகிறார்கள். எனவே இந்தமாதிரி கடைகளுக்கு எல்லாம் லைசென்சுகள் முறையாகக் கொடுக்கப்பட வேண்டும். அசுத்தம் செய்யப்படும் அந்தப் பகுதிகளை எல்லாம் மாற்றி அமைக்க வேண்டும். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தீவிர

மாக நடவடிக்கை எடுத்து வருகிறார்கள். ஆனால் அவர்கள் மட்டும் நடவடிக்கை எடுத்தால் போதாது. அதிகாரிகளும் ஒத்துழைக்க வேண்டும். அவர்களும் தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

வாலாஜாவை மாநகராட்சியாக ஆக்க வேண்டுமென்று மீண்டும் கேட்டுக் கொண்டு இந்த வாய்ப்புக் கொடுத்ததற்கு நன்றி கூறி அமர்கிறேன்.

* திரு. க. மீனாட்சிசுந்தரம்; மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, உள்ளாட்சித் துறைத் தேர்தல் நடைபெறுவதற்குரிய சூழ்நிலையை உருவாக்கி, அதற்கு தேதியையும் குறிப்பிட்டு இங்கே கொண்டு வந்திருக்கின்ற இந்த மசோதாவினை நான் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலே வரவேற்கின்றேன். நீண்ட காலமாக, ஏறத்தாழ 13 ஆண்டுகளுக்கு மேலாக, உள்ளாட்சித் துறைத் தேர்தல்கள் நடைபெறாமலிருந்து இதிலே பொறுப்பேற்ற பல்வேறு அமைச்சர்கள் பல உறுதிமொழிகளைத் தந்து, அவர்கள் எல்லாம் அதை நடத்தாமலேயே வேறு துறைக்குச் சென்றிருக்கிறார்கள். ஆனால் நம்முடைய மதிப்பிற்கும், மரியாதைக்கும் உரிய அமைச்சர் அவர்கள் பொறுப் பேற்று, இந்த அவைக்கு வந்த அன்றே மீண்டும் ஒருமுறை நான் இதற்குக் கால நீட்டிப்பு வேண்டுமென்று கேட்க மாட்டேன் என்பதை உறுதியாகச் சொல்கிறேன் என்று அவர்கள் சொன்னார்கள். நான் அன்றைக்குப் பேசுகிற போது அவருடைய உறுதித் தன்மையை,

(மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் தலைமை)

நினைத்ததைச் செய்யக்கூடிய தன்மையை நிச்சயமாக அவர் நிறைவேற்றுவார் என்ற அந்த எண்ணத்தை வலியுறுத்திக் கூறினேன். மிகவும் பிடிவாதக் காரர் என்று சொல்லி, கொண்ட கொள்கையை நிறைவேற்றுவார் என்று கூறி னேன். எடுத்த காரியத்தைச் செய்வதிலே மிகவும் பிடிவாதக்காரர், அதற்குப் பல சான்றுகள் உள்ளன என்று சான்றுகளையும் சொன்னேன், அவர்கள் இதை நிச்சயமாகச் செய்து தர வேண்டுமென்ற வேண்டுகோளை விட்டு, செய்வார்கள் என்ற நம்பிக்கையையும் தெரிவித்தேன். அந்த நம்பிக்கை பொய்க்காத வகை யிலே அவர்கள் அதற்குரிய நடவடிக்கை எடுத்து இந்தக் கூட்டத் தொடரி லேயே இந்த மசோதாவைக் கொண்டு வந்திருப்பதைக் கண்டு மெத்தப் பெருமைப்படுகிறேன், பாராட்டுகிறேன், வாழ்த்துகிறேன். என்னுடைய கட்சியின் சார்பிலே அவருக்கு இந்தச் செயலை முடிப்பதற்காக மேலும் ஆக்கமும் ஊக்கமும் அளிப்பதற்குக் கூட தயாராக இருக்கிறோம் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.



அவர்கள் இதை கொண்டுவந்ததின் முக்கியமான நோக்கம் என்ன என்பதிலே இரண்டை மட்டும் இங்கே சொன்னார்கள். ஒன்று புதிய சட்டங்களை இந்த அரசு கொண்டு வந்து அதிலே பெண்களுக்கும், தாழ்த்தப்பட்டவர்களுக்கும் இடம் ஒதுக்கி புதிய சீர்திருத்தங்களைச் செய்ததை எல்லாம் சிலர் எதிர்த்து வழக்கு மன்றத்திற்குச் சென்று விட்ட காரணத்தினாலே, தேர்தல் நடத்த முடியாத சூழ்நிலை இருந்து, இன்றையதினம் பழைய முறையிலே தேர்தலை நடத்தி முடித்துவிட வேண்டுமென்ற ஆர்வத்தோடு, நடத்த முன் வந்திருக் கிறோம் என்று சொன்னார்கள். அதோடு அவர்கள் நிறுத்தியிருந்தால், சிறப்பாக இருந்திருக்கும்; நடந்திருக்க வாய்ப்பு இருக்கும். இப்போது எனக்குச் சந்தேகம் ஏற்படுகிறது. ஏற்கெனவே, அமைச்சராக இருந்த மாண்புமிகு திரு. குழந்தைவேலு அவர்கள், இவர்கள் எப்படி இப்போதும் 2 தேதியை நிர்ணயித்துச் சொல்லியிருக்கிறார்களோ, அதுபோல அவர்களும் 2 தேதியை நிர்ணயித்துச் சொல்லி, அந்தத் தேதிக்கு முன்னதாகவே வழக்கு மன்றத்திற்குச் சிலர் சென்று அதற்குத் தடை உத்தரவு பெற்றுவிட்டார்கள் என்றதற்குப்

(நண்பகல் 12-00)

பின்னாலே அதை நிறுத்த வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. வழக்கு மன்றம் செல்வதற்கு வாய்ப்பில்லாத வகையில் சூழ்நிலையை உருவாக்கி, அமைச்சர் அவர்கள் தேர்தல்களை நடத்தி முடிப்பார்கள் என்று எண்ணி யிருந்தேன். ஆனால் இப்போதும் வழக்கு மன்றம் செல்வதற்கான சில வாய்ப்பு களையும் ஏற்படுத்தியிருக்கிறார்கள். அப்படி ஏற்படுத்துவதன் மூலமாக மீண்டும் உள்ளாட்சித் தேர்தல்கள் நடைபெற இயலாத ஒரு சூழ்நிலை ஏற்பட்டால், "அது எங்கள் கையில் இல்லை, அவர்கள் வழக்குமன்றம் சென்றுவிட்டார்கள்" என்று சொல்லுவதற்கு உரிய சூழ்நிலையை உருவாக்கவே சில சட்டத்திருத்தங் களைக் கொண்டு வந்திருக்கிறார்களோ என்று எண்ணக்கூடிய சூழ்நிலை இப் போது இருக்கிறது. காரணம் ஏற்கெனவே இருந்த 5 ஆண்டுக் காலப் பதவிக் காலத்தை இப்போது 4 ஆண்டுக் காலமாகக் குறைத்திருக்கிறார்கள். மேலவை உறுப்பினர்களுக்கு 6 ஆண்டுக் காலம் பதவி இருப்பதை நாம் குறைக்க முடியாது. அது நம் கையில் இல்லை. சட்டமன்ற உறுப்பினர்களுக்கான பதவிக் காலம் 5 ஆண்டுகள். அதையும் நம்மாலே குறைக்க முடியாது. ஆனால் நம்மாலே குறைக்க முடிந்தது இது ஒன்றுதான். எனவே 5 ஆண்டுகள் என்றிருந்ததை இப்போது 4 ஆண்டுகளாகக் குறைத்திருக்கிறோம். அதைக் கூட நல்ல நோக்கத்தோடுதான் செய்திருப்பார்கள் என்ற நம்பிக்கை எனக்குண்டு, ஆனால் வெளியே இருப்பவர்கள் சந்தேகப்படுவதற்கு வாய்ப்புகள்

இருக்கின்றன. இது 1985 ஆம் ஆண்டு. இப்போது இந்தச் சட்டத் திருத்தத்தைக் கொண்டு வருகிறோம். நாம் தேர்தலில் வெற்றி பெற்றதுகூட இந்த ஆண்டு தான். இதற்குப் பிறகு அடுத்த பொதுத் தேர்தல் வருவது 1990 ஆம் ஆண்டில். எனவே உள்ளாட்சிகளுக்குப் புதிதாகத் தேர்ந்தெடுப்பவர்களை 1990 வரை பதவியில் நீடிக்க விடக்கூடாது. அப்படி நீடித்திருக்க விட்டால்—இப்போது தேர்ந்தெடுக்கப்பட இருப்பவர்கள் ஆட்சியாளர்களுக்குச் சாதகமாக இருப்பார்களோ பாதகமாக இருப்பார்களோ—வேறு கட்சியைச் சார்ந்தவர்கள் வந்துவிடுவார்களோ என்னவோ. இவர்களை 1990 வரை நீடிக்க விட்டால் சங்கடம் ஏற்பட்டுவிடும் என்று கருதியோ என்னவோ—அப்படி நான் சொல்லவில்லை—அப்படிக் கருத இடமிருக்கிறது—இப்போது இந்தச் சட்டத் திருத்தத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள். எனவே அவர்கள் 5 ஆண்டுக் காலம் பொறுப்பில் நீடிக்கக் கூடாது என்று கருதி, பொதுத் தேர்தலுக்கு முன்னதாகவே அவர்களின் பதவி முடிந்து விட்டது என்று சொல்லிவிடலாம். அதற்குப் பிறகு பொதுத் தேர்தல் வருவதால், உள்ளாட்சித் தேர்தல்களை நடத்துவதற்கு அவகாசம் இல்லை என்று சொல்லிவிட்டு, நேரடியாகத் தனி அதிகாரிகளிடம் இந்த உள்ளாட்சி மன்றங்களை ஒப்படைத்து, தங்கள் ஆட்சியை அதிகாரிகள் மூலம் வலுப்படுத்திக்கொள்ள முடியும் என்ற உள் நோக்கத்தோடு இதைக் கொண்டு வந்திருக்கிறார்களோ என்று கருத வேண்டியிருக்கிறது. எனவே 4 ஆண்டுகள் பதவிக் காலம் என்று கொண்டு வருவதற்கு என்ன காரணம்? மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதை அறிமுகப்படுத்திப் பேசும்போதே இதற்கான காரணத்தைச் சொல்லியிருந்தால், அதை உணர்ந்து நாங்கள் பேசுவதற்கு வாய்ப்பாக இருந்திருக்கும். இப்படி 4 ஆண்டுகளாகக் கொண்டு வந்ததற்குக் காரணம் 4 ஆண்டுகள் கழித்து தனி அதிகாரிகளை மீண்டும் பொறுப்புக்குக் கொண்டுவந்து தங்களுக்கு இஷ்டம் போல் செய்து கொள்ளலாம். அல்லது தேர்ந்தெடுக்கப்படுபவர்கள் தங்களுக்கு வேண்டியவர்களாக இருந்தால், அவர்களின் காலத்தை ஓராண்டுக்கு நீட்டித்துக்கொள்ளலாம். எனவே இதற்கு வசதியாகத்தான் 4 ஆண்டுகள் என்று தற்போது பதவிக் காலம் குறைக்கப்பட்டிருக்கிறதோ என்ற ஐயப்பாடு இயல்பாகவே எழுகிறது. எனவே அதை மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்கள் விளக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** மாண்புமிகு கல்வியமைச்சர், என்று எப்போதும் சொல்லிச் சொல்லி இப்போதும் கல்வியமைச்சர் என்றே வருகிறது.



**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** மன்னிக்க வேண்டும். உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் இதை விளக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதோடு திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில், 4 ஆண்டுகள் என்று திருத்தப்படுவதைத் திரும்பப் பெற்று மீண்டும் 5 ஆண்டுகள் பதவிக் காலம் உண்டு என்று கொண்டுவர வேண்டும் என்று வற்புறுத்த விரும்புகிறேன்.

அடுத்து, ஒன்றைச் சொன்னார்கள். அதாவது மாவட்ட ஆட்சித் தலைவரிடம் நியமனப் பொறுப்பை வழங்க இருக்கிறோம் என்று குறிப்பிட்டார்கள். அதாவது இந்தச் சட்ட முன்வடிவில் "ஒத்துத் தெரிவு செய்து கொள்வதற்கு" ஒரு விதி இருக்கிறது. அதன் மூலம் இருவரைத் தெரிவு செய்துகொள்ளலாம். இந்த அதிகாரத்தைத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுக்கே விட்டிருக்கலாம். அதைச் செய்யாமல் மாவட்ட ஆட்சித் தலைவரிடம் அந்தப் பொறுப்பை ஒப்படைப்பது என்றால், நீங்கள் நினைப்பவர்களைத்தான் கொண்டுவர வேண்டுமென்று இந்த விதி செய்யப்பட்டிருக்கிறது என்று எண்ண வேண்டியிருக்கிறது. அதாவது ஊராட்சி ஒன்றியத்தில் உங்களுக்குச் சாதகமானவர்கள் இல்லை அல்லது மெஜாரிட்டி குறைகிறது என்று நீங்கள் கருதினால், உங்களுக்கு வேண்டியவர்களைக் கொண்டு வர இந்த ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. இங்கே உள்ள காங்கிரஸ் நண்பர்கள் கோபித்துக் கொள்ள மாட்டார்கள் என்று கருதுகிறேன். பாண்டிச்சேரியில் 30 பேர் மொத்த உறுப்பினர்கள். இதில் காங்கிரஸ் உறுப்பினர்கள் 15 பேர். அதற்குப் பின்னாலே 3 பேரை கோ-ஆப்ட் செய்யலாம் என்று ஏற்கெனவே விதி இருக்கிறது. என்றாலும். . ,

**திரு. எம். பி. சுப்பிரமணியம் :** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே குறிப்பிடுவது நம் மாநிலத்திற்குச் சம்பந்தப்படாத வேறு ஒரு மாநிலப் பிரச்சினை. அரசியல் சாசன உரிமைகளைப் பயன்படுத்த அந்த மாநில அரசுக்கும் ஆளுநருக்கும் உரிமை இருக்கிறது. அவைகளை இங்கே விவாதிப்பது என்பது பொருத்தமற்றதாகும். எனவே மேலும் அதைப்பற்றி மாண்புமிகு உறுப்பினர் தொடரக் கூடாது என்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** நாம் இந்தியாவில்தான் இருக்கிறோம். தேசிய ஒற்றுமையைப்பற்றிப் பேசுகிறோம். பல்வேறு மாநிலங்களில் இருப்பதை உதாரணத்திற்கு எடுத்துக்காட்டிப் பேசுவது எப்படித் தவறாகும்? அங்கே நடைபெற்றதைத் திருத்த வேண்டும் என்றும் அதைப் போக்க நடவடிக்கை

மேற்கொள்ள வேண்டுமென்றும் நான் கேட்கவில்லை. உலகத்தைப்பற்றியெல்லாம் நாம் பேசுகிறோமே, அப்படி இருக்கும்போது பக்கத்தில் இருக்கிற பாண்டிச்சேரியைப்பற்றிப் பேசக் கூடாது என்று சொல்வது எப்படி என்று என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை. ஆகவே அங்கே ஆள்கின்ற கட்சிக்குப்

(பிற்பகல் 12-05)

பெரும்பான்மை இல்லையென்பதாலே அதைச் செய்திருக்கிறார்கள். ஏற்கெனவே சட்டத்திலே வழி இருக்கிறது என்பதை ஒத்துக்கொள்கிறேன். ஆனால் முன்பிருந்த அரசு கேட்டபோது அதற்கு மத்திய அரசு ஒத்துக் கொள்ளவில்லை. அப்படிச் செய்துகொள்ள மத்திய அரசு அனுமதி தரவில்லை. ஆனால் தங்கள் கட்சிக்காரர்களுக்கு பலம் வேண்டும், அவர்கள் கவிழ்ந்துவிடக் கூடாது, அவர்களுக்குத் தொல்லைகள் வரக்கூடாது என்று எண்ணிய காரணத்தால், அந்த 3 பேரைச் சேர்த்துக்கொள்ள மத்திய அரசு அனுமதி அளித்திருப்பதைப் போல, தமிழகத்திலேயும் அதிகாரிகளை வைத்து அவர்களே கோ-ஆப்ட் செய்ய வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுத்திருக்கிறார்கள் என்று திராவிட முன்னேற்றக் கழகம் கருதுகிறது. அந்தக் காரணத்தாலேதான் மாவட்ட ஆட்சித் தலைவர் மூலமாக நியமனம் செய்வதை இதிலே சேர்த்திருக்கிறார்கள். தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களை மேலும் அதிலே சேர்த்துக் கொள்ளலாம் என்பதிலே ஆட்சேபணை இல்லை. அதிகாரிகளின் மூலமாகச் செய்வது என்பது, ஆட்சியாளர்களுடைய எண்ணத்தை நிறைவேற்ற வாய்ப்பாக இருக்கிறது, ஜனநாயகத்தைக் குலைக்கும் முயற்சியாக அமைந்திருக்கிறது என்பதை அழுத்தந்திருத்தமாகக் கூறி அதை வன்மையாகக் கண்டிக்கிறேன். அதையும் அரசு திரும்பப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்று தெரிவித்துக்கொள்ள கடமைபட்டவனாவேன். இந்த இரண்டையும் திரும்பப் பெற்றுக்கொண்டு அதற்கேற்ப மாற்றி சட்ட முன்வடிவை அமைக்க வேண்டும் என்று மீண்டும் வற்புறுத்துகிறேன். இந்தப் பிரச்சினைகள் இல்லாமல், யாரும் கோர்ட்டுக்குச் செல்ல முடியாத அளவிற்கு பழைய நிலையில் வைத்து தேர்தலை நடத்தலாம். ஏனென்றால் தேர்தல்தான் முக்கியம். காரணம், தெரு விளக்குகள் எரியவில்லை. குப்பை மேடுகள் அப்படியே இருக்கின்றன, கொசுத் தொல்லை தாங்க முடியாமல் இருக்கிறது, சுகாதார வசதி இல்லை, சாலைகள் அமைக்கப்படவில்லை என்பதுதான். ஆகவே ஜனநாயக முறைப்படி தேர்தல் நடந்த பிறகு ,இன்றுவரை பதவியில் உள்ள தனி அதிகாரிகள் மீது நீதி விசாரணை வையுங்கள். அப்போது எத்தனை பேர் கோடீஸ்வரர்களாக ஆகியிருக்கிறார்கள் என்பது தெரியும். தனியதிகாரிகள் கொள்ளையடித்தது தெரியும். சாலைகள் போடாமலே போட்டதாகக்



கணக்குக் காட்டியது தெரியும். அதைக் கண்டுபிடிக்க முடியும். தனி அதிகாரிகள் மீது நீதி விசாரணை வைத்தால், இந்த 13 ஆண்டுக் காலத்திலே இருந்தவர்கள் தன் மாமன் பெயரில், மச்சான் பெயரில், குழந்தைகள் பெயரில், அம்மா பெயரில், அப்பா பெயரில் எத்தனை வீடுகளைக் கட்டியிருக்கிறார்கள், என்னென்ன கொள்ளை அடித்திருக்கிறார்கள் என்ற விவரங்கள் தெரிய வரும், அதிலே பல பெரிய புள்ளிகள் கூட அகப்படுவார்கள் என்பதை மாத்திரம் சொல்லி மீண்டும் முன்னால் சொன்னதையே வற்புறுத்தி அமைகிறேன்.

திரு. ஆர். டி. சீத்தாபதி : துணைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்ட முன்வடிவின் மீது நான் சார்ந்துள்ள அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் சில எண்ணங்களை நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

பதவிக்காலம் ஐந்தாண்டுக் காலம் என்று இருந்ததை நான்காண்டுக் காலம் என்று அரசு குறைத்திருக்கிறது. சென்னை மாநகராட்சியிலே கூட மூன்றாண்டுகளுக்கு ஒருமுறை தேர்தல் நடைபெறுவது வழக்கம். சென்னைக்குக் கூட மூன்றாண்டுகள் என்று இருப்பதை நான்கு ஆண்டுகளாக ஆக்க வேண்டும் என்று இந்தச் சட்ட முன்வடிவைப்பற்றிப் பேசுகின்ற நேரத்தில் நான் சம்பந்தப்பட்ட உள் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: உள்ளாட்சித் துறை அமைச்சரைக் கேட்டுக்கொள்கிறேன் என்று சொல்ல வேண்டும்.

திரு. ஆர். டி. சீத்தாபதி: உள்ளாட்சித்துறை அமைச்சர் என்றுதான் குறிப்பிட்டேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: உள்துறை அமைச்சர் என்று குறிப்பிட்டதாக என்னுடைய காதில் விழுந்தது. ஆகவே உள்ளாட்சித்துறை அமைச்சர் என்று மாற்றிக்கொள்ள வேண்டும் என்று சொன்னேன்.

திரு ஆர். டி. சீத்தாபதி : அது முதலமைச்சர் கையில் இருக்கிறது என்பது எனக்குத் தெரியும். ஆனால் ஏறத்தாழ இரண்டு வாரங்களுக்கு முன்பு இந்த அவையில் உள்துறை அமைச்சர் அவர்கள் . . .

திரு. நெல்லை பாலாஜி : துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் உள்துறை, உள்துறை என்றே பேசி வருகிறார்கள். பழக்க தோஷம் என்று கருதுகிறேன். இனிமேலாவது உள்ளாட்சித் துறை என்று பேச வேண்டும்.

**மாண்புமிகு மேல்லவைத் துணைத் தலைவர்:** துணைத் தலைவர் சொன்னது சரிதான் என்பது தெரிகிறது.

(பிற்பகல் 12-10)

**திரு. ஆர். டி. சீத்தாபதி:** மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய அமைச்சர் அவர்கள் இங்கே அதிகாரிகளின் பதவிக் காலத்தை நீடிக்கின்ற நேரத்தில் அவர் விரைவாகத் தேர்தல் நடைபெறும் என்று அறிவித்து அதற்கொப்ப அறிஞர் அண்ணா அவர்கள் பிறந்த மாதமான செப்டம்பர் திங்கள் 9 ஆம் நாளன்று தேர்தல் நடைபெறும் என்று அறிவித்து, அதற்கான செய்திகளையெல்லாம் நாம் நேற்றையதினம் பத்திரிகையிலே படித்தோம். உள்ளபடியே சொன்னதைச் செய்கின்ற அளவில், அதுவும் பேரறிஞர் அண்ணாவினுடைய பிறந்த நாளில் தேர்தல் என்று அறிவித்தது மட்டுமல்லாமல், பேரறிஞர் அண்ணா அவர்கள் சொன்ன அந்தக் கருத்தை மாண்புமிகு உறுப்பினர் திரு. மீனாட்சிசுந்தரம் அவர்கள் பாராட்டுவார்கள் என்று நான் கருதினேன். ஆனால் அதையும் அவர்கள் பாராட்டாமல், அவருக்கே இருக்கின்ற பாணியில் அவர் கருத்தைத் தெரிவித்திருக்கின்றார்கள். அண்ணா அவர்கள், உள்ளாட்சித் துறை, நகராட்சித் துறை, மாநகராட்சித் துறை இந்த அமைப்புகளினை அமைக்கும் நேரத்தில் அந்த வட்டாரத்திற்குள் இருக்கின்ற பொதுச் சேவை செய்கின்ற நண்பர்கள், கட்சி சார்பின்றி தேர்தலில் நின்று வரவேண்டுமென்று சொல்லியிருக்கின்றார்கள். அந்தப் பேரறிஞருடைய நீண்ட நாள் கோரிக்கையை நமது எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும் நன்றாக அறிவார்கள் என்று நான் கருதுகிறேன். அதை நம்முடைய புரட்சித் தலைவர் அவர்கள் நிறைவேற்றுகின்றார்கள். அதற்குப் பாராட்டை நான் தெரிவிக்கின்றேன். ஆனால் அவர்கள் அதைப் பாராட்டுவதற்குக்கூட முன்வரவில்லை என்ற வருத்தம்கூட எனக்கு இருக்கின்றது. அதே நிலையை, மாநகராட்சி மன்றத் தேர்தல் நடத்துகின்ற நேரத்தில், இந்த அரசு கடைப்பிடிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இன்றைக்கு கட்சி சார்பில்லாமல் போட்டி போட்டு வரவேண்டும். சென்னை, மதுரை, கோவை இன்னும் இருக்கின்ற பல நகரங்களுக்கும் நடக்கவிருக்கும் தேர்தலில் கட்சி சார்பு இல்லாமல் இருப்பவர்கள் போட்டி போட வேண்டும் என்ற நிலை நீடிப்பதற்கு இந்த அரசு வலியுறுத்த வேண்டும் என்று கேட்டுக்கொண்டு அமைகிறேன்.

**திரு. ப. மாணிக்கம்:** மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, நீண்ட அனுபவத்திற்குப் பிறகு நம்முடைய அரசு இந்தத் திருத்தச் சட்டத்தைக் கொண்டு வந்திருக்கின்றது. இதை நான் முதலிலே வரவேற்கிறேன். நகராட்சிக்கும் சரி, பஞ்சாயத்து யூனியன்களுக்கும் சரி, 5 ஆண்டுகள்



என்பதை 4 ஆண்டுகளாக மாற்றுகிறார்கள். காலத்தை ஒரு ஆண்டு குறைப்பதனாலே என்ன பலன் இருக்கும் என்று தெரியவில்லை. ஆனாலும், நான் ஒரு கருத்தை இந்த நேரத்தில் சொல்வது அவசியம் என்று கருதுகிறேன். 1985 செப்டம்பரில் தேர்தல் நடத்தினால், 1989-ல் செப்டம்பரில் தேர்தல் நடத்த வேண்டும். 1989-ல் டிசம்பரிலே பொதுத் தேர்தலும் வரலாம். இந்த 4 மாத இடைவெளியிலே இந்தத் தேர்தல் நடப்பது சந்தேகமாக ஆகிவிடும். நான் அரசாங்கத்தைக் குறை சொல்லவில்லை. அதன் நோக்கத்தை நான் குறைத்துச் சொல்லவில்லை. ஆனால் அதனால் வரும் விளைவுகளைத்தான் நான் இங்கே சொல்கிறேன். சட்டமன்றத் தேர்தல்கள், பொதுத் தேர்தல்கள் நடப்பதற்கு முன்பு இந்தப் பஞ்சாயத்துத் தேர்தல்கள் நடக்கும். அதை நிர்வாக ரீதியாக செம்மையாகச் செய்ய முடியாது. அதை ஏற்க முடியாது. இப்படிப்பட்ட நிலை ஏற்படலாம். அதனால் இந்த 4 ஆண்டு என்பதை 3 ஆண்டாகக் குறைத்திருந்தாலும் அதிலே பொருள் இருக்கிறது. ஐந்து ஆண்டு என்றால் 1990 செப்டம்பர் என்று போகும். வசதியாக இருக்கும். இல்லாவிட்டால், நிர்வாகச் சுமை காரணமாக ஒருவேளை நடத்த முடியாமல் ஒத்திவைக்க வேண்டிய நிலை ஏற்படும். அப்படிப்பட்ட சங்கடம் இதிலே அமைந்திருக்கிறது. அது சரியல்ல.

அடுத்து மேலவைத் தேர்தல் வரும் என்பதில் நம்பிக்கை இல்லை. அரசு இந்தக் கருத்துக்களை உள்ளடக்கி உரிய காலத்தில் திருத்தம் கொண்டு வர வேண்டும். அவசரத் திருத்தமாக ஏற்றுக்கொண்டு கொண்டுவந்தாலும், நல்லதுதான். அதை அரசு பரிசீலிக்க வேண்டும். நான்கு ஆண்டுகள் என்று வைத்தால், இந்தச் சங்கடம் வரும். மூன்று ஆண்டுகள் என்று இருந்தால், நிச்சயமாக 1988-லே தேர்தல் நடத்த வாய்ப்பாக இருக்கும். இப்படி ஒரு சங்கடம் இருக்கிறது. ஆகவே இந்தத் திருத்தம் கொண்டு வந்து தேர்தல் நடத்த இருக்கின்ற நேரத்தில், இதிலே உள்ள பல்வேறு சங்கடங்களையும் எடுத்துச் சொல்கிறேன். இதை வரவேற்கின்ற நேரத்திலே இந்த மாதிரி குறைபாடுகளையும் நான் சுட்டிக் காட்டவேண்டியிருக்கிறது.

(பிற்பகல் 12-15)

அடுத்து, பஞ்சாயத்து யூனியன்களுக்கு இரண்டு வகையிலே நாமினேஷன். பெண் உறுப்பினர்களும், தாழ்த்தப்பட்ட பகுதியிலிருந்து உறுப்பினர்களும், அதாவது எஸ்.சி., எஸ்.டி. உறுப்பினர்களும் இல்லாமல் போனால், இதில் ஒன்றும் அதில் ஒன்றும் பஞ்சாயத்து யூனியன் நாமினேஷன் செய்யலாம்.

[திரு. ப. மாணிக்கம்] [1985 ஏப்ரல் 12

அதற்குப் பிறகு கலெக்டருக்கும் அதிகாரம் தரப்பட்டிருக்கிறது. அதுவும் "may" என்றுதான் போடப்பட்டிருக்கிறது. ஆனால் நடைமுறையில் அது 'shall' ஆகிவிடும். பஞ்சாயத்து யூனியனிலும் 2 பேரைப் போடுவார்கள், கலெக்டரும் இரண்டு பேரைப் போடுவார். ஒருகால் பெண் உறுப்பினர் வராமல் தாழ்த்தப்பட்ட பகுதியிலிருந்து மட்டும் உறுப்பினர் வந்துவிட்டால், பெண் உறுப்பினர் ஒருவரை நாமினேஷன் செய்துகொள்வார்கள். நாமினேஷனை வேண்டாமென்று நான் சொல்லவில்லை. நாமினேஷன் வேண்டும். பழைய சட்டத்தில் இருந்தது. அது நிறைவேறாத நிலைமைகள் இருப்பதால், நாமினேஷன் என்பது சரியானதுதான். இரண்டு இடத்திலே நாமினேஷன் செய்வதற்கான அதிகாரங்களைக் கொடுத்தால், ஜனநாயக மரபுகள் சரியாக இராது. எனவே ஒரு மட்டத்திலேயே, அதாவது பஞ்சாயத்து யூனியன் மட்டத்திலேயே 2 பெண் உறுப்பினர்கள், 2 தாழ்த்தப்பட்ட உறுப்பினர்களை நாமினேஷன் செய்துகொள்ளலாம் என்று சொல்லிவிட்டால், எந்த உறுப்பினர்கள் வரவில்லையோ, அவர்களை நியமித்துக்கொள்வார்கள். இந்த அதிகாரத்தை அதிகாரிகளிடம் கொடுத்தால், தவறுகளுக்கு இடம் தரும். அது வேண்டாமென்பதல்ல. சில தவறுகளுக்கு இடம் தரும். ஆதலாலே இது பற்றியும் யோசிக்க வேண்டும். இதிலே "may" என்று போட்டாலும், நடைமுறையில் shall என்று மாறும். 'போடலாம்' என்று இருக்கிறது. ஆனால் போடுகின்ற நிலைமைகள் தான் வரும். இந்தக் கருத்தைச் சொல்லி, இந்தச் சட்ட முன்வடிவை வரவேற்கிறேன். உறுதியாக இந்தத் தேர்தல்களை நடத்த வேண்டுமென்ற என் விருப்பத்தைக் கூறி, அப்படி நடக்குமானால், தமிழ்நாட்டிலே நகராட்சிகள், பஞ்சாயத்துக்களிலே இருக்கக்கூடிய பல்வேறு கொடுமைகள் நீங்கும். குறைந்தபட்சம் நகர சுகாதாரத்தில், கொசுக்கள் குறையும். ஒழிந்துவிடாது. பல வருடங்களாக அவை வளர்க்கப்பட்டிருக்கின்றன. எனவே அவை குறைய வழி ஏற்படும். கிராமங்களிலே ரோடுகள் அல்ல, குழிகளுடைய சங்கிலித் தொடராக இருக்கின்றன. அவைகள் ஓரளவுக்குச் சீர்படும் என்ற முறையிலே இந்தத் தேர்தலை நடத்துவதற்கான ஏற்பாடுகளை அரசு செய்ய வேண்டுமென்று சொல்லி, மீண்டும் இதற்காக ஆதரவைத் தெரிவித்து, அமைகிறேன்.

திரு. க. சுப்பு : மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவரவர்களே, நீண்ட நாட்களாக நடைபெறாமல் இருக்கின்ற உள்ளாட்சித் தேர்தல்கள் நடத்தப்படுமென்று கட்டியம் கூறும் இந்த மசோதாவை மற்றவர்களைப்போல நானும் மனப்பூர்வமாக வரவேற்கிறேன். இந்த மசோதா பற்றி மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் அவர்கள் குறிப்பிட்டதுபோல, நம்முடைய அவை முழுமையான அவையாக இருக்க வாய்ப்பு ஏற்படுவதால், இரட்டிப்பு மகிழ்ச்சி தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறோம். அந்த அடிப்படையிலே ஜனநாயக மரபுகளைக் காப்பதற்கும், உள்ளாட்சி மன்றங்களுக்கு ஜனநாயகத்தினுடைய பயிற்சி பெறக்கூடியவர்களை உருவாக்கவும் எடுக்கப்படும் முயற்சிக்காக மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சரவர்களை நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.



1985 ஏப்ரல் 12] [திரு. க. சுப்பு]

உள்ளாட்சி மன்றங்களைப் பொறுத்தவரையில், ஒரு கருத்தை இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர்களெல்லாம் குறிப்பிட்டார்கள். இந்த அரசாங்கம் இப்படிக் கொண்டுவருவதாலே, கொஞ்சம் உள் நோக்கம் இருப்பதுபோல் சொன்னார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. மாணிக்கம் அவர்கள் May என்றிருந்தாலும், அது கட்டாயமாகக்கூட வரலாமென்று சொன்னார்கள். அது வராமல்கூட இருக்கலாம். 'may' means 'may not' also பஞ்சாயத்து யூனியனில் கோ-ஆப்ட் செய்யும்போது விருப்பு, வெறுப்பு ஏற்படலாம். அதைச் சரி செய்ய மாவட்ட ஆட்சித் தலைவர் அளவில் அதிகாரம் இருந்தால், நல்லதுதான். இதை நல்ல நோக்கோடு பார்த்தால், நன்றாகத் தெரியும். இது ஒரு எனேபிளிங் ப்ரொவிஷன்தான். may என்பது may not ஆகக் கூட இருக்கலாம். எதிர்க் கட்சி உறுப்பினர்கள் சொல்லும் கருத்துக்களை எடுத்துக்கொண்டு அரசு கலெக்டர்களுக்கு உத்தரவு போட்டு, நீங்கள் போட வேண்டாம், தேவையான அளவுக்கு பஞ்சாயத்து யூனியனில் போட்டிருக்கிறார்கள் என்று சொல்லலாம். இந்தத் தகராறே வேண்டாம். கோ-ஆப்ட் செய்யும் உறுப்பினர்கள் எண்ணிக்கையை அதிகப்படுத்தலாம். இப்போது ஒரு பெண் உறுப்பினர், ஒரு தாழ்த்தப்பட்ட, அதாவது ஆதி திராவிட உறுப்பினரை நாமினேட் செய்யலாமென்று இருக்கிறது. அது நமது கொள்கைக்கு விரோதமாக இருக்கிறது. கால் பகுதி ரிசர்வேஷன் இருக்க வேண்டும். அந்த 'கால்'-வில் என் 'கால்' போட வேண்டும்? நம்முடைய கொள்கைக்கு அது சரியாக வரவில்லை.

(பிற்பகல் 12-20)

அதனால் ஒன்று என்று இருப்பதற்கு பதிலாக 2 தாழ்த்தப்பட்டவர்கள் என்றும் மகளிர்க்கு ஒன்று என்றும் மாற்றியமைக்கலாம். நாளடைவில் கலெக்டர் அவ்வாறு போட முடியாத நிலை வந்தால், அவர்கள் இடம் பெற முடியாத நிலை வரலாம். இந்தத் திருத்தத்தைப் பொறுத்தவரை, அது ஒரு கொள்கையோடு ஒட்டி வருகிறது. நாலில் ஒரு பகுதி என்று சொல்லி, ஒருவரைப் போடுவதைவிட 2 என்று மாற்றியமைக்கலாம். இந்தச் சின்ன விஷயத்தை மாண்புமிகு அமைச்சர் கவனிக்க வேண்டும்.

அடுத்து, உள்ளாட்சி மன்றங்களைப் பொறுத்தவரையில், இங்கே மாண்புமிகு உறுப்பினர் திரு. மீனாட்சிசுந்தரம் ஒன்றைச் சொன்னார். 4 வருடமாக ஆக்கியிருப்பது கேவலம் என்று சொன்னார். 4 வருடம் என்றாலே அமெரிக்க பிரசிடெண்ட் ரீகனுடைய நினைவு வந்து விடுகிறது. அந்த வகையில் 5 என்று இருந்ததை 4 ஆக மாற்றியது ஒன்றும் தவறில்லை. 3 வருடம் என்றாலும், அது நன்றாக இல்லை. ஐந்துக்கும் மூன்றுக்கும் இடையில் 4 வருடம் என்கிற வகையில் இதை சமரசமாக வைத்திருக்கிறோம். இதையெல்லாம் பார்க்காமல், தேர்தல் நடைபெற இருப்பதற்காக நாமெல்லாம் சந்தோஷப்பட வேண்டும். தேர்தல் நடைபெறாத காரணத்தால், மக்கள் பிரதிநிதிகளைக் கொண்ட மன்றங்கள் இல்லாத காரணத்தால், தவறுகள் நடைபெறுவதாகச் சொன்னார்கள். அங்கே தவறு நடைபெறுவதைத் தவிர வேறு எதுவும் நடைபெறுவதற்கு வாய்ப்பே இல்லை. கவுன்சிலர்கள், ஊராட்சி மன்றங்கள் எல்லாம் கலைக்கப் பட்டது என்றால், எல்லோருக்கும் அதில் பொறுப்பு இருக்கிறது. ஜனநாயக அமைப்பில் மேல்நிலைக்கு வருவதற்கு முன்பு மக்கள் பிரதிநிதிகளுக்குப் பயிற்சி கொடுப்பது ஊராட்சி மன்றங்கள் போன்ற அமைப்புகள்தான். ரிப்பன் அவர்கள் இத்தகைய அமைப்பினை ஆரம்பித்ததால்தான், ரிப்பன் எங்கள் அப்பன் என்று பள்ளிக்கூடத்தில் படிக்கும் காலத்திலேயே சொல்வார்கள். ஆளும் கட்சியே துரதிருஷ்டவசமாக தன் கட்சியால் நடத்தப்பட்ட மாநகராட்சியைக் கலைக்கின்ற நிலை அன்றைக்கு ஏற்பட்டது.

**திரு. எம். பி. சுப்பிரமணியம் :** உள்ளாட்சி அமைப்புகள் கலைக்கப்பட்டதில் எல்லோருக்கும் பொறுப்பு இருக்கிறது என்று சொன்னார்கள். மாண்புமிகு உறுப்பினரின் ஆளும் கட்சி ஆட்சிக் காலத்தில்தான் அவை கலைக்கப் பட்டன என்பதை நான் நினைவுபடுத்துகிறேன்.

**திரு. க. சுப்பு:** திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தில் அவர்களே பெரும்பான்மையாக இருந்த மாநகராட்சி கலைக்கப்பட்டது. அதற்குப் பிறகு எமர்ஜென்சி வந்தது. அந்த நேரத்தில்தான் பஞ்சாயத்து யூனியன் கவுன்சில்கள், மாநகராட்சிகள் எல்லாம் கலைக்கப்பட்டன. மாநிலங்களையே கலைக்கிறோம், என்ன பெரிய மாநகராட்சி என்று அப்போது சொல்லப்பட்டது. இன்னமும் ஆர்டிகிள் 356 இருக்கக் கூடாது என்றுதான் சொல்கிறோம். மக்கள் மன்றங்களை நாம் கலைத்து விடும் உரிமையைப் பயன்படுத்துவோம் என்றால், மாநிலங்களைக் கலைக்கின்ற மத்திய அரசின் உரிமையை நாம் தட்டிக் கேட்கின்ற தார்மீக உரிமையை இழந்துவிடும் நிலைமைக்கு வந்துவிடுவோம். அப்புறம் நாம் எப்படி மத்திய அரசைக் கேட்பது? இப்படி எல்லாம் செய்வதன்





(பிற்பகல் 12-25)

மூலம் ஜனநாயக அம்சம் வேரூன்ற முடியாது. அதனால் தான் இப்போது நாம் அதிகாரிகளைப்பற்றிச் சொல்ல வேண்டி வருகிறது. பஞ்சாயத்துத் தலைவர்கள் எல்லாம் இருப்பார்கள் என்றால், உள்ளபடியே அந்தந்தப் பகுதிகளில் உள்ள நிலைமைகளை நாம் அவர்கள் மூலம் தெரிந்து, குறைகளைச் சொல்வதற்கு வாய்ப்பு இருக்கும். பஞ்சாயத்துக்களைப் பொறுத்தவரையில், இன்றைக்கு விவசாயம், கல்வி போன்றவைகளை எல்லாம் பிரித்து எடுத்து விட்டோம். மொத்தத்தில் இப்பொழுது செயர்மேனுக்கு செயரில் உட்கார்கிற 'பவ்வர்' மட்டும் தான் இருக்கிறது. இப்படி இருந்த இலாகாவை எல்லாம் பிரித்ததன் மூலம் அவர்களுக்கு இருந்த மரியாதை இனி இருக்குமோ என்னவோ. ஆனால் எப்படி இருந்தாலும் மக்கள் பிரதிநிதிகள் இந்த அமைப்புகளில் இடம் பெறுவதன் மூலம் இப்போது நடைபெறுகின்ற பல தவறுகளைத் தவிர்க்க வாய்ப்பிருக்கிறது. உள்ளாட்சி அமைப்புகளைப் பொறுத்த வரையில், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஒரு முழுமையான சட்டமாக இதனைக் கொண்டு வருவார்கள் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது. இன்றைக்கு பஞ்சாயத்து போர்டு, பஞ்சாயத்து யூனியன் கவுன்சில், டிஸ்ட்ரிக்ட் டெவலெப்மென்ட் கவுன்சில் என்றெல்லாம் வரும்போது, நான் ஒன்றைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். இப்போது மாவட்ட வளர்ச்சி கவுன்சில்கள் மட்டும் தான் இருக்கின்றன, இங்கே ஏதாவது கோரிக்கை வைக்கப்பட்டால், அவர்கள் அங்கேயும் இங்கேயும் அவற்றை அனுப்புகிறார்கள். வேறு ஒன்றும் நடப்பதில்லை. மேலும் * டி.டி.சி. கோரம் இல்லாமலே கூடாமல் போய்விடுவதும் உண்டு. அதற்கு போதுமான அதிகாரம் வழங்கப்படவில்லை. டி.டி.சி.க்கு அதிகமான அதிகாரம் கொடுப்பதன் மூலம் அதிகாரத்தைப் பரவலாக்கலாம். ஆந்திராவில் அந்த வகையில் அதிகாரம் கொடுத்து டி.டி.சி.யை நல்ல முறையில் செயல்பட வைக்கிறார்கள். ஆனால் நம்மைப் பொறுத்தவரையில், தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், மேலவை உறுப்பினர்கள் ஆகியோர் இருக்கிறோம். சேர்மன் எங்கே உட்காருவது என்று தெரியவில்லை. அங்கே உட்கார்ந்திருக்கிற அதிகாரியைப் பார்த்துத்தான் 'தலைவர் அவர்களே' என்று சொல்லக் கூடிய நிலைமை இருக்கிறது.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** டிஸ்டிரிக்ட் டெவலப்மெண்ட் கவுன்சில் கூட்டங்கள் சமயங்களில் கோரம் இல்லாமல் நடக்காமல் போய்விடுகிறது. சில சமயங்களில் * என்று உறுப்பினர் சொல்வது சரியானதாகத்

---

* தலைவரின் ஆணைப்படி நீக்கப்பட்டது.

தெரியவில்லை. ஆகவே * என்ற வார்த்தையை உறுப்பினருடைய சம்மதத்தோடு அவைக்குறிப்பிலிருந்து நீக்கிவிடுகிறேன். மேலவை 'கோரம்' இல்லாமல் கூடாமல் இருந்தது கிடையாது. அதுமாதிரி வார்த்தை இருந்தால் அந்த வார்த்தையை எடுத்துவிடுகிறேன்.

**திரு. க. சுப்பு :** சில நேரங்களில் 'கோரம்' இல்லாமல் மாவட்ட வளர்ச்சிக் குழுக் கூட்டத்தை, ஒத்தி வைக்க நேர்ந்திருக்கிறது என்ற நிலைமையைச் சொன்னேன். அதிகாரிகள் வருகிறார்கள். மற்றவர்கள் வருவதில்லை. ஏனென்றால் பஞ்சாயத்து யூனியன்களுக்கு சேர்மன் இல்லை. அதிலே கூட நான்-அபிசியல் சேர்மனைப் போடலாம். இன்னும் நல்ல 'ஐடியா' என்னவென்றால், அந்த மாவட்டத்தைச் சேர்ந்த அமைச்சரைக்கூட அந்த மாவட்ட வளர்ச்சிக்குழுக் கூட்டத்தில் சேர்மனாகப் போட்டுவிடலாம். அப்படிப் போட்டால், எல்லாரும் வந்தாவது கலந்து கொள்வார்கள். பிரச்சினைகளாவது கிட்டத்தட்ட தீர்க்கப்படும். அப்படி அமைச்சரையே தலைவராகப் போடக்கூடிய சட்டத் திருத்தம் கொண்டுவந்தால், அவர்களும் பிராம்ப்ட்டாக வருவார்கள். உறுப்பினர்களும் கட்டாயமாக வருவார்கள். அதனால் பலன் ஏற்படும். நாம் சொல்கிற கோரிக்கைகளுக்கு பதில் ஒழுங்காகக் கிடைக்கும். நம்முடைய வேலைகளைச் சுலபமாக நாம் ஆங்காங்கே முடித்துக்கொள்ளலாம். 25 அமைச்சர்கள் இருக்கிறார்கள். எல்லா அமைச்சர்களுக்கும் தொந்தரவு கொடுப்பதற்காக சென்னைக்கு வந்து அலைவதைவிட, ஒரே ஒரு அமைச்சருக்குத் தொந்தரவு கொடுப்பதால் எதுவும் கெட்டுவிடாது. அதில் தவறும் இல்லை. அந்த மாதிரி அமைச்சர்கள் தலைமையில் டி.டி.சி. கூட்டம் நடக்கலாம். அது நல்லதுதான். அப்படி மாவட்ட வளர்ச்சிக்குழுவுக்கு அதிக வேலை அளிக்கக் கூடிய வாய்ப்பளித்து, வேலை வாங்க வேண்டும். அதுமாதிரி இல்லாவிட்டால், நமது உறுப்பினர் திரு. மீனாட்சிசுந்தரம் சொன்னமாதிரி, நாம் அதிகாரிகள் மேல் தவறு சொல்லவேண்டி வரும். அதன் பிறகு விசாரணை வரும். விசாரணையிலேயே ஐந்தாறு ஆண்டுகள் போய்விடும். அவ்வளவுக்கு விசாரிக்க வேண்டிய விஷயங்கள் இருக்கின்றன. அதில் யாருக்கும் எவ்வித சந்தேகமும் இல்லை. யாருக்குத்தான் பங்கு இல்லை? எல்லோருக்கும் பங்கு இருக்கிறது. ஆளுங் கட்சி, எதிர்க் கட்சி, இல்லாத கட்சி, போன கட்சி என்று எல்லோருக்கும் பங்கு இருக்கிறது. அத்தனை கட்சிக்கும் அதிலே பங்கு இருக்கிறது. ஒருவர் இரண்டு பேர் தப்பு செய்வதால் நாடே அப்படி இருக்கும் என்று நினைக்க வேண்டியதில்லை. அந்த பங்க்ஷனில் டிபெக்ட்

* தலைவரின் ஆணைப்படி நீக்கப்பட்டது.



ஏற்படுவதை மாற்ற ஆலோசனை செய்தால், நான் அதை மனப்பூர்வமாக வரவேற்பேன். அந்த அடிப்படையில் அவர்கள் சொல்வதை ஏற்றுக்கொள்கிறேன்.

இன்னொன்று, எமர்ஜென்சி காலத்தில் அரசு கலைக்கப்பட்டதற்குப் பின்னால்தான் இந்த நிலைமையே தொடர்ந்து வந்துவிட்டது, அதனால்தான் எல்லோருக்கும் இதில் பங்கு இருக்கிறது என்று சொன்னேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. மாணிக்கம் போன்றவர்களுக்கு அந்த வாய்ப்பு இல்லாததால், அவர்களுக்குப் பங்கு இருக்காது என்று நினைக்கிறேன். மற்றவர்களுக்கு, எல்லாக் கட்சிக்காரர்களுக்கும் பங்கு இருக்கிறது.

**திரு. ப. மாணிக்கம் :** துணைத் தலைவர் அவர்களே, எல்லோருக்கும் பங்கு இருக்கிறது என்று திரும்பத் திரும்பச் சொல்வதால், அவர் தனக்குத் தெரிந்த விபரத்தை மறைக்கிறார் என்று கருதுகிறேன். அப்படிக் கலைக்கும் போது, இந்த அவையில் அதற்கான சட்ட முன்வடிவுகளைக் கொண்டுவந்த போதும் சரி, அதிகாரிகளின் பதவிக் காலத்தை நீட்டிக்கும் காலத்திலும் சரி, பல உறுப்பினர்கள் பல கட்சிகளைச் சார்ந்தவர்கள் அதை எதிர்த்திருக்கிறோம், வெளிநடப்பு செய்திருக்கிறோம். எனவே அதிலே எல்லோருக்கும் பங்கிருக்கிறது என்று சொல்வது சரியல்ல.

**திரு. க. சுப்பு :** ஒரு மாநில அரசைக் கலைக்கக்கூடாது என்று ஆளுங் கட்சியில் இருக்கும்போது நாமே நினைக்கிறோம். எதிர்க் கட்சியாகிவிட்டால், கலைத்துவிட்டால் நல்லது என்று நாமே நினைக்கிறோம். அந்த மனப்பான்மை வந்துவிடுகிறது. என்ன காரணம் என்று கேட்டால், நாங்கள் அங்கே இல்லை, அதனால் நினைக்கிறோம் என்று வெளியில் சொல்ல முடியாது, ஆனால் நினைக்கிறோம். நாம் ஆட்சியில் இருக்கும்போது, கலைக்க வேண்டுமென்று நாம் சொல்வதில்லை. அந்த அளவுக்கு நம்மைத் தவிர வேறு யார் இருந்தாலும், கலைக்கலாம் என்று ஒரு நியாய புத்தி வருகிறது. உண்மையைச் சொன்னால், மேற்கு வங்காளத்தில் ஒழுங்காகப் பஞ்சாயத்துத் தேர்தல்களை நடத்திவிட்டார்கள். அதுபோல மற்ற மாநிலங்களிலும் தேர்தல்களை நடத்த வேண்டும்.

அமைச்சர் கொடுத்த குறிப்பில் எனக்கு ஒரே ஒரு சந்தேகம் இருக்கிறது. 1981 ஆம் வருட சென்சஸ் கணக்குகளை எடுத்துத்தான் வார்டுகளைப் பிரிக்க வேண்டும், ரிசர்வேஷன் செய்ய வேண்டுமென்று சொல்லப்படுகிறது. ஆனால் அதை நம்மால் இப்போது செய்ய முடியாது. 1971-வது வருட மக்கள்

தொகையைக் கணக்கில் கொண்டு இந்தத் தேர்தலை நடத்த வேண்டுமென்று சொல்கிறார்கள். அது வரவேற்கத்தக்கதுதான். நேற்று பேரவையில் அமைச்சர் சொன்னதை இன்றையதினம் பத்திரிகைகளில் பார்த்துத் தெரிந்து கொண்டேன். ஓட்டு போடக்கூடிய உரிமை யாருக்குக் கொடுக்க வேண்டுமென்றிருக்கிறது என்றால், 18 வயது உள்ளவர்களுக்குத்தான். அது எப்போது 18 வயது கணக்கு என்றால், 1985 ஆம் ஆண்டு ஜனவரி 1 ஆம் தேதி அன்றுள்ள கணக்குப்படி. அப்படியென்றால், வாக்காளர் பட்டியலை அப்டுடேட்டாக வைத்திருக்கிறோமா ? இப்படி நாம் சொல்வதால், இந்தத் தேர்தல் இந்தக் காரணத்தைக் காட்டி தள்ளி வைக்கப்படக்கூடும். அப்படி தள்ளி வைக்கக் கூடாது. இதைவிட நல்ல யோசனை என்னவென்றால், 18 வயது வந்தவர்களைப் பின்னால் பார்த்துக் கொள்ளலாம். இப்போதிருக்கிற பட்டியலை வைத்து எலெக்ஷன் நடத்திவிடலாம். 18 வயது வந்தவர்களுக்கு வாக்குரிமை கொடுக்க வேண்டுமென்று சொல்வது நல்ல நோக்கம்தான். நான் கூட அதற்காகப் போராடி ஜெயிலுக்குப் போனவன். அப்போதெல்லாம் இதைக் கொண்டுவரவில்லை. இப்போது வந்திருக்கிறது. ஆனால் இப்போது அதை வரவேற்க முடியாமல் இருக்கிறேன். ஏனென்றால் 18 வயதில் இருப்பவர்களை 'சென்சஸ்' எடுக்கும்போது அதனாலேயே காலதாமதம் ஏற்பட்டால், இந்தச் சட்டத்தின் உண்மையான நோக்கமே வேறுமாதிரி திசை திருப்பப் பட்டுவிடும்.

(பிற்பகல் 12-30)

அதனாலே பதினெட்டு வயது என்று வைத்தாகவேண்டும் என்று கஷ்டப்பட வேண்டியதில்லை. மகாராஷ்டிரத்தில் இதுபோல் பதினெட்டு வயது என்று கொண்டு வந்தார்கள். பிறகு அதிலுள்ள சிரமங்களைப் பார்த்து, அதை எடுத்து விட்டார்கள். பதினெட்டு வயது உள்ளவர்களின் பட்டியல் தயாரிப்பதில் நேரமாகிறது. 21 வயது உள்ளவர்களின் பட்டியல், பிறகு 18 வயதுள்ளவர்களின் பட்டியல். இவ்வாறு இரு பட்டியல்கள் இருப்பதால் குழப்பம் அதிகமாகிறது. வேலை அதிகமாகிறது. எனவே முன்பே சட்டமன்றத் தேர்தல்களுக்காகவும், நாடாளுமன்றத் தேர்தலுக்காகவும் உள்ள 21 வயது பட்டியலே பரவாயில்லை. பதினெட்டு வயது என்று போடுவதால், இன்னும் 2, 3 வருடங்கள் போய்விடக் கூடாது. 1985 ஜனவரி 1 அன்று பதினெட்டு வயது அடைந்தவர்கள் என்று இருப்பதால் ஏற்படக்கூடிய கஷ்டங்களைச் சிந்தனை செய்ததால், கூறுகிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதை விலக்கிவிடுவார்கள் என்றால், அது பெரும் உதவியாக இருக்கும் என்று கூறிக் கொள்கிறேன்.





இன்னொன்று, சிலர் வழக்கு மன்றத்திற்குப் போவதற்காகவே, உள்நோக்கத்தோடு, இதை 4 வருஷம் என்று ஆக்கியிருக்கிறார்களோ என்று மாண்புமிகு உறுப்பினர் திரு. மீனாட்சிசுந்தரம் அவர்கள் சொன்னார்கள். யாரும் வழக்கு மன்றத்திற்குப் போக வேண்டாம் என்று நினைத்துத்தான் நாம் இத்திருத்தங்களைச் செய்கிறோம். ஆனால் எத்தனை பேர் போகாமல் இருக்கிறார்கள் ? சில பேருக்கு அதே வேலை. முதலமைச்சர் பதவி ஏற்றது செல்லாது என்று வழக்கு மன்றத்திற்குப் போகிறார்கள். மந்திரியாகப் பிரமாணம் எடுத்தது தவறு, அதற்கு ஒரு வழக்கு. ஜனாதிபதிக்கு ஒரு தந்தி. இவர்கள், வழக்கு போடுவதற்கு என்றே இருக்கிறார்கள். அவர்களுக்கு வேறு வாய்ப்புகள் இல்லை.

திரு. க. மீனாட்சிசுந்தரம்: எதிரே இருப்பவர்கள் மட்டுமல்ல, ஆளும் கட்சியில் இருப்பவர்கள்கூட வழக்குமன்றத்திற்குப் போகிறார்கள். ஆளுங் கட்சியில் உள்ளவர்கள் சொல்லி அனுப்பி, வழக்குமன்றத்திற்குப் போகிறார்கள்.

**திரு. க. சுப்பு:** நாம் சொல்லி அனுப்புவது வேறு, நாமே போவது என்பது வேறு. சில பேர் எதற்கெடுத்தாலும் வழக்கு மன்றத்திற்குப் போகிறார்கள்.

கவர்னரை ராஜினாமா செய் என்று ஒரு தந்தி. ஜனாதிபதிக்கு 'டிஸ்மிஸ் செய்' என்று ஒரு தந்தி. தபால் இலாகாவிற்கு லாபம்தான். நான் அதை வரவேற்கிறேன். இருந்தாலும் இவர்களுக்கு வழக்கு மன்றம் போவது என்பது ஒரு மேனியாவாக இருக்கிறது. இவர்களைத் திருத்த முடியாது. எப்படித் திருத்த முடியும் என்று நினைக்கிறீர்கள் ? திருத்த முடியாது. அவர்கள் வழக்கு மன்றத்திற்குத்தான் போக வேண்டும்.

நான்கு பிளஸ் மூன்று ஏழு என்றால் தப்பு. 3 பிளஸ் 4, ஏழு என்றால் தான் சரி என்பார்கள். அதற்குக் கூட வழக்கு மன்றத்திற்குப் போகலாம். நான் கூட கபாலீசுவரர் கோவில் எனக்குத்தான் சொந்தம் என்று சொல்லலாம், வழக்கை ஃபைல் பண்ணுவதில் கஷ்டம் கிடையாது.

**திரு. க. மீனாட்சிசுந்தரம்:** 4 பிளஸ் 3, ஏழு என்று சொன்னால் வழக்கு மன்றத்திற்குப் போக மாட்டார்கள். ஏழு இல்லை என்று சொல்லும்போது தான் வழக்கு மன்றத்திற்குப் போகிறார்கள்.

**திரு. க. சுப்பு :** போகலாம். ஃபைல் பண்ணுகிற ஸ்டேஜ் வருகிறவரை போகலாம். ஆனால் அதை எடுத்துக்கொள்ளலாமா கூடாதா என்று அடுதத ஸ்டேஜ் வருகிறபோது, என்ன விவரம் கெட்ட ஆளாக இருக்கிறாரே என்று அதைத் தூக்கி எறிந்துவிடுவார்கள். இப்படிப் பல பேர் வழக்கு மன்றத் திற்குப் போகிறார்கள்.

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** போனவர்கள் எல்லாம் விவரம் கெட்ட ஆளும் அல்ல, எடுத்துச் சொல்லிக் கொண்டிருப்பவர்களும் விவரம் தெரிந்தவர் அல்ல என்றும் சொல்லக்கூடும் அல்லவா !

**திரு. க. சுப்பு :** இவ்வாறு பலர் அட்மிஷன் ஸ்டேஜிலே நிராகரிக்கப்படுகிற வழக்குகளைப் போட்டுக்கொண்டே இருக்கிறார்கள். அப்படி வழக்குகளைப் போட்டுவிட்டு, டி.வி.யில் சொல்லவில்லையே, ரேடியோவில் சொல்லவில்லையே என்று கோபம் வேறு அடைகிறார்கள். அவர்கள் விவரம் அறிந்தவர்கள். அவ்வாறு செய்ய மாட்டார்கள். அதனாலே . . .

**திரு. க. மீனாட்சிசுந்தரம்:** டி.வி. மேலேயும், ரேடியோ மேலேயும் இந்தத் தரப்பில் மட்டுமல்ல, அந்தத் தரப்பிலும்கூட கோபம் ஏற்படுகிறது . . . .

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** உறுப்பினர் அவர்களைப் பேசவிட வேண்டும். ஒவ்வொரு நிமிஷமும் எழுந்துகொண்டிருந்தால், இரண்டு பேருமே பேச முடியாது.

**திரு. க. சுப்பு :** அட்மிஷன் ஸ்டேஜில் 'அட்மிட்' ஆகவில்லையானால், அப்படிப்பட்ட ஒரு வழக்கை டி.வி.-இல் சொல்லவில்லை, ரேடியோவில் சொல்ல வில்லை என்று அதை ஒரு அரசியலாக்கிப் பேசிக்கொண்டிருந்தார்கள். உறுப் பினர் அவர்களுக்குத் தெரியும். அவர்கள் என்ன, அமெரிக்காவிலா இருக்கி றார்கள் ? அப்படியெல்லாம் இங்கே பேசப்பட்டது. அதையெல்லாம் திருத்த முடியாது. எனவே இப்போது நான்கு வருஷங்கள் என்று கொண்டு வந்திருப்பதை ஏதோ உள்நோக்கத்தோடு கொண்டு வந்திருக்கிறார்கள் என்று நினைக்க வேண்டாம். பொதுவாகச் சொல்கிறேன். அமெரிக்க ஜனாதி பதிக்குச் சமமாக ஊராட்சித் தலைவர்களையும், ஊராட்சி ஒன்றியத் தலைவர் களையும் உயர்த்தும் நோக்கத்தோடு இவ்வாறு கொண்டுவரப்பட்டிருக்கிறது என்று கூறி, அப்படிப்பட்ட சட்ட முன்வடிவை வரவேற்று அமைகிறேன்.

**திரு. எம். பி. சுப்பிரமணியம்:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே மிக அவசரமாகக் கொண்டு வரப்பட்டிருக்கின்ற இந்தச் சட்ட முன்வடிவை நான் பொதுவாக வரவேற்கின்றேன். ஏற்கெனவே இருந்த சட்ட முன்வடிவில், ஆதிதிராவிட மக்களும், பெண்களும் தலைவர்களாக வரக்கூடிய வாய்ப்பு



இருந்து, அதை எதிர்த்து பலர் நீதிமன்றத்திற்குச் சென்று அந்தச் சட்ட முன் வடிவை அமல்படுத்த முடியாத நிலையை ஏற்படுத்திய காரணத்தால், இந்தச் சட்ட முன்வடிவு கொண்டுவரப்பட்டிருக்கிறது என்று சொன்னார்கள். அதுவும்கூட, இது நிறைவேறிய பிறகு, தேர்தல் நடந்து முடிந்த பிறகு, மீண்டும் காம்பிரிஹென்சிவ் லெஜிஸ்லேஷன் கொண்டுவர அரசாங்கம் யோசனை செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இதற்குமுன் 1970 ஆம் ஆண்டுதான் தேர்தல் நடைபெற்றது என்று நினைக் கிறேன். பிறகு நடைபெறவில்லை. இனிமேல் அமையப்போகும் ஊராட்சி மன்றங்களுக்கும், ஊராட்சி ஒன்றியங்களுக்கும் அசோக் மேத்தா கமிட்டி சிபாரிசு செய்துள்ள கூடுதல் அதிகாரங்களைக் கொடுத்தால், சிறப்பாக இருக்கும் என்று குறிப்பிட விரும்புகிறேன்.

(பிற்பகல் 12-35)

இருக்கின்ற அதிகாரங்களைப் பறிப்பது என்பது தேவையற்றது என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன். இந்தக் கட்டத்திலே அவைகளுக்கு வழிவகை செய்ய முடியாது என்று சொன்னாலும், அடுத்து மிக விரைவாகக் கொண்டு வரப்பட இருக்கும் சட்டத்திலே இப்படிச் செய்யக் கூடாது என்பதை அரசாங்கம் பரிசீலிப்பார்களேயானால், அது வரவேற்கத்தக்கதாக இருக்கும் என்பதை நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். ஆனால் இந்தச் சட்டத் திருத்தத்தில் முக்கியமாக, இங்கே நண்பர்கள் குறிப்பிட்டதுபோல, ஆரம்பத் திலே 12 மெம்பர்களுக்குக் குறைவாக உள்ள பஞ்சாயத்துக்களுக்கு ஒரு பெண் உறுப்பினரும், ஒரு ஆதிதிராவிடர் அல்லது பழங்குடி மக்களும் நியமனம் செய்வதற்குரிய வாய்ப்பும் கொடுக்கப்பட்டு இருந்ததை இப்போது நிறைவேற்ற இருக்கிறார்கள் என்பதை நான் இங்கே உணர்கிறேன். பஞ்சாயத்து யூனியன் களில் போதிய பெண் உறுப்பினர்களோ, ஆதி திராவிட மக்களோ இல்லை என்று சொன்னால், 3 பெண்களையும், 3 ஆதி திராவிடர்களையும் நியமனம் செய்வதற்கு ஏற்கெனவே சட்டத்தில் இடம் இருக்கிறது. ஆனால் இப்போது இந்தத் திருத்தத்தின் மூலமாக அது சரி செய்யப்பட்டிருக்கிறது என்பதைக் கூறிக்கொள்கிறேன். ஆனால் ஒரு மாற்றம் என்னவென்று சொன்னால், இங்கே கோ-ஆப்ஷன் என்பதிலே வேண்டுமானால், ஏற்கெனவே உறுப்பினர்கள் இருப்பார்களேயானால், கோ-ஆப்ட் செய்ய வேண்டிய அவசியம் இல்லாமல் இருக்கலாம். ஆனால் மாவட்ட ஆட்சித் தலைவருக்கு உறுதியாக நியமனம் செய்வதற்குரிய வழி வகைகள் இருக்கின்றன என்பதை நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். 'may' என்று போட்டு இருந்தாலும் உறுதியாக மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் நியமித்தால் . . .

2. அறிவிப்புகள்—தொடர்ச்சி.

**(5) பார்வையாளர் மாடங்களில் அமர்ந்துள்ளவர்கள் நடந்துகொள்ளவேண்டிய முறை பற்றி.**

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** சிறிது நேரத்திற்கு முன்பு இந்தப் புறக் கூடங்களில் பார்வையாளர் மாடங்களில் இருப்பவர்கள் அவையில் உள்ள உறுப்பினர்களுக்கு வணக்கம் செய்வதோ, அவையில் உள்ள உறுப்பினர்கள் அவர்களுக்கு வணக்கம் செய்வதோ அவையினுடைய மரபாகாது என்று தெரிவித்திருக்கிறேன். தற்சமயம் அந்த மாடங்களிலே இருப்பவர்கள், அவையில் உள்ளவர்களோடு பேசுவதும், அவையில் உள்ளவர்கள் அவர்களோடு பேசுவதுமாக இருக்கிறார்கள். இது தவறு என்பதையும், அல்லது மரபுக்கு உரியது அல்ல என்பதையும் மீண்டும் நான் வலியுறுத்துகிறேன்.

6. அரசின் சட்ட முன்வடிவுகள்.

**(1) 1985-ம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 22/1985) —தொடர்ச்சி.**

**திரு. எம். பி. சுப்பிரமணியம் :** ஆகவே மாவட்ட ஆட்சித் தலைவர் நியமனம் என்பது கண்டிப்பாக நடைபெறக்கூடிய ஒன்று. கோ-ஆப்ஷனில் வேண்டுமானால், உறுதியாக உரிய பெண் உறுப்பினர்களோ, ஆதி திராவிடர்களோ இருப்பார்களேயானால், கோ-ஆப்ஷன் செய்ய வேண்டிய அவசியம் இல்லாமல் இருக்கலாம். ஆனால் இந்தச் சட்டத்தின்படி—நான் அறிந்த விதியின்படி—கலெக்டர் அவர்கள் உறுதியாக ஒரு உறுப்பினரை நியமிப்பார்கள் என்றுதான் நான் நினைக்கிறேன். அதற்குரிய விளக்கங்களை என்னால் தெளிவாகப் புரிந்துகொள்ள முடியவில்லை. கோ-ஆப்ஷனிலே மூன்று அல்லது நான்கு உறுப்பினர்கள் என்று போட்டிருப்பார்களேயானால், ஏற்கெனவே உள்ள பணிகளையும் நாம் தொடருகிறோம் என்று சொல்லலாம். மாவட்ட ஆட்சித் தலைவருக்கு ஏன் இதைக் கொடுக்க வேண்டுமென்பதற்குரிய விளக்கங்களை அமைச்சர் அவர்கள் தொடக்கத்திலே குறிப்பிட்டிருந்தால், சரி என்றிருந்தால் ஆதரித்திருக்கலாம்; சரி இல்லை என்றிருந்தால் ஆட்சேபித்திருக்கலாம். அதை கடைசியிலே ஒரு ஆச்சரியமாகச் சொல்லலாம் என்று அமைச்சர் அவர்கள் வைத்திருக்கிறார்களோ என்னவோ, எனக்குத் தெரியவில்லை. ஆனால் ஒன்றை நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். அதற்கு ஒரு தகுதியைக் குறிப்பிட்டிருக்கிறார்கள். எனவே தகுதி என்று சொன்னால்



"Provided also that no person shall be nominated under this sub-section unless he has aptitude for rural development and possesses such other qualifications as may be prescribed".

இது எதற்குத் தேவை என்று புரிந்துகொள்ள முடியவில்லை. யாரை வேண்டுமானாலும் 3 பேரை கோ-ஆப்ட் செய்யலாமென்று போட்டுவிட்டு, கலெக்டர் நியமனம் செய்வதற்கு மட்டும் இப்படி ஒரு விதியைச் சேர்த்திருக்கிறார்கள் என்று நினைக்கிறேன். நீங்கள் வேண்டுமானால் எப்படி வேண்டுமானாலும் விமர்சனம் செய்துகொள்ளலாம். அது வேறு விஷயம். தேவையில்லாத ஒரு புரோவிஸோ ஏன் போடப்பட்டிருக்கிறது என்பதைத்தான் குறிப்பிட விரும்புகிறேன்.

இரண்டாவதாக, நான் இங்கே குறிப்பிட விரும்புவது—நண்பர் திரு. சுப்பு அவர்கள்கூட சொன்னார்கள்—1971 ஆம் ஆண்டு சென்சஸ் அடிப்படையில் வார்டுகள் பிரிக்கப்படுமா என்பதற்கு இதிலே விளக்கம் இல்லை. முனிசிபாலிட்டி அமென்ட்மென்ட் ஆக்டிலே இருக்கிறது. ஆனால் பஞ்சாயத்து ஆக்டிலே இல்லை. எந்த சென்சஸ்படி வார்டுகள் பிரிக்கப்பட வேண்டுமென்பதற்கு விளக்கம் இருப்பதாக—எனக்குத் தெரிந்த வரையிலே—இல்லை. நான் யூகிக்கிறேன், 1971 சென்சஸ்படிதான் வார்டுகள் பிரிக்கப்படலாம். 1971 சென்சஸ்படி வார்டுகள் பிரிக்கப்படலாமே தவிர, வாக்காளர் பட்டியல் அடிப்படையில் திருத்தப்பட வேண்டுமென்ற அவசியம் இல்லை. ஆகவே, 18 வயது இப்போது நிரம்பியவர்கள் வாக்காளர் பட்டியலில் இடம் பெற இருக்கிறார்கள் என்பதைத்தான் நான் புரிந்துகொண்டிருக்கிறேன்.

இறுதியாக, இந்த மசோதாவைப்பற்றி நான் இங்கே குறிப்பிட விரும்புவது, பெண்களுக்கும், ஆதி திராவிடர்களுக்கும் கூடுதலான பிரதிநிதித்துவம் கொடுக்கப்பட்டிருப்பதை நான் வரவேற்கிறேன். ஐந்து அல்லது 20-க்கு மேற்பட்ட உறுப்பினர்கள் இருப்பார்களேயானால், 5 பிளஸ் 2, 7 பெண்களும், 7 ஆதி திராவிடர்களும் இடம்பெறுவதற்கு வாய்ப்பு இருந்தால், அது வரவேற்கத்தக்கது. இந்தச் சட்டம் நிறைவேற்றப்பட்ட பிறகு, உறுதியாக இந்த அரசு இந்தத் தேர்தல்களை நடத்துவதிலே கொஞ்சம் கூட தயக்கம் காட்டாது என்பதை நான் பரிபூரணமாக நம்புகிறேன். காரணம் என்னவென்று சொன்னால், அமைச்சர் அவர்கள் பொறுப்பேற்ற சிறிது நாட்களுக்குள்ளாகவே, தேர்தல் நடக்காத காரணத்தால் எவ்வளவு தவறுகள் நடைபெற்றிருக்கின்றன என்பதை அமைச்சர் அவர்களே நேரடியாகத் தெரிந்து கொண்டிருக்கிற காரணத்தால், அதற்கு ஒரு விசாரணை வைக்க வேண்டுமென்ற அளவுக்கு வளர்ந்திருக்கிறது என்ற காரணத்தாலே, இந்தத் தேர்தலை கட்டாயமாக நடத்த வேண்டுமென்று கூறி, என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

[1985 ஏப்ரல் 12

(பிற்பகல் 12-40)

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, உள்ளாட்சித் தேர்தல்களை எப்படியும் நடத்தியே ஆக வேண்டும் என்று எந்த அளவுக்கு அரசு உறுதியோடு இருக்கிறதோ அந்த அளவுக்கு அனைத்து மாண்புமிகு உறுப்பினர்களும் தங்களுடைய உறுதியைக் காட்டியதற்காக அரசு சார்பில் நான் நன்றியைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பொதுவாக இங்கே கொண்டு வரப்பட்டிருக்கிற இந்தச் சட்ட முன்வடிவை அனைவருமே வரவேற்றிருக்கிறார்கள் என்று நான் கருதுகிறேன். அதற்காகவும் நான் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். நீதிமன்றத்திற்குச் சென்றால், தேர்தல்கள் நின்று விடுமோ என்ற அச்சத்தையும் தெரிவித்தார்கள். நீதிமன்றத்திற்குப் போவதற்கு வாய்ப்பில்லாமல் எப்படியெல்லாம் செய்ய முடியுமோ அப்படித்தான் செய்திருக்கிறோம். நீதிமன்றத்திற்குப் போவதற்குரிய எண்ணத்தை நாங்கள் தூண்டவில்லை. நிச்சயமாக அப்படிப்பட்ட எண்ணம் இந்த அரசுக்கு இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

உள்ளாட்சி மன்றங்களுக்கான தேர்தல்களை கட்டாயமாக நடத்தியே ஆக வேண்டும் என்பதற்குப் பல்வேறு காரணங்கள் இருந்தாலும், பொதுவாக எல்லோரும் ஒப்புக்கொள்ளுகிற காரணம் என்னவென்றால், தேர்ந்தெடுக்கப்பட்ட அமைப்புகள் கீழ்மட்டத்தில் இல்லாது போனதால் பல தவறுகள் நடைபெறுகின்றன என்ற சந்தேகம் எல்லோருக்கும் எற்பட்டிருப்பதுதான். எல்லா அதிகாரிகளும் தவறு செய்கிறார்கள் என்று நான் ஒப்புக்கொள்ள மாட்டேன். ஆனால் அதே நேரத்தில் தவறு செய்யக் கூடியவர்களும் இருக்கிறார்கள் என்பதை ஒப்புக்கொள்ளவும் மறுக்கவில்லை. அந்த அடிப்படையில்தான் கண்காணிப்புக் குழு அமைப்பது என்று நான் சொன்னதை இங்கே விளக்கிச் சொல்வது நல்லது என்று கருதுகிறேன்.

கடந்த 5 ஆண்டுகளில் ஊராட்சி ஒன்றியங்களிலும் நகராட்சிகளிலும் என்னென்ன வேலைகள் நடைபெற்றிருக்கின்றன, என்னென்ன வளர்ச்சித் திட்டங்கள் நடைபெற்றிருக்கின்றன, இதில் எந்தெந்தத் திட்டத்திற்கு எவ்வளவு நிதி ஒதுக்கப்பட்டு செலவழிக்கப்பட்டிருக்கிறது என்பது போன்ற முழுமையான விவரங்களையெல்லாம் ஒவ்வொரு மாவட்டத்தின் ஆட்சித் தலைவரும் பெற வேண்டும் என்று சுற்றறிக்கை அனுப்பப்பட்டிருக்கிறது. இப்போதே சில மாவட்டத் தலைவர்கள் பெற்றுக் கொண்டிருக்கிறார்கள்.



அந்த விவரங்கள் எல்லாம் வந்த பிறகு, அந்த வேலைகள் எல்லாம் முறையாக நடைபெற்றிருக்கின்றனவா இல்லையா என்று பரிசீலித்துப் பார்க்க ஒரு குழு அமைக்கலாம் என்றுதான் நான் தெரிவித்திருந்தேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இப்படிச் செய்ய வேண்டும் என்று எனக்கு ஆணையிட்டிருக்கிறார்கள். எனவே அந்த ஆணைப்படி இந்த சுற்றறிக்கையை அனுப்பி இந்த வேலைகள் எல்லாம் நடைபெற்றிருக்கின்றனவா இல்லையா என்று பார்க்க திட்டமிட்டிருக்கிறோம். அந்தக் கண்காணிப்புக் குழுவில் அதிகாரிகள் மட்டுமே இருப்பார்கள். காரணம், அதில் தனிப்பட்டவர்களைப் போட்டால், ஏதோ அரசியல் நோக்கத்தோடு செய்தோமோ என்ற எண்ணம் வந்துவிடக் கூடாது என்றுதான் அதைத் தவிர்க்க விரும்பினோம்.

ஊராட்சி ஒன்றியங்களிலும், நகராட்சிகளிலும் ஏற்கெனவே ஆலோசனைக் குழுக்கள் நியமிக்கப்பட்டு, அவை சில இடங்களில் இயங்கிக் கொண்டிருக்கின்றன. சில இடங்களில் இயங்கவில்லை. டிஃபங்க்ட் ஆகிவிட்டன. தேர்தல் அறிவிக்கப்பட்டிருப்பதால், இன்னொன்றையும் இங்கே இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். அந்தக் குழுக்களை வைத்துக் கொண்டு தேர்தலை நடத்தினால், அதனால் கோளாறு வந்துவிடும் என்று சந்தேகம் வந்து, அதன் காரணமாக அந்தக் குழுக்களையெல்லாம் கலைத்து விடுவது பற்றி பரிசீலித்துக் கொண்டிருக்கிறோம், யோசித்து வருகிறோம். எனவே அவைகளைக் கலைத்து விடுவோம். அதையும் அரசியல் நோக்கத்தோடு செய்யவில்லை என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

குடிநீர்ப் பிரச்சினை பற்றியெல்லாம் இங்கே மாண்புமிகு உறுப்பினர் திரு. லெட்சுமிகாந்தன் அவர்கள் குறிப்பிட்டார்கள். பின்னாலே அதைப் பற்றிப் பேசலாம் என்று கருதுகிறேன். இந்த மசோதாவைப் பொறுத்த மட்டில், இப்போது பதில் சொல்வது நல்லது என்று கருதுகிறேன். வாலாஜாபேட்டையை மாநகராட்சியாக்க வேண்டும் என்று கேட்டார்கள். அது முடியாத காரியம். அது நெடுங்காலமாக நகராட்சியாக இருந்தாலும்கூட, அது மிகச் சிறிய நகராட்சியாக இருக்கிறது. அதனுடைய வருவாயே குன்றி க்ஷீணித்துப் போய்விட்டது. எனவே அதை மாநகராட்சியாக ஆக்க எந்த வாய்ப்புமில்லை என்பதைத் திரு. அனகாபுத்தூர் இராமலிங்கம் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. சி. இராமலிங்கம்:** இராணிப்பேட்டை நகராட்சி. ஆற்காடு நகராட்சி எல்லாம் இருக்கிறது. இவைகளையெல்லாம் இணைத்து ஒரு மாநகராட்சியாக . . . . .

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** உறுப்பினர் திரு. இராமலிங்கம் அவர்கள் அமர வேண்டும். அமைச்சர் yield செய்யாதபோது உறுப்பினர் எழுந்து எந்தக் கருத்தையும் சொல்ல முடியாது . . .

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** பல அமைச்சர்கள் தேர்தல் நடக்கும் என்று அறிவிப்புகளைக் கொடுத்தார்கள் என்று மாண்புமிகு உறுப்பினர் திரு. மீனாட்சிசுந்தரம் அவர்கள் தெரிவித்தார்கள். அமைச்சர்கள் அறிவித்தது என்னவோ உண்மைதான். அவர்களும் நல்ல எண்ணத்தோடுதான் அறிவித்தார்கள். ஆனால் நீதிமன்றம் தடை விதித்தால், தேர்தல் நடக்காமல்தான் போகும். நீதிமன்றத்திற்குத் தலை வணங்கித்தான் ஆக வேண்டும். வேறு வழியே இல்லை. நீதிமன்றம் குறுக்கிட்ட காரணத்தால்தான் அமைச்சர்களின் உறுதிமொழி நிறைவேற்றப்படாமல் போய்விட்டதே தவிர வேறொன்றுமில்லை. நல்ல உள்ள உறுதியோடு தேர்தலை நடத்த வேண்டுமென்றுதான் அவர்களும் அறிவித்தார்கள். நானும் அப்படித்தான் செய்திருக்கிறேன். நீதிமன்றத்திற்குப் போக வழியில்லாமல் அதிகாரிகளையெல்லாம் கலந்து ஆலோசனை செய்துதான் இந்தச் சட்டத் திருத்த முன்வடிவைக் கொண்டு வந்திருக்கிறோம். இதற்கு மேலும் நீதிமன்றம் தடை விதிக்குமானால், அது காலத்தைத் தாண்டிச் செய்கிற ஒன்று. நாம் யாரும் எதிர்பார்க்க முடியாத ஒன்று.

(பிற்பகல் 12-45)

அனைத்துத் தரப்பினர்களையும் நான் வேண்டிக் கேட்டுக்கொள்வது—நீதிமன்றத்திற்கு யாரும் போகமாட்டார்கள் என்று கருதுகிறேன்—நீதிமன்றத்திற்குப் போகிறவர்களுக்கு உதவியாக இருந்துவிட வேண்டாம் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். தேர்தலை நடத்த வேண்டும் என்பதுதான் குறிக்கோளாக இருக்க வேண்டும். நான்காண்டுகளாகக் குறைத்திருப்பது உள் நோக்கம் கொண்டதல்ல. எந்த உள்நோக்கத்தோடும் நான்காண்டுகளாகக் குறைக்கவில்லை. நான்காண்டுகள் ஆன பிறகு, பிடிக்காதவர்கள் வந்தால் தேர்தலை நடத்த வேண்டாம் என்றோ, பொதுத் தேர்தல் நடக்கும்போது இந்தத் தேர்தலை நடத்த வேண்டாம் என்றோ நாங்கள் செய்யவில்லை. அப்படிப்பட்ட எண்ணம் எங்களுக்கு இருக்குமானால், கட்சி சார்பற்ற முறையில் இந்தத் தேர்தலை நடத்த வேண்டிய அவசியமில்லை. எங்கள் கட்சியைச் சேர்ந்தவர்களையும், கூட்டாகச் சேர்ந்துள்ள காங்கிரஸ் கட்சியையும் வைத்துக் கொண்டே பெரும்பான்மை இடங்களைப் பிடித்துவிட முடியும். ஆனால் வளர்ச்சிப் பணிகள் கிராமப்புறங்களில் நடக்கும்போது, அரசியல் கட்சிகளின் காரணமாக அப்பணிகள் தடைபட்டு விடக்கூடாது, அரசியல் கட்சிகள் அங்கே



போவதால் கிராம வளர்ச்சிப் பணிகள் குன்றி விடக்கூடாது. அரசியல் காழ்ப்புணர்ச்சிகள் காரணமாக தடைப்பட்டுவிடக் கூடாது என்ற பரந்த மனப்பான்மையோடு அரசியல் கட்சிகள் போட்டியிடத் தேவையில்லை என்ற முடிவை முதலமைச்சர் அவர்கள் எடுத்தார்கள். அப்படி அரசியல் கட்சிகள் போட்டியிடத் தேவையில்லை என்று முடிவெடுத்த பிறகு, அதிலே உள் நோக்கம் இருக்க நியாயமில்லை.

12 உறுப்பினர்களுக்கு ஒரு உறுப்பினர் என்று இருப்பதை இரண்டு, இரண்டு உறுப்பினர்கள் என்று ஏன் மாற்றக்கூடாது என்று மாண்புமிகு உறுப்பினர் திரு. சுப்பு அவர்கள் கேட்டார்கள். அதற்கு விளக்கம் தர விரும்புகிறேன். மக்கள் ஆட்சி முறையில் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களை விட இணைத்துக்கொள்கிற உறுப்பினர்களின் எண்ணிக்கை அதிகமாகிவிடக் கூடாது. அப்படி ஆகிவிட்டால், அது ஜனநாயகத்தைக் குலைப்பதாக முடிந்துவிடும். உதாரணத்திற்கு ஒன்றைத் தெரிவிக்கிறேன். கோவை மாவட்டத்தில் பேரூர் என்று ஒரு ஊராட்சி ஒன்றியம் இருக்கிறது. அந்த ஊராட்சி ஒன்றிய உறுப்பினர்களின் எண்ணிக்கை நான்கு. நான்கு ஊராட்சிகளைக் கொண்ட ஊராட்சி ஒன்றியமாக இருப்பதால், அங்கே நான்கு உறுப்பினர்கள்தான். ஏற்கெனவே இருந்த சட்டத்தின்படி, இந்த நான்கு பேர் கொண்ட ஊராட்சி ஒன்றியத்தில் மூன்று தாழ்த்தப்பட்ட உறுப்பினர்கள், மூன்று பெண்கள் ஆகியவர்களை இணைக்கலாம் என்று இருந்தது. அதன்படி பார்த்தால், இந்த மூன்றும் மூன்றும் சேர்த்து ஆறு, அதோடு நான்கு உறுப்பினர்களையும் சேர்த்து பத்து என்று வரும்போது, இணைத்துக் கொள்ளப்பட்ட உறுப்பினர்களின் எண்ணிக்கை தேர்ந்தெடுக்கப்பட்டவர்களின் எண்ணிக்கையைவிட அதிகமாகிறது. இப்படி தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களின் எண்ணிக்கையைவிட, இணைத்துக் கொள்பவர்கள், நியமனம் செய்பவர்களின் எண்ணிக்கை அதிகமாகிவிடக்கூடாது என்பதற்காகத்தான் இப்படிக் குறைத்து சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறோம். வேறு எந்த கெட்ட நோக்கமும் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். மாவட்ட ஆட்சித் தலைவர் ஒருவரை நியமிப்பதால் பெரிய பாதகம் ஏற்பட்டு விடாது. ஒரு தாழ்த்தப்பட்ட குடிமகனை நியமிப்பதால் பெரிய பாதகம் ஏற்பட்டுவிடும் என்று அரசு கருதவில்லை. சேவை மனப்பான்மை உள்ளவர்கள் தேர்தலில் வராமல் போக முடியும். அப்படிப்பட்டவர்களைக் கொண்டு வந்து வைக்க வாய்ப்பாக இதை வைத்துக்கொள்ளலாம் என்றுதான் இந்த அதிகாரம் அதிகாரிகளிடம் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஏன் கோ-ஆப்ட் செய்து கொள்ளக்கூடாது என்று கேட்டார்கள். தேர்தல் முறையில் கொண்டு போகும்போது, அப்படிப்பட்டவர்கள் வரக்கூடிய வாய்ப்பு அற்றுப் போகும்;

பல பேருக்கு வாய்ப்புகள் இருக்க வேண்டும் என்பதற்காகத்தான் இந்த வாய்க்காலை வைத்திருக்கிறோம். இதுவும் அரசியல் நோக்கம், உள்நோக்கம் கொண்டதல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

சாலைகள் போடாமல் போட்டதாகக் கணக்குக் காட்டியவர்கள் மீது நீதி விசாரணை வேண்டும் என்று கேட்டார்கள். விசாரணை வைக்கப் போகிறோம். தகவல் சேகரிக்கும்படி அரசு அதிகாரிகளுக்கு ஆணை பிறப்பிக்கப் பட்டிருக்கிறது. அது வந்ததற்குப் பிறகு, நிச்சயமாக அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

1—1—1985 அன்று 18 வயது ஆனவர்கள் வாக்காளர்களாகச் சேர வாய்ப்பு உண்டா என்று கேட்டார்கள். அதற்கு அரசு வழிவகை செய்திருக்கிறது. இப்போதுள்ள பட்டியல் முழுமையான முறையில் இருக்க வேண்டும் என்பதற்காகத்தான் 'சம்மரி ரிவிஷன்' செய்ய வேண்டும் என்று ஆணை பிறப்பித்திருக்கிறோம். அதற்கும் கால அட்டவணை போட்டு நேற்றைய தினம் பேரவையில் அறிவித்தேன். இங்கேயும் அறிவிக்கிறேன்.

டிராப்ட் ரோல்ஸ்—இருக்கின்ற பட்டியலைத் தயாரிப்பது—15—5—1985 அன்று தயாரிக்கப்படும்.

டிராப்ட் ரோல்ஸ் பப்ளிகேஷன்—16—5—1985 அன்று அதாவது அடுத்த நாள் வெளியிடப்படும்.

அதற்கு மேல் 17—5—1985 முதல் 31—5—1985 வரையில் சேர்ப்பவர்கள், நீக்குபவர்கள், ஆட்சேபம் தெரிவிப்பவர்களுக்குக் காலம் அளிக்கப்படுகிறது. யார் வேண்டுமானாலும், 18 வயது நிரம்பியவர்களைச் சேர்த்துக் கொள்ளலாம். செட்டில்மென்ட் ஆப் கிளெய்ம்ஸ் பற்றி அதிகார முடிவு எடுக்க 16—5—1985 வரை காலத் தவணை அளிக்கப்பட்டிருக்கிறது.

(பிற்பகல் 12-50)

முடிவு 30—6—1985 அன்று. முடிவாக அன்றைக்கு யார் யார் சேர்க்கப்பட்டிருக்கின்றார்கள் என்று அறிவிக்கப்படும். 14—6—1985, 15—6—1985க்குள் வாக்காளர்கள் பட்டியல் அச்சடிக்கப்படும். பைனல் பப்ளிகேஷன் ஆப் ரோல்ஸ் வித் ஆல் அமென்ட்மென்ட்ஸ் 25—7—1985 அன்று வெளியிடப்படும். இப்படி கால அட்டவணை கொடுத்திருப்பதால், அனைவரையும் வாக்காளர்களாகச் சேர்த்துக் கொள்ள வாய்ப்பு இருக்கிறது. விட்டுப் போவதற்கு இடம் இல்லை. யாராகிலும் விட்டுப் போவார்கள் என்று நான் நினைக்கவில்லை.





தேர்தல் பற்றிய அறிவிப்பு செய்திருக்கிறேன். நல்ல எண்ணத்தோடு தேர்தல் நடக்க வேண்டும் என்றுதான் நான் நேற்று பேரவையிலே அறிவித்தேன். இந்த மேலவையிலும் அறிவிக்கிறேன். தேர்தல் அறிக்கை வெளியிடுகின்ற நாள் 18—5—1985. வேட்பு மனு பெறுதல் 17, 19, 20. 18 ஆம் தேதி விடுமுறையானதால் அன்று இல்லை. 17—8—1985, 19—8—1985, 20—8—1985 ஆக மூன்று நாட்கள். வேட்பு மனு பரிசீலனை செய்வது 21—8—1985. வேட்பு மனுவைத் திரும்பப் பெறுவது 24—8—1985. வேட்பாளர்கள் இறுதிப் பட்டியல் வெளியிடுதல் 24—8—1985. வாக்குப் பதிவு 9—9—1985. வாக்குகள் எண்ணிக்கை 10—9—1985. நகராட்சிக்கும் ஊராட்சி ஒன்றியங்களுக்கும் ஒரே நேரத்தில் தேர்தல் நடக்கும். ஒரே தேதியில் தேர்தல் நடக்கும். வேறு எங்கும் யாரும் சென்று கள்ள வோட்டு போட்டு விட்டார்கள் என்ற தவறான எண்ணம் வரத் தேவையில்லை என்பதற்காகத் தான் ஒரே நாளில் தேர்தல் வைக்கப்பட்டிருக்கிறது. ஒரே நாளில் வைக்கப் படுவதால் எவ்வளவு சங்கடங்கள் அரசுக்குண்டு என்பது உறுப்பினர்களுக்குத் தெரியும். வாக்குப்பெட்டிகள், 'பேலட் பாக்ஸ்' தேவை. அத்தோடு காவல் துறை அதிகாரிகள் கண்காணிக்கத் தேவைப்படும். இவைகள் தேவைப்பட்டால், அந்நிய மாநிலங்களிடத்திலிருந்து வாங்கிக் கொள்ளலாம் என்று கருதி, ஒரே தேதியில் நடத்திவிட வேண்டும் என்று இருக்கின்றது. முதல்வர் அவர்களும் அப்படித்தான் ஆணையிட்டிருக்கிறார்கள். ஒரே தேதியில் நடத்துவதற்குத்தான் முடிவு எடுக்கப்பட்டிருக்கிறது. அம்மாதிரி நல்ல எண்ணத்தோடுதான் இந்தச் சட்ட முன்வடிவைக் கொண்டு வந்திருக்கிறோமே தவிர வேறு எதற்கும் அல்ல. நிச்சயமாக தேர்தல் நடத்துவதற்கு அனைத்துத் தரப்பினரையும் வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன். தேர்தல் நடத்துவதற்கு அரசோடு ஒத்துழையுங்கள் என்று நான் கேட்டுக்கொண்டு, பொதுவாக சட்ட முன்வடிவை வரவேற்றுப் பேசியவர்களுக்கு நன்றி தெரிவித்துக்கொண்டு, என்னுடைய உரையை இத்தோடு முடித்துக்கொண்டு அமைகிறேன். வணக்கம்.

**திரு. க. மீனாட்சிசுந்தரம்:** மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலே இரண்டு கருத்துக்கள். நான்கு ஆண்டுகளாக . . . .

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் கொடுத்ததற்குப் பிறகு விளக்கம் கேட்பது, முறையல்ல. இங்கே அதற்குப் பிறகு என்ன கேட்கின்றார்கள்? உறுப்பினர் அவர்கள் தங்கள்

நிலையைச் சொல்லியிருக்கின்றார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் அளித்த பிறகு, தீர்மானங்களை அவையின் முடிவிற்கு விடவேண்டுமே தவிர, அதற்கு மேலே எப்படிப் பேசுவது? வாய்ப்பு கொடுத்தாகிவிட்டது. உறுப்பினர் அவர்கள் பேசிவிட்டார்கள். மாண்புமிகு அமைச்சர் பதிலுரையாகி விட்டது. அதற்குப் பிறகு எப்படிப் பேச அனுமதிப்பது?

திரு. க. மீனாட்சிசுந்தரம்: மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, எங்களுடைய கோரிக்கை ஏற்றுக்கொள்ளப்படாததனால், திராவிட முன்னேற்றக் கழகத்துக்காரர்களாகிய நாங்கள் வெளி நடப்புச் செய்கிறோம்.

(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் வெளிநடப்பு செய்தார்கள்.)

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, மன்னித்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். வெளிநடப்பு அவர்கள் கட்சி ரீதியாகச் செய்கின்றார்கள். அதை நான் தடுக்கவில்லை. ஆனால் தலைவர் அவர்கள் மூலமாக நான் அவர்களைப் பொதுவாகவே கேட்டுக்கொள்வது, தேர்தலை நடத்துவதற்காவது ஒத்துழைக்க வேண்டும் என்று அனைவரையும் கேட்டுக் கொள்கிறேன். யாராவது எந்தக் காரணத்தையாவது வைத்துக்கொண்டு, நீதிமன்றத்திற்குச் செல்ல சமூக விரோதிகளுக்குத் துணையாக இருந்துவிட வேண்டாமென்று நான் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: அவை முன் உள்ள பிரச்சினை:

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, 1985 ஆம் ஆண்டு, தமிழ்நாடு, ஊராட்சிகள் (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 22/1985) ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்."

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

சட்ட முன்வடிவு, பிரிவு வாரியாக, ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

பிரிவு 2, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.



(பிற்பகல் 12-55)

பிரிவு 3.

திரு. க. சுப்பு: பிரிவு 3க்கு கீழ்க்கண்ட திருத்தத்தை நான் முன்மொழிகிறேன்:—

"Substitute the following for sub-clause (1-A) (a) (i) of clause 3:

(i) if, among the members of the Panchayat Union Council, there are no women or members of the Scheduled Castes or Scheduled Tribes, the Panchayat Union Council may co-opt two women and two members of the Scheduled Castes or Scheduled Tribes; and"

திரு. ஆர். டி. சீத்தாபதி: நான் திருத்தத்தை வழி மொழிகிறேன்.

திரு. க. சுப்பு: மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, இது சம்பந்தமாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விளக்கம் கொடுத்திருக்கின்றார்கள். ஒரே ஒரு பஞ்சாயத்து யூனியனிலே 4 பேர்கள் இருக்கின்றார்கள். நாம் நியமனம் செய்தால், நியமனம் செய்யக்கூடியவர்கள் எண்ணிக்கையில் அதிகமாகி விடுவார்கள். அதற்கு ஒரு விதிவிலக்காக இருக்க வேண்டும் என்று நான் நினைக்கிறேன். விதி விலக்கையே விதியாக மாற்றிவிட வேண்டுமென்ற அவசியமில்லை. நியமனம் செய்யக்கூடிய உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு, இருக்கின்ற உறுப்பினர்களை மிஞ்சாமல் இருக்கின்ற எண்ணிக்கையிலே போட்டுக்கொண்டு விடலாம் என்று சொல்கிறேன். இப்போது அதற்கு 'டைம்' இல்லை என்று நினைக்கிறேன். டிராப்ட் போடும்போதே நல்ல நோக்கத்தோடுதான் போட்டிருக்கிறார்கள். நான் படித்துப் பார்த்தேன்.

"if, among the members of the Panchayat Union Council, there are no women .................... the Panchayat Union Council may co-opt one woman"

என்று ஆரம்பிக்கிறார்கள். women என்று Plural-ல் ஆரம்பித்து, -ல் முடிக்கிறார்கள். ஒன்றை இரண்டாக்கினால் நல்லது. இது இடைக்கால ஏற்பாடுதான். சுப்ரீம் கோர்ட்டில் வழக்கு முடிந்த பிறகு, வேறு விதமாக சட்டத் திருத்தம் வர இருக்கிறது. எனவே இடைக்கால ஏற்பாடாகச் செய்ய ஏதாவது வழி இருக்கிறதா?

திரு. எம். பி. சுப்பிரமணியம்: துணைத் தலைவரவர்களே, இந்தத் திருத்தம் அரசாங்கம் கொடுத்துள்ள திருத்தமென்று எண்ணிக்கொண்டு ஏற்கெனவே பேசினேன். இது ஒரு நியாயமான திருத்தம். ஏற்கெனவே உள்ள சலுகைகளை எடுத்திருக்கிறார்கள். ஏதோ ஒன்றில் 4 பஞ்சாயத்துக்கள் இருப்பதால், பல யூனியன்களில், அதாவது 12 பஞ்சாயத்துக்

களுக்குக் கீழே உள்ள ஒன்றியங்களில் 3 பெண்கள், 3 ஆதி திராவிட மக்கள் உறுப்பினர்களாவதை எடுத்துவிட்டார்கள். இதன் காரணமாக அவர்கள் பழிக்கு அரசு ஆளாகும் என்று சொல்லி, இந்தத் திருத்தத்தை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, இப்படி எந்தப் பழிக்கும் ஆளாகக்கூடாது என்பதற்காகத்தான் சட்ட இலாக்காவோடு கலந்து ஆலோசித்து, சட்டம் திருத்தப்பட்டிருக்கிறது. சட்ட அமைச்சரவர்கள் இதுபற்றி சட்டத் துறையோடு கலந்தாலோசித்துத்தான் எங்களுடைய நோக்கத்திற்கு ஒத்துக்கொண்டார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. சுப்பு அவர்கள் சொன்னதுபோல, சட்டத்தைப் போட்டிருக்கலாம். அப்படி யோசித்தோம். தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களைவிட நியமிக்கின்ற உறுப்பினர்கள் அதிகமானால், அதை வைத்துக்கொண்டு நீதிமன்றத்திற்குப் போக வாய்ப்பு வருமென்று எண்ணி, அந்த எண்ணிக்கையைப் போட்டோம். மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவரவர்கள், இருக்கின்ற உரிமையை எடுத்து விட்டார்கள் என்று சொன்னார்கள். இருக்கின்ற உரிமைகள் எடுக்கப்படவில்லை. தேர்ந்தெடுக்கப்பட்டவர்களைவிட, நியமிக்கின்ற உறுப்பினர்கள் எண்ணிக்கை அதிகமாகிவிட்டால், அதனால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களின் உரிமை போய்விடுகிறது என்பதால்தான் இப்படி கொண்டு வந்திருக்கிறோம். ஏற்கெனவே தாழ்த்தப்பட்ட மக்களுக்கு 18 சதவிகிதம் என்றும், தாய்மார்களுக்கு 15 சதவிகிதம் என்றும் இட ஒதுக்கீடு செய்ய வேண்டுமென்று சட்டம் கொண்டு வந்து, அது உச்ச நீதி மன்றத்திற்குப் போய், அங்கே அதற்குத் தடை விதிக்கப்பட்டிருப்பதால்தான், பழைய முறையில் தேர்தல் நடத்த இசைந்திருக்கிறோமே தவிர, அந்தக் கொள்கையை விட்டுவிட்டோம் என்று நினைக்க வேண்டாம். மரியாதைக்குரிய திரு. எம். பி. சுப்பிரமணியம் குறிப்பிட்டது போல, இது குறித்து 'காம்பரஹென்சிவ் பில்' கொண்டுவர அரசு பரிசிலித்துக் கொண்டிருக்கிறது. தேர்தல்கள் நடந்து முடிந்த பிறகு, அப்படிப்பட்ட 'பில்' கொண்டு வரும்போது, எல்லாச் சிக்கல்களும் தீர்ந்து விடுமென்பதாலும், இந்தத் தேர்தலை நடத்தும்போது எந்தவிதச் சிக்கல்களும் வந்து விடக் கூடாது, இதைக் காட்டி நீதிமன்றத்திற்குப் போகக்கூடாது என்றுதான் இப்படி வாசகங்கள் போட்டிருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆதி திராவிட மக்களுக்கும், தாய்க்குலத்திற்கும் நிச்சயமாக இயன்ற அனைத்தையும் இந்த அரசு செய்யுமென்று கூறி, அமைகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினரவர்கள் திருத்தத்தைத் திரும்பப் பெறுகிறாரா, வலியுறுத்துகிறாரா ?



**திரு. க. சுப்பு :** மாண்புமிகு அமைச்சரவர்களின் உறுதிமொழிக்குப் பிறகு, திருத்தத்தைத் திரும்பப் பெறுகிறேன்.

திருத்தம், அவையின் அனுமதியோடு, திரும்பப் பெறப்பட்டது.

பிரிவுகள் 3 முதல் 11 வரை, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

பிரிவு 1, அட்டவணை, சட்டமியற்றும் முறை, நெடுந்தலைப்பு ஆகியவை, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** மாண்புமிகு துணைத் தலைவரவர்களே,

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, 1985 ஆம் ஆண்டு, தமிழ்நாடு, ஊராட்சிகள் (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 22/1985) நிறைவேற்றப்பட வேண்டும்"

என்று முன்மொழிகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** அவை முன் உள்ள பிரச்சினை :

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, 1985 ஆம் ஆண்டு, தமிழ்நாடு, ஊராட்சிகள் (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 22/1985) நிறைவேற்றப்பட வேண்டும்"

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** சட்ட முன்வடிவுகள் நிறைவேறும்வரை, அவையின் நேரம், அவையின் அனுமதியுடன், நீட்டிக்கப்படுகிறது.

**(2) 1985 ஆம் ஆண்டு தமிழ் நாடு மாவட்ட நகராட்சிகள் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 23/1985)**

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவரவர்களே,

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, 1985 ஆம் ஆண்டு, தமிழ்நாடு, மாவட்ட நகராட்சிகள் (திருத்த) சட்ட முன்வடிவு@ (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 23/1985) ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்"

என்று முன்மொழிகிறேன்.

---

@ 607-622 ஆம் பக்கங்களில் இணைப்பு V ஆக அச்சிடப்பட்டுள்ளது.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** முன் மொழியப்பட்ட தீர்மானம் :

“சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, 1985 ஆம் ஆண்டு, தமிழ்நாடு, மாவட்ட நகராட்சிகள் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 23/1985) ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்”.

(பிற்பகல் 1-00)

**திரு. எம். பி. சுப்பிரமணியம் :** இரண்டே இரண்டு விஷயங்களை மட்டும் சுட்டிக் காட்டுகிறேன். பழைய சட்டத்தில் 18 சதவிகிதத்திற்கு மேற்படாமல் ரிசர்வேஷன் இடங்கள் என்று இருந்தன. அரசு சொன்னபடி ரிசர்வேஷனை அனுமதிக்கும் என்று சொன்னால், நான் அறிந்துகொள்ள விரும்புவது இதைவிட அதிகமாகவா இல்லை, இதைவிட குறைவாகவா என்று அறிய விரும்புகிறேன். நான் கேட்பது நகராட்சிகளைப் பொறுத்தவரைதான்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** நகராட்சிகளுக்கு 1971 ஆம் ஆண்டு மக்கள் தொகையைக் கணக்கிட்டு, உறுப்பினர்களின் எண்ணிக்கை எத்தனை என்று பார்த்து, அதில் 25 சதவிகிதத்திற்குக் குறையாமல் ரிசர்வேஷன் இடங்கள் இருக்க வேண்டுமென்று சட்டம் போட்டிருக்கிறோம். முன்பு எந்தெந்த வார்டுகள் ரிசர்வ்ட் சீட்டுகளாக இருந்தனவோ அவை எல்லாம் அப்படியே இருக்கும் என்று ஒத்துக்கொண்டோம். 1981 ஆம் ஆண்டு மக்கள் தொகையைக் கணக்கிட்டு வார்டுகளை அதன் அடிப்படையில் பிரித்து இந்த இந்த இடங்கள் இன்னின்ன வகைக்கு என்று பிரித்தோம் என்றால், அரசியல் நோக்கத்தோடு இப்படிச் செய்து விட்டார்கள் என்றெல்லாம் குற்றம் சாட்டுவார்கள் என்பதால், எற்கெனவே இருந்ததை அப்படியே எற்றுக்கொண்டிருக்கிறோம். ஆகவே 25 சதவிகிதம் ரிசர்வ்ட் சீட்டுகள் என்பது அப்படியே இருக்கும். இதன் அடிப்படையில்தான் தேர்தலும் நடைபெறும்.

**திரு. எம். பி. சுப்பிரமணியம் :** அமைச்சர் சொல்கின்ற விஷயங்கள் எல்லாம் இந்த மசோதாவில் இல்லை. எந்த விதிகளின் கீழ் இப்படிச் செய்யப்பட இருக்கிறது என்பதை அமைச்சர் விளக்க வேண்டும். இரண்டாவது ‘பிரியாம்பிள்’ என்ற வகையில் பல விஷயங்களை இங்கே சொல்கிறார்கள். ‘1971 ஆம் ஆண்டு மக்கள் தொகை அடிப்படையில்’ மற்றும் ‘1981 ஆம் ஆண்டு மக்கள் தொகை அடிப்படையில்’ என்றெல்லாம் மசோதாவில் ஒன்றும் சொல்லப்படவில்லை. அவற்றையெல்லாம் இங்கே சொல்வது தேவைதானா ? அதன் நோக்கங்களை மட்டும், நான் கேட்ட விளக்கங்களை மட்டும் சொன்னால் போதும்.



**THE HON. THIRU P. U. SHANMUGAM:** (3) In any municipality, the State Government may, by notification, from time to time, reserve wards for—

(*a*) members of the Scheduled Castes,

(*b*) members of the Scheduled Tribes, or

(*c*) women

and determine the number of such wards;

Provided that no such ward shall be reserved for any of the communities mentioned in clauses (*a*) and (*b*) if at the last preceding census of which the relevant figures have been published, such community constituted more than one-half of the total population of the municipality.

(3-A) The total number of wards reserved under sub-section (3) shall not exceed one-fourth of the strength of the municipal council as notified under sub-section (1). ”

நான் உறுதிமொழி அளிக்கிறேன். எற்கெனவே இருந்த வார்டுகளை மாற்றுவதாக உத்தேசம் இல்லை. எந்தெந்த இடங்களுக்கு ரிசர்வேஷன் இருக்கும் என்று இங்கே கேட்டார்கள். பெண்களுக்கும் தாழ்த்தப்பட்டவர்களுக்கும் ஒதுக்கப்பட்டதை அப்படியே வைத்துத்தான் தேர்தல் நடத்த இருக்கிறோம் என்று இங்கே உறுதியளிக்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** அவை முன் உள்ள பிரச்சினை—

“சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, 1985 ஆம் ஆண்டு, தமிழ் நாடு, மாவட்ட நகராட்சிகள் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 23/1985) ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்”.

அட்டவணைகள், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டன.

சட்ட முன்வடிவு, பிரிவுவாரியாக, ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

பிரிவுகள் 2 முதல் 9 வரை, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறை வேற்றப்பட்டன.

அட்டவணை, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

பிரிவு 1, முகப்புரை, சட்டமியற்றும் முறை, நெடுந்தலைப்பு ஆகியவை, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

[1985 ஏப்ரல் 12

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: துணைத் தலைவர் அவர்களே,

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, 1985 ஆம் ஆண்டு, தமிழ் நாடு, மாவட்ட நகராட்சிகள் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 23/1985) நிறைவேற்றப்பட வேண்டும்" என்று முன்மொழிகிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : அவை முன் உள்ள பிரச்சினை—

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, 1985 ஆம் ஆண்டு, தமிழ் நாடு, மாவட்ட நகராட்சிகள் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 23/1985) நிறைவேற்றப்பட வேண்டும்".

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

## (3) 1985 ஆம் ஆண்டு அழகப்பா பல்கலைக் கழகச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 24/1985).

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : துணைத் தலைவரவர்களே,

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, 1985 ஆம் ஆண்டு, அழகப்பா பல்கலைக் கழகச் சட்ட முன்வடிவு@ (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 24/1985) ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்". என்று முன்மொழிகிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: முன்மொழியப்பட்ட தீர்மானம்—

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, 1985 ஆம் ஆண்டு, அழகப்பா பல்கலைக் கழகச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 24/1985) ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்".

திரு. மு. செ. சங்கரலிங்கம்: துணைத் தலைவர் அவர்களே, அழகப்பா பெயரில் புதிதாக பல்கலைக் கழகம் ஒன்றை ஆரம்பிக்க வகை செய்யும் இச் சட்ட முன்வடிவை வரவேற்கிறேன். ஆனால் இச்சட்ட முன்வடிவில் இப் பல்கலைக் கழகம் சுயேச்சையாக இயங்குவதற்கான உரிமை வழங்கப்படவில்லை என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

@ 623-628ஆம் பக்கங்களில் இணைப்பு VI ஆக அச்சிடப்பட்டுள்ளது.



1985 ஏப்ரல் 12] [திரு. மு. செ. சங்கரலிங்கம்]

(பிற்பகல் 1-05)

அந்தப் பல்கலைக் கழகமே முழுமையானதாக இல்லாமல் அரைகுறையாக இருப்பதாக சட்ட முன்வடிவிலிருந்து தெரிய வருகிறது. இங்கே கொடுக்கப்பட்ட சட்ட முன்வடிவில்,

"Teachers Training College, the Alagappa College of Physical Education and the Post-Graduate Departments of the Alagappa College at Karaikudi shall be named as Alagappa University"

என்று இருக்கிறது. ஒரே வளாகத்தில் இருக்கும் ஒரு கல்லூரியில், அண்டர் கிராஜுவேட் படிப்பு மதுரை காமராஜ் பல்கலைக் கழகத்தின் கீழும், மேல் பட்டப் படிப்பு வகுப்புகள் அழகப்பா பல்கலைக் கழகத்தின் கீழும் எப்படி அமைய முடியும் என்ற சந்தேகம் எனக்கு இருக்கிறது. பட்டப் படிப்பு வரை நடக்கும் தேர்வுகள் ஒரு ஹாலிலும், மேல்பட்டப் படிப்புகளுக்கான தேர்வுகள் இன்னொரு அறையிலும் நடக்கும். ஆனால் இரண்டு பல்கலைக் கழகத் தேர்வுகளும் ஒரே கல்லூரியில் நடக்கும். அப்படி ஒரே வளாகத்தில் இரண்டு பல்கலைக் கழகங்கள் இருக்க முடியாது. ஒரே கல்லூரியில் இருக்கும் இரண்டு வித வகுப்புகள், ஒரே பிரின்சிபாலின்கீழே இயங்கும் இரண்டு வேறு வகுப்புகள், தனித்தனியாக இரண்டு பல்கலைக் கழகங்களின் கட்டுப்பாட்டில் இருக்கும் என்று இங்கே குறிப்பிடப்பட்டிருக்கிறது. அது அப்படி இயங்க முடியாது என்பது எனது கருத்து.

அடுத்ததாக, அங்கே அமைக்கப்பட்டிருக்கிற சிண்டிகேட், செனட் அமைப்பு ஜனநாயக முறைப்படி அமைக்கப்பட்டிருக்கிறதா என்பதைக் கருத்தில் எடுத்துக்கொள்ள வேண்டிய அவசியம் இருக்கிறது. கொடுக்கப்பட்டிருக்கிற செனட் பகுதியில், அரசு சார்புள்ள ஒருவர் மெம்பராக இருப்பார் என்றும், புரோ-சான்சிலர், வைஸ்-சான்சிலர், கல்வித்துறைச் செயலாளர், மற்றும் மருத்துவத்துறைச் செயலாளர், கல்லூரிக் கல்வி இயக்குநர் என்று 8 பேர் அரசாங்க அதிகாரிகள் உறுப்பினர்களாக இருப்பார்கள் என்றும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. இந்த ஒன்பது பேர்களும் நாமினேஷன் முறையில் அங்கே வருகிறார்கள். பின்பு வருகிற ஒவ்வொரு சிண்டிகேட், செனட் மெம்பரும் நாமினேஷனில்தான் வருகிறார்கள். தேர்தல் முறை இல்லாத போது, ஆசிரியர்களுக்கான பிரதிநிதிகள் வர வாய்ப்பில்லை. பல்கலைக் கழகத்திற்கு சுயாட்சி உரிமை வேண்டுமென்றால், அதற்கு அங்கே தேர்தல்கள் நடத்தப்பட வேண்டும். ஆனால் இந்தச் சட்ட முன்வடிவில் தேர்தல்கள் இல்லாமல் இருப்பதற்கான வாய்ப்புகள் இருக்கின்றன. சிண்டிகேட்டில் கூட, அனைத்து உறுப்பினர்களும் நாமினேஷன் முறையில்தான் வருகிறார்கள்,

அப்படி வரக்கூடியவர்கள் அரசு அதிகாரிகள்தான். ஆகவே பல்கலைக் கழகம் சுயேச்சையாகச் செயல்பட முடியாமல், அரசாங்கம் எப்படி விரும்புகிறதோ, அப்படியே அதிகாரிகள் செயல்படுவார்கள். அல்லது அதிகாரிகளுக்கே உள்ள கோணத்தில் நடவடிக்கை எடுத்து பல்கலைக் கழகத்தை நடத்தாமல் செய்து விடுவார்கள். பாரதிதாசன் பல்கலைக் கழகம் ஆரம்பிக்கப்பட்டு மூன்றாண்டு காலத்தில் ஒரு வகுப்புதான் கூடுதலாக வந்திருக்கிறது. மீதமுள்ள ஒன்பது வகுப்புகள் சென்னைப் பல்கலைக் கழகத்தில் இருந்தபோது ஏற்பட்டவைதான். சிண்டிகேட்டுக்கு உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்படுவதைவிட, நாமினேடட் உறுப்பினர்கள்தான் அதிகமாக இருப்பார்கள். அதில் 'எக்ஸ்-அபிசியோ' உறுப்பினர்கள்தான் அதிகம். இப்படி நியமித்தால், அந்தப் பல்கலைக் கழகம் சுயாட்சி உரிமையை இழக்க வாய்ப்பு இருக்கிறது. ஆகவே புதிதாக அமைக்கக்கூடிய சிண்டிகேட், செனட்டுக்குத் தேர்தல்கள் நடத்தி முரண்பாடுகள் இல்லாமல், ஜனநாயக முறை இருக்க வேண்டிய அடிப்படையில் தேர்தல்கள் நடத்தி உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்க வேண்டும். ஆசிரியர்களுக்கும் பிரதிநிதித்துவம் கொடுப்பதில் முக்கியத்துவம் கொடுக்கப்பட வேண்டும். ஒரு மாற்றம் வரும்போது, அது முற்போக்கான மாற்றமாக இப்போது இல்லை. மாணவர்களும் அதிலே பங்கு வகிக்கிற அளவில் இருக்க வேண்டும். அங்கே பணியாற்றுகிற அலுவலர்களுக்குக் கூட நியமன உறுப்பினர் பதவி கொடுக்க வேண்டுமென்று கேட்டிருக்கிறோம். அவர்களையும் சேர்த்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அப்போதுதான் சிண்டிகேட், செனட் ஆகியவை முழுமை பெறக்கூடிய வாய்ப்பு இருக்கும். இப்போது ஜனநாயக முறை இல்லாமல் இருக்கிறது.

மேலும் சிண்டிகேட், செனட் உறுப்பினர்கள் இரண்டு முறைகளுக்கு மேல் பதவியில் இருக்க முடியாது என்ற கருத்து இதிலே சொல்லப்பட்டிருக்கிறது. இதை ஒரு ஜனநாயக வளர்ச்சி முறையாக எடுத்துக்கொண்டால்கூட, திறமையானவர்கள் வெளியில் இருக்கும்போது, அவர்கள் இரண்டு முறைக்கு மேல் இருக்கக்கூடாது என்று சொல்வது ஜனநாயக முறைக்கு அப்பாற்பட்டது என்று கருதுகிறேன்.

(பிற்பகல் 1-10)

(மாற்றுத் தலைவர் திரு. சி. இராமலிங்கம் தலைமை)

அதைக்கூட இங்கே தீர்க்கலாம். அதுபோல், இப்போது Head of the Department மட்டும்தான் Senate Member ஆக வர வேண்டும் என்கிற முறை இருக்கிறது. ஆனால் Head of the Department ஒழுங்காக இருப்பார்களா என்கிற சந்தேகம் இருக்கிறது. அழகப்பா கல்லூரியில்



1981 ஆம் ஆண்டு நடந்த தேர்வுகளில், அந்தக் கல்லூரி முதல்வரால் ஒரே நேரத்தில் ஒரே மாணவர் இரு தேர்வுகள் எழுத அனுமதிக்கப்பட்டிருக்கிறார். தேதி 22—4—1981. தேர்வு நேரம் 10-00 முதல் 1-00. இன்ஜினியரிங் தேர்வு Meteorology பதிவெண் 516689. அதே நேரம் பத்து முதல் 1, அதே நாள், இன்னொரு தேர்வு டிப்ளமா இன் பிசினஸ் அட்மினிஸ்ட்ரேஷன், அதன் பதிவெண் 1008. இரண்டு தேர்வுகளும் ஒரே மாணவரால் எப்படி எழுதப்பட்டிருக்க முடியும்? அவர் இரண்டு தேர்வுகளையும் எழுதி சர்ட்டிபிகேட்டுகள் வாங்கிச் சென்றிருக்கிறார். இது அந்த அழகப்பா கல்லூரியில்தான் நடந்தது. ஆனால் இதுவரை அதன்மேல் எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. ஆகவே, Head of the Department நல்லவர்களாக இருப்பார்கள் என்று நம்பி எப்படிக் கொடுக்க முடியும்? ஆனால் அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் என்று சொன்னால், கண்டிப்பாக இதை இன்னும் நல்ல முறையில் கொண்டுவர முடியும். நடவடிக்கை எடுத்திருக்க முடியும். அழகப்பா கல்லூரியில் இன்னும் அதே முதல்வர்தான் தேர்வுகள் நடத்திக்கொண்டிருக்கிறார். இதுபோன்ற நிகழ்ச்சிகளை எல்லாம் எதிர்காலத்தில் தடுத்து நிறுத்த வேண்டும் என்று சொன்னால், இதை ஜனநாயகப்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். இது இந்தப் பல்கலைக் கழகச் சட்ட முன்வடிவோடு ஒத்துவராமல் இருந்தாலும், கல்வியோடு ஒத்து வருவதாலும், மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் இங்கே இருப்பதாலும் கூற விரும்புகிறேன். கன்னியாகுமரி மாவட்டத்தில் சுமார் 150 செகண்டரி கிரேடு ஆசிரியர் பணியிடங்கள் ஓராண்டு காலமாக அதிகாரிகளால் நிரப்பப்படாததால், இன்று அவர்கள் காலவரையறையற்ற உண்ணாவிரதம் இருந்து கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். வேலை கொடுக்கப்பட வேண்டியவர்கள் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். எம்ப்ளாய்மெண்ட் எக்ஸ்சேஞ்சிலிருந்து நோட்டிபிகேஷன் கொடுத்தபோது கூட, இந்த அரசுக்கு இழுக்கு தேடித்தர வேண்டும் என்பதற்காகவோ என்னவோ தெரியவில்லை, வேலையே இல்லாமல் இருக்கின்ற இந்தக் கால கட்டத்தில், ஓராண்டு காலமாக, இருக்கின்ற வேலையிடத்தைக்கூட நிரப்பாமல் இருக்கிறார்கள். அங்கே கைது செய்யப்பட்ட ஆசிரியர்களை விடுவிக்க வேண்டும் என்றும், அவர்களுக்கு உடனடியாக 'இன்டர்வியூ' நடத்தி, காலி இடங்களை நிரப்ப வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டு, அமைகிறேன்.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, இந்தச் சட்ட முன்வடிவின் மீது பேசுவதற்கு முன்பாக மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களிடமிருந்து ஒரு விளக்கத்தைப் பெற விரும்பு

கிறேன். டாக்டர் அழகப்பா செட்டியார் அவர்கள் ஏற்படுத்தியுள்ள இந்த அறக்கட்டளையில் சில கல்லூரிகளையும், சொத்துக்களையும் பல்கலைக் கழகம் துவக்க வேண்டுமென்று அரசிடம் ஒப்படைக்கும் உரிமை மாற்றம் செய்வதற்கும் ஒப்புக்கொண்டு, அவர்கள் உரிமை மாற்றம் செய்தும் கொடுத்திருக்கிறார்கள் என்று கொடுக்கப்பட்டிருக்கிறது. அப்படி உரிமை மாற்றம் செய்ததற்காக அரசிடமிருந்து ஏதாவது இழப்பீடு, ஈட்டுத்தொகை பெற வேண்டுமென்று நிபந்தனைகள் வைத்திருக்கிறார்களா? அப்படியாயின் அதற்கு நாம் ஒப்புக்கொண்டிருக்கிறோமா? அல்லது எந்த நிபந்தனையும் இல்லாமல் இந்த உரிமை மாற்றத்தைச் செய்திருக்கிறார்களா? இந்த விளக்கத்தைத் தரக் கேட்டுக்கொள்கிறேன்.

மற்றும் இன்னொன்று. இதே வளாகத்திலே—இங்கே குறிப்பிடப்பட்டிருக்கின்ற வளாகத்திலே—பொறியியல் கல்லூரிகள் இருக்கின்றன. அந்தப் பொறியியல் கல்லூரிகளைப் பொறுத்தவரையில், அவை இப்போது இந்தப் பல்கலைக் கழகத்தின் ஆளுகைக்குள் வருகின்றனவா என்பதுபற்றி எந்தக் குறிப்பும் காணவில்லை. அதற்கான விளக்கத்தையும் கொடுத்தால், அதையொட்டிப் பேசுவதற்கு வசதியாக இருக்கும் என்று கூறிக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** மாற்றுத் தலைவர் அவர்களே, பொறியியல் கல்லூரி ஏற்கெனவே அரசுக் கல்லூரியாக மாறிவிட்டது. உரிமை மாற்றத்திற்காக அதிலேயிருந்து சில கடன்களையெல்லாம் திருப்பி, இப்போது அரசு ஏற்றுக் கொண்டிருக்கிறது. இவர்களுக்குத் தனியாக எந்தப் பணமும் நாம் தரவில்லை.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** மாற்றுத் தலைவர் அவர்களே, நான் இந்த 1985 ஆம் ஆண்டு அழகப்பா பல்கலைக் கழகச் சட்ட முன்வடிவினை யொட்டி என் கருத்துக்களைக் கூறுவதற்கு முன்பாக, நான் முன்பே மாண்புமிகு தலைவர் அவர்களிடம் வாங்கிய அனுமதியின்படி, ஒரு கருத்தை, ஓர் அறிவிப்பை இங்கே தர விரும்புகிறேன்.

நேற்று சட்டமன்றப் பேரவையில் மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள், சட்டமன்ற மேலவையில் மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களும் தமிழ் நாடு பட்டதாரி—முதுநிலை பட்டதாரி ஆசிரியர் கழகத்தினுடைய கோரிக்கைகள் சிலவற்றை ஏற்றுக்கொள்கின்ற வகையில் மனம் மகிழத்தக்க வகையில் சில அறிவிப்புகளைக் கொடுத்தார்கள். அதோடு எஞ்சியுள்ள கோரிக்கைகள் குறித்து போராட்டத்தை நிறுத்திவிட்டு பேச்சுவார்த்தைகளை நடத்துங்கள் என்று மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் நேற்று இங்கே குறிப்பிட்டார்கள். அதற்காக அவர்களுக்கு எங்கள் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களும் மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களும் கொடுத்த வேண்டுகோளின்படி, தமிழ் நாடு பட்டதாரி—முதுநிலை பட்டதாரி ஆசிரியர் கழகம் நடத்திக் கொண்டிருந்த போராட்டத்தை நாங்கள் நிறுத்தி வைக்கிறோம் என்பதை இந்த அவையிலே அரசுக்கு நாங்கள் தெரிவித்துக்கொள்கின்றோம்.

(பிற்பகல் 1-15)

கொடுத்த அறிவிப்புகளுக்காக நன்றி தெரிவித்துக்கொண்டு, மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களும், மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களும் கொடுத்த உறுதியின்படி மிக விரைவாக சங்கப் பிரதிநிதிகளுடன் பேச்சுவார்த்தை நடத்த வேண்டுமென்றும் இந்தச் சமயத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

இந்தப் பல்கலைக் கழகச் சட்ட முன்வடிவை நான் வரவேற்கிறேன். ஆனால் சட்ட முன்வடிவை வரவேற்கும்போது, ஏதாவது புதிய பல்கலைக் கழகம் துவங்க வேண்டுமென்ற அடிப்படையில் கொண்டு வரப்பட்டிருக்கின்ற நோக்கத்தை நாங்கள் ஆதரிக்கிறோம், வரவேற்கிறோம். இரண்டு, மூன்று ஆண்டுகளாகவே சொல்லிக்கொண்டிருந்த கருத்து இந்தக் காரைக்குடிப் பகுதியில் ஒரு பல்கலைக் கழகம் வேண்டுமென்பது. அந்த வகையிலே இந்தச் சட்ட முன்வடிவு கொண்டு வந்திருப்பது குறித்து நாங்கள் எங்களுடைய மகிழ்ச்சியைத் தெரிவித்துக்கொள்கிறோம். ஆனால் அந்தச் சட்ட முன்வடிவிலே உள்ள சில குறைபாடுகளை நான் சுட்டிக்காட்டியாக வேண்டும். மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் இப்போது அறிவித்தார்கள். மதிப்பிற்குரிய இந்த நிர்வாகத்தினர் இந்தச் சொத்துக்களை மாற்றும்போது அல்லது நாங்கள் உரிமைகளை மாற்றிக் கொடுத்தபோது, கல்லூரிகளை ஒப்படைத்தபோது, வேறு எந்த நிபந்தனைகளையும் விதிக்கவில்லை என்று சொன்னார்கள். அதற்காக உண்மையிலேயே அந்த நிர்வாகத்தை நாங்கள் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம். இதற்காக வேறு எந்தச் சலுகைகளையும், உரிமைகளையும் கேளாமல், எந்த நிபந்தனைகளும் இல்லாமல், இப்படிப்பட்ட ஒரு நல்ல ஏற்பாட்டிற்கு முன்வந்த அந்த நிர்வாகத்தினரை நாங்கள் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம். கல்வி அமைச்சர் அவர்கள் சொல்லிய அதே வளாகத்திற்குள், இது ஒரு யூனிட்டரி டைப் பல்கலைக் கழகமாக இருக்குமென்று இந்தச் சட்ட முன்வடிவில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. அஃபிலியேஷன் டைப்பாக இல்லாமல் இது யூனிட்டரி டைப்பாக இருக்குமென்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. யூனிட்டரி வகையில் ஏற்கெனவே தமிழ் நாட்டில் அண்ணாமலைப் பல்கலைக் கழகம் நடந்து கொண்டிருக்கிறது. அந்த யூனிட்டரி டைப் பல்கலைக் கழகத்தில் அந்த அமைப்பின் காரணமாக ஏற்பட்டிருக்கின்ற பிரச்சினைகள் அரசுக்கு மிக நல்ல முறையில் தெரியும். மீண்டும் என் ஒரு

யூனிட்டரி டைப்பை நாம் ஏற்படுத்தியிருக்கிறோம் என்பது எனக்குத் தெரியவில்லை. அந்த மாவட்டத்தில் இருக்கிற, அந்த மாவட்டத்தோடு சேர்ந்த வேறுசில மாவட்டங்களிலுள்ள கல்லூரிகளையும் சேர்த்து 'அஃபிலியேஷன்' என்ற டைப்பில் அஃபிலியேட்டிங் யூனிவர்சிட்டியாகக் கூட அதை அமைத்திருக்தோமேயானால், அது இன்னும் சிறப்பாகச் செயல்படுவதற்கு வசதியாக இருக்கும். ஒரு குறுகிய பகுதிக்குள், சட்ட முன்வடிவில் குறிப்பிட்ட அந்த வளாகத்திற்குள்ளாக மட்டும் இந்தப் பல்கலைக் கழகம் இருப்பது என்பது மேலும் கால கட்டத்தில் அது வளருவதற்குத் தடையாக இருக்குமோ என்று அஞ்சுகிறோம். அந்தக் கருத்தை அரசு பரிசீலிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

இன்னொன்று. இந்தப் பல்கலைக் கழகத்தைப் பொறுத்தவரையில், பொறியியல் கல்லூரி இந்த அரசினுடைய கட்டுப்பாட்டிற்குள் இருக்கிறது என்று சொன்னார்கள். அந்த அரசு பொறியியல் கல்லூரிகளும் இந்த வளாகத்தில் இருக்கின்ற காரணத்தினால், அழகப்பா பல்கலைக் கழக நிர்வாகத்திற்குள் அவற்றைக் கொண்டு வருவதுதான் சிறந்ததாக இருக்கும். எனக்கு முன்பு பேசிய மாண்புமிகு உறுப்பினர் திரு. சங்கரலிங்கம் அவர்கள் சொன்னதுபோல், வேறுசில படிப்புகளை, வேறு நிர்வாகத்திலும், ஒருசில படிப்புகளை இந்தப் பல்கலைக் கழக நிர்வாகத்திலும் வைத்துக்கொண்டிருப்பது என்பது நடைமுறையில் பல பிரச்சினைகளைத் தோற்றுவிக்கும். ஆகவே இதை மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

இந்தச் சட்டத்தில் பிரிவு 8-ன்படி, நண்பர் திரு. சங்கரலிங்கம் அவர்கள் சொல்லியதுபோல, கல்வி அலுவல் நிலைக் குழு, செனட், சின்டிகேட் ஆகியவற்றில் இரு முறைகளுக்கு மேல் பதவியில் இருக்கக்கூடாது. இரு முறைகளுக்கு மேல் பதவியில் இருக்கக்கூடாது என்பதைப் பொறுத்தவரையில், ஏற்கெனவே நாங்கள் அந்தக் கருத்தை ஆதரித்து வருகிறோம். முன்பு இதற்கான சட்டத் திருத்தங்கள் கொண்டுவந்தபோது கூட, தமிழகத்திலே உள்ள பல்வேறு பல்கலைக் கழகங்கள் நிபந்தனைகளை விதிப்பதற்கான அரசு சொல்லிய நோக்கங்களை, விளக்கங்களை இணைத்து, அந்த முற்போக்குக் கொள்கைகளை நாங்களும் அந்தக் கண்ணோட்டத்தில் வரவேற்றோம். ஆனால் இரு முறைகளுக்கு மேல் பதவியில் இருக்கக் கூடாது என்ற அந்தச் சட்டப் பிரிவு சரியான முறையில் அமல்படுத்தப்பட வேண்டும். அந்தச் சட்டத்திலே ஏற்படுத்திவிட்டு அதைச் சரியான முறையில் அமல்படுத்தாவிட்டால், சரியாக இருக்காது. பல்கலைக் கழக நிர்வாகத்திலோ, அரசுத் துறையிலோ ஏற்படும் நியமனங்களோ வேந்தர் நியமனங்களோ அல்லது வேறு இணை வேந்தர்களின் நியமனங்களோ இப்படி அந்தச் சட்டப் பிரிவுக்கு



எதிராகச் சொல்லக்கூடிய நிலைமைகள் பல பிரச்சினைகளைக் கடந்த காலத்திலே பல்வேறு பல்கலைக் கழகங்களில் தோற்றுவித்திருக்கிறது. அது அவநம்பிக்கையையும் உண்டாக்குகிறது. ஏன் இந்தச் சட்டப் பிரிவை ஏற்படுத்த வேண்டும், ஏன் அந்தச் சட்டத்தைக் கொண்டுவந்து பிறகு மீற வேண்டும் என்ற அவநம்பிக்கை என்னைப் போன்றவர்களுக்கு ஏற்பட்டிருக்கிறது. ஆகவே இந்தச் சட்டப் பிரிவைக் கொண்டுவரும்போது, இனிமேல் அப்படிப்பட்ட நியமனங்கள் செய்யும்போது அல்லது தேர்தலிலே வேட்பாளர்கள் வேட்பு மனு தாக்கல் செய்யும்போது, நாங்கள் இரு முறைகளுக்கு மேல் பதவி வகிக்கவில்லை, இதுவரையில் நாங்கள் அப்படிப்பட்ட பதவியை வகிக்கவில்லை என்ற அந்த நிபந்தனை குறித்து ஒரு உறுதிமொழியை வாங்கிக்கொள்வது நல்லது. அப்படி சம்பந்தப்பட்ட வேட்பாளரிடமிருந்து உறுதிமொழியை வாங்கிவிட்டால், இந்தப் பிரச்சினைகளே வராது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். நம்முடைய சில உறுப்பினர்கள் சொன்னதைப் போல, அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தைப் பொறுத்தவரையிலும், மதுரை காமராசர் பல்கலைக் கழகத்தைப் பொறுத்தவரையிலும் இப்படிப்பட்ட விதி முறை மீறல்கள் நடந்திருக்கின்றன என்பதை நான் மீண்டும் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

(பிற்பகல் 1-20)

இன்னொன்று, துணை வேந்தர், பதிவாளர் முதலியவர்கள் பிரிவு 20-படி பொது ஊழியர்களாகக் கருதப்படுவார்கள் என்ற கருத்தை நான் வரவேற்கிறேன். ஏனென்றால் துணை வேந்தர்கள், பதிவாளர்கள் என்பவர்கள் ஏதோ தமிழ் நாட்டு அரசுக்கும் தமிழக மக்களுக்கும் சம்பந்தப்படாத ஒரு இடத்தில் உட்கார்ந்துகொண்டு அவர்கள் எல்லாவிதமான உரிமைகளையும் அதிகாரங்களையும் பெற்று தங்களைத் தட்டிக் கேட்க ஆளே கிடையாது, சட்டமன்றமும் கேட்கக் கூடாது, அமைச்சரவையும் கேட்கக்கூடாது, வேந்தரும் கேட்கக் கூடாது என்ற நிலையில் இருந்தால், அதன் காரணமாக பல குறைபாடுகள் ஏற்படத்தான் செய்யும் என்பதால் இந்தப் பிரிவை நான் வரவேற்கிறேன்.

ஆனால் அந்தச் சட்டத்தின் மூலமாக ஒரு குறிப்பிட்ட எல்லைக்குள்ளாகத்தான் நாம் நடவடிக்கை எடுக்க வேண்டியிருக்கும். எனவே அதை இன்னும் சற்று விரிவுபடுத்தி துணை வேந்தர், பதிவாளர் அல்லது அதுபோன்ற முக்கியப் பதவிகளை வகிப்பவர்கள் எந்தத் தவறு செய்தாலும், அவர்கள்மீது உடனடியாக ஒரு விசாரணைக் குழுவை அமைக்கவோ அல்லது அத்தகைய விசாரணைக் குழுவின் அறிக்கையின்மீது நடவடிக்கை எடுக்கவோ தமிழக

அரசுக்கோ, வேந்தருக்கோ, இணை வேந்தருக்கோ அதிகாரம் இருக்க வேண்டும். அப்படி அதிகாரம் இல்லாவிட்டால், இத்தகைய தவறுகளைத் தட்டிக் கேட்க முடியாமற் போய்விடும். அண்மையில் மாண்புமிகு உறுப்பினர் திரு. முத்துலிங்கம் அவர்கள்கூட சென்னைப் பல்கலைக் கழகத்தில் வைக்கப் பட்ட பாடநூலில் சில ஆட்சேபகரமான பாடப் பகுதிகள் இருந்தன என்பதைச் சுட்டிக்காட்டிப் பேசினார்கள். ஆனால் அதைப்பற்றி அரசு நியாயமான நடவடிக்கை எடுக்க முடியாது. தவறு நடந்துவிட்டது என்று தெளிவாகத் தெரிந்தும்கூட, நாம் அதன்மீது நடவடிக்கை எடுக்க முடியாததற்குக் காரணம் அவைகளின் தன்னாட்சி முறைதான். எனவே இப்படித் தவறுகள் நடந்தும் நாம் நடவடிக்கை எடுக்கவில்லை என்றால், பொதுமக்களின் எதிர்ப்புக்கும் கண்டனத்திற்கும் ஆளாகிற நிலை ஏற்படுகிறது. எனவே தவறு நடக்கும்போது, நடவடிக்கை எடுக்கவில்லை என்றால், பொதுமக்களுக்குப் பதில் சொல்ல முடியாத நிலை உருவாகிறது.

உதாரணமாக பல்கலைக் கழகத் தேர்வு முடிவுகள் வெளியிடுவதில் மிகுந்த காலதாமதம் உண்டாகிறது. இது பொதுமக்களின், மாணவர்களின் பிரச்சினை. அப்படிப்பட்ட குறைபாடு வரும்போது, அரசினால் அதைத் தட்டிக் கேட்க முடியாததற்குக் காரணம் பல்கலைக் கழகங்களின் தன்னாட்சி என்கிற போர்வையாகும். எனவே இப்படி மாணவர்களுக்கும் பொதுமக்களுக்கும் பாதிப்பு உண்டாகிறபோது, பல்கலைக் கழக அதிகாரிகளின்மீது நடவடிக்கை எடுக்க வேண்டிய அதிகாரம் நமக்கு இருக்க வேண்டும் என்ற அடிப்படையில் தான், அப்படிப்பட்ட ஷரத்தை இதில் சேர்க்க வேண்டும் என்று வலியுறுத்துகிறேன். எனவே இப்படிப்பட்ட அதிகாரம் வேந்தருக்கோ, இணை வேந்தருக்கோ, அரசுக்கோ இருக்கலாம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, தமிழகத்தில் உள்ள பல்கலைக் கழகங்களைப் பொறுத்தவரை, அவைகளில் பணியாற்றுகிற ஆசிரியர்கள் மற்றும் ஆசிரியரல்லாத பணியாளர்கள் இவர்களுக்குச் சில உரிமைகள் அல்லது சலுகைகள் வழங்கும்போது, அதற்கு ஒரே மாதிரியான அளவுகோலைக் கையாள வேண்டும் என்று வற்புறுத்த விரும்புகிறேன். ஒரு பல்கலைக் கழகத்திற்கும் இன்னொரு பல்கலைக் கழகத்திற்கும் இதில் வேறுபாடு இருக்கக் கூடாது. பல்கலைக் கழகங்கள் அனைத்தும் இன்று மானியக் குழுவின் நிதி உதவியைப் பெறுகின்றன. அதைப் போலவே அவை தமிழக அரசின் நிதி உதவியையும் பெறுகின்றன. எனவே இரண்டு நிதி உதவிகளையும் பெற்று நடத்தப்படும் இப்பல்கலைக் கழகங்களில் பணியாற்றும் ஆசிரியர்கள் மற்றும் ஆசிரியர்களல்லாத பணியாளர்கள் ஆகியோருக்கு ஊதியம், சலுகை ஆகியவை அனைத்தும் ஒரேவிதமாக இருக்க வேண்டும். இவைகளுக்குத் தரப்படும் சலுகைகள், உரிமைகள் ஆகியவற்றைப்



பொறுத்தவரையில், ஒரே அளவுகோலைப் பின்பற்ற வேண்டும். தற்போது இவற்றில் சில வித்தியாசங்கள் இருப்பதால், ஒரு பல்கலைக் கழக ஊழியர்கள் மற்றொரு பல்கலைக் கழகத்தில் இருப்பவர்களைச் சுட்டிக்காட்டி அதைப் பிரச்சினையாக்கக் கூடிய சூழ்நிலையும் அதற்காகப் போராட்டங்கள் நடக்கிற சூழ்நிலையும் உருவாகின்றன. எனவே அதைத் தவிர்க்க தமிழக அரசு ஒரு நிலையான, பெர்மனென்ட் பைனான்ஸ் கமிட்டி என்ற ஒரு அமைப்பை ஏற்படுத்தி விடலாம். பல்கலைக் கழகங்களுக்குச் சலுகைகள் அளிக்கும்போது, அவை அனைத்துப் பல்கலைக் கழகங்களிலும் பணியாற்றுகிற அனைவருக்கும் பொருந்தும்படி முடிவெடுக்கத் துணை புரியும் வகையில் ஒரு பெர்மனென்ட் பைனான்ஸ் கமிட்டி அமைக்க வேண்டும். அதில் அனைத்துத் துணை வேந்தர்களையும் நியமித்து மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களும், மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்களும் இடம்பெற்று செயல்படும்படி செய்ய வேண்டும். இப்படிப்பட்ட நிரந்தரப் பல்கலைக் கழகக் குழு ஒன்றை ஏற்படுத்திவிட்டால், பல்கலைக் கழகங்களுக்கிடையே ஏற்றத் தாழ்வுகள் உருவாகாது. ஆகவே அதற்கான சட்டத் திருத்தத்தையும் கொண்டுவர வேண்டும் என்று வலியுறுத்த விரும்புகிறேன்.

**மாற்றுத் தலைவர் (திரு. சி. இராமலிங்கம்) :** மாண்புமிகு உறுப்பினர் 15 நிமிடங்களாகப் பேசிக் கொண்டிருக்கிறார்கள். இன்னும் நால்வர் பேச வேண்டியிருக்கிறது. சிக்கிரம் முடிக்க வேண்டும்.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** சிக்கிரம், சுருக்கமாக முடித்துக் கொள்கிறேன். இது ஒரு புதிய சட்டம். இதைச் சொல்லும்போது, நான் ஒரு அணியின் சார்பில் சில கருத்துக்களைச் சொல்கிறேன். இந்தச் சட்டத்தால் ஏற்படும் சில பிரச்சினைகளைச் சொல்கிறேன். தவறுகள் வந்துவிடக் கூடாது என்று சொல்லி, அதற்கான ஆலோசனைகளையும் சொல்கிறேன். எனவே தயவுசெய்து மாற்றுத் தலைவர் அவர்கள் அனுமதி அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பிரிவுகள் 21, 24, 25 ஆகியவை ஆட்சிப் பேரவை, கல்வி அலுவல் குழு, ஆட்சிக் குழு ஆகியவை சம்பந்தப்பட்டவைகளாகும். இந்த மூன்று குழுக்கள் சம்பந்தமான ஷரத்துக்களைப் பொறுத்தவரை, ஒரு கருத்தை நான் இங்கே வலியுறுத்த விரும்புகிறேன்.

இதில் பள்ளிக் கல்வித் துறைக்குப் பிரதிநிதித்துவம் இல்லை. ஆகவே ஸ்கூல் எஜுகேஷன் டைரெக்டருக்கு இதில் பிரதிநிதித்துவம் வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. சங்காலிங்கம் அவர்கள்

கூட இங்கே குறிப்பிட்டார்கள். அவர் சொன்னதைப்போல், தேர்ந்தெடுக்கப்பட்ட ஆசிரியர்களில் மூன்று பிரிவுகள் இருக்கின்றன. அதாவது விரிவுரையாளர்கள், பேராசிரியர்கள் மற்றும் சிறப்புப் பேராசிரியர்கள் என்று இருக்கிறார்கள். இந்தச் சட்டத்தின்படி விரிவுரையாளர்களுக்கு பிரதிநிதித்துவம் கிடையாது. விரிவுரையாளர்களுக்கு தேர்தல் மூலமாக பிரதிநிதித்துவம் அளிக்க ஏற்பாடு செய்ய வேண்டும். இல்லாவிட்டால் பிரச்சினையாகிவிடும்.

(பிற்பகல் 1-25)

அதைப்போலவே மாண்புமிகு உறுப்பினர் திரு. சுப்பு ஒரு திருத்தம் கொடுத்திருக்கிறார்கள். அதை ஆதரித்துப் பேச விரும்புகிறேன். மேலவையிலும், பேரவையிலும் உள்ள ஒவ்வொரு உறுப்பினர் என்று இருப்பதற்குப் பதிலாக இரண்டு உறுப்பினர்களாவது இடம் பெற வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாணவர்களைப் பொறுத்தவரையில், யூனிவர்சிட்டி ராங்க் வாங்கியவர்களுக்கு கல்விக் குழுவில் அல்லது செனட்டில் பிரதிநிதித்துவம் அளிக்க வேண்டும். ஆரம்பக் கட்டத்தில் அவர்களுக்குத் தேர்தல் வேண்டாம். அவர்களுக்குப் பிரதிநிதித்துவம் கொடுப்பதன். மூலமாக நன்றாகப் படிக்கும் மாணவர்களுக்கு ஊக்கம் கொடுத்ததாக ஆகும். அவர்களும் தங்கள் கருத்துக்களைச் சொல்ல வாய்ப்பு ஏற்படும். இந்தக் கருத்தையும் அரசு பரிசிலனை செய்ய வேண்டும்.

கணக்கு வைப்பதைப் பொறுத்தவரையில், நாம் கொடுக்கும் உதவித் தொகை, பல்கலைக் கழக மானியக் குழு கொடுக்கும் தொகை ஆகியவற்றை எந்த வங்கியில் வைப்பது என்பதுபற்றி இந்தச் சட்ட முன்வடிவில் சொல்லப் படவில்லை. தனிப்பட்டவர்கள் வங்கியில் போடுவதை நாம் ஏற்றுக்கொள்ளக் கூடாது. நாம் கொடுக்கும் நிதியுதவி, மத்திய அரசு கொடுக்கும் நிதியுதவி ஆகியவற்றை தேசியமயமாக்கப்பட்ட வங்கியிலோ அல்லது கூட்டுறவு வங்கியிலோதான் வைக்க வேண்டுமே தவிர, வேறு எந்தத் தனிப்பட்டவர்களின் வங்கியிலும் கணக்கு வைத்துக்கொள்ளக் கூடாது என்று திட்டவட்டமாக இந்தச் சட்ட முன்வடிவிலே இருக்க வேண்டும். ஆனால் அது சட்ட முன்வடிவிலே காணோம். தயவுசெய்து இந்தப் பிரிவை இந்தச் சட்ட முன்வடிவிலே சேர்க்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். இது சம்பந்தமாக புகார் வந்ததால்தான் சொல்கிறேன். தனிப்பட்ட வங்கியில் போடக்கூடாது. இதன் கணக்குகளை அக்கவுண்டன்ட்-ஜெனரல் அவர்கள் ஆய்வு செய்யும் அளவிற்கு பிரிவைச் சேர்க்க வேண்டும்.



**மாற்றுத் தலைவர் (திரு. சி. இராமலிங்கம்) :** மாண்புமிகு உறுப்பினர் இதையெல்லாம் கல்விக் கொள்கை விளக்கக் குறிப்பு விவாதத்தின்போது பேசலாம். ஏற்கெனவே நேரம் ஆகிவிட்டது. உறுப்பினர்கள் வெளியூர் செல்ல காத்திருக்கிறார்கள். ஆகவே சீக்கிரம் முடிக்க வேண்டும்.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** ஆகவே இந்தப் பல்கலைக் கழகச் சட்டத்தை வரவேற்கும்போது, நான் சுட்டிக்காட்டியுள்ள சில அம்சங்களை அரசு பரிசிலனை செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். ஆசிரியர் தொகுதியில் உள்ள உறுப்பினரை ஆசிரியர் தொகை எக்ஸ்-அஃபிஷியோ சிண்டிகேட் உறுப்பினராக ஆக்கலாம். அப்படி ஆக்கிவிட்டால், மேலும் கருத்துக்களை எடுத்துச் சொல்ல முடியும். இதையும் அரசு பரிசிலனை செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொண்டு இக்கருத்துக்களைச் சொல்ல வாய்ப்புக் கொடுத்தமைக்கு நன்றி தெரிவித்து அமர்கிறேன்.

* **திரு. க. மீனாட்சிசுந்தரம் ;** மாற்றுத் தலைவர் அவர்களே, அழகப்பா பல்கலைக் கழகச் சட்ட முன்வடிவின்மீது ஒன்றிரண்டு கருத்துக்களை மட்டும் சொல்கிறேன். பசும்பொன் முத்துராமலிங்கம் மாவட்டத்திலே மிகத் தேவையான இந்தப் பல்கலைக் கழகத்தை உருவாக்கியது குறித்து நான் மெத்த மகிழ்ச்சியடைகிறேன். அதை வரவேற்க நான் கடமைப்பட்டிருக்கிறேன். இந்தச் சட்ட முன்வடிவிலே சிலபல திருத்தங்களைச் செய்ய வாய்ப்பு உள்ளது. நல்ல நோக்கத்தோடு கொண்டு வந்துள்ள இந்தச் சட்ட முன்வடிவில் அவ்வப்போது எழக்கூடிய் பிரச்சினைகளுக்கு ஏற்றவாறு திருத்தங்களைச் செய்வார்கள் என்பதை நான் அறிவேன்.

இங்கே நண்பர்கள் சொல்லியதைப் போல, ஆட்சிக் குழுவிலே, மற்ற பிரதிநிதிகளுக்கு இடம் இருப்பதைப் போல, ஆசிரியர்களுடைய பிரதிநிதிகளுக்கும் இடம் கொடுக்க வேண்டும் என்ற கருத்தை நான் வலியுறுத்துகிறேன். அக்குழுவிலே மாணவர்களுக்கும் பிரதிநிதித்துவம் கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அந்த மாவட்டம் மிகவும் பின்தங்கிய மாவட்டம். வற்றாத ஜீவநதிகள் ஓடாத மாவட்டம் அது. அந்த மாவட்டத்திலே பல்கலைக் கழகத்தை ஆரம்பித்திருக்கிறார்கள். அந்தப் பல்கலைக் கழக வளாகத்திற்குள்ளே சென்ட்ரல் எல்க்ட்ரோ **கெமிக்கல்** ரிசர்ச் இன்ஸ்டிட்யூட் ஒன்று இருக்கிறது. இந்தியாவிலேயே அதுபோன்ற நிலையம் மூன்று இடங்களில் தான் இருக்கின்றது. அதிலே ஒன்று அங்கே இருக்கிறது. வரவேற்கக் கூடிய, பாராட்டத்தக்க வளர்ச்சி பெறக்கூடிய வாய்ப்பு அந்தப் பல்கலைக் கழகத்திற்கு இதனால் ஏற்படும். ஒரு பொறியியல் கல்லூரி அங்கே இருப்பதால், அதனையும் இதன்கீழ் கொண்டு வந்தால், சிறப்பாக இருக்கும். ஆனால் அங்கே மருத்துவக் கல்லூரி இல்லை. அந்த வளாகத்தை பிற்பட்ட மக்கள்

[திரு. க. மீனாட்சிசுந்தரம்] [1985 ஏப்ரல் 12

(பிற்பகல் 1-30)

பயன்படுத்தும் வகையில், அந்தப் பல்கலைக் கழகத்திற்கு மேலும் சிறப்பூட்டும் வகையில் ஒரு மருத்துவக் கல்லூரியை உருவாக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்ற வேண்டுகோளை நான் இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன். அது மட்டுமல்ல, ஆறு ஆண்டுக்காலம், இரண்டு டெர்ம் ஒருவர் தேர்ந்தெடுக்கப்பட்டதற்குப் பின்பு, மறுபடியும் வரக்கூடாது என்று மற்ற பல்கலைக் கழகங்களிலே கொண்டு வந்திருக்கின்ற அதே முறையைத்தான் இங்கே கொண்டு வந்திருக்கிறார்கள். பல்வேறு தரப்பினராலேயும் அது தேவையில்லாத ஒன்று என்று வற்புறுத்தப்பட்டிருக்கிறது. ஆனால் அந்த விதி எல்லோருக்கும் பொருந்துகிறதா ? டாக்டர் அழகப்ப செட்டியார் அவர்களின் மகள் ஆயுள் உறுப்பினராக இருக்கின்றார். அவர் வள்ளல், அவர் இருக்கவேண்டியதுதான். இல்லை என்று நான் சொல்லவில்லை. ஜனநாயக முறைப்படி தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் ஆறு ஆண்டுக்கும் மேலே, அவர்களுடைய சேவை மனப்பான்மையால், அவர்களுடைய சேவை மற்றவர்களாலே பாராட்டப்படுகின்ற சூழ்நிலையிலேதான் தேர்ந்தெடுக்கப்பட்டு வருகின்றார்கள். ஆகவே அந்தச் சட்டப் பிரிவை மறுபரிசீலனை செய்ய வேண்டும். துணை வேந்தர் இருக்கின்றார். நாம் நியமித்திருக்கிறோம். 65 வயதிற்கு மேலே துணை வேந்தர் இருக்கக் கூடாது என்று சட்டத்திலே இருக்கிறது. இருந்தாலும் அவ்வப்போது பதவி நீடிப்பு செய்து கொண்டிருக்கிறோம். இந்த 6 ஆண்டு என்ற விதி அங்கே பொருந்துவதில்லை. சில நேரங்களிலே அந்தப் பதவியைப் பொறுத்தவரையிலே அவர்களுக்குத் தேவையான வகையிலே செய்து கொண்டிருக்கின்றோம். ஜனநாயக முறையிலே வருகின்றவர்கள் மட்டும் இரு டெர்முகளுக்குப் பிறகு வரக்கூடாது என்று சொல்லிவிட்டு, ஜனநாயகத்தின் பெயராலே, ஜனநாயகத்திற்குத் தீங்கு விளைவிக்கின்ற அளவுக்குச் சட்டம் கொண்டு வந்திருக்கின்றோம். அந்த அளவுக்கு நிலைமைகள் இருக்கக்கூடாது என்று வற்புறுத்திச் சொல்ல விரும்புகிறேன். அது மட்டுமல்ல, தற்செயலாகக் காலியாகின்ற இடம் பற்றி "தற்செயலாக காலியிடம் ஒன்றில் ஆட்சிப் பேரவைக்கு உறுப்பினர் ஒருவர் தேர்ந்தெடுக்கப்படுகிற அல்லது நியமனம் செய்யப்படுகின்ற இடத்தில், ஓராண்டுக்குக் குறையாமல் அத்தகைய உறுப்பினர் எவரேனும் பதவி வகித்துவிட்டால், அவருக்கு மூன்று ஆண்டு பதவி வகித்ததாகவே அதைக் கொள்ள வேண்டும்" என்று இதிலே சொல்லப்பட்டிருக்கிறது. ஆக நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. சுப்பு அவர்கள் கூட ஓர் ஆண்டுக் காலம் பதவி வகிக்க இருக்கிறார். அவர் ஆறு ஆண்டுகள் பதவி வகித்தார் என்று சொல்வது எப்படிப் பொருந்தும் என்பது எனக்குப் புரியவில்லை. காலியான இடத்திலே வந்திருக்கின்ற அவருக்கு எக்ஸ்டென்ஷன்



1985 ஏப்ரல் 12]

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** மாண்புமிகு மேலவை மாற்றுத் தலைவர் அவர்களே, இப்போது உறுப்பினர் திரு. சுப்பு அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு வந்திருக்கின்றார்கள். அவர் ஆறு ஆண்டுக் காலம் இருக்க முடியுமா என்பது மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரியும்.

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** அந்தச் சட்டத்தின்படி ஆறு ஆண்டுக் காலம் இதன்படி இருக்க முடியாது. இவர்கள் மூன்று ஆண்டுக்காலம் பதவி வகித்ததாகக் கருதப்படுவார்கள் என்றால், அடுத்து மூன்று ஆண்டுக்காலம் பதவி வகித்து விட்டால், ஆறு ஆண்டுக்காலம் அவர்கள் பதவியில் இருந்தார்கள் என்ற நிலை ஏற்படுகிறது. அவர் மீண்டும் தேர்தலில் நிற்க முடியாது என்று ஆகிறது. ஆனால் உண்மையில் நான்கு ஆண்டுக்காலம் தான் இருந்திருக்கின்றார். ஓராண்டு காலத்தில் மூன்று ஆண்டு இருந்ததாகக் கருதுகின்றார்கள். மீண்டும் ஒரு மூன்று வருட காலம் பதவி வகிக்கின்றார். மூன்று வருடம், அடுத்து ஒரு வருடம், ஆக நான்கு வருடங்கள்தான் ஆக்ட்சுவலாக இருந்தது. இரண்டு முறை இருந்துவிட்ட காரணத்தினாலேயே, ஆறு ஆண்டுக் காலம் பதவியில் இருந்தார். ஆகவே மீண்டும் தேர்தலில் நிற்கக்கூடாது என்ற சூழ்நிலை ஏற்படுகிறது. எனவே அப்பிரிவை நீக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். சட்ட முன்வடிவிலே இருக்கின்றவைகளை எடுத்துச் சொல்கிறேன். வேறு ஒன்றுமில்லை. அது நியாயமானது, எல்லோருக்கும் தேவையானது என்பதற்காகவும் அதை நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதற்கு அடுத்து இதிலே "தற்காலிகமாக நியமிக்கப்படும் ஆசிரியர்கள் எவரேனும் இந்தப் பிரிவின்படி நியமிக்கப்படுவதற்காக தேர்வுக் குழு ஒன்றினால் அவர் பரிந்துரைக்கப்படவில்லையானால், தனி முறை தேர்வுக் குழுவினாலே, வரன்முறைக் குழுவினாலே பணிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டாலன்றி அத்தகைய தற்காலிக பணி நியமனத்தின் பேரால் பணியில் தொடர்ந்து வைத்திருக்கக் கூடாது" என்று சொல்லப்பட்டிருக்கிறது. அதை நான் வரவேற்கிறேன். ஆனால் இப்போது நிதர்சனமாக கல்வித் துறையிலே நியமிக்கப்படுகின்ற ஆசிரியர்கள், அதற்குப் பின்னாலே தேர்வுக் குழுவினாலே தேர்ந்தெடுக்கப்படுவதற்கு தாமதமானால் சிக்கல்கள் ஏற்பட்டு அவர்கள் இன்றைக்குப் போராட்டம் நடத்தி, அரசு இப்போது அப்படிப்பட்டவர்களை வீட்டிற்கு அனுப்புவதா, வைத்திருப்பதா என்பது பற்றி ஒரு முடிவுக்கு வந்திருக்கிறது. அதுபோன்ற நிலை, இங்கேயும் வந்து விடக்கூடாது. அதற்காக இதிலேயும் ஒரு சப்-கிளாஸ் சேர்த்துக் கொள்ளலாம் என்று சொல்லிக்கொள்கிறேன். தேர்ந்தெடுக்கப்பட வேண்டிய குழு பணியாற்றி வரும்போது, நிரந்தரம் செய்வதற்கு

ஒரு கால வரையறை வேண்டும். ஏழு ஆண்டுக் காலம், எட்டு ஆண்டுக் காலம் பத்து ஆண்டுக் காலம் ஆனதற்கு அப்புறம் வீட்டிற்குப் போ என்று சொல்வதை விட. இந்தக் காலத்திற்குள்ளே தற்காலிகமாக நியமிக்கபபட்டவர்கள் நிரந்தரம் செய்யப்பட வேண்டும் என்றும் எந்த நாளுக்குள் அந்தக் குழு அந்தப் பணியை முடிக்க வேண்டும் என்றும் ஒரு கால வரையறை ஏற்படுத்தித் தரவேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ள விழைகிறேன்.

அழகப்பா அவர்கள் பெயரிலே மிகவும் பிற்ப்டுத்தப்பட்ட ஒரு பகுதியாக இருந்த அந்தப் பகுதியிலே இந்தப் பல்கலைக்கழகத்தை உருவாக்கியிருப்பதை நான் வரவேற்கிறேன். அந்தப் பல்கலைக்கழகம் மேலும் வளர்வதற்கு அந்தப் பல்கலைக் கழகத்துடன் தொடர்புடைய இதுவரையில் உழைத்து, மிகச் சிறப்பாகப் பணியாற்றி இருக்கின்ற, அனுபவம் மிக்க, ஆற்றல் மிக்க, சுயநல மில்லாதவர்களை ஆய்வு செய்து பார்த்து, அந்தக் கல்வி நிலையத்திற்கு உழைத்தவர்களில் ஒருவரை பதிவாளர் பொறுப்பிலே அல்லது வேறு முக்கிய பொறுப்பிலே இந்த இன்ஸ்ட்டிடியூஷனுடைய வளர்ச்சிக்காகப் பணியாற்றிக் கொண்டிருப்பவர்களுக்கு ஒரு ஊக்கம் அளிக்கக்கூடிய வகையிலே நியமனம் செய்தால் சிறப்பாக இருக்கும். அதற்குரிய நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ள வேண்டும் என்று சொல்லி இந்தச் சட்ட முன்வடிவை வரவேற்று அமைகிறேன்.

(மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் தலைமை)

(பிற்பகல் 1-40)

திரு. க. சுப்பு : மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவரவர்களே, இந்த மசோதாவை நான் மனப்பூர்வமாக வரவேற்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. மீனாட்சிசுந்தரம் அவர்களும் இதை வரவேற்றிருப்பது உண்மையிலேயே எனக்கு மனநிறைவை அளிக்கிறது. இராமநாதபுரம் மாவட்டம் மூன்றாகப் பிரிக்கப்பட்ட அந்த நிகழ்ச்சி சிறப்பாக நடந்தபோது, பசும்பொன் முத்துராமலிங்கம் மாவட்டத்தின் தலைநகராக சிவகங்கை ஆகிவிட்டது. அந்த நிகழ்ச்சியில் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களும், பேரவைத் தலைவர் அவர்களும், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களும், எதிர்க் க்ட்சி உறுப்பினர்களும் கலந்து கொண்டு, ஒரு திருவிழா போல் நடைபெற்றது. ஆனால் அந்த நேரத்திலே காரைக்குடியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட சட்ட மன்ற தி.மு.க. உறுப்பினர், பசும்பொன் முத்துராமலிங்கம் மாவட்டத்தின் தலைநகரை காரைக்குடியில் வைக்கவில்லை என்பதால் கறுப்புக் கொடி





வைத்தார்கள். அந்த நேரத்தில் மனமுவந்து மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள், சிவகங்கையைத் தலைநகராக ஆக்கிவிட்டதால் காரைக்குடியின் முக்கியத்துவத்தை எந்தக் காரணத்தைக் கொண்டும் குறைக்க மாட்டோம் சிவகங்கையைத் தலைநகராக மாற்றிவிட்டதால், காரைக்குடியை மறந்துவிட மாட்டோம் என்று சொல்லி, காரைக்குடியின் பெருமையை உயர்த்தும் வகையில் வள்ளல் அழகப்பச் செட்டியார் பெயரில் பல்கலைக் கழகம் நிறுவப்படும் என்று மாவட்டப் பிரிவினை நிகழ்ச்சியில் உறுதிமொழி அளித்தார்கள். அதற்குப் பிறகு அந்த மக்களுக்கு மன நிறைவு ஏற்பட்டது. அடுத்த தேர்தலில் கறுப்புக் கொடி வைத்த அந்தச் சட்டமன்ற உறுப்பினரை மக்கள் ஏற்றுக் கொள்ளவில்லை. மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் அளித்த உறுதி மொழியின் அடிப்படையில் இன்றைக்குச் சட்ட முன்வடிவு வருகிறது. வள்ளல் அழகப்பச் செட்டியார் பெயரில் வருகிறது. இப்போது பல பேர் வள்ளல் என்று போட்டுக்கொள்கிறார்கள். அழகப்பச் செட்டியார் அப்படியல்ல. உண்மையான வள்ளல். தான் உழைத்து தேடிய பொருள்களை எல்லாம் கல்விக்காகவே செலவிட்டவர்கள் அவர்கள். சிறு தொகையைத்தான் தன்னுடைய மகளுக்குக் கொடுத்தார். கல்விப் பணிக்காக தன்னை முழுமையாக ஒப்படைத்துக் கொண்டவர் ; அந்தப் பகுதியில் கல்விக்காக தன்னுடைய பொருளையெல்லாம் செலவிட்டவர். இன்றைக்கு அரசாங்கத்திற்குச் சொந்தமான நிலங்களைத் தங்களுக்குப் பயன்படுத்திக்கொண்டு, ‘ அப்பாயின்ட்மென்ட் ’ போடக்கூடிய அளவுக்குத் தொழிலாகவே அதை வைத்துக்கொண்டிருக்கிறவர்கள் இருக்கிறார்கள். இதிலே விதி விலக்கானவர் வள்ளல் அழகப்பச் செட்டியார் அவர்கள். அந்தக் காரணத்தாலேதான் மாண்புமிகு உறுப்பினர் திரு. சி.ரா. லெட்சுமிகாந்தன் அவர்கள் குறிப்பிட்டார்கள் என்று நினைக்கிறேன். திருமதி உமையாள் இராமநாதனை ஆயுள் உறுப்பினராகப் போட்டிருக்கிறார்கள். அவர்களுக்கு மாத்திரம் போட்டிருக்கிறது. மன்னர் மான்யம் ஒழிக்கப்பட்டு விட்டது, வாரிசு கூடாது என்று கொள்கையை நாம் வைத்திருந்தாலும், அந்தக் கொள்கையிலிருந்து விதி விலக்கு இதற்குக் கொடுத்திருக்கிறார்கள். காரணம், அவர் விதிவிலக்காக வாழ்ந்து காட்டியவர்கள். அவர் பெயர் எப்போதும் இணைந்திருக்க வேண்டுமென்ற உயர்ந்த நோக்கத்தோடு முதலாவது பிரிவிலேயே ஆயுள் உறுப்பினர் என்று சேர்த்திருக்கிறார்கள். இந்த நேரத்தில் மாண்புமிகு அமைச்சர் அவர்களிடமிருந்து ஒன்றைத் தெரிந்து கொள்ள வேண்டும். திருமதி உமையாள் இராமநாதனோடு இதுமுடிந்து விடுகிறதா அல்லது தொடர்கிறதா ? ‘ லீகல் ஏர்ஸ் ’ என்று போட வேண்டும். இல்லை, திருமதி உமையாள் இராமநாதனோடு முடிந்துவிடுமென்றால், அதைச் சொல்ல வேண்டும். நாளைக்கு இன்டர்பிரடேஷனுக்கு இடம் கொடுக்கக்

கூடாது. அவர் வாரிசுகள் தொடர்ந்து வர வேண்டும். அப்படி இல்லை என்றால், பார்ட் 1 ஒன்றுமில்லாமல் போய்விடும். அந்த அம்மாவோடு முடிகிறதென்றால், அந்தப் பிரிவு சும்மாதான் இருக்கும். அப்படி வாரிசுகளுக்கு உரிமை கொடுப்பதில் தவறில்லை. அது அண்ணாமலை பல்கலைக் கழகம் மாதிரி இல்லை. சிதம்பரத்தில் கல்லூரியை வைத்துக்கொண்டு, கிரீன்வேஸ் ரோட்டில் கெஸ்ட் ஹவுஸ் வைத்துக் கொண்டுள்ளதுபோல், அவர்கள் இல்லை. அண்ணாமலை யூனிவர்சிட்டி பற்றி மறுபரிசீலனை செய்ய வேண்டும். அதைப் பற்றி இப்போது சொல்வது சரியாக இராது. இதற்கெல்லாம் மாறுபட்டு இருக்கும் வகையில் வள்ளல் அழகப்பச் செட்டியார் அவர்கள் பெயரில் பல்கலைக் கழகத்தைக் கொண்டு வருகிறார்கள். மேலும் மாண்புமிகு முதல்வரவர்கள் வாக்குறுதியை நிறைவேற்றுகின்ற வகையிலே வருகிறது. இதற்கு யூனிட்டரி டைப் என்று போட்டு, எல்லையைச் சுருக்கியிருக்கிறார்கள். இதில் அழகப்பா நகர் மட்டும் அடங்குகிறது. மேலும் கல்லூரிகளைச் சேர்க்க முடியாத சூழ்நிலை இருக்கிறது. இதிலே ஒரு ப்ரொவிஷன், இந்த யூனிவர்சிடியில் இருக்கிறதை வேறு யூனிவர்சிட்டிக்கு மாற்றலாம் என்று இருக்கிறது. இங்கேயிருந்து மாற்ற என்ன இருக்கிறது ? இதனை விரிவுபடுத்த வழி இருக்க வேண்டும். அந்த மாவட்டத்தில் நாளைக்கு வரக்கூடிய கல்லூரிகளை இணைக்க வழி இருக்க வேண்டும். மீன் வள ஆராய்ச்சி நடந்த இடம்தான் அது. மீன் வள ஆராய்ச்சி செய்யும் நிறுவனங்கள் இருக்கின்றன. எலக்ட்ரோ கெமிகல் ரிசர்ச் பற்றிச் சொன்னார்கள். ஆதலால் வளர்ச்சி அடையும் பகுதியாக அது இருக்க வேண்டும். இவற்றையெல்லாம் இணைக்கும் வாய்ப்பு இருக்க வேண்டும். யூனிவர்சிட்டியில் என்ன அடங்கியிருக்கிறது ? அழகப்பா காலேஜ் ஆஃப் ட்ரெயினிங்—ஆசிரியர்களுக்குப் பயிற்சி கொடுக்கும்

(பிற்பகல் 1 40)

கல்லூரி. ஆசிரியர்களுக்கு தேவையிருப்பதால்தான் பயிற்சிக் கல்லூரியை வைத்திருக்கிறார்கள். நாளைக்கே ஆசிரியர்கள் சர்ப்பிளஸ் ஆகிவிட்டால் பயிற்சிக் கல்லூரியை 'குளோஸ்' பண்ணும் நிலை வரக் கூடும். அதுபோல் இன்னொன்று பிசிக்கல் எஜுகேஷன், அதாவது உடற் பயிற்சி சம்பந்தப் பட்டது. போஸ்ட் கிராஜுவேட்டுக்கு கொஞ்சம்தான் வாய்ப்பு இருக்கிறது. அது போதாது. அதுபோல் டிராப்டில் ஒரு தப்பு இருக்கிறது. இன்ஸ்டிடியூஷனுக்கு டிப்பார்ட்மென்ட் என்று விளக்கம் இருக்கிறது. இப்படி தப்பான விளக்கம் இருந்தால், நாளைக்கே கோர்ட்டுக்குப் போனால் இதைப்பற்றித் தப்பாகப் பேசுவார்கள். இன்ஸ்டியூஷன் என்று போட்டுவிட்டு ஷெட்யூலில்





டிப்பார்ட்மென்ட் என்று போட்டிருப்பது சரிதானா என்று பார்க்க வேண்டும். அழகப்பருடைய பெயரால் வருகின்ற பல்கலைக் கழகத்தில் அவருடைய பெயரை நிலைநாட்டும் வகையில் உரிய வழிவகை செய்யப்பட வேண்டும். அந்த வகையில் அனைத்து வசதிகளும் கொண்ட முழு பல்கலைக் கழகமாக இது அமைய வேண்டும். பிசிக்கல் எஜுகேஷன், டீச்சர்ஸ் டிரெயினிங் என்கிற இந்த இரண்டு அம்சங்களும் மட்டும் போதாது. போஸ்ட் கிராஜுவேட் இன்ஸ்டிட்யூஷன் மூன்று நான்கு தான் இருக்கின்றன. இங்கே இப்பல் கலைக் கழகம் முழுமையாக அமைய வேண்டுமென்றால், அதற்கு என்னென்ன செய்ய வேண்டுமென்று பல்வேறு கருத்துக்களை மாண்புமிகு உறுப்பினர்கள் சொன்னார்கள். அவற்றையெல்லாம் உள்ளடக்கி இப்பொழுது இல்லாவிட்டாலும் கூட, பிற்காலத்திலாவது முழுமையான பல்கலைக் கழகமாக இது வர வேண்டும்.

புதிதாக இப்படிப் பல்கலைக் கழகம் தொடங்கும்போது, பல விஷயங்களை கவனிக்க வேண்டும். உள்ளபடியே அது ஜனநாயக ரீதியாக இயங்க வேண்டும். இன்றைக்கு மாணவர்கள் மிகவும் முக்கியமானவர்கள். இன்றைக்கு 18 வயது வந்தவர்கள் ஓட்டு போடலாம் என்று வழிவகை செய்திருக்கிறோம். 25 வயதானால் தேர்தலில் நின்று ஜெயித்து உள்ளாட்சித் துறை அமைச்சராக ஆகலாம். 18 வயதானால் உள்ளாட்சித் தேர்தலில் ஓட்டு போடலாம். ஆனால் மாணவர்கள் மட்டும் இன்ஸ்டிட்யூஷன்களில் ஓட்டு போடக் கூடாது என்று சொல்லி, அவர்களின் உரிமையை ஏன் மறுக்க வேண்டும் ? அவர்கள் வாக்களிக்க அவசியம் வாய்ப்பு இருக்க வேண்டும். மாண்புமிகு உறுப்பினர் திரு. லெட்சுமிகாந்தன் பேசும்போது ரேங்க் எடுக்கின்ற மாணவர்களுக்கு அதற்குரிய வாய்ப்பு அளிக்கப்படலாம் என்று சொன்னார்கள். இன்றைக்கு அப்படிப் பார்த்தால், அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தை எடுத்துக்கொண்டால், ஆசிரியர் சொல்வதை அப்படியே கேட்பவர்களும், ஆசிரியர் வீட்டில் வேலை பார்ப்பவர்களும் மட்டும் தான் ரேங்கில் வருவார்கள். அந்தமாதிரி தான் இப்போது அங்கே ரேங்க் வாங்குகிறார்கள். அப்படி ரேங்க் வாங்குபவர்களை மட்டும் கொண்டு வந்து விட்டால், நான் சொல்கிறேன் நிச்சயமாக திறமை இருக்காது.

**திரு. ப. மாணிக்கம் :** திறமையான மாணவர்கள் எல்லாம் கட்டாயம் வாத்தியாருடைய பேச்சைக் கேட்பார்கள் என்பது வேறு. ஆனால் ஆசிரியர்களுடைய கையாட்களாக மாணவர்களைக் கூறுவது சரிதானா ?

நான் மாணவர்களை கையாட்கள் என்று சொல்லவில்லை.

திரு. க. சுப்பு : இன்றைக்கு கைடுகளாக இருப்பவர்கள் லேடீசுடன் மிஸ்பிகேவ் பண்ணுவதாகப் புகார் வருகிறது.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் ; அம்மாதிரி அங்கே ஒன்றும் இங்கே ஒன்றும் நடக்கலாம். எல்லோரையும் அம்மாதிரி நினைக்க வேண்டாம். நான் இங்கே சொல்வது ஸ்காலர்களைப் பற்றித் தான்.

திரு. க. சுப்பு : பாடப் புத்தகத்தை படித்து ரேங்க் எடுப்பவர்கள் எல்லாம்
ஸ்காலர் இல்லை. புத்தகத்தைப் படிப்பதை விட உலக மக்களிடத்தில் பழகி
தெரிந்துகொள்ள வேண்டியது நிறைய இருக்கிறது. ஒரு மாணவன் வருங்
காலத்தில் எப்படி தலைமை தாங்குவது என்பதை மக்களிடத்தில் பழகுவதன்
மூலம் தான், பயிற்சி பெறுவதன் மூலம் தான் பெற முடியும். ஜனநாயகம்
என்பது விளையாட்டுக் காரியம் அல்ல. படிப்பதன் மூலம் மட்டுமே பொது
அறிவு, உலக அறிவு வந்து விடாது. அது நாட்டுக்கும் உதவாது.
மாணவர்கள் ஓட்டுப் போட்டு விரும்பி தங்களுடைய தலைவர்களைத் தேர்ந்
தெடுக்கிறார்கள் என்றால், அதற்குரிய வாய்ப்பு அளிக்கப்பட வேண்டும்.
ஆர்ப்பாட்டம் இருக்கலாம். ஒரு வாரம் அவர்கள் பாடம் கெடும் என்று
சொல்வார்கள். எலெக்ஷன் வந்தால், அம்மாதிரிச் செய்வது அவர்களுடைய
உரிமை. நம்மை மாதிரி அவர்களும் பெரிய பெரிய போஸ்டர்கள் ஓட்ட
விரும்புகிறார்கள். (சிரிப்பு) சுவரொட்டியால் தான் தங்களுக்கு வருங்
காலத்தில் சோறு வரும் என்று அவர்களும் நினைக்கலாம். ஆகவே பெயர்
களைப் பெரிதாகப் போட்டால் சீக்கிரம் பெரிய மனிதனாகி விடலாம் என்று

(பிற்பகல் 1-45)

நினைக்கிறார்கள் என்று கருதுகிறேன். அது நம்முடைய தவறுதான். அது
நம்மிடமிருந்து பரவிய நோய்தானே தவிர, அவர்களை மட்டும் குறை
சொல்லிப் பயனில்லை. மாணவர்களுக்கு ஜனநாயக ரீதியில் தேர்தலில்
போட்டியிட வாய்ப்பு கொடுத்து, அப்படி வெற்றி பெற்றால், அவர்கள் ஜன
நாயக ரீதியில் தங்களது கருத்துக்களை வெளியிட வாய்ப்பு கொடுத்தால்,
என்னென்ன கஷ்டங்கள், என்னென்ன சிரமங்கள் இருக்கின்றன என்பதைப்
புரிந்துகொள்வார்கள். அதைப்பற்றி அவர்கள் சிண்டிகேட்டிலும் செனட்டி
லும் பேச முடியும். போராட்டங்கள் இருக்காது. ஆசிரியர்களுக்கும் அவர்
களுக்கும் ஒரு நல்லிணக்கம் ஏற்படும். அரசாங்கம் சொல்கிற கருத்துக்
களை அவர்களும் தெரிந்துகொள்ள வாய்ப்பு இருக்கும். இதனாலேயே அவர்
களுக்கு வாய்ப்பு கொடுக்க வேண்டுமென்று நான் பல முறை வலியுறுத்தி



வந்திருக்கிறேன். சட்டமன்றப் பேரவையில் ஒருமுறை நானே இது குறித்து 'பிரைவேட் மெம்பர் பில்' கொண்டு வந்தேன். அப்போது திரு. மாதவன் அவர்கள் அமைச்சராக இருந்தார்கள். அவர்கள் உறுதிமொழி கொடுத்தார்கள். ஆனால் அது நிறைவேற்றப்படவில்லை. மறுபடியும் அரசாங்கத்திற்கு இதுகுறித்து கடிதம் எழுதியிருக்கிறேன். மாணவர்களைப் பார்த்து நாம் அச்சப்பட வேண்டியதில்லை. அவர்கள் எல்லாம் பல்கலைக் கழகத்தில் படிக்கிற அளவுக்கு பக்குவம் பெற்று வந்திருக்கும்போது, அவர்களை ஆட்சி மன்றப் பேரவையில் உறுப்பினர்களாகச் சேர்க்க வேண்டும். அகாடமிக்ஸ் பற்றி நான் சொல்ல வரவில்லை. ஸ்காலர்களாக இருக்கலாம். மாணவர்கள் ஸ்காலர்களாக இருந்தால், என்ன செய்யப்போகிறார்கள்? அவர்கள் பாடம் நடத்தப் போகிறார்களா? ஆசிரியர்கள் ஸ்காலர்களாக இருக்கலாம். அகாடமிஸ்ட்டுகள் அவர்கள் தான். அவர்களுக்கு சிண்டிகேட்டில் கொடுக்கவேண்டிய அவசியம் இல்லை. சிண்டிகேட் என்பது அன்றாடம் நடக்கவேண்டிய பணிகளை ஆற்றவேண்டிய ஒரு ஆட்சி மன்றக் குழு. அந்தக் குழுவில் மாணவர்களைப் போடவேண்டியதில்லை. ஆனால் வருடத்துக்கு ஒருமுறை, இரண்டு முறை செனட் நடக்கிறது. நானே செனட்டில் பணியாற்றியிருக்கிறேன். அதிலே அவர்களுக்கு இடம் கொடுப்பதால் போராட்டங்களைத் தவிர்க்கலாம். நல்ல பொறுப்புணர்ச்சி அவர்களுக்கு வரும். நாட்டைப்பற்றி, நிர்வாகத்தைப் பற்றி அவர்களுக்குப் பொறுப்புணர்ச்சி வரும். அவர்கள் தங்களது கருத்துக்களை தைரியமாகச் சொல்லலாம். ஆனால் டிபார்ட்மெண்ட்டிலிருந்து செல்லக்கூடிய ஆபிசர்கள் துணிச்சலாகக் கருத்துக்களைச் சொல்ல முடியாது. ஏனென்றால் அதன் பிறகு அவர்கள் வேலையில் இருக்க முடியாது. எக்ஸ்-அபிஷியோவாகப் போவார்கள். பிறகு எக்ஸ்-அதிகாரிகளாகத் திரும்புவார்கள். அவர்களைத் தூக்கியெறிந்துவிட்டு, வேறு ஒரு அதிகாரியைப் போட்டுவிடுவார்கள். இந்த மாதிரி இருக்கிற நிலைமைகளில் நாம் அதிகமாக அவர்களிடம் எதிர்பார்க்க முடியாது. ஆகவே மாணவர்கள் தங்கள் கருத்துக்களைத் துணிச்சலாகச் சொல்வதன் மூலம் பல்கலைக்கழகம் சிறப்பாக நடக்க முடியும். அவர்களுக்குத் தக்க பயிற்சிகளை நாம் கொடுக்க வேண்டும். அப்படி பயிற்சி இல்லாதவர்களை நாம் அங்கே போட்டால், அவர்கள் அடிக்கடி வெளியில் போகவேண்டிவரும். பொறுப்புணர்ச்சி அவர்களுக்கு இருக்க வேண்டுமென்று சொல்லும்போது, அவர்களை அங்கே தேர்ந்தெடுத்தால் தான் அது நடக்கும். எல்லா மாணவர்களும் அந்தப் பயிற்சி பெற்று பக்குவம் பெற்று வருகிறார்கள். அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் மாண்புமிகு உறுப்பினர் திரு. மாணிக்கம் போன்றவர்கள் படித்தவர்கள் தான். அந்தக் காலத்தில் படிக்கும்போது, கலகம் வந்தது, இப்போது வர வேண்டுமென்ற அவசியமில்லை. அப்போது சுதந்திரப் போராட்டத்தில்

நாமெல்லாம் ஈடுபட்டோம். அப்போது சீனிவாச சாஸ்திரி போன்றவர்கள் எல்லாம் இருந்தார்கள். இப்போது அதுமாதிரி இல்லையென்று சொல்ல வரவில்லை. மாணவர்களையும் நம்மைப்போல் பார்க்க வேண்டும். ராங்க் உள்ள மாணவர்கள்தான் வர வேண்டும் என்று சொல்வது சரியல்ல. அதனால் தான் நான் திருத்தம் கூட கொடுத்திருக்கிறேன். எல்லா மாணவர்களுக்கும் கொடுக்க வேண்டும் என்று நான் சொல்லவில்லை. குறைந்தபட்சம் ஆறு மாணவர்களுக்காவது கட்டாயம் இடம் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். திடீரென்று திருத்தம் கொடுத்திருப்பதை அமைச்சர் அவர்களே கூட ஏற்றுக்கொள்ள முடியாது என்பது எனக்குத் தெரியும். ஆனால் அப்படி ஒரு உறுதிமொழியைக் கொடுப்பதில் அவருக்கு என்ன கஷ்டம் இருக்கிறது என்று தெரியவில்லை. கொள்கையளவில் ஒத்துக்கொண்ட ஒரு விஷயத்தைப்பற்றி உறுதி மொழி கொடுக்கலாம். அப்படி உறுதிமொழி கொடுக்காமல் இருந்தால், ஒரு உறுதிமொழிக் கமிட்டி என்ற ஒன்று இருப்பதற்கே வேலையில்லாமல் போய்விடும். உறுதிமொழிக் கமிட்டியில் இருப்பவர்கள் சும்மா உட்கார்ந்திருப்பார்கள். அதுமாதிரி உறுதிமொழி கொடுத்து, அதன்பிறகு, அந்த உறுதிமொழியை நிறைவேற்றக் கூடிய அளவில் சட்டத் திருத்தம் கொண்டுவந்தால், அந்த மாணவர்களுக்கு அதில் இடம் கிடைக்கும். நாமும் மாணவர்களாக இருந்து வந்தவர்கள் தான். நாம் மாணவர்களைப் பார்த்து பயப்பட வேண்டிய அவசியமில்லை. நம்மைப் பார்த்து பயப்படுகிற அளவுக்கு யாரும் இல்லை. அந்த அடிப்படையில் மாணவர்களுக்கு எந்த அளவுக்கு அதிகமாகக் கொடுக்க முடியுமோ கொடுக்க வேண்டும்.

ஆசிரியர்களைப் பொறுத்தவரையில், அவர்களுக்குப் பிரதிநிதித்துவம் கொடுப்பதற்கு நாம் எதிர்ப்பு தெரிவிக்கவில்லை. ஏற்கனவே ஆசிரியர்களும் அதிலே இருக்கிறார்கள். ஆனால் சுதந்திரமாகக் கருத்து சொல்கிறவர்கள் அதிலே இருக்க வேண்டுமென்று நான் சொல்ல விரும்புகிறேன். அப்படி இருந்தால் அது வரவேற்கத்தக்கது. அந்த அடிப்படையில்தான்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: உறுப்பினர் அவர்கள் சீக்கிரம் முடித்துக்கொண்டால், அமைச்சர் உற்சாகமாக பதில் சொல்ல வாய்ப்பு இருக்கும்.

திரு. க. சுப்பு: ஒரு "பில்" கொண்டுவரும்போது நாம் விதிமுறைகளைச் சரியாகப் பின்பற்றுகிறோமா என்ற சந்தேகம் இருக்கிறது. பில்லுக்கு திருத்தம் கொடுக்க வேண்டுமென்றால், மூன்று நாள் நோட்டீஸ் கொடுக்க வேண்டுமென்று இருக்கிறது. நாங்கள் அவசரம் அவசரமாக ஓடி வருகிறோம். இப்போதும் நாம் அதிகமாக இந்த பில்லில் விவாதிக்க வேண்டும். இது ஒரு



லெஜிஸ்லேச்சர். அப்புறம் அனாவசியமாக வெளியில் பேசுகிறார்கள். அப்படி இல்லாமல் அவசரம் அவசரமாக நாம் சட்ட முன்வடிவை நிறைவேற்றிவிட்டால், ஒருவன் கோர்ட்டுக்குப் போய் இந்தச் சட்டம் செல்லாது என்று 'ஸ்டே' வாங்கிவிடுவான். ஆகவே தலைவர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்வது என்னவென்றால், சபை அதிக நாட்கள் நடக்க வேண்டும். அதிகமாக விவாதிக்க வேண்டும். ஏன் அதிக நாட்கள் சபை நடந்தது என்று யாரும் கேட்கமாட்டார்கள். நடக்காவிட்டால்தான் தவறு. 3—4 நாட்கள் ஒரு மசோதாவுக்கு ஒதுக்கி விவாதிக்க வேண்டும். அப்படி விவாதித்தால் தான் பிரச்சினை வராது. வழக்காட வேண்டியிருக்காது. இல்லா விட்டால் வக்கீல் வைத்து வாதாட பணம் செலவழிக்க வேண்டும். இதெல்லாம் வேண்டாத வேலை. நிறைய நாட்கள் அவகாசம் கொடுத்து விவாதிக்க அனுமதிக்க வேண்டும். அதில் தவறு கிடையாது. மாணவர்களுக்கு செனட்டில் பிரதிநிதித்துவம் வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்னொன்று. ரிஜிஸ்டிரார் நியமனத்தைப் பொறுத்தவரையில், ஒரு திருத்தம் கொடுத்திருக்கிறேன். பொதுவாக, ஒரு பைனான்ஸ் ஆபீசரைப் போட வேண்டுமென்றால் என்ன செய்கிறார்கள் என்றால், அரசாங்கத்திடமிருந்து ஒரு ஆபீசர்ஸ் பேனல் வரும். அதிலிருந்து தேவையானவர்களை பல்கலைக் கழகம் தேர்ந்தெடுத்து நியமிப்பார்கள். ஆனால் ரிஜிஸ்ட்ராராக யாரை வேண்டுமானாலும் போடலாம் என்று இருக்கிறது. ஏன் ரிஜிஸ்டிரார் நியமனத்திற்கும் இதுமாதிரி படித்த நல்ல ஆசிரியர்களிடமிருந்து ஒரு பேனலைத் தயார் செய்யக்கூடாது?

(பிற்பகல் 1-50)

Academician ஆகத்தான் இருக்க வேண்டுமென்று சொல்கிறார்கள். கல்லூரியில் வேலை பார்ப்பவர்களை, நிர்வாகத்தில் திடீர் திடீரென்று கொண்டு வந்து புகுத்த முடியுமா? முடியாது. அதே சமயத்தில் கல்லூரிகளில் பேராசிரியர்களாகவும், ஆசிரியர்களாகவும் இருந்தவர்கள், மாவட்டக் கல்வி அதிகாரிகளாகவும், முதன்மைக் கல்வி அதிகாரிகளாகவும் இருந்துள்ளவர்கள் இருக்கிறார்கள். அப்படி அனுபவம் பெற்றவர்களை இங்கே போட வேண்டும். கல்வித் துறையில் இருப்பவர்களில் இவ்வாறு உள்ளவர்களைப் போடலாம். ஐ.ஏ.எஸ். அதிகாரிகளையும் போடலாம். ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் மேல் எனக்கு ஒன்றும் காழ்ப்பு கிடையாது. அவர்கள் நிர்வாகத்திற்கு என்றே படித்தவர்கள். இவர்களைப்போல் நிர்வாக 'மைண்ட்' உள்ளவர்களைப் போட வேண்டும். யாருக்கும் கை கட்டிக்கொண்டிருப்பவர்களைப் போடக் கூடாது. அந்தமாதிரியானவர்களைப் போடுவதால்தான் தவறுகளே நடக்கிறது. யார், சொல்வதற்கெல்லாம் சரியென்று சொல்வார்?

[திரு. க. சுப்பு] [1985 ஏப்ரல் 12

விவரம் தெரியாத ஆள் சரி என்று சொல்வார். விவரங்கள் தெரிந்தவர் எப்படி எல்லாவற்றிற்கும் சரி என்று சொல்வார்? எனவே விவரம் தெரிந்த ஆட்களைப் போட வேண்டும். இவ்வாறு விவரம் தெரிந்தவர்களில் ஒரு பேனலை உருவாக்கி அனுப்ப வேண்டும். "ஃபைனான்ஸ் ஆபிசர்" நியமனத்திற்கு மாதிரி அரசாங்கம் ஒரு பேனல்-ஐ அனுப்ப வேண்டும்.

தன்னாட்சி இல்லாமல் போய்விடும் என்று சொல்லலாம். தன்னாட்சி இருக்கலாம், தன்னிச்சையான ஆட்சி இருக்கக்கூடாது. அதனாலே பல்கலைக் கழகத்திலே நடப்பவைகள் எல்லாம் நம்மைப் பாதிக்கின்றன. பல்கலைக் கழகத்தில் தவறு நடக்கிறது என்று சொன்னால், அது அரசாங்கத்தை நேரடியாகப் பாதிக்கிறது. அரசாங்கம் மக்களுடைய அரசாங்கம். மக்களுடைய வரிப்பணத்தால் நடக்கிறது. நாம் பல்கலைக் கழக மானியக் குழுவிற்கு பணம் கொடுக்கிறோம். நாம் கொடுக்கிற பணத்தில்தான் பல்கலைக் கழக மானியக் குழு நடக்கிறது. அவ்வாறு பணத்தைக் கொடுக்கிற நாம் அந்தப் பல்கலைக் கழகங்களைக் கண்காணிக்க வேண்டாமா? எனவே தான் முக்கியமான நிர்வாகப் பொறுப்பில் இருக்கக் கூடிய ரிஜிஸ்ட்ரார் பதவிக்கு சர்க்காரே பேனல் அனுப்ப வேண்டும். அந்தப் பேனலிலிருந்து அவர்கள் ஒருவரைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளட்டும். வேண்டாம் என்று சொல்லவில்லை. அவரும் நிரந்தரமாக அங்கே இருக்க விடக் கூடாது. மூன்று வருடத்தில் அவரை முடித்துக்கொள்ள வேண்டும். வைஸ்-சான்சலர் மூன்று வருடங்கள்தான் இருக்கிறார். இவர்மட்டும் என்ன நிரந்தரமாக இருப்பது? இப்படி இருந்தால், பின் வைஸ்-சான்சலருக்கு என்ன மரியாதை வரும்? வைஸ்-சான்சலர் நியமனத்தை மூன்று வருடத்திற்குள் முடித்துக் கொள்கிறோம். ஆனால் ரிஜிஸ்ட்ராரைப் போய் வருஷக் கணக்கில் வைத்திருக்கிறோம். அதனாலே அவர் எல்லாத் தவறுகளையும் செய்து கொண்டிருக்கிறார். இதையெல்லாம் நாம் மாற்ற வேண்டுமானால், இவர் பதவிக் காலத்திற்கும் ஒரு வரைமுறை விதிக்க வேண்டும். இவர் பதவிக்காலமும் மூன்று வருஷத்திற்கு மேல் போகக்கூடாது. அப்போதுதான் அரசாங்கத்திற்கு அவை மேல் ஒரு கன்ட்ரோல் வரும். நம்முடைய அதிகாரிகளின் 'பேனல் அங்கு போக வேண்டும். பதவிக்காலம் முடிந்து அவர் திரும்பி வரவேண்டும். அந்த உணர்வோடு அவர் போக வேண்டும். அப்போதுதான் அவர்களுக்கு உண்மையில் ஓர் அச்சம் இருக்கும். அரசாங்கத்தைப் பார்த்தால், நிர்வாகமும் பயப்படும். அதற்கெல்லாம் வழிவகை காண வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். யுனிவர்சிடி வைஸ் சான்சலர் நியமனத்திற்கு நாம் எப்படி பேனல் அனுப்புகிறோமோ அதுபோல் ரிஜிஸ்ட்ரார் நியமனத்திற்கும் பேனல் அனுப்ப வேண்டும். அந்த மாதிரி இல்லாததால்தான் தவறுகள் வருகின்றன.



1985 ஏப்ரல் 12] [திரு. க. சுப்பு]

அவர்கள் கல்வியாளர்களாக இருக்கலாம். கல்வியாளர்களை அகடமிக் கவுன்சிலில் போட வேண்டும். அவர்களை இதில் போடக் கூடாது. பாடம் சொல்லிக் கொடுப்பவர்களுக்கு நிர்வாகச் சுமையைக் கொடுக்கக் கூடாது. அவர்களுக்கு இருக்கக்கூடிய கல்வித் தகுதி, அதனால் ஏற்படும் மரியாதையை வைத்து அவர்களை அகடமிக் கவுன்சிலில் போடவேண்டும். அதுதான் சரி. அவர்களுக்கு நிர்வாக வேலைகளைக் கொடுக்கக் கூடாது. என்னையே நிர்வாகம் செய்யச் சொன்னால் எனக்கு ஒன்றும் தெரியாது. நிர்வாகம் என்பது ஒரு தனிக் கலை. அந்த முறையில் ஒரு திருத்தம் கொண்டு வர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

கடைசியாக, ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். சிண்டிகேட்டுக்கு பவர் கொடுக்கும்போது, ஒருவரை 'டிஸ்குவாலிஃபை' செய்வதற்கு முழு அதிகாரத்தைக் கொடுத்திருக்கிறார்கள். அது மிகவும் மோசமானது. சிண்டிகேட் ஒருவர் 'குரோஸ்லி நெக்லிஜென்ட்'—ஆக நடந்துகொண்டார் என்று கருதினால், அவரை நீக்கிவிடலாம் என்பது மாத்திரமல்ல, அவர் பட்டத்தையே பறித்துவிடலாம். டிப்ளமா கொடுத்திருந்தால்கூட பறித்து விடலாம். இந்த 'பவர்-ஐ' எப்படி சிண்டிகேட்டுக்குக் கொடுக்கிறார்கள்? Not even subject to ratification, சிண்டிகேட் எப்படி செய்யலாம் என்று சொல்லியிருக்கிறார்கள்? இப்போது என்ன நடவடிக்கை வேண்டுமானாலும் அவர்கள் எடுக்கலாம். செனட்டுக்குக் கூட அது போகவேண்டிய அவசியமில்லை.

நிரூபிப்பதற்கு என்ன வேண்டும்? அவர்கள் 'கன்விக்ட்' ஆனால் போதும். 'கன்விக்ஷன்' எப்போது வேண்டுமானாலும் வாங்கலாம். 'கன்விக்ஷன்' வாங்குவதாலேயே எல்லாம் வந்துவிடாது. ஒரு இடத்தில் 'கன்விக்ஷன்' என்று போட்டிருக்கிறது. இன்னொரு இடத்தில் 'சென்டென்ஸ்' என்று போட்டிருக்கிறது. பரவாயில்லை, இது "confusion in drafting" அதையெல்லாம் பிறகு பார்ப்போம். இந்தமாதிரி தவறுகள் நிறைய இருக்கின்றன. அவற்றை மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். சிண்டிகேட்டுக்கு என்று இருப்பதை செனட்டுக்கு என்று வைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அப்படி ஒரு விதி சேர்க்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதுவுமில்லாமல் இவ்வளவு அதிகாரங்களை அவர்களுக்குக் கொடுப்பது சரிதானா என்பதையும் பரிசீலிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். மொத்தத்தில் வள்ளல் அழகப்பா அவர்கள் பெயரிலே ஒரு பல்கலைக் கழகம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய உறுதிமொழியை நிறைவேற்றுகிற முறையிலே வருகிறது. அதை நான் மனப்பூர்வமாக வரவேற்று அமைகிறேன்.

திரு. எம். பி. சுப்பிரமணியம் : மாண்புமிகு மேலவைத் அவைத் தலைவர் அவர்களே, டாக்டர் அழகப்ப செட்டியார் அவர்கள் பெயரிலே ஒரு பல்கலைக் கழகம் உருவாவதை முழுமையாக வரவேற்கிறேன். ஆளும் தரப்பிலே உள்ள நண்பர் திரு. சுப்பு அவர்கள் மிக நகைச்சுவையாகப் பேசினாலும், மிக ஆழமான கருத்துக்களையும் பேசினார். அதை உணர்ந்து அவைகள் அத்தனையையும் நானும் வரவேற்கிறேன். டாக்டர் அழகப்பா அவர்கள் கல்வியை வியாபாரமாகக் கருதும் இந்தக் காலத்தைப் போலல்லாமல் அந்தக் காலத்திலேயே தன் பொருள் முழுவதையும் கல்விக்காகச் செலவழித்த மகான் என்று சொன்னால், அது மிகையாகாது. ஆகவே அவர் பெயரிலே ஒரு பல்கலைக் கழகம் ஆரம்பிக்கப்படுகிறபோது, அந்தப் பல்கலைக் கழகத்திலே அவர் ஆரம்பித்த கல்லூரிகளைக்கூட சேர்க்கவில்லை என்று சொன்னால், அது கேலிக்கூத்தாக இருக்கும் என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன்.

அவர் ஆரம்பித்த இன்ஜினியரிங் கல்லூரி, கலைக் கல்லூரிகள் ஆகியவற்றை மதுரைப் பல்கலைக் கழகத்தில் சேர்க்க வேண்டிய அவசியமில்லை. அவற்றை இந்தப் பல்கலைக் கழகத்திலேயே சேர்க்கலாம். இதுபோல் எற்கெனவே ஒரு தனியார் பெயரில் இதுபோல் ஒரு பல்கலைக் கழகம் இருக்கிறது. அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் சட்டக் கல்லூரி இருக்கிறது, விவசாயக் கல்லூரி இருக்கிறது, இன்ஜினியரிங் கல்லூரி இருக்கிறது, மருத்துவக் கல்லூரி துவக்குவதற்குக்கூட நடவடிக்கைகள் மேற்கொண்டு வருகிறது. அதைப்போல அழகப்பா பல்கலைக் கழகத்தையும் ஒரு முழுமையான 'ரெசிடென்சியல் பல்கலைக் கழகமாக' உருவாக்குகிற வகையில் இந்தச் சட்ட முன்வடிவு அமையுமானால், இதுதான் அவருக்கு நாம் செய்கின்ற நினைவுச் சின்னமாக இருக்கும் என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன்.

(பிற்பகல் 1-55)

மசோதாவிலே இப்போதே திருத்தம் செய்ய முடியவில்லையானாலும், விரைவிலே அதைப் பரிசீலனை செய்து இங்கிருந்த கல்லூரி மட்டுமல்லாமல் அது இன்னும் கூடுதலாகப் பரவுவதற்குரிய வழி வகைகளைச் செய்ய வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் குறிப்பிட விரும்புகிறேன்.

இன்னொன்றையும் நான் குறிப்பிட விரும்புகிறேன். நம்முடைய திரு. சுப்பு அவர்கள் கூறியதை நான் வலியுறுத்த விரும்புகிறேன். இதில் 7-வது செக்ஷனில் Disqualification for membership என்று சொல்லும்போது, மிகத் தெளிவாகச் சொல்லிவிட்ட பிறகு, அதற்கு செனட் சொல்ல வேண்டிய அவசியம் இல்லை. அதை மூன்றில் குறிப்பிடுகிறார்கள்.



"of unsound mind, a deaf-mute or suffering from leprosy" என்பது 'A'. 'B' என்பது "an applicant to be adjudicated as an insolvent or an undischarged insolvent". 'C' என்பது "sentenced by a criminal court to imprisonment for any offence involving moral turpitude" இவைகளே தெளிவாக இருக்கும்போது, அப்படிச் சொல்ல வேண்டிய அவசியமில்லை. அப்படிச் சந்தேகம் ஏற்பட்டால், வழக்கு மன்றத்திற்குப் போகலாம். அது தான் பொது நியதி. இந்த டிஸ்குவாலிபிகேஷன்களைச் சொல்லிவிட்டால், அதற்கு எங்கே முடிவு செய்ய வேண்டுமென்று சொல்லவேண்டிய அவசியமில்லை. அதைச் சொல்லாமல் இருந்தாலே அதனைத் தெளிவு செய்ய வேண்டியது நீதிமன்றம் என்று இருக்கிறது. வேண்டுமானால் தெளிவு செய்யலாம். தெளிவு செய்ய வேண்டிய அவசியமே இல்லை. ஆகவே இதை இந்த சிண்டிகேட்டுக்கு விட வேண்டுமென்பது தேவையற்றது; அவசியமில்லாத ஒரு குழப்பத்துக்கு இடம் உண்டாக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். பல்கலைக் கழகத்திலே ரிஜிஸ்டிராராக இருப்பவர்களுடைய வரலாற்றைப் பார்க்கும்போது, திரு. சுப்பு அவர்கள் சொல்லியது எனக்கு நன்றாக நினைவு இருக்கிறது. ஆகவே அதை நிர்வாகம் தான் அங்கு செய்ய வேண்டும். அவருக்கு பல்கலைக் கழகத்திலே பேராசிரியர்களைக் கூடக் கண்காணிப்பதற்குரிய அதிகாரம் இல்லை. அங்கேயுள்ள இதர சிப்பந்திகளையும், கூட்டங்களையும் நடத்துகின்ற ஒரு கடமைதான் அவருக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. பல்கலைக் கழகத்திலே வேலை செய்கிற பேராசிரியர்களைத் தணிக்கை செய்யவோ, அவர்களைப்பற்றி ஒரு கண்காணிப்புச் செய்கிற தேவையில்லாத தகுதி இருக்க வேண்டுமென்ற நியதியோ அவருக்குத் தேவையில்லை. அவர் ஒரு சிறந்த அதிகாரியாக, நிர்வாகம் செய்யக்கூடிய ஒரு அதிகாரியாக இருந்தால் போதுமானது. இவைகளை உள்ளடக்கிய திருத்தங்களைச் செய்வார்களேயானால், அது மேலும் வரவேற்கத்தக்கதாக இருக்கும் என்று கூறி நான் அமர்கிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, காரைக்குடியிலுள்ள டாக்டர் அழகப்பா கல்வி அறக்கட்டளையானது அதன் கட்டுப்பாட்டில் இருந்து வரும் கல்வி நிலையங்களை எடுத்துக் கொள்ளுமாறும், காரைக்குடியில் பல்கலைக் கழகம் ஒன்றை அழகப்ப செட்டியார் அவர்கள் பெயரிலே நிறுவ வேண்டுமென்றும் கேட்டுக்கொண்டார்கள். இந்த அழகப்பா பல்கலைகலைக் கழகம் உருவாக வேண்டுமென்கின்ற உறுதிமொழியை பேறிஞர் அண்ணா அவர்களும் தந்திருக்கிறார்கள்; மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவர் அவர்களும் தந்திருக்கிறார்கள். அந்த அடிப்படையிலேதான் நாம் இந்தப் பல்கலைக் கழகத்தை உருவாக்கியிருக்கிறோம்.

[திரு. செ. அரங்கநாயகம்] [1985 ஏப்ரல் 12

பின்தங்கிய மாவட்டமான பசும்பொன் முத்துராமலிங்கம் மாவட்டத்தில் உள்ள ஏழை சமுதாயத்தினரின் முன்னேற்றத்திற்கு உதவும் என்ற வகையிலேதான் இந்தப் புதிய பல்கலைக் கழகத்தை நாம் உண்டாக்கியிருக்கிறோம். காரைக்குடியிலுள்ள டாக்டர் அழகப்ப செட்டியார் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியும், அழகப்பா உடற் பயிற்சிக் கல்லூரியும், அழகப்பா கல்லூரியிலுள்ள பட்ட மேற்படிப்புப் பிரிவுகளும் சேர்ந்த அழகப்பா கல்லூரி ஆகியவற்றையும், இந்தக் கல்வி நிலையங்களோடு இணைந்த சொத்துக்கள் அனைத்துடனும் சேர்த்து அரசிடம் ஒப்படைப்பதற்கான தீர்மானங்களை நிறைவேற்றி இப்போது அதை நமக்குத் தந்திருக்கிறார்கள். இணைந்துள்ள சொத்துக்களையும் உயர் நீதிமன்றத்தில் ஆணை பெற்று அரசுக்கு உரிமை மாற்றம் செய்யவும், இவ்வறக்கட்டளை மதுரை வங்கியில் பெற்றிருந்த கடனை அரசு தீர்த்து, அதை இப்பல்கலைக் கழக அமைப்பு ஏற்று ஒப்பந்தப் பத்திரமும் எழுதித் தந்திருக்கிறார்கள். இப்பல்கலைக் கழகம் ஆராய்ச்சி பல செய்து, பின் தங்கியுள்ள இந்த மாவட்டத்தை முன்னேற்றுவதற்கு உதவ வேண்டுமென்ற கருத்துடனேயே இந்தப் புதிய பல்கலைக் கழகத்தை நாம் உருவாக்கியிருக்கிறோம். இந்தப் பட்டப் படிப்பு வகுப்பு தனியாகப் பிரிக்கப்பட்டு அழகப்பா அரசுக் கலைக் கல்லூரி எனத் தனியாகச் செயல்படும். இந்தப் பல்கலைக் கழகம் ஏற்படுவதற்கு செயல் வடிவம் கொடுக்கும் இந்த நோக்கிலேதான் நாம் இந்தச் சட்ட முன்வடிவைக் கொண்டு வந்திருக்கிறோம். இது ஆராய்ச்சித் துறைகளைப் பலப்படுத்தியதற்குப் பிறகு, மற்றக் கல்லூரிகளையும் இணைக்கின்ற அஃபிலியேட்டிங் டைப்பாக, இப்பொழுது யூனிட்டரி டைப்பாக இருக்கிறது; அஃபிலியேட்டிங் டைப்பாக நாம் பின்னர் ஏற்படுத்திக் கொள்ளலாம். இதை நாம் யூனிட்டரி டைப்பாகக் கொண்டு வருவதற்கு முக்கிய காரணம், பல்கலைக் கழக மானியக் குழுவிலேயே இந்த யூனிட்டரி டைப் கல்லூரியைத்தான் பெரும்பாலும் ஆதரிக்கிறார்கள். நன்றாக வளர்ந்து வருகிற இந்தப் பல்கலைக் கழகங்களினுடைய நிலைமைகளைப் பார்க்கிறபோது, பல கல்லூரிகளும் வளர்ந்து ஒவ்வொரு பல்கலைக் கழகமாக மாற வேண்டுமென்கிற நோக்கத்துடன் இன்றைக்கு பல்கலைக் கழக மானியக் குழுவும், கல்வி அறிஞர்களும் லட்சியங்களை அமைத்து அவர்கள் பணியாற்றிக் கொண்டு வருகிறார்கள். ஆகவே பல்கலைக் கழகம் என்பது 10 கல்லூரிகளை இணைத்துக்கொண்டு, அங்கே அவர்களுக்குப் பரிட்சை நடத்தி தேர்வு முடிவுகளை வெளியிடுகிற ஒரு கன்ட்ரோலர் ஆப் எக்சாமினேஷனாக, அந்தப் பணியைச் செய்கின்ற ஒன்றாக நாம் பெரும்பாலும் நினைத்து, இன்றைக்குப் பல்கலைக் கழகம் எப்படி இருக்க வேண்டுமென்று நாம் தெரிந்து கொள்ளக் கூட முடியாத நிலையில் இருந்து கொண்டிருக்கிறோம்.



1985 ஏப்ரல் 12] [திரு. செ. அரங்கநாயகம்]

(பிற்பகல் 2-00)

அதற்கு மாறாக இன்றைக்குப் பட்ட வகுப்புகளைத் தனியாகப் பிரித்து ஒரு கலைக் கல்லூரியாக ஆக்குவதற்குக் காரணம் இருக்கிறது. அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர்கள் அறியாதவர்கள் இல்லை. இன்றைக்கு அங்கேயிருந்த பட்ட வகுப்புகளையெல்லாம் தனியாகப் பிரித்து சிதம்பரத்தில் தனியாக அரசு கலைக் கல்லூரியாக மாற்றியமைத்துவிட்டோம். அதற்குப் பிறகு அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் சூழல் எந்த அளவுக்கு மாறியிருக்கிறது என்பதும், அங்கே ஏற்கெனவே ரத்தக் களரியும், வெட்டும் குத்தும் வன்முறையும்; ஆயுதங்கள் இருந்த நிலைமையும் மாறி இன்றைய தினம் அது படிக்கிற, ஒரு ஆராய்ச்சி நடத்துகிற இடமாக இருக்கிறது என்கிற மரியாதையையும் பெற்றிருக்கிறது.

அடுத்து, மாண்புமிகு உறுப்பினர்கள் பல்வேறு கருத்துக்களைச் சொல்லியிருக்கிறார்கள். ஒரே வளாகத்தில் இந்தக் கல்லூரிகள் இருக்கின்றனவே என்றார்கள். ஒன்றுபட்ட வகுப்புக் கல்லூரி மதுரைப் பல்கலைக் கழகத்தோடும், மீதி உள்ளவை அழகப்பா பல்கலைக் கழகத்தோடும் இருக்கின்றனவே என்றார்கள். இது இப்போது இருக்கிற நிலைமை. பின்னர் வேறு ஒரு தனியிடத்தைத் தேர்ந்தெடுத்து அங்கே புதிய கட்டிடத்தைக் கட்டி, பி.ஏ., பி.எஸ்ஸி., பி.காம். போன்ற வகுப்புகளைக் கொண்டு செல்ல இருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பட்ட வகுப்புகள் பல்கலைக் கழகத்தோடு இருப்பதைக் காட்டிலும் தனிக் கல்லூரியாக இருப்பதுதான் நல்லது என்கிற முறையில் கல்லூரிக்கும் பல்கலைக் கழகத்திற்கும் வேறுபாடு இருக்கிறது என்பதைத் தெளிவாக— ஏதோ இப்படிப்பட்ட சந்தர்ப்பங்களிலாவது நாம் உணர்ந்து செயல்படுவது நல்லது என்கிற அடிப்படையில்தான் நான் இதைக் குறிப்பிட விரும்புகிறேன்.

சென்னையிலேயே அண்ணா பல்கலைக் கழகம் பாதிக் கட்டிடத்திலும், சென்னைப் பல்கலைக் கழகம் பாதிக் கட்டிடத்திலும் அழகப்பா எஞ்சினியரிங் பொறியியல் கல்லூரிக் கட்டிடத்தில் இருக்கின்றன. அப்படி இல்லாமல் இல்லை. அதற்காக அப்படி இருக்க வேண்டும் என்று நான் சொல்லவில்லை. அவ்வாறு இருப்பதால் தவறு இல்லை.

அடுத்து, இங்கே முக்கியமாகக் குறிப்பிடப்பட்டு சொல்லப்பட்ட கருத்து பிரதிநிதித்துவம் தரப்படுகிற முறையாகும். ஆசிரியர்களுக்குப் பிரதிநிதித்துவம் தரப்பட வேண்டும். மாணவர்களுக்குப் பிரதிநிதித்துவம் தரப்பட வேண்டும்.

இந்தக் கொள்கையை ஏற்றுக்கொண்ட அரசு மாண்புமிகு புரட்சித் தலைவருடைய அரசு. நாங்கள் வருவதற்கு முன்னால் இதைப்பற்றியெல்லாம் பேசாமல் இருந்தார்கள் என்பது மட்டுமல்ல பல்வேறு சட்டங்களில் அவர்களுக்குப் பிரதிநிதித்துவமே கொடுக்காமல் இருந்தார்கள். பல்கலைக் கழகங்களில் ஆசிரியர்களுக்குப் பிரதிநிதித்துவம் இல்லாமல் இருந்ததால், படிப்படியாக நாம் கொண்டு வந்திருக்கிறோம். நிச்சயமாக ஆசிரியர்களுக்குப் பிரதிநிதித்துவம் கொடுப்பதில் இந்த அரசுக்கு எந்தவிதமான வேறுபாடும் இல்லை. உண்மையிலேயே ஆசிரியர்களின் செல்வாக்கின்கீழ்தான் பல்கலைக் கழகங்கள் நடைபெற வேண்டும் என்ற கருத்தை நாம் கொண்டிருக்கிறோம். ரெஜிஸ்ட்ரார்கூட ஒரு பேராசிரியராக இருக்க வேண்டுமென்று நாம் விரும்புவதற்கு இதையும் ஒரு காரணமாக எடுத்துக்கொள்ளலாம். ஆகவே, பல்கலைக் கழகம் என்பது பேராசிரியர்கள், ஆராய்ச்சி அறிஞர்கள் ஆகியோருடைய செல்வாக்கின்கீழ் அவர்களுடைய எண்ணப்படி நடைபெற வேண்டும் என்பதில் கருத்து வேறுபாடு இல்லை. ஆனால் இதை நாம் மெதுவாகக் கொண்டு வருவதற்கு, கொஞ்சம் கொஞ்சமாகக் கொண்டு வருவதற்குக் காரணம் இருக்கிறது. ஏற்கெனவே ஆசிரியர்களுக்கு நாம் பல்கலைக் கழகங்களில் பிரதிநிதித்துவம் கொடுத்திருக்கிறோம். ஆனால் அவர்கள் அங்கெல்லாம் தங்களுடைய பிரச்சினைகளைப் பேசிக் கொள்வதற்கு அதனைப் பயன்படுத்துகிறார்களே தவிர—அதைப் பயன்படுத்திக் கொள்ளக் கூடாது என்று சொல்லவில்லை, அதில் தவறுகூட இல்லை, என்றாலும்—முழுமையான கல்வி வளர்ச்சிக்கு தாங்கள் எந்த அளவுக்குத் துணையாக இருக்க முடியும் என்று காட்டுகிற அளவுக்கு இன்னும் அவர்கள் வரவில்லை என்பதை நான் இந்த நேரத்தில் வருத்தத்தோடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

உதாரணத்திற்கு ஒன்று சொல்ல வேண்டுமென்றால், கடந்த 36 ஆண்டுக் காலத்தில் ஒரு உருப்படியான மாற்றம் அல்லது சீர்திருத்தம் ஒன்று வந்திருக்கும் என்றால், அது தன்னாட்சி உரிமைபெற்ற கல்லூரிகள்தான். இதைத் தவிர வேறு ஒன்றைக் கொண்டு வந்ததாகச் சொல்ல முடியாது. அதற்காக ஒரு கமிட்டி போட்டு தேசிய அளவில் அறிஞர்களை நியமித்து இந்தத் திட்டத்தைக் கொண்டு வந்தார்கள். அந்த அடிப்படையில் இந்தியா முழுவதுமாக 19 கல்லூரிகள் செயல்பட்டாலும், அதில் 16 கல்லூரிகள் தமிழ்நாட்டில் செயல்படுகின்றன. நாம்தான் அதை முன்னின்று செயல்படுத்திக் கொண்டிருக்கிறோம். இவ்வாறு தன்னாட்சி உரிமை பெற்று செயல்படுகிற கல்லூரிகள் எந்த அளவுக்குச் சிறப்பாக நடக்கின்றன என்பதை அறிய வேண்டுமானால், அந்தக் கல்லூரிகளுக்குச் சென்று போய் பார்க்க வேண்டும். கலைக் கல்லூரிகளில் தரம்



உயர்ந்த கல்வி அறிவைத் தந்து கொண்டிருக்கிறது என்பதில் யாருக்கும் எந்தவிதமான கருத்து வேறுபாடும் இருக்கத் தேவையில்லை. அப்படிப்பட்ட கல்லூரிகளில் படித்த மாணவர்கள் பலர் இன்றைக்கு ஸ்காலர்ஷிப் பெறுகிறார்கள். டெல்லியில் நாம் இதுவரை பெறமுடியாத வாய்ப்புகளை அந்த மாணவர்கள் பெற்றிருக்கிறார்கள். நல்ல இடங்களைப் பெற்றிருக்கிறார்கள். அபிலியேட்டட் கல்லூரிகளில் படிக்கிற மாணவர்களுக்கும் தன்னாட்சி உரிமை பெற்ற கல்லூரிகளில் படிக்கிற மாணவர்களுக்கும் . . .

**திரு. எம். பி. சுப்பிரமணியம் :** சென்னையில் தன்னாட்சி உரிமை பெற்ற கல்லூரிகள் நிறைய இருக்கின்றன என்பதை அறிவேன். இவைகளின் செயல்பாடு பற்றி ஆராய்ந்து யூனிவர்சிடி கிராண்ட்ஸ் கமிஷன் ஒரு அறிக்கை சமர்ப்பித்திருப்பதாக அறிகிறேன். அதை அமைச்சர் அவர்கள் அவையில் வைப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

(பிற்பகல் 2-05)

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட அறிக்கை இன்னும் என் கையில் கிடைக்கவில்லை. அவர்கள் செண்ட்ரல் கவர்ண்மென்ட் கீழ் உள்ள செண்ட்ரல் யூனிவர்சிட்டியைப் பொறுத்த வரையில், அவர்கள் அறிக்கை தந்திருக்கிறார்கள். இந்தத் தன்னாட்சி பெற்ற கல்லூரிகளை Deemed Universities ஆக ஆக்க பல்கலைக் கழக மானியக் குழுவினர் தயாராக இருக்கிறார்கள். அந்த முயற்சி ஒரு பக்கம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது என்பதை மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். அவர்கள் எந்தவிதமான குறைபாட்டையும் சொல்லவில்லை. அஃபிலியேட்டெட் காலெஜெஸ் சிறப்பாக நடைபெறுகின்றன என்ற தகவலுக்கு மாறுபட்ட கருத்து இருப்பதாகத் தெரியவில்லை எனக்கு.

**திரு. எம். பி. சுப்பிரமணியம் :** துணைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே சிறப்பாக நடைபெறுகின்றன என்பதால்தானே தன்னாட்சிக் கல்லூரிகளாக மாற்றினார்கள். அப்படி இருக்கும்போது, சிறப்பாக நடைபெறுகின்றன என்று சொல்வதிலே பொருள் இல்லை என்பதைச் சொல்லிக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** இந்த மாற்றத்தைக் கொண்டு வருகிறபோது, சிறப்பான கல்லூரிகளைத்தான் தேர்ந்தெடுத்திருக்கிறோம். தரமுள்ள கல்வியைத் தந்திருக்கிறார்கள் என்பதுதான் அந்தச் சிறப்பு. அவர்கள் பல புதிய பாடப் பிரிவுகளைக் கொண்டு வந்திருக்கிறார்கள். லயோலா கல்லூரியில் சரித்திரப் பாடப் பிரிவு இருக்கிறது. ஒரு எக்சிபிஷன்கூட

நடத்தினார்கள். அங்கே போய் அதைப் பார்த்த பிறகுதான், வரலாறு பாடம் என்பது எவ்வளவு முக்கியமானது, எவ்வளவு சிறப்பாக நடத்திக் கொண்டிருக்கிறார்கள் என்பது தெரிகிறது.

**திரு. எம். பி. சுப்பிரமணியம் :** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, குறுக்கிடுவதற்காக மன்னிக்க வேண்டும். லயோலா கல்லூரி என்று பெயரைச் சொன்னதாலே சொல்லுகிறேன். லயோலா கல்லூரியில் ஆசிரியர் ஒருவர் கையூட்டு பெற்றுக்கொண்டு மார்க் அதிகமாகக் கொடுத்து ஒருவன் பாஸ் செய்த பிறகு, அவன் அமெரிக்காவிற்குச் சென்று, மீண்டும் இன்னுமொரு மாணவனுக்கு அவன் எழுதிய கடிதம் கல்லூரி முதல்வர் கையில் சிக்கி, விசாரித்து நடவடிக்கை எடுக்கப்படாமல் இருக்கிறது என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டிருக்கிறது என்பதாக அறிகிறேன். அது உண்மையா ?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, அதுபற்றி எனக்குத் தெரியாது. தன்னாட்சியைப்பற்றித் திருத்தம் கொண்டு வந்திருக்கிறோம். கையூட்டுப் பெற எந்த வாய்ப்பையும் நாம் ஏற்படுத்தித் தரவில்லை. அப்படிப்பட்ட தவறுகள் எங்கே இருந்தாலும், தவறுகள்தான். அப்படிச் செய்யப்படுகிற தவறுகளைக் கண்டிக்க முன்வர வேண்டும். காங்கிரஸ் கட்சியின் சார்பில் எதிர்க் கட்சியில் அமர்ந்துள்ள மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். பி. சுப்பிரமணியம் அவர்கள், இதை எதிர்ப்பது என்றால், தயவுசெய்து மத்திய அரசிடம் சொல்லி முழுமையாக எடுக்கிற முயற்சியில் இறங்கலாம். அந்த அரசின் சார்பாகக் கொண்டு வந்த திட்டத்தை நல்லது என்று ஏற்றுக்கொண்டிருக்கிறபோது, இங்கே அமர்ந்து கொண்டு கண்டித்துப் பேசுவது என்பது கட்சிக் கட்டுப்பாட்டுக்கு முரணாக இருக்கிறது என்பதைக் கூறிக்கொள்கிறேன்.

**திரு. எம். பி. சுப்பிரமணியம் :** கொள்கை அடிப்படையில் நிச்சயமாக நான் எதிர்க்கவில்லை. ஆனால் நடைமுறையிலே உள்ள கோளாறுகளைப் புரிந்த அமைச்சர் அவர்கள் அவற்றைக் களைய வேண்டும் என்பதற்காக, அதற்குத் துணையாகத்தான் சொல்லுகிறேன். கேள்வித் தாளைத் தயாரிப்பதும் அவர்களே, அதைத் திருத்துவதும் அவர்களே, சில்பசை வைப்பதும் அவர்களே, மார்க் போடுவதும் அவர்களே, மாணவர்களைக் கட்டுப்படுத்துவதும் அவர்களே என்றால், அது ஊழலை உருவாக்கத் துணையாக இருக்கிறது. ஆகவே நான் கொள்கை அளவிலே அதை வரவேற்கிறேன். காங்கிரஸ் கட்சியின் கொள்கை அளவிலே எனக்கு மாறுபாடு இல்லை.



**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** விடைத்தாள்களைத் திருத்துவதற்கு வேறு பேராசிரியர்களை அவர்கள் பயன்படுத்துகிறார்கள். ஊழலைப் போக்க வேண்டுமே தவிர, அதை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று சொல்லவில்லை. அவர்களே பாடத் திட்டங்களை வகுக்க வேண்டும், ஆசிரியர்களைக் கூடுதலாகப் போட வேண்டும். ஆசிரியர்கள் கூடுதலாகப் பணியாற்றுகிறார்கள் என்ற காரணங்களை வைத்துக்கொண்டு தன்னாட்சி உரிமை கூடாது என்று சொல்லுகிற நிலைமை இந்த நாட்டிலே இருக்கவோ, அதை ஆதரிப்பது என்ற நிலையோ வந்தால் நிச்சயமாக அரசு விட்டுத்தராது என்பதைச் சொல்லிக் கொள்கிறேன்.

**திரு. மு. செ. சங்கரலிங்கம் :** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, தன்னாட்சிக் கல்லூரியைப்பற்றி பல்வேறு புகார்கள் வந்த அடிப்படையிலே தான் கமிஷன் வந்தது. கமிஷன் ஆராய்ந்து இன்னும் அறிக்கை சமர்ப்பிக்கப்படவில்லை. மதிப்பிற்குரிய எதிர்க் கட்சித் தலைவர் சொன்னது போல, பல கல்லூரிகளில் இது போன்ற நிலைமைகள் ஏற்பட்டு மாணவர்கள் படிக்காமலே தேர்வு செய்யப்பட்டிருக்கிறார்கள். செயின்ட் ஜோசப் கல்லூரியில் முதல் மார்க் வாங்கி ஒருவன் வெளியே வந்திருக்கிறான். அவன் பிரின்சிபாலின் மகன். ஆகவே ஆசிரியர்கள் அதிகமாகப் பணியாற்றுகிறார்கள் என்பதற்காக தன்னாட்சி வேண்டும் என்று சொல்லவில்லை. உண்மையில் . . ;

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** சட்ட முன்வடிவு பற்றி அமைச்சர்கள் முன்மொழிகிறார்கள். பிறகு உறுப்பினர்கள் பேசுகிறார்கள். பிறகு அமைச்சர் அவர்கள் பதில் அளிக்கிறார்கள். உறுப்பினர்கள் மறுபடியும் பேச, அமைச்சர் அவர்கள் அதற்குப் பதில் சொல்ல, இப்படிப் போய்க் கொண்டேயிருந்தால் எப்படி ? இப்போது மணி 2-09 ஆகிறது. சாதாரண சம்பிரதாயம்—உறுப்பினர்கள் பேசிய பிறகு அமைச்சர் பதில் சொல்ல வேண்டியது, உறுப்பினர்கள் கேட்க வேண்டியது என்பதுதான். மேலும் உறுப்பினர்கள் கேள்விகளைக் கேட்கலாம். ஆனால் மறுபடியும் விளக்கம் என்று சொல்லி பெரிய பிரசங்கம் செய்தால், அதற்கு அமைச்சர் பதில் சொன்னால் போய்க் கொண்டே இருக்கும். ஆகவே கேள்வி கேட்பதற்கு அனுமதிக்கிறேன். சொற்பொழிவாக மாற்றுவது சரியாக இருக்காது இப்போது மணி 2.10 ஆகிறது.

(பிற்பகல் 2-10)

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, தன்னாட்சி பெற்ற கல்லூரி என்ற அந்தக் கொள்கையை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்பதை நான் வரவேற்கிறேன். அதைச் சொல்ல வேண்டும் என்பதற்காகத்தான் நான் இத்தனை பேசினேன். அப்படி அதிகார பூர்வமாக மத்திய அரசாலும், மாநில அரசாலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒரு நல்ல கொள்கையை, ஏற்றுக்கொள்ள மாட்டோம் என்று சங்கத்தின் அடிப்படையிலே, சங்கபூர்வமாகச் சொல்லிக்கொண்டிருக்கின்ற நிலைமைகளிலே, பல்கலைக் கழக ஆட்சி மன்றக் குழுவிலேயும் மற்ற இடங்களிலேயும் ஆசிரியர்களுடைய பிரதிநிதிகள் அவ்வாறு கூறுவது என்பது அரசு கொள்கைக்கே விரோதமான நபர்களை, ஆசிரியர்களை உள்ளே கொண்டு வருவதுபோன்ற நிலைமை வரும் என்ற ஒரு அச்சத்தை இப்போது எங்களுக்கு ஏற்படுத்தியிருக்கிறது. எங்களுடைய கருத்து ஆசிரியர்களுக்குப் பிரதிநிதித்துவம் கொடுக்கக்கூடாது என்பதல்ல. ஒரு முற்போக்கான கொள்கை, ஒரு நிலையான கொள்கை என்று வருகின்றபோது, அதற்கு மனமுவந்து ஆதரவு தரக்கூடியவர்களாக இருந்தால்தான், ஆட்சி மன்றக் குழுவிலே பிரதிநிதித்துவம் தரலாம். நான் இன்னும் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். தரவேண்டுமென்ற கொள்கையின் அடிப்படையிலேதான் நாங்கள் இந்த ஏழு ஆண்டுக் காலமாக இருந்துகொண்டு வருகிறோம். மாணவர்களைப் பொறுத்த மட்டிலும், அதே நிலைதான். தேர்ந்தெடுக்கப்படலாம் என்று சொல்கின்றபோது, அந்தத் தேர்தல் நடைபெறுகின்றபோது, வன்முறைச் சம்பவங்கள் அச்சப்படுத்திக்கொண்டிருக்கின்றன. அந்த நிலைமைக்கு மாறாக கடந்த இரண்டு ஆண்டுகாலமாக மாணவர்கள் மத்தியிலே ஒரு அமைதி நிலவிக் கொண்டிருக்கின்றது என்ற சூழ்நிலையை வைத்து, மாணவர்களுக்குப் பிரதிநிதித்துவம் தரலாம் என்ற கொள்கைக்கு ஆதரவு தரும் வகையில் நாங்களும் அதைக் கொள்கையாக வைத்துக்கொண்டிருக்கிறோம் என்ற அடிப்படையில் எதிர்காலத்தில் அதற்குத் தக்க நடவடிக்கையை இந்த அரசு எடுக்கும் என்பதை நான் இங்கே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அதற்கு நாங்கள் எதிரானவர்கள் அல்ல. மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் பிரதிநிதித்துவம் தர வேண்டும் என்பது மட்டுமல்ல, எங்களைப் பொறுத்த மட்டில், ஆசிரியர்கள் பெரும்பான்மையாக இருக்க வேண்டும் என்கின்ற கொள்கைதான் இந்த அரசினுடைய கொள்கை. அது தவிர மற்றவர்கள் வரக் கூடாது என்ற அடிப்படையிலேதான், இரண்டு தடவைகளுக்கு மேல் இருக்கக் கூடாதென்று தடைச் சட்டம் கொண்டுவந்ததுகூட ஆசிரியர் அல்லாதவர்



களுடைய ஆதிக்கத்தைக் குறைக்க வேண்டும் என்பதற்காகவேதான் அப்படிச் செய்தோம். அந்த ஆதிக்கம் இருந்தது என்பதை நன்கு உணர்ந்துதான், அதனுடைய விளைவாகத்தான் அந்த இரண்டு முறைகளுக்கு மேல் இருப்பதற்குத் தடைச் சட்டம் கொண்டு வந்தோம். அன்றையதினம் 'முட்டா'-வைச் சேர்ந்தவர்கள் என்னிடத்திலே வந்து சொல்லித்தான், அவசரச் சட்டமாக, அவ்வளவு அவசர அவசரமாக அந்தச் சட்டத்தைக் கொண்டுவந்தோம். ஆனால் இன்றைக்கு ஏதோ 'முட்டா'-வின் பிரதிநிதியாக, மேலவையிலே இருக்கின்ற நண்பர் திரு. சங்கரலிங்கம் அவர்கள் ஏற்றுக் கொள்ள மாட்டேன் என்று சொல்கின்றார்கள். அந்த முரண்பாட்டிற்கு என்ன காரணம் என்று எனக்குப் புரியவில்லை. ஆனாலும் அரசிடமே அவர் சொல்லித் தான் இரண்டு முறை தடைச் சட்டத்தை இங்கே கொண்டுவந்தேன். மற்றபடி இந்த பல்கலைக் கழகத்தின் மூலமாக அந்தப் பகுதியிலே இருக்கின்ற பல கல்லூரிகளை எதிர்காலத்திலே இணைக்கக்கூடிய வாய்ப்பு இருக்கிறது என்று கூறி, இந்தச் சட்ட முன்வடிவைச் சட்டமாக ஆக்கித் தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** அவை முன் உள்ள பிரச்சினை—

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, 1985 ஆம் ஆண்டு, அழகப்பா பல்கலைக் கழகச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 24/1985) ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்."

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

சட்ட முன்வடிவு, பிரிவு வாரியாக, ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

பிரிவுகள் 2 முதல் 14 வரை, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

பிரிவு 15.

திரு. க. சுப்பு : கீழ்க்கண்ட திருத்தத்தை நான் முன்மொழிகின்றேன்—

Substitute the sub-clauses (1) and (2) as follows :

"(1) The Registrar shall be a whole-time salaried officer of the University appointed by the Syndicate for a period of three years from the panel of Officers prepared and sent by the Government of Tamil Nadu ;

[திரு. க. சுப்பு] [1985 ஏப்ரல் 12

(2) The holder of the post of Registrar shall be an administrator, preferably from the Department of Education with adequate experience."

திரு. ஆர். டி. சீத்தாபதி : நான் அந்தத் திருத்தத்தை வழிமொழிகிறேன்.

திரு. க. சுப்பு : நான் ஏற்கெனவே பேசியாகிவிட்டது. ஆனால் மாண்புமிகு அமைச்சர் அவர்கள், அட்மினிஸ்ட்ரேட்டராக இருப்பவர்களைத்தான் போட வேண்டுமா, ரெஜிஸ்ட்ராரை நியமனம் செய்வதிலே அப்படிச் செய்ய வேண்டுமா என்பதற்கு அவர்கள் பதில் சொல்ல வேண்டும்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, அட்மினிஸ்ட்ரேட்டரைப் போடுகின்ற ஒரு நிகழ்வு ஒரு பல்கலைக் கழகத்திலே ஏற்பட்டு, அது பல்வேறு பிரச்சினைகளை ஏற்படுத்தியதன் விளைவுகளும் இருக்கின்றன. அது மட்டுமல்லாமல், அதற்கு முன்னாலேயே பெரும்பாலான பல்கலைக் கழகங்களிலே பேராசிரியர்களைத் தான் போட்டிருக்கிறோம். பேராசிரியர்கள் என்றால், அவர்களுக்கும் ஓரளவுக்கு நிர்வாக அனுபவம் இருக்கும். அப்படி நிர்வாக அனுபவம் இருப்பவர்களைத்தான் போடுகிறோம். அப்படிப்பட்டவர்களைப் போடுகின்ற அளவிலேதான் இந்த பதிவாளர்கள் நியமனமானது இப்போது நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. சிண்டிகேட்டினுடைய முதல் பதிவாளர் மட்டும் அரசாலேயே நியமிக்கப்படுவார். பிறகு சிண்டிகேட்டினுடைய ஒரு அதிகாரத்திற்குள் அது வந்துவிடுகிறது. அவர்கள்தான் பிறகு தேர்ந்தெடுப்பார்கள்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : உறுப்பினர் அவர்கள் திருத்தத்தை வலியுறுத்துகின்றாரா, திரும்பப் பெறுகின்றாரா ?

திரு. க. சுப்பு : வலியுறுத்த முடியாததால், திரும்பப் பெறுகிறேன்.

திருத்தம், அவையின் அனுமதியுடன், திரும்பப் பெறப்பட்டது.

பிரிவு 15, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

பிரிவுகள் 16 முதல் 20 வரை, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.



1985 ஏப்ரல் 12]

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : அடுத்து திரு. க. சுப்பு அவர்கள் அவருடைய திருத்தத்தை முன்மொழிவார்கள்.

பிரிவு 21.

திரு. க. சுப்பு : கீழ்க்கண்ட திருத்தத்தை நான் முன்மொழிகிறேன்—

"Substitute sub-clause (1) under the heading "Class II—Other Members" by the following, namely:—

(1) Two Members elected by the Members of the Tamil Nadu Legislative Assembly from among themselves and two members elected by the Members of the Legislative Council from among themselves."

திரு. ஆர். டி. சீத்தாபதி : நான் திருத்தத்தை வழிமொழிகிறேன்.

திரு. க. சுப்பு : மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, இதிலே சட்டமன்ற மேலவை, பேரவை உறுப்பினர்கள் பிரதிநிதித்துவம் அதிகமான அளவில் இருக்க வேண்டும். ஏனென்றால் ஏற்கெனவே தன்னாட்சியில் அவர்கள் இஷ்டம்போல் செய்கின்றார்கள். ரெஜிஸ்ட்ராரால் ஒன்றும் செய்ய முடியாமல் போய்விட்டது. குறைந்தபட்சம் மக்களுடைய பிரதிநிதி சட்டமன்ற மேலவையிலே, பேரவையிலே இருப்பவர்கள், அங்கே அடிகுவேட் நம்பர் இருக்க வேண்டும். சும்மா ஒருவரை பேருக்குப் போட்டால், அவர் ஆப்சென்ட் ஆகிவிடுவார். அப்போது அந்தப் பிரதிநிதித்துவமும் கிடையாது என்று ஆகிவிடுகிறது. நம் சார்பிலே அங்கே பேசுவதற்குக்கூட ஆள் இருக்காது. அதனாலே குறைந்த பட்சம், இங்கு ஐந்து பேர்கள் என்று திருத்தம் கொண்டுவரலாம் என்று நினைத்தேன். உள்ளுவதெல்லாம் உயர்வுள்ளல் என்று நினைத்தேன். தள்ளுவதெல்லாம் என் நிலைமை என்று

(பிற்பகல் 2-15).

சொல்லுகிறார்கள். அதனால்தான் 2 பேர் என்று போட்டிருக்கிறேன். இதில் எந்தவித சிரமும் இருக்காது. அமைச்சரவர்களுக்கு சிரமம் இருந்தால், அந்த சிரமம் கொடுக்க விரும்பவில்லை.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : இரண்டு பேரைப் போடுவதில் சிரமமில்லை. அந்த வாய்ப்பைத் தரக்கூடாது என்பதல்ல. கல்வியில் நிபுணத்துவம் பெற்றவர்கள் அதிகமாக வர வேண்டும் என்று நினைப்பதால்,

மற்ற பிரதிநிதித்துவத்தைக் குறைக்கிறோம். அந்த அடிப்படையில் ஒருவரைப் போடுகிறோம். எதிர்காலத்தில் வேண்டுமானால் இரண்டு, மூன்று பேர்களைப் போடலாம்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** மாண்புமிகு உறுப்பினரவர்கள் திருத்தத்தைத் திரும்பப் பெறுகிறாரா, வலியுறுத்துகிறாரா ?

**திரு. க. சுப்பு :** அமைச்சரவர்கள் உறுதிமொழி கொடுத்ததால், திருத்தத்தைத் திரும்பப் பெறுகிறேன்.

திருத்தம், அவையின் அனுமதியோடு, திரும்பப் பெறப்பட்டது.

பிரிவு 21 அவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டது.

பிரிவுகள் 22, 23, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டன.

பிரிவு 24.

**திரு. க. சுப்பு :** மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, கீழ்க்கண்ட திருத்தத்தை முன்மொழிகிறேன்—

"The following shall be inserted as item (*ii*) under "under Class-II Other Members" occurring under sub-clause 2(*a*) of clause 24.

"(*ii*) six members from different faculties elected by the students from among themselves."

(2) the existing item shall be numbered as item (i)."

**திரு. ஆர். டி. சீத்தாபதி :** துணைத் தலைவரவர்களே, நான் வழிமொழி கிறேன்.

**திரு. க. சுப்பு :** இந்தத் தீர்மானத்தைப் பொறுத்தவரையில், மாண்புமிகு கல்வி அமைச்சரவர்கள் நல்ல வாக்குறுதி கொடுத்திருக்கிறார்கள். மாணவர் களுக்குக் கொடுக்கக்கூடாது என்பதல்ல, கொடுக்கப்படுமென்று சொல்லியிருக் கிறார்கள். எல்லாவற்றுக்கும் சேர்த்து சட்டம் கொண்டுவரும்போது, இதற்கான சட்டத்தையும் கொண்டுவருவார்கள் என்று நினைக்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. மீனாட்சிசுந்தரம் அவர்கள் பேசும்போது, என்னை இழுத்துப் பேசிவிட்டார்கள், ஒரு வருஷம் இருந்தால் ஆறு வருஷ மாகுமா என்று. அதைவிட அவர் வேறு மாதிரி சொல்லியிருக்கலாம்.



உறுப்பினர்களுக்கெல்லாம் பென்ஷன் கொடுக்கிறார்கள். பென்ஷன் கொடுக்கும் போது, அவர்கள் ஒரு வருஷம் உறுப்பினராக இருந்தால், அதற்கேற்றவாறு பென்ஷன் கொடுக்கிறார்கள். அவர்களுக்கு ஐந்து வருடங்கள் சேர்த்துக் கொடுத்தால், அதையே இதற்கும் 'அப்ளை' பண்ணலாம். அப்படி அவர்கள் சொல்லுவார்கள் என்று நினைத்தேன். அவர்கள் பென்ஷன் வாங்கும் ஸ்டேஜுக்கு வரவில்லை. நான் பென்ஷன் வாங்கிய நிலைமை இருந்ததால், எனக்கு அது தெரிந்தது. அந்த ப்ரேக்ஷனில் அது அடிபட்டுவிட்டது. ஐம்பது ரூபாய் மேலே கூட்டமாட்டேன் என்கிறார்கள். அந்த பிரின்சிபிளையே இதற்கும் 'அப்ளை' பண்ணி, ஒரு வருஷம் மட்டும் இருந்தவர்கள், இரண்டு டர்ம் என்பதில் வர மாட்டார்கள் என்று எதிர்காலத்தில் சட்டம் கொண்டு வருவார்கள் என்று நம்பி, திருத்தத்தைத் திரும்பப் பெறுகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** மாண்புமிகு உறுப்பினரவர்கள் திருத்தத்தை திரும்பப் பெறுகிறாரா, வலியுறுத்துகிறாரா ?

**திரு. க. சுப்பு :** துணைத் தலைவரவர்களே, திருத்தத்தைத் திரும்பப் பெறுகிறேன்.

திருத்தம் அவையின் அனுமதியுடன், திரும்பப் பெறப்பட்டது.

பிரிவு 24; அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

பிரிவுகள் 25 முதல் 66 வரை, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறை வேற்றப்பட்டன.

அட்டவணை, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவரவர்களே,

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, 1985 ஆம் ஆண்டு, அழகப்பா பல்கலைக் கழகச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 24/1985) நிறைவேற்றப்பட வேண்டும்"

என்று முன்மொழிகிறேன்.

[1985 ஏப்ரல் 12

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்**: அவை முன் உள்ள பிரச்சினை—

